த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—409

மண்டல முன்னேற்றம்

ஆசிரியர்

திருமதி பானுமதி கணேசன், எம்.ஏ.

பேராசிரியை, பொருளாதாரத்துறை
அரசினர் மகளிர் கல்லூரி,
கும்பகோணம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—March 1973

T.N.T.B.S. (C.P.) No. 409

© Tamil Nadu Text Book Society

REGIONAL DEVELOPMENT

Tmt. Bhanumathi Ganesan

Price Rs. 4-70

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

M/s. Appar Achakam,
2/140, Prakasam Salai,
Madras-1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி - உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'மண்டல முன்னேற்றம்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 409ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 444நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

பொருளாதார இயலில் மண்டலப் பொருளாதாரம் என்பது அண்மையில் தோன்றியதொரு புதிய பிரிவாகும். கடந்த பத்தாண்டுகளில் இப் பகுதி பெரிதும் வளர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சிக்குக் காரணம், மண்டல முன்னேற்றத்திற்கு முக்கியத் துவம் தரவேண்டும் என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருவதுதான்.

ஒவ்வொரு நாடும் முன்னேற்றமடைய வேண்டும் என்பது மட்டும் முக்கியமன்று. ஒவ்வொரு நாட்டின் எல்லா மண்டலங்களும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். உலக நாடுகளில் முன்னேற்றமடைந்த நாடுகள், முன்னேற்ற மடையாத நாடுகள் என்ற பாகுபாடு இருப்பதே பல பிரச்சினை களுக்குக் காரணமாக இருக்கிறது. அதைப் போலவே, ஒரே நாட்டில் முன்னேற்றமடைந்த மண்டலங்கள், முன்னேற்ற மடையாத மண்டலங்கள் என்றிருப்பது பல பிரச்சினைகளை ஏற் படுத்துகிறது. அவைகளைத் தீர்ப்பதற்கு எல்லா மண்டலங்களும் முன்னேறும்படியான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் முன்னேற்றத்திற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவற்றைக் கண்டுபிடித்து, திட்டமிட்டுச் செயலாற்றுவதன்மூலம் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். தேசியத் திட்டமிடுதலின்போது, மண்டல அணுகும் முறையோடு, முறையான மண்டலத் திட்டமிடுதலையும் மேற்கொள்ளவேண்டும்.

இந்திய நாடு பல்வேறுபட்ட மண்டலங்களைக் கொண்டது. மண்டலங்கள் ஒவ்வொன்றும் பல துறைகளிலும் வேறுபடுகின்றன. சில இயற்கை வளங்கள் நிறைந்தவை. சில இயற்கை வளங் களின்றித் தொழில்வளம் நிறைந்தவை. இதைக் கருத்திற்கொண்டு அந்தந்த மண்டலங்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்,

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் மண்டல முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சரிசம முன்னேற்றத்திற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுச் செயலாற்றப்படுகின்றன.

மண்டலப் பொருளாதார முன்னேற்றத்தைப்பற்றி எங்கும் விழிப்பு ஏற்பட்டுள்ள இக் காலத்தில், பொருளாதார மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இந் நூல் பெரிதும் பயன்படும்.

இந் நூல் பட்டப்படிப்புப் பாடத்திட்டத்தையொட்டியும், மேல் பட்டப் படிப்பிற்குப் பயன்படுவதாகவும் எழுதப்பட்டுள்ளது. கோட்பாடுகளும், அவற்றை விளக்க நடைமுறைச் சான்றுகளும் தரப்பட்டுள்ளன. தேவையான புள்ளிவிவரங்கள் இந்திய அரசு வெளியிட்ட பல்வேறு வெளியீடுகளிலிருந்து தரப்பட்டுள்ளன. மேற்கொண்டு விவரங்களைப் பெறுவதற்கு மேற்கோள் நூல்களின் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், கல்லூரித் தமிழ்க்குழு தொகுத்துள்ள அகராதிகளிலுள்ள கலைச்சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இக் கலைச்சொற்களுக்குச் சரியான பன்னாட்டவரும் ஒப்புக்கொண்ட ஆங்கிலக் கலைச்சொற்கள் அடைப்புகளில் குறிக்கப்பட்டுள்ளன. அகராதிகளில் இல்லாத ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. சில ஆங்கிலக் கலைச்சொற்கள் அப்படியே தமிழில் தரப்பட்டுள்ளன. இந் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கலைச்சொற்களின் அகராதி ஒன்று இந் நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

இந் நூல் உருவாவதற்கு உறுதுணையாக இருந்த உள்நாட்டு வெளிநாட்டு ஆசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றி உரியது.

பானுமதி கணேசன்

பொருளடக்கம்

முதல் பகுதி

பக்கம்

1. மண்டல முன்னேற்றப் பொருளாதாரத்தின் எல்லையும் முறையும் ... 1

மண்டல முன்னேற்றப் பொருளாதார விளக்கத்தின் சுருக்கம்—மண்டலக் கட்டமைப்பு—நகரங்களின் அமைப்பு—தொழில் அமைவிடங்களின் எடுத்துக்காட்டமைப்பு— நிலத்தின் பயன்—மண்டலப் பொருளாதார நடவடிக்கைகளின் அளவு—மண்டலங்களுக் கிடையேயான வருமானம், வியாபாரம் இவைகளைப்பற்றிய கோட்பாடு.

2. மண்டலப் பொருளாதார முன்னேற்றம் ... 19

மண்டலக் கட்டமைப்பின் மீது முன்னேற்றத்தின் ஆதிக்கம்—அரசின் பங்கு.

இரண்டாம் பகுதி

3. மண்டல முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல் ... 26

மண்டலம் என்ற மூலக்கருத்து — மண்டல உணர்ச்சியும் பிரிவுணர்ச்சியும்—மண்டலத் திட்டமிடுதலைக் கோட்பாட்டு முறையில் அணுகுதலின் அடிப்படைத் தத்துவங்கள்—மண்டலத்திட்டமிடுதலைச் செயல்முறையில் அணுகுதல்—திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் மண்டல முன்னேற்றம்—பல்வேறு மண்டலங்களுள்ள பொருளாதார அமைப்பில் திட்டமிடுதலின் பிரச்சினைகள்.

4. பிரெஞ்சு நாட்டில் மண்டலத் திட்டமிடுதல் ... 58

நடுத்தரக் கால மண்டலமயமாக்குதல் — எதிர்காலத்திற்கான மறு சீரமைப்பு.

மூன்றும் பகுதி

5. இந்தியாவில் மண்டல முன்னேற்றத்திற்கான கொள்கைகள் ... 62

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்டல முன்னேற்றம்—தொழில் அமைவிடமும் முன்னேற்ற இடங்களும்—மண்டல முன்னேற்றத்தின் கருவான பெரிய திட்டங்கள்—தொழில் நுட்பவியல் முன்னேற்

பக்கம்

றத்தின் பங்கு—கல்வியும், கல்விப் பயிற்சியும்—உழைப்பின் இடப்பெயர்ச்சி—முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய அலுவலகப் பணியாளர்—மண்டல முன்னேற்றத்தைப் பற்றிய ஆய்வுகள்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்டல நகர்ப்புற முன்னேற்றம்—விவசாயத்தில் மண்டலத் திட்டமிடுதல்—தொழிற்பேட்டைத் திட்டமும் மண்டல முன்னேற்றமும்.

நான்காம் பகுதி

6. இந்தியாவின் வெவ்வேறு மண்டலங்களின் பொருளாதார முன்னேற்றம் ... 86

பொதுவான அணுகும் முறை—திட்டமிடுதலின் ஆரம்பத்தில் இருந்த முன்னேற்றத்தின் வெவ்வேறு அளவுகள்.

7. மண்டல முன்னேற்றத்தைக் காட்டும் சில அடையாளங்கள் ... 94

விவசாயம்—நீர்ப்பாசனமும் சக்தியும்—சாலைகள்—இரயில்வேக்கள்—துறைமுகங்கள்—மக்களின் முன்னேற்றம்—தொழில் முன்னேற்றம்.

பிற்சேர்க்கை 1. விளக்க வரைபடங்கள் ... 106
பிற்சேர்க்கை 2. அட்டவணைகள் ... 115

8. தமிழ்நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ... 123

தமிழ்நாட்டின் மண்டலங்கள்—தமிழ்நாட்டைப் பற்றிய தொழில்நுட்பப் பொருளாதாரக் கணக்கீடு—தமிழ்நாட்டின் முன்னேற்றம்.

பிற்சேர்க்கை 1. விளக்க வரைபடங்கள் 135
பிற்சேர்க்கை 2. அட்டவணைகள் 147
பிற்சேர்க்கை 3. தமிழ்நாடு திட்டக் குழுவின் அமைப்புமுறையும் செயல் வகையும் ... 157

ஐந்தாம் பகுதி

9. தற்காலத்திய மண்டல முன்னேற்றப் பகுத்தாய்வு... 161

வரையறைப் பிரச்சினைகள்—மண்டலப் பொருளாதாரக் கொள்கைகளின் பிரச்சினைகள்—கோட்பாட்டு அடிப்படை.

மேற்கோள் நூற்பட்டியல் ... 161
தலைச்சொல் அகராதி ... 183

விளக்க வரைபடங்களின் (Diagrams) பட்டியல்

எண்		பக்கம்
1.	மக்கள்தொகை, பரப்பளவு, அடர்த்தி (மண்டல வாரியாக)	87
2.	உணவுத்தானிய உற்பத்தி (மண்டலவாரியாக)	107
3.	சாகுபடிநிலம்—நீர்ப்பாசனம் பெற்றது (மண்டல வாரியாக)	108
4.	நிறுவப்பட்ட உற்பத்திச்சக்தி (மண்டலவாரியாக)	109
5.	மின்சார வசதி பெற்ற பட்டினங்களும் கிராமங் களும் (மண்டலவாரியாக)	110
6.	சாலை நீளளவு (தளமிட்டது) (மண்டலவாரியாக)	111
7.	சாலை நீளளவு (தளமிட்டது) நூறு சதுரமைலுக்கு (மண்டலவாரியாக)	113
8.	6—11 வயதுள்ள பள்ளிச்சிறுவர்களின் சதவீதம் (மண்டலவாரியாக)	112
9.	மருத்துவர்கள் (மண்டலவாரியாக)	114
10.	இந்திய மாநிலங்களின் மக்கள்தொகை, 1971	135
11.	தமிழ்நாட்டின் மக்கள்தொகை, 1901—1981	136
12.	தமிழ்நாட்டின் மாநில, தனிநபர் வருமானங்கள் (1960—61 முதல் 1969—70 வரை)	137
13.	தமிழ்நாட்டில் நிலத்தைப் பயன்படுத்துதல் (சதவீதம்)	138
14.	தமிழ்நாட்டில் மழை	139
15.	தமிழ்நாட்டில் மொத்த விதைக்கப்பட்ட, நீர்ப் பாசனம் பெற்ற பரப்பளவு	140
16.	தமிழ்நாட்டின் உணவுத்தானிய உற்பத்தியின் போக்கு	141
17.	தமிழ்நாட்டில் உற்பத்தியாக்கப்பட்ட, வாங்கப்பட்ட மின்சக்தி	142
18.	தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு மின்சக்தி அளித் தல்—மின்சக்தி பெற்ற பட்டினங்களும் கிராமங் களும் (மார்ச்சு 31)	143
19.	தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட பம்பு செட்டுகள் (மார்ச்சு இறுதியில்)	144
20.	தமிழ்நாட்டின் அந்நிய இறக்குமதி ஏற்றுமதி மதிப்பு	145
21.	தமிழ்நாட்டில் சாலைகளின் நீளம்	146

அட்டவணைகளின் (Tables) பட்டியல்

எண்		பக்கம்
I.	விவசாய உற்பத்தி (மண்டலங்களில், மாநிலங்களில்) ...	115
II.	நீர்ப்பாசனவசதியுள்ள நிலம், மொத்த உற்பத்திச் சக்தி, பட்டினங்கள், கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தல் (மண்டல, மாநிலவாரியாக) ...	118
III.	சாலை நீளளவு (மண்டலவாரியாக) ...	120
IV.	கல்வி, படுக்கை வசதிகள் (மண்டல, மாநில வாரியாக) ...	121
V.	பல்வேறு மாநிலங்களில் மொத்தப் பொறி வழி வேலை, நிகர் உற்பத்தியில் கட்டமைந்த தொழிலின் பங்கு ...	122
VI.	தமிழ்நாட்டில் மக்கள்தொகை வளர்ச்சி ...	147
VII.	தமிழ்நாட்டின் மாநில, தனி நபர் வருமானங்கள் **1960—61** முதல் **1969—70** வரை ...	148
VIII.	தமிழ்நாட்டில் நிலத்தைப் பயன்படுத்துதல்—சதவீதம் ...	149
IX.	தமிழ்நாட்டில் மழை ...	150
X.	தமிழ்நாட்டில் நீர்ப்பாசனம் பெற்ற மொத்தப் பரப்பளவின் சதவீதம் ...	151
XI.	தமிழ்நாட்டில் உணவுத்தானிய உற்பத்தியின் போக்கு ...	152
XII.	தமிழ்நாட்டில் மின்சக்தி—நிறுவப்பட்ட உற்பத்திச் சக்தி ...	153
XIII.	தமிழ்நாட்டில் கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல்—மின்சக்தி பெற்ற பட்டினங்களும் கிராமங்களும் (மார்ச்சு 31) ...	154
XIV.	தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட பம்புசெட்டுகள் (மார்ச்சு இறுதியில்) ...	155
XV.	தமிழ்நாட்டில் சாலைகளின் நீளம் ...	156

மண்டல முன்னேற்றம்

முதல் பகுதி

1. மண்டல முன்னேற்றப் பொருளாதாரத்தின் எல்லையும் முறையும்

(Economics of Regional Development-Scope and Method)

பொருளாதாரம் என்பது கிடைப்பதற்கருமையான (Scarce) பொருள்களேயும், பணிகளேயும் உற்பத்தி செய்வதற்கும், பங்கீடு (Distribute) செய்வதற்கும் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகளேப் (Social Organizations) பற்றி ஆராய்வதாகும். ஆனுலும் பொருளாதார அறிஞர்கள் சமூக அமைப்பின் இடஅமைப்பைச் (Spatial Order) சாதாரணமாக ஆராய்வதில் ஈடுபடுவதில்லே. பொருளாதார அமைப்பு (Economy) ஒரு புள்ளி (Point) யில் அமைக்கப்பட்டு இருப்பதுபோல் பகுத்தாய்வு செய்ய விரும்புகிருர்கள்.

இவ்வாறு விடுபட்ட 'பொருளாதார இடஅமைப்பைப் பற்றிய ஆய்வே மண்டலப் பொருளாதாரம் (Regional Economics) ஆகும். அது கிடைப்பதற்கருமையான சாதனங்கள், புவியியல் முறையில் (Geographic) எவ்வாறு ஒதுக்கீடு (Allocation) செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியது' என்று நூர்ஸ் (Nourse) கூறுகிருர். (Nourse, 'Regional Economics is the study of the neglected spatial order of the economy. It is the Study of the geographic allocation of scarce resources.')[1]

வீடுகள், சில்லறைக்கடைகள், மொத்த வியாபார இடங்கள், ஆக்கத் தொழிற்சாலேகள், மாநகராட்சித் தலேமை நிலேயங்கள்,

[1] Hugh O. Nourse, Regional Economics, McGraw-Hill, 1968.

ஆராய்ச்சிக் கூடங்கள், பள்ளிகள், கோவில்கள், பாங்குகள், பண்ணைகள், சுரங்கங்கள் ஆகியவை குழப்பமான முறையில் நகரத்திலும், உலகத்தின் வெவ்வேறு மண்டலங்களிலும் அமைக்கப் படவில்லை. புரிந்துகொள்ளக் கூடியதும் ஆராயக் கூடியதுமான முறையிலேயே அவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

சாதனங்களின் புவியியல் முறையிலான ஒதுக்கீட்டை ஆராயும் முறையானது பழைய பொருளாதாரப் பகுத்தாய்வை (Traditional Economic Analysis) ஆராயும் முறையாகும். பொருளாதார நட வடிக்கையின் இடமுன்வரைவின் (Spatial pattern) பொருளாதார மாதிரியங்கள் (Models) பொருளாதார அமைப்பில் பழைய மாதிரியங் களில் பொருந்தும்படியாக உருவாக்கப்படும். பொருளாதார நட வடிக்கைகள் புவியியல் முறையில் எவ்வாறு பங்கீடு செய்யப்பட்டிருக் கின்றன என்பது பற்றிய உண்மையான வர்ணனைகள் அவை என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவை போக்குகளைப் காட்டும் மாதிரியங்கள்.

இந்த மாதிரியங்களின் முக்கியத்துவம், மாற்றத்தை உண்டு பண்ணக் கூடிய முக்கியமான மாறிகளைத் (Variables) தனிப்படுத்தி, பொருளாதார நடவடிக்கையின் புவியியல் முறையிலான பங்கீடு, இந்த முக்கியமான மாறிகளின் மாற்றத்திற்குத் தக்கவாறு எவ்வாறு மாறுகின்றன என்பதை முன்மதிப்பீட்டுரை செய்வதுதான் (Predict). அல்லாமல் நடவடிக்கைகள் எங்கே அமைக்கப்படுகின்றன என்பதை முன்மதிப்பீட்டுரை செய்வது இல்லை. மேலும் கோட்பாடு களின் துணையின்றி நடைமுறை அனுபவங்களின் சிக்கலான தன்மைகளை விளக்குவது இயலாததொன்றாகும். உண்மைகளை ஒன்றாகப் பொருத்திப் பார்த்து அவற்றைப் பற்றி எடுத்துச் சொல் வதற்குக் கோட்பாடுகள் தேவைப்படுகின்றன.

மண்டல முன்னேற்றப் பொருளாதார விளக்கத்தின் சுருக்கம்

வியாபாரங்களும், குடும்பங்களும் எந்த இடங்கள் வசதியாக இருக்குமோ அங்கு அமைக்கப்படுகின்றன. வியாபாரங்கள், வீடு களுக்கு வேண்டிய பொருள்களையும் பணிகளையும் அளிக்கின்றன. மக்கள் விரும்புகின்ற பொருள்களை அளிப்பதில் அவை இலாபமடை கின்றன. இலாபத்தை அதிகமாக்குவதற்காக வியாபாரங்கள் சாத னங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துகின்றன. பொருள்களையும் பணிகளையும் சிறந்த முறையில் உற்பத்தி செய்வதன் ஒரு அம்சம் அதன் அமைவிடமாகும் (Location). சில அமைவிடங்கள் மற்றவைகளை விட அதிக இலாபத்தைக் கொடுக்கும். வியாபாரங்கள்

எங்குச் செலவுகள் குறைவாக இருக்கின்றனவோ அல்லது வரவுகள் அதிகமாக இருக்கின்றனவோ அங்கு அமைக்கப்படாமல், இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் அதாவது இலாபம் எங்கு அதிகமாக இருக்கின்றதோ அங்கே அதிகமான அளவில் அமைக்கப்படுகின்றன.

குடும்பங்கள் விருப்பமான இடங்களில் அமைக்கப்படும்போது நன்மை பெறுகின்றன. ஆனால், இவ்வாறு அமைக்கப்படுவது வியாபாரங்களுக்கு விற்கப்படுகின்ற உழைப்பு உட்பட சாதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைச் சம்பாதிப்பதற்குச் சந்தர்ப்பத்தைத் தரக்கூடியதாக அமையவேண்டும். வேலைவாய்ப்புகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கேயே குடும்பங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு தனிப்பட்ட குடும்பங்களின் அமைவிடத்தைப் பற்றி ஆராய்வதைவிட உற்பத்தியின் அமைவிடத்தைப் பற்றி ஆராய்வதில் கவனம் செலுத்தலாம்.

உற்பத்தி அமைவிடத்தின் முன்வரைவை நிர்ணயிக்கும் பொருளாதாரக் காரணிகளைப் பற்றி அறியவேண்டும் என்றால் இயற்கைச் செல்வங்களும், மக்கள்தொகையும் ஒரு சமவெளியில் (**Flat plain**) ஒரே சீராகப் பங்கீடு செய்யப்படுகின்றன என்று அனுமானித்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிப்பட்ட சமவெளியில் வியாபார இடங்கள் அமைவது இரண்டு காரணிகளைப் பொறுத்து அமையும். அதில் ஒன்று உற்பத்தி வீதம் அதிகமாக அதிகமாகச் சராசரி செலவு குறைகிறது என்பதாகும். இவ்வாறு செய்து மற்றவர்க்கு விற்பது ஒரு நிறுவனத்திற்கு இலாபகரமானதாக இருக்கிறது. ஓர் உற்பத்தியாளரின் விலை தனிப்பட்ட குடும்பங்கள், பொருள்களை உற்பத்தி செய்வதற்கான விலையைவிடக் குறைவாக இருக்கும்.

இரண்டாவது காரணம், அந்தப் பொருளைக் கப்பலில் ஏற்றி அனுப்புவதற்காகும் போக்குவரத்துச் செலவானது அதற்குரிய அங்காடி (**Market**) அல்லது வியாபார இடத்தை வரம்பிற்குட்பட்டதாகச் செய்யும் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் ஒவ்வோர் உற்பத்தியாளரும் தம்முடைய போட்டியாளரிடமிருந்து அப்பாற்பட்டிருக்கும் இடத்திலேயே தங்கள் அமைவிடத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள். இறுதியாக அந்தச் சமவெளியில் ஒவ்வொரு பொருளுக்காகவும், ஒரு வியாபார இடம் அமைந்துவிடும். அந்த நிறுவனம் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கு வேண்டிய போதுமான விற்பனை இருக்கும். குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்கீழ் வியாபாரப் பரப்பளவுகளின் அளவுகள் எண்ணக்கூடிய அளவில் இருக்கும். இவ்வாறு பல பொருளாதார

நடவடிக்கைகள் ஒரே மாதிரியான அங்காடிப் பரப்பளவுகளை உடையதாக இருக்கும்.

ஒரு நடவடிக்கை ஓரிடத்தில் மையம் கொண்டிருக்குமாறு அங்காடியின் பரப்பளவு, ஒரே மாதிரியாகப் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் அனுமானித்துக் கொண்டால் நகரங்களின் அமைப்பு உருவாக்கப்பட்டு விடும். மிகச் சிறிய மைய இடம் (Centre) என்பது தேவையான பொருள்களை, பலசரக்குக் கடை, மருந்துக்கடை, முடிதிருத்தும் நிலையம், எண்ணெய் நிரப்பும் நிலையம் இவைகளின் மூலமாக வேண்டிய பொருள்களை அளிக்கும் ஒரு சிறிய நகரமாக இருக்கலாம். இலாபகரமான இயக்கத்திற்கு வேண்டிய வியாபாரத்திற்கு வாய்ப்பு அளிக்கக் கூடிய போதுமான குடும்பங்களைக் கொண்டுள்ள வியாபாரங்களின் இடமானது இந்த இடைப்பட்ட நிலத்தின் அளவை நிர்ணயிக்கும்.

சிறிய நகரத்தில் வசதிப் பொருள்களை (Convenience goods) அளிக்கும் கடைகளுக்கான இடங்கள் ஒரே அளவுடையதாக இருக்கும். இந்தப் பொருள்களை அளிக்கும் கடைகள் ஒரே மாதிரியாக ஒன்றுக்கொன்று ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இருக்கும். இந்தத் தூரமானது, இந்தப் பொருள்களுக்காக மக்கள் எவ்வளவு தூரம் பிரயாணம் செய்வார்கள் என்பதைப் பொறுத்து அமையும். மற்றச் சில்லறைக் கடைகள் இதைவிடப் பெரிய வியாபார இடத்தை உடையதாக இருக்க முடியும். ஏனென்றால், குடும்பத்தினர் குறிப்பிட்ட வகையான பொருள்களையும், பணிகளையும் வாங்குவதற்கு நீண்ட பிரயாணத்தையும் மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். உதாரணமாக மரச்சாமான்கள், உடைகள் ஆகியவைகளை வாங்குவதற்கான இடங்கள், பாங்கு வசதிகள், பள்ளிகள் ஆகிய இவைகள் பல சிறிய நகரங்களையும், அவற்றிற்கு இடைப்பட்ட நிலங்களையும் உள்ளடக்கிய வியாபாரப் பரப்பளவில் அமைக்கப்படலாம். இத்தகைய கூடுதலான அலுவல்களைச் செய்யும் மைய இடமானது, அது சார்ந்திருக்கும் நகரங்களைவிடப் பெரிதாக இருக்கும். அலுவல்கள் அதிகரிக்கும்போது நகரத்தின் அளவும் அதிகரித்துக் கொண்டிருக்கும். மிகப் பெரிய மைய இடமானது சில அலுவல்கள் மற்ற இடங்களில் ஏற்பட வாய்ப்பளிக்கும். உதாரணமாக நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள இடங்களுக்கு சர்வதேச பாங்குப் பணிகளை அளிக்கிறது. ஆனால், பல்வேறு மண்டல மைய இடங்கள் தங்களுக்கு இடைப்பட்ட நிலத்திற்கு பாங்குப் பணிகள் மற்றும் பல பணிகளை அளிக்கின்றன. மண்டல மைய இடங்கள் சிகாகோ, லாஸ்ஏஞ்சல்ஸ் போன்ற இடங்களை உள்ளடக்கியதாக இருக்கும். நகரங்களைக் கீழிருந்து மேலே நாம்

வரிசைப்படுத்தி வந்தால் சுற்றுப்புறத்தில் உள்ள விவசாயிகளுக்கு வசதிப் பொருள்களை அளிக்கும் நகரங்களின் படிநிலை அமைப்பைப் (Hierarchy) பற்றி விவரித்ததாகும்.

விலைக் கொள்கை, மக்கள்தொகை அடர்த்தி, மேலாண்மைத் திறமையில் வேறுபாடுகள், இடவிளக்கவியல் (Topography), அரசியல் எல்லைகள் போன்ற இவை வியாபார இடங்களின் அளவிலும், வடிவத்திலும் மாறுதல்களை உண்டாக்குகின்றன. மாறுதல்களை உண்டாக்கினாலும் ஒரே மக்கள்தொகை உள்ள இடங்களுக்கு இடையேயுள்ள தூரங்களின் ஒழுங்கும், இந்த இடங்களின் படிநிலைக் கட்டமைப்பு (Hierarchical Structure) பாதிக்கப்படாமல் இருக்கின்றன. மேலும் எப்படியானாலும் மாதிரியத்துக்கும், உண்மை நிலைக்கும் இடையே வேறுபாட்டை உண்டு பண்ணுகின்ற மற்றப் பல்வேறு காரணிகள் இருக்கின்றன.

ஒரே அங்காடி அளவுள்ள வெவ்வேறு நடவடிக்கைகள் ஒரே அமைவிடத்தில் இல்லாமல் இருப்பதற்குச் சாதனங்கள் ஒரே மாதிரியாகப் பங்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும், உழைப்புத் திறன் ஒரே மாதிரியாகப் பங்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும், ஒரே மாதிரியாக அங்காடி அளவு இல்லாவிட்டாலும் சில நடவடிக்கைகள் சில அமைவிடங்களிலேயே நடைபெறும் என்பதும் காரணங்களாகும். குறைந்த வருவாயை ஈடு செய்யும் வகையில் உள்ளீடுகளின் விலைகள் (Input prices) குறைவாக இருந்து அதன் காரணமாக இலாபம் அதிகமாக இருந்தால், நிறுவனங்கள், அங்காடி இருக்கும் மைய இடங்களுக்கு அப்பால் இருக்கும். இதைப் போலவே உற்பத்தியின் ஒவ்வோர் அலகின் உழைப்புச் செலவு எங்கே குறைவாக இருக்கிறதோ அந்த இடங்களுக்கும் இது பொருந்தும். பொதுவாக உள்ளீடுகள் அங்காடியின் (Input Market) நன்மை காரணமாக ஒரே தொழிலில், ஓர் ஆலை மற்ற ஆலைகளுக்கு அடுத்தாற்போல் இருக்கும்படியாக அமைப்பது இலாபகரமானதாக இருக்கும். அல்லது தொழிற்சாலைகளுக்கிடையில் முக்கிய நடவடிக்கைத் தொடர்புகள் இருப்பதால் அவை ஒன்றுக்கொன்று அடுத்தாற்போல் இருப்பது இலாபகரமானதாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட நகர மண்டலத்திற்குள், நிலப்பயனின் (Land use) இட அமைப்பின் ஒழுங்கை, இலாபத்தை உச்சமானதாக்கும் நிறுவனத்தின் முயற்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். விற்பது, இருப்பு, உற்பத்தி அல்லது விவசாயம் செய்வது, சுரங்கவேலை என்பது போன்ற ஒவ்வொரு நடவடிக்கையும் நடைபெறுவதற்கு இடம் தேவை. ஒரு குறிப்பிட்ட மனையிடத்திற்கு எந்த நடவடிக்கை மிகப் பெரிய விலை கொடுக்கமுடியுமோ அந்த நடவடிக்கை அந்த

இடத்தில் நடைபெறுகிறது. ஒவ்வொரு நடவடிக்கையும் கொடுக்கும் விலை அல்லது நிலவாரம், மற்ற இடங்களில் அந்த நடவடிக்கை எவ்வளவு இலாபம் பெற முடியும் என்பதைப் பொறுத்திருக்கிறது.

ஒரு நகர மண்டலத்திலுள்ள வெவ்வேறு மனையிடங்களில் இலாபம் வெவ்வேருக இருப்பதற்கு முக்கியமானவைகளாக இருப்பவை இரண்டு காரணிகள். அவைகளே வெவ்வேறு நடவடிக்கைகளின் அமைவிடத்தின் முன்வரைவிற்கும் காரணமாக இருக்கின்றன. அவை அங்காடி மைய இடத்திற்குப் பொருள்களை அனுப்ப ஆகும் போக்குவரத்துச் செலவும், நிலத்தின் உற்பத்தி அளவுமாகும். இயற்கைச் சாதனங்கள் ஒரே மாதிரியாகப் பங்கீடு செய்யப்பட்டிருக்கும். சமதரையின் மையத்தில் பொருள்கள், பணிகளுக்காக அங்காடியிருக்கிறது. அதன் மையத்திலிருந்து ஒவ்வொரு திசையிலும் போக்குவரத்துச் செலவு ஒரே வீதத்தில் அதிகரிக்கிறது. அதன் மையத்திலிருந்து தூரம் அதிகமாக, அந்த நிலத்திற்குக் கொடுக்கப்படும் வாரம் வேகமாகக் குறையும். இவ்வாறு குறைவது எதற்குப் போக்குவரத்துச் செலவு அதிகமாக இருக்கின்றதோ அதற்கும், ஓர் ஏக்கருக்கு கிடைக்கும் உற்பத்தியின் அளவு எதற்கு அதிகமாக இருக்கிறதோ அதற்கும் கிடைக்கும் வாரம் வேகமாகக் குறையும். நிலத்தின் பல பயன்களில் எது மற்றவைகளைவிட அங்காடிக்கருகில் இருக்கிறதோ அந்த நிலத்திற்குக் கொடுக்கும் வாரம் குறைவாக இருக்கும். இந்த தூரம் அதிகரிக்கும்போது வாரம் குறைவதால், நிலத்தை மற்றவற்றிற்குப் பயன்படுத்தாமல், விலையை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்ருல், இப்படிப்பட்ட பொருள்கள் அங்காடிக்கு அருகிலேயே அமையவேண்டும்.

சில குறிப்பிட்ட மாறுதல்களோடு ஒரு மைய அங்காடி ஒரு மாநகர் (Metropolitan) பரப்பளவின் மைய வியாபார மாவட்டமாக இருக்க முடிந்த, ஒரு மைய அங்காடியைச் சுற்றிப் பொது மையம் காண்டுள்ள நிலப்பயன் முன்வரைவை (Concentric land use attern), இந்த நிலப்பயன் மாதிரியம் (Land use model) கொடுக்றது. போக்குவரவு வலைகள் (Networks), நீர்வழிகள், நில உருவமைப்பு வரலாற்றில் மாறுதல் இவற்றைப்பற்றி அறியும்போது, ந்த ஒழுங்கான பொது மையம் கொண்டுள்ள முன்வரைவு தைக்கப்படுகிறது என்பது நன்ருகத் தெரிகிறது. ஆனபோதிலும் மைவிடத்தை நிர்ணயிக்கும் கோட்பாடுகளை முக்கியமென்று ந்த மாதிரியத்தில் தனிப்படுத்தப்படுகின்றன. இந்தத் திருத்ங்கள் செய்யப்பட்டிருந்தாலும் மாதிரியம் எடுத்துக் கூறும் சில ன்மதிப்பீட்டுரைகள் (Predictions) சரியானவை என்று எடுத்துக் ாட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, நிலப்பயன் மாதிரியம்

குறிப்பிடுவது போல, மைய வியாபார மாவட்டத்திற்குள்ள தூரம் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள்தொகை அடர்த்தி குறைகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார நடவடிக்கையின் புவியியல் முறையின் முன் வரைவு நிலையானதன்று; காலத்திற்கேற்ப மாறுவதாகும். இந்த மாற்றங்களைப் பகுத்தாய்வு செய்வதற்கு ஒருவர் முற்பட்டால் முதலில் அவற்றை அளக்க வேண்டும் என்று திட்டவட்டமாக ஒன்றும் நடைமுறையில் இல்லை. ஆகவே மண்டல வரையறைகள் இயற்கை மண்டலங்களைப் பற்றி வரையறை செய்வதில்லை. இரண்டாவது பிரச்சினை என்னவென்றால், ஒரு முறை ஒரு பரப்பில் வரையறை செய்யப்பட்டு வருமானம் அல்லது மற்றும் சில பொருளாதாரப் புள்ளி விவரங்கள் கணக்கிடப்பட்டால், அவை தற்போதைய அமைப்பு, ஒரு தனிப் புள்ளியில் (Single Point) அமைக்கப்பட்டது என்று கொள்ளப்படுகிறது. இவ்வாறு அளவிடுவது என்பது பொருளாதார அமைப்பின் இடமுறையின் தொடர்ச்சியை மறைத்து விடுகிறது. மண்டலப் பொருளாதார அமைப்பின் வேவ்வேறு பகுதிகளை ஒருங்கிணைக்கும் வரை சட்டத்தை வர்ணனையோடு கூடிய உள்ளீடு - வெளிப்பாடு மாதிரியம் (Descriptive Input - output model) அளிக்கிறது. புள்ளி விவரங்கள் அகப்படாவிட்டாலும் மூலக்கருத்துகள் (Concepts), வருமானம், வேலை (Employment) இவற்றின் வேறுபாட்டு வளர்ச்சியைப் (Differential growth) பற்றிய பகுத்தாய்விலும், வணிகச் சுழலால் வெவ்வேறு மண்டலங்கள் வெவ்வேறு முறையில் பாதிக்கப்படுகின்றதைப் பற்றிய ஆய்விலும் மாறிகளாகப் (Variables) பயன்படுகின்றன.

ஒரு மண்டலத்தில் சில பொருளாதார நடவடிக்கைகளின் அமைவிடம், அளவு, இவற்றில் ஏற்படும் குறுங்கால மாற்றங்கள் அந்த மண்டலத்தில் உள்ள வேலை வாய்ப்பு, வருமானம் ஆகியவற்றின்மீது பல்வேறு வகையில் ஆதிக்கம் உடையவைகளாக இருக்கின்றன. அரசாங்க ஒப்பந்தத்தை (Contract) இழப்பதனால் ஏற்படுகின்ற ஏற்றுமதியின் இழப்பு, தேசிய வருமானத்தில் அவ்வப்போது ஏற்படும் சுழல்களின் காரணமாக நிலக்கரி அல்லது மற்றப் பொருள்களின் தேவை தற்காலிகமாகக் குறைவதினால் ஏற்படுகின்ற வருமானத்தின் இழப்பு அல்லது நம்பிக்கையின்மையின் காரணமாக முதலீட்டில் ஏற்படுகின்ற தற்காலிகமான குறைவு ஆகியவைகள் ஆரம்பத்தில் ஏற்படுகின்ற இழப்பைவிட அதிகமான இழப்பை வேலையிலும் வருமானத்திலும் ஏற்படுத்தும். இதற்குக் காரணம் என்னவென்றால் வருமானத்தை இழக்கின்ற தொழிலாளர்களும் மற்றவர்களும் அந்த உள்ளூர்ப் பரப்பில் குறைவாகச்

செலவிடுவதினுல் சில்லறை வியாபாரத்தைக் குறையச் செய்கிருர்கள் என்பதே யாகும். ஏற்றுமதி, இறக்குமதி, உள்ளூர்த் தொழிலின் அமைதி இவற்றைப் பொறுத்து வருமானத்தில் இழப்பு மண்டலங்களுக்கிடையே வேறுபடும். இதே காரணிகள்தாம் ஒரு மண்டலத்தின் வருமானத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவுகள் மற்ற மண்டலங்களின் வருமானத்தில் ஏற்படுகின்ற விளைவுகளை நிர்ணயிக்கும்.

பொருளாதார நடவடிக்கையின் அமைவிடம் அல்லது அளவு இவற்றில் ஏற்படும் நீண்டகால மாறுதல்கள் மண்டலங்களின் வளர்ச்சியையும் அதன் வீழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. ஒரு பரப்பின் அல்லது மற்ற இடங்களின் உள்ளூர் உற்பத்திச் செலவுகள், அங்காடிக்கு அருகிருத்தல், போக்குவரத்துச் செலவுகள், இவைகளில் ஏற்படும் மாறுதல்கள், குறிப்பிட்ட உற்பத்தி நடவடிக்கையில் ஏற்படும் மாற்றத்தை உள்ளடக்கியதாக இருக்கும். அந்தப் பரப்பில் உள்ளூர்ச் சாதனங்கள் அல்லது மிகவும் இலாபகரமாகச் செய்யப்படும் பொருள்கள், இவற்றில் ஏற்படும் மாறுதல்கள்கூட இந்த வகையைச் சேர்ந்தவையேயாகும். உதாரணமாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவற்றிற்கு இருப்பது போலத் தேவை அதிகரிக்கலாம் அல்லது நிலக்கரிக்கு இருப்பது போலக் குறையலாம். இத்தகைய தொழில் வளர்ச்சியில் ஏற்படுகின்ற பிறழ்ச்சி (Shift) அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்ற தொழிலின் வளர்ச்சி ஒரு பத்தாண்டு காலத்திற்கோ அதற்கு மேலோ நீடிக்கலாம். தொழிலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பிறழ்ச்சி என்ற சொல் தொழிலாளர்கள், ஆலை உபகரணங்கள் இவற்றின் இடப் பெயர்ச்சியைக் குறிக்கவேண்டுமென்பது இல்லை. பழைய பரப்புகளில் பழைய நிறுவனங்கள் மூடப்படுவதைப் போல, புதிய இடத்தில் புதிய நிறுவனங்களின் வளர்ச்சிக்காகப் பிறழ்ச்சி என்ற சொல் பயன்படுத்தப்படலாம்.

பொருளாதார நடவடிக்கையின் அமைவிடம், அளவு இவற்றில் ஏற்படுகின்ற மாறுதல்களின் குறுங்கால, நீண்டகால ஆதிக்கம் மண்டலத்தின்மீது அடிப்படையிலேயே வேறுபட்டிருக்கிறது. குறுகியகாலத்தில் கூலி, விலைகள் ஆகியவை மற்றவைகளுக்கேற்ப மாறச் சந்தர்ப்பம் இல்லை. இவ்வாறு குறைவான ஏற்றுமதியின் விளைவு, ஒரு மண்டலத்தின் வேலையின் அளவையும், வருமானத்தையும் நேரிடையாக பாதிக்கின்றது. எப்படியாகிலும் நீண்டகாலத்தில் அந்த மண்டலத்தில் விலைகளும் கூலிகளும் மாறுகின்றன. ஏற்றுமதிக் குறைவுகளால் விலைகளும் கூலிகளும் வீழ்ச்சியடையும்போது குறைந்த கூலி வாங்கும் உழைப்பைக்

கொண்ட தொழில்களின் அமைவிடமாக இருக்கும். அந்த மண்டலம், எல்லோரும் விரும்புகின்ற இடமாக அமையும். அதே சமயம் கூலி எங்கு அதிகமாக இருக்கின்றதோ அங்குத் தொழிலாளர்கள் குடியேறச் செய்வார்கள். ஆனபோதிலும் குழந்தைகள் வேலை செய்யும் வயதை அடையும்போது உழைப்பின் அளவு அதிகரிக்கத் தொடங்கும். அப்போது உழைப்பின் வளர்ச்சி புதிய வேலை வாய்ப்புகளைவிட அதிகரித்தால் கூலி குறைந்த நிலையிலேயே இருக்கும். இவ்வாறு நீண்ட காலத்தில் ஒரு மண்டலத்தின் பொருளாதார நடவடிக்கையில் ஏற்படுகின்ற பிறழ்ச்சிக்குப் பொருந்துகிறாற் போல் விலைகளும் கூலிகளும் மாறும்.

சில காரணிகளால் சீரமைவு செயற்பாங்கின் (Adjustment process) ஒழுங்கான இயக்கம் தடை செய்யப்படலாம். நாடு முழுவதிலும் உள்ள ஒரே மாதிரியான குறைந்த அளவு கூலிச் சட்டங்கள், சில வளர்ச்சியடையாத இடங்களில் கூலியின் குறைவைத் தடுக்கலாம். மற்ற இடங்களில் இருக்கும் வேலை வாய்ப்புகளைப் பற்றிய அறிவின்மை, புதிய வேலைகளில் இருத்தி வைக்க முதல் இல்லாமை, ஒரு குடும்பத்தைப் புதிய அமைவிடங் களுக்குப் பெயர்த்துச் செல்லப் பணம் இல்லாமை ஆகிய இந்தக் காரணங்கள், உழைப்பாளிகள், வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்களி லிருந்து குடியேறாமல் தடுக்கலாம். தேர்ச்சி பெற்ற உழைப்பாளிகளை, போக்குவரவு வசதிகள் இல்லாமை, முதலீட்டு வசதிகளைப் பற்றிய அறிவின்மை ஆகிய இவை வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்களில் வியாபாரங்கள் முன்னேறுவதைத் தடை செய்யலாம். ஒரு மண்டலத்தின் சாதனங்களுக்கான தேவை குறையும்போது, பயன்படுத்துவதன் காரணமாகச் சாதனங்களின் அளவு குறையும் போது (defect), மற்ற மண்டலங்களுக்குத் தொழில் பிறழ்ச்சியாகும் போது, பிரச்சினை இடங்களை (Problem areas) ஏற்படுத்துகின்றன.

மேலும் அங்காடியின் அமைப்பு ஒழுங்காக வேலை செய்தாலும் இந்தச் சீரமைப்புச் செயற்பாங்கு நடைபெறாமல் இருக்கும். குடியேற்ற முடிவு, முதலீட்டு முடிவு என்று கருதப்பட்டாலும் மண்டலங்களுக்கிடையே உள்ள கூலி, முதலீட்டிலிருந்து கிடைக்கும் விளைவின்வீதம் இவற்றில் உள்ள வேறுபாடுகள் தொடர்ந்து இருக்கும். ஏனென்றால், மாற்று முதலீட்டின் விளைவுவீதம் (Rate of Return), குடியேற்ற விளைவு வீதத்தைவிட அதிகமிருக்கும். குறிப்பாக, குடியேற்றம்செய்வதன் முதலீட்டின் விளைவு வீதம், குறைந்த உழைப்புக் காலத்தைக் கருதி, வயதான உழைப்பாளிகளுக்கும் கூலி உயர்வுக்கான மாற்று

வசதிகள் தற்போதைய அமைவிடத்தைவிட அதிக தூரத்தில் இருக்கும்.

உள்ளூர், மாநில, தேசியக்கொள்கைள், வளர்ச்சி பாதிக்கப் பட்ட இடங்களில் பொருளாதார வளர்ச்சியை ஆரம்பித்து வைக்க முடியும். ஆனுல், மறு சீரமைப்பு (Readjustment) ஏற்படுத்தவோ, உதவவோ முடியாது. வரிவிதிப்பு, செலவு கொள்கைகள் ஒரு மண்டலத்திலிருந்து இன்னெரு மண்டலத்திற்கு நிதியை ஆற்றுப் படுத்த (Channelise) முடியும். ஆனுலும், அவற்றை வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து அகற்றவோ அல்லது ஆற்றுப் படுத்தவோ முடியும். வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்களில் முதலீட்டு வசதிகள், வேலேயில்லா உழைப்பாளிகளுக்கு வேலே வாய்ப்பு வசதிகள், இவற்றைப் பற்றிய செய்தியை வெளியிடுதல் பயனுள்ளதாக இருக்கும். எங்கெல்லாம் வேலேவாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கே குடும்பங்கள் குடியேற உதவிப்பணம் வழங்குதல், மறுபயிற்சி அளித்தல் ஆகிய இவை சீரமைவைக் கொண்டுவர உதவுகின்றன. ஏழைகளுக்கு வருமானத்தை மாற்றுவதாலும் பயன் விளேயும்.

இறுதியாகப் பொருளாதார வளர்ச்சியின் பல காரணிகள் பொருளாதாரப் புவியியல் அமைப்பில் மாறுதல்களே ஏற்படுத்து கின்றன. மக்கள்தொகை, தனிநபர் வருமானம், தொழில் நுணுக்கம் ஆகியவை நகரங்களின் எண்ணிக்கை, அளவு, இடத் தோடு நிலப்பயன் முன்வரைவு ஆகியவற்றையும், அவற்றைச் சுற்றியுள்ள இடங்களேயும் பாதிக்கின்றன. காரண காரியத் தொடர்பு ஒருசார்பற்றதன்று. பொருளாதார வளர்ச்சி, மிகவும் முன்னேறிய நகர்ப்புறத் தொழில் மைய இடங்களுக்கு அடுத்தாற் போல் இருக்கும் மண்டலங்களில் வேகமாக முன்னேறுகிறது என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

இவ்வாறு மண்டல முன்னேற்றப் பொருளாதாரம் பல விஷயங்களேப் பற்றி ஆராய்கிறது. முன்பு பார்த்தபடி கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விவாதத்தின் பதில்களே அடக்கியதாக இருக்கிறது. ஒழுங்கான இடங்களுக்குள் நகரங்கள் தோன்றக் காரணமாக இருக்கும் காரணிகள் யாவை? நகரங்களின் அளவு களில் முறையான வேறுபாடுகள் இருக்கும்படி செய்யும் காரணிகள் யாவை? தொழில் பரவலுக்கும் (dispersion of industry) செறிவுக்கும் காரணங்கள் யாவை? நகர மண்டலங்களுக்கான நிலப்பயன் முன்வரைவை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகள் யாவை? ஒரு மண்டலத்தின் ஏற்றுமதிகளின் இழப்பு, அதன் வருமானம், வேலே வாய்ப்பு இவற்றைக் குறுகிய காலத்தில் எப்படிப் பாதிக்கிறது?

வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்களைத் தோற்றுவிப்பவை யாவை? நகரங்களின் அமைவிடம், அளவு, நிலப்பயன் முன்வரைவு இவற்றை நிர்ணயிப்பதில், தனிநபர் வருமானம், மக்கள்தொகை இவற்றின் அதிகரிப்பின் ஆதிக்கம் என்ன? முன்னேற்றச் செயற்பாங்கில் நகர அமைப்புகளின் ஆதிக்கம் என்ன? நகரத்தின் நலிவு (urban blight), வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடங்கள் போன்ற மண்டலப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கக் கொள்கைகளின் பயன் என்ன?

இந்த வினாக்கள் பல்வேறுபட்டவையாகத் தோன்றினாலும் அவற்றிற்குள் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. இந்த வினாக் களுக்குப் பதில் தேடத் தொடங்கினால், அதன் தீர்வு (Solution) வியாபார அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகளைப் பொறுத் திருக்கிறது என்று தோன்றுகிறது. நகரங்களின் அளவு, அமை விடம் இவை விற்பனையாளர்களின் இலாபகரமான அமைவிடத்தைச் சார்ந்திருக்கும் அலுவல்களைச் சார்ந்திருக்கின்றன. நிலப்பயன் முன்வரைவு, யார் அதிக வாரம் கொடுக்க முடியுமோ அதைப் பொறுத்திருக்கிறது. அதுவும் நிறுவனங்களுக்கு மனையிடத்தின் இலாபகரமான நிலையைச் சார்ந்திருக்கிறது. வருமானத்திலும் வேலையிலும் ஏற்படும் குறுங்கால, நீண்ட கால மாற்றங்கள், ஏன் ஏற்றுமதிகள் வீழ்ந்துவிடுகின்றன என்பதைப் பொறுத்திருக் கின்றன. ஆனால், இது மற்றொரு விதத்தில் கேட்கப்படலாம். குறிப்பிட்ட ஏற்றுமதிப் பண்டத்தை உற்பத்திச் செய்ய ஒரு மண்டலம் இலாபகரமான அமைவிடமாக இருக்கமுடியாது என்பதற்குக் காரணம் என்ன? வளர்ச்சி பாதிக்கப்பட்ட இடத்தின் பிரச்சினை, அமைவிடப் பிரச்சினையாகக் கருதப்படலாம். வேலை யற்ற உழைப்பாளிகள் இருக்கின்றார்கள் என்பதற்காகச் சில நிறுவனங்கள் இலாபமற்ற இடங்களில் அமைக்கப்படுகின்றவே அது ஏன்? குடும்பங்கள் தங்கள் பொருளாதார முயற்சிக்கு இலாபமற்ற இடங்களை அமைவிடமாகக் கொள்ள ஏன் தொடர்ந்து முயலு கின்றன? ஒரு மண்டலத்தின் பொருளாதார அமைப்பு, நிலைப் படுத்துதல் (Stabilization), வளர்ச்சி இவற்றை அறிந்துகொள்ளத் தனிப்பட்ட உற்பத்தியாளரின் அமைவிடத்தைப் பற்றிய பகுத்தாய்வு மையமாக இருப்பதால், உற்பத்தியின் அமைவிடத்தைப் பற்றி ஆழமாக ஆராயவேண்டும்.

தனிப்பட்ட உற்பத்தியாளரின் அமைவிடம்

தனி உற்பத்தியாளரின் இலாபம் என்பது செலவுபோக மீதி இருக்கும் வரவாகும். நுகர்வோர் விருப்பங்கள், வருமானம்,

பதிலீட்டுப் பொருள்களின் விலைகள், ஒரு தொழிலினுடையதும், தனி உற்பத்தியாளருடையதுமான வரவுகளைப் பாதிக்கும் திருந்திய அமைப்பு, புதிய தொழில் நுணுக்கம், தேர்ச்சிபெற்ற உழைப் பாளிகள் போன்றவை செலவுகளை உருவாக்குகின்றன. ஆன போதிலும் அமைவிடத்தில் ஏற்படுகின்ற மாறுதல்கள் ஓர் உற்பத்தி யாளரின் வரவையும், செலவையும் பாதிக்கும். ஓர் உற்பத்தியாளரின் முக்கிய நோக்கம் அவருடைய இலாபத்தை உச்சப்படுத்துவது என்பதாலும், சில இடங்கள் மற்ற இடங்களைவிட அதிக இலாபத்தைத் தருவதாகவும், விலை, உற்பத்தியளவு இவற்றைப் போலவே அமைவிடமும் முக்கியமானதாக இருக்கிறது.

எந்த ஓரிடத்தில் ஒரு தொழிற்சாலை இலாபத்தை உச்சமாக்கு கிறதோ அந்த இடத்தை நிர்ணயிக்கின்ற காரணிகளே உத்தம அமைவிடத்தில் (Optimum location) மாற்றக் கூடிய காரணிகளாய் இருக்கின்றன. உள்ளீடுகைகளின் விலைகள், அதன் போக்கு வரத்துச் செலவுகள் ஆகியவை ஐஸோ செலவு கோடுகளை (Iso cost lines) நிர்ணயிக்கின்றன. குறைந்த செலவுக் கலவை (Least cost combination) இந்த ஐஸோ செலவு கோடுகளையும், உற்பத்தி ராசியையும் (Production function) பொறுத்திருக்கிறது. மொத்த வருமானமானது, தனிப்பட்ட நுகர்வோர் தேவை, போக்குவரத்துச் செலவு, அந்தத் தொழிற்சாலை அங்காடியிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கின்றது போன்றவற்றைச் சார்ந்திருக்கிறது. இவை உத்த அமைவிடத்தை நிர்ணயிக்கின்ற அடிப்படைக் காரணங் களாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட அமைவிடத்திற்கு எந்த ஒரு காரணி மட்டும் பொறுப்பானது என்று சொல்ல முடியாது. ஆனால், எல்லாக் காரணிகளின் தொகுப்பே ஒவ்வொரு தொழிற் சாலையின் அமைவிடத்தையும் நிர்ணயிக்கின்றன.

மண்டலக் கட்டமைப்பு
(Regional Structure)

நகரங்களின் அமைப்பு (System of Cities)

புவியியல் முறையில் மக்கள்தொகை அடர்த்தி சமமாகப் பங்கிடப்படவில்லை. ஒரு மாநிலத்தில் கிடைக்கும் சாதனங்களின் அளவில் உள்ள வேறுபாடு, மக்கள்தொகை அடர்த்தியின் வேறு பாட்டிற்கு முக்கியக் காரணமாக இருந்தாலும் பொருளாதாரக் காரணங்களுக்காக மக்கள்தொகை அடர்த்தி வெகுவாக மாறுபடும். சாதனங்கள், ஒரே சீராகப் பங்கீடு செய்யப்பட்ட ஒரே தன்மையான சமவெளியாக இருந்தாலும் இவ்வாறுதான் இருக்கும். குறிப்பாகப்

பல்வேறு அளவுகள் கொண்ட நகரங்கள் ஒழுங்கான இடைவெளி களில் உண்டாக்கப்படும் சாதனங்கள், ஒரே சீராகப் பங்கீடு செய்யப்பட்டால் சிக்கனங்கள் இருப்பதனுல் மைய இடங்கள் உண்டாவதை அவை சாத்தியமானதாக ஆக்குகின்றன. ஒரே தன்மையான சமவெளியில் தங்களுக்கென்று தனிப்பட்ட வியாபாரப் பரப்பளவுகளை உண்டாக்கிக் கொள்வதற்கு நிறுவனங்கள் தங்களுக்குள் போட்டி யிடுகின்றன. இந்த வியாபார இடங்கள் மைய இடங்களின் அமைப்போடு தொடர்புபடுத்தப்படும். இப்படிப் பட்ட மைய இடங்கள் நகர அளவுள்ளதாகவும் இருக்கும்.

நகரங்களின் அளவும், அமைவிடமும் அதன் அலுவல்களைச் சார்ந்திருக்கும், உள்ளீடு தடைகள் (Input constraints) இல்லாத பொருளாதார நடவடிக்கைகள் உள்ள வியாபார மைய இடங்கள் படிநிலை அமைப்புள்ள நகரங்களை (Hierarchical system of cities) உண்டு பண்ணுகின்றன. மனித, இயற்கைச் சாதனங்கள் ஒரே சீராகப் பங்கீடு செய்யப்படவில்லையாதலால் இப்படிப்பட்ட வியாபார வரை சட்டத்தில் வேறுபாடுகள் நிகழ்கின்றன. ஆகவே, சில தொழிற்சாலைகள் சிறிய அல்லது பெரிய வியாபாரப் பரப்பளவுகள் கொண்ட மைய இடங்களில் அமைக்கப்பட்டாலும் அவை சாதனங் களுக்கு அருகில் இருக்கும்.

தொழில் அமைவிடங்களின் எடுத்துக் காட்டமைப்பு (Industrial Location Pattern)

வியாபார இடங்களின் அடிப்படையில் அமைந்துள்ள மைய இடங்களின் அமைப்பில் உருவாகும் நகரங்களின் அளவையும், இடங்களையும் தொழில் அமைவிடத்தின் முன்வரைவு மாற்றக்கூடும். தொழிலின் அமைவிடத்தைப் பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. அப்போது ஒரு தொழிற்சாலை ஒரே வியாபாரப் பரப்பளவைக் கொண்டதாக இருக்கும்போது மற்ற தொழிற்சாலைகள் அதே இடங் களில் அமையாது. இவ்வாறு இருப்பதற்குப் பல காரணங்கள் இருக் கின்றன. புவியியல் வேறுபாடுகள் உள்ளீடு விலைகளில் மாறுதல்களை ஏற்படுத்தும். இந்த மாறுதல்கள் ஒரு தொழிற்சாலையின் இலாபகரமான அமைவிடத்தை உண்டாக்கித் தரும். ஆனுல், இந்த அமைவிடம் அங்காடியிலிருந்து வெகு தூரத்தில் இருக்கும். மேலும் சாதனங்களால் ஈர்க்கப்படுகின்ற ஒரு தொழிற்சாலை அதனுடைய உற்பத்தி காரணமாக ஒரு நகரத்தையே உண்டாக்கும். கூட்டின் சிக்கனங்கள் (Agglomeration Economics) ஒரு தொழிற்சாலையின் முக்கிய இலாபகரமான அமைவிடத்தை அதன் அங்காடியின் மைய இடத்திலிருந்து அப்பால் இருக்கும்படியாகச் செய்யும். ஒரு

நிறுவனம் அதே பொருளைத் தயாரிக்கின்ற மற்ற நிறுவனங்களுக்கு அருகிலோ அல்லது பொருளாதார நடவடிக்கை நிறைந்துள்ள மைய இடங்களுக்கு அருகிலோ இருக்கும்போது, அந்நிறுவனத்துடைய செலவு குறைவதினால் இந்தச் சிக்கனங்கள் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மனையிடத்தில், ஓர் ஆலை அமைக்கப்படுவது அதன் இடஇயல்பு அறியும் திறம் (Orientation) என்று சொல்லப்படும். மைய இடங்களைப் பற்றிய பகுத்தாய்வு பல ஆலைகளை அங்காடி காரணமாக ஏற்பட்டவை (Market oriented) என்று வர்ணிக்கும். பருப்பொருள் கிடைக்கும் இடங்களின் அருகில் ஒரு தொழிற்சாலை ஏற்பட்டால் அது பருப்பொருள் தொடர்பால் ஏற்பட்டது என்றும், மலிவான உழைப்புக் கிடைக்கும் மனையிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டால் அஃது உழைப்புத் தொடர்பாக ஏற்பட்டது என்றும் சொல்லப்படும். உதாரணமாகப் பருப்பொருள் தொடர்பாக ஏற்பட்ட தொழிற்சாலைக்கு இரும்பு எஃகு தொழிலைச் சொல்லலாம். உழைப்புத் தொடர்பாக ஏற்பட்டவற்றிற்குப் பருத்தி ஆலைத் தொழிலைச் செல்லலாம்.

நிலத்தின் பயன்
(Land use)

இதுவரை நகரங்களின் அளவும், அவற்றிற்கிடையேயுள்ள இடைவெளியும், தொழிலின் மண்டலப் பங்கீட்டையும், பின்னதன் மேல் முன்னதன் ஆதிக்கத்தையும் பார்த்தோம். இதுவரை நகரங்களில் குழுமி இருப்பதன் பொருளாதார காரணத்தையும் இந்த நகரங்களின் புவியியல் முறையிலான பங்கீட்டையும் பார்த்தோம். இப்போது நகரத்திற்குள்ளும், சுற்றிலும் பொருளாதார நடவடிக்கையின் இட அமைப்பை நிர்ணயிப்பவை யாவை என்பதைப் பற்றி ஆராய்வோம்.

மாநகர் அங்காடி நடவடிக்கையின் மைய இடமானது அந்தப் பரப்பளவில் வாழும் மக்களுக்கு அருகிலேயே இருக்கும். மொத்த வரவுக்காக அருகிலே சார்ந்திருக்கும் நகர்ப்புற நடவடிக்கைகள் முக்கியமான மைய இடங்களைப் பிடித்துக் கொள்ளும். இந்த நடவடிக்கைகளில் பாங்குத் தொழில், மாநகராட்சித் தலைமை அலுவல்கள் (Corporate Head Quarters), பலபொருள்களை ஒரே இடத்தில் விற்கும் கடைகள் (Departmental Stores), தனிப்பட்ட சில பொருள்களையே விற்கும் கடைகள், மரச்சாமான்கள் விற்கும் கடைகள், முதலீட்டு, காப்பீட்டு, வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவை அடங்கும். மைய இடத்திலிருந்து

தூரம் அதிகரிக்க அதிகரிக்க வாடகை குறையும். ஆனால், நகரத்திற்குள் போக்குவரத்து வசதி அளிக்கும் புகைவண்டி நிலையங்கள், நீர்வழிகள் இவற்றிற்கு அருகில் வாடகை அதிகமாக இருக்கும். நகர் முழுவதும் இல்லாமல் சிறிய அளவில் வாழும் மக்களுக்குப் பணிகளையும் பண்டங்களையும் வழங்கும் அங்காடி மைய இடங்களிலும் வாடகை அதிகமாக இருக்கும். நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், வாடகை அதிகமாக இருக்கும். மாநகர் பரப்பளவிலும், வெளிப்பகுதியிலும் அமைந் திருக்கும் தொழிற்சாலைகள் இலாபகரமானதாக இருக்கும். மைய இடத்திற்கு அருகில் இருக்கும் தொழிற்சாலைகள் குறைந்த நிலத்தையே பயன்படுத்தும். நதரத்திற்கு அப்பால் இருக்கும் தொழிற்சாலைகள் நிரம்ப நிலத்தைப் பயன்படுத்திக் குறைந்த வாடகையைக் கொடுக்கும்.

நகர்ப்புற வாணிப நடவடிக்கைகள், தொழிற்சாலைகள் இவற்றிற்கு இடையிலும், சுற்றிலும், குடியிருப்பு இடங்கள் ஏற்படும். அதிகமாக வாடகை கொடுக்கும் இடங்கள் மைய இடத்திற்கு அருகில் இருக்கும். அதைப் போலவே அதிக வாடகைக் கொடுக்கும் வீடுகள் அருகில் இருக்கும். இவ்வாறு தூரம் குறையக் குறைய வாடகை குறைந்து தனியொரு குடும்பத் திற்கான குடியிருப்புகள் மையத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கும். ஆகவே, அங்காடி மைய இடத்திலிருந்து இருக்கும் தூரத்திற்கேற்ப குடியிருக்கும் இடத்தின் பரப்புவீதமும், மக்கள் தொகை வீதமும் குறையும் என்று எதிர்பார்க்கலாம். இங்கு இரண்டு கருத்துகளை அறிந்துகொள்ள வேண்டும். குடியிருப்புக்கு அதிக வாரம் வாங்குவது போக்குவரத்துச் செலவுகள் முதலிய வற்றைச் சார்ந்திருக்கும். ஆகவே, வியாபார மைய இடங்கள், வேலை வாய்ப்பு இடங்கள் ஆகியவற்றைச் சுற்றியிருக்கும் இடங்களுக்கு வாரம் அதிகமாக இருக்கும். ஒரு வீடு புழுதி நிறைந்த தொழிற் சாலைக்கு அப்பாலும், பூங்கா அல்லது ஏரி இவற்றிற்கு அருகே அமைந்திருந்தாலும் அவ்வீட்டில் குடியிருப்போர் அதிக வாடகை யைக் கொடுக்க முன் வருவார்கள். ஆகவே, இந்த மனையிடங்கள் கூட, குடியிருப்புக்காக உச்சவரம்பு வாடகை வீதமும் குறிக்கப் பெற்றிருக்கும்.

விவசாயத்திற்காக அல்லாமல் நகர்ப்புறத்திற்காக ஈடுபடுத்தப் பட்ட நிலத்தின் அளவு, நகர்ப்புறப் பொருள்கள், பணிகள், இவற் றின் தேவைக்கேற்ப அளிப்பு இருக்குமாறு செய்வதற்கு எவ்வளவு நிலம் வேண்டுமோ அதைப் பொறுத்து அமையும். பொருள்கள், பணிகள், அங்காடிகளில் சமநிலை ஏற்படும் வகையில் வாரம்

இருக்கும். ஒவ்வொரு திசையிலும் சிறிது தூரத்தில் நிலத்தின் பயனுக்காக நகர்ப்புற நடவடிக்கைகளைவிட விவசாய நடவடிக்கைகள் அதிக வாரம் கொடுப்பதாக இருக்கும். பொதுவாக விவசாயம் அதிகமான உற்பத்தி வீதத்தை உடையதாகத்தான் இருக்கும் என்று சொல்ல முடியாது. உற்பத்தித்திறன் அனுகூலமாக இருந்தாலும் உச்சவரம்பு வாடகை என்பது உற்பத்திப் பொருளின் அங்காடிவிலை, அங்காடிக்குக் கொண்டுபோகும் போக்குவரத்துச் செலவுகள், மற்றச் செலவுகள் இவைகளைப் பொறுத்து இருக்கும். ஆகவே, இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் அருகில் இருக்கும் நகரத்தைப் பொறுத்து அங்காடி விலையும், போக்குவரத்துச் செலவும் இராது என்பதுதான். பயிர்நிலங்களின் உச்சவரம்பு வாரம் அதன் அங்காடி விலைக்கும் அந்தப் பயிரின் முக்கிய அங்காடி மைய இடம் அமைந்திருக்கும் தூரத்தையும் பொறுத்து அமையும்.

மண்டலப் பொருளாதார நடவடிக்கைகளின் அளவு

இதுவரை பொருளாதார நடவடிக்கைகளின் இட அமைப்பைப் பற்றிப் படித்தோம். நகரங்களின் உருவாக்கம், அமைவிடம், நகரங்களின் படிநிலை அமைப்பு (Hierarchy), தொழில் புவிஇயல் முறையில் பரவுதல் (Dispersion), நகர மண்டலங்களில் நிலத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைப்பற்றி ஆராய்ந்தோம். ஏதாவதொரு நகர மண்டலத்தின் விலைகள், அளவுகள், அமைவிடங்கள், போக்கு வரத்துச் செலவுகள் போன்ற எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது மிகவும் கடினம். இதைவிடக் கடினம் பல நகர மண்டலங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வேண்டிய பொருளாதார மாறிகளை (Variables) நினைவில் வைத்துக் கொள்வது. மேலும் ஒரு பரப்பளவின் வளர்ச்சியையோ அல்லது வணிகச் சூழல்களால் அஃது எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதையோ பகுத்தாய்வு செய்யும்போது வருமானம், வேலைவாய்ப்பு இவற்றின் மொத்த அளவு பற்றிய விவரங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, ஏதாவதொரு குறிப்பிட்ட மண்டலத்தைப் பற்றி ஆராயவேண்டு மென்றால், நாம் இதுவரை சர்ச்சை செய்த விவரங்களைத் தொகுத்து ஒருங்கிணைக்க வேண்டும்.

பொருளாதார நடவடிக்கையை அளப்பதற்கு ஒரு மண்டலத்தின் எல்லையை வகுக்க வேண்டும். மண்டலத்தை வரையறை செய்வதற்குத் திட்டவட்டமான விதிகள் என்று ஏதுமில்லை. அந்த வரையறை குறிப்பிட்ட ஆய்வின் காரணத்தைப் பொறுத்து அமையும். இவ்வாறு அந்த மண்டலத்தின் வரையறையை அமைத் துக் கொண்டுவிட்டால் குறுங்கால, நீண்டகாலப் பொருளாதார

பகுத்தாய்விற்கு வேண்டிய புள்ளி விவரங்களைத் தருவதற்கு மண்டல கணக்கீட்டு வரைச் சட்டம் (Regional Accounting framework) அமைக்கப்படலாம். அந்த வரைச் சட்டம் கூட எந்தவகையான பொருளாதாரப் பகுத்தாய்வு மேற்கொள்ளப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அமையும்.

மண்டலங்களுக்கிடையேயான வருமானம், வியாபாரம் இவைகளைப் பற்றிய கோட்பாடு

(Inter-Regional Theory of Income and Trade)

குறுங்காலத்தில் விலைகளும், கூலிகளும் நிலையானவை என்று அனுமானித்துக் கொள்ளலாம். இது உண்மையானால் ஒரு மண்டலத்தில் உள்ள சாதனங்களுக்கான மொத்தத் தேவை, அந்த மண்டலத்தில் ஈட்டப்பட்ட வருமானத்தையும் சார்ந்திருக்கும் அந்தத் தேவையை ஏற்றுமதிகள் என்றும், உள்ளூர்ச் செலவுகள் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். மற்ற மண்டலங்களின் வருமானத்தைப் பொறுத்தும் ஏற்றுமதிகள் அமையும். அந்த மண்டலத்தில் ஈட்டப்பட்ட வருமானத்தைப் பொறுத்து உள்ளூர்ச் செலவுகள் அமையும். முழுவேலை வருமானத்தை (Full employment level of income) விடக் குறைவான வருமான சம நிலையை (Equalibrium level of income) குறுங்காலத்தில் ஏற்படுத்த முடியும். குறுங்காலப் பகுத்தாய்வுக்குப் பொருத்தமான எடுகோள் களின் (Assumptions) கீழ் ஒரு மண்டலத்தின் ஏற்றுமதிக்கான தேவையில் ஏற்படும் மாறுதல்கள், சமநிலை வருமான மட்டத்திலும் ஏற்படும். ஏற்றுமதியில் ஏற்படும் மாறுதல்களைவிட இந்த மாறுதல் பல மடங்காக இருக்கும்.

பொருளாதார அடிப்படை ஆய்வின் மூலம் (Economic base study) ஒரு மண்டலத்தின் வேலையை ஆராயலாம். அதாவது ஏற்றுமதிகளின் காரணமாக ஏற்படுகின்ற வேலைகள், உள்ளூர்ச் செலவுகளின் காரணமாக ஏற்படுகின்ற வேலைகள் என்று இரண்டு விதமாகப் பிரித்து ஆராயலாம். ஏற்றுமதி அதிகரிக்கும் போது உள்ளூர்ச்செலவுகள் (Expenditures) அதிகமாகின்றன. அதன் காரணமாக வேலை அதிகரிக்கிறது. இத்தகைய மாறுதலை மதிப்பீடு செய்வதற்கு, ஏற்றுமதியின் காரணமாக உண்டாகும் வேலையில் ஏற்படும் மதிப்பீடு செய்யப்பட்ட மாறுதலை (Estimated change) பெருக்கியால் (Multiplier) பெருக்க வேண்டும். மொத்த வேலையில் ஏற்படுகின்ற மாற்றமானது ஏற்றுமதி வேலை, உள்ளூர்ப்பணிகளின் வேலை இவை இரண்டிலும் ஏற்படும் மாற்றங்களின் மொத்தமே யாகும்.

வணிகச் சுழல்களினுல் ஒரு மண்டலம் எவ்வாறு பாதிக்கப் படுகிறது என்பதை ஆராயப் பெருக்கிப் பகுத்தாய்வு (Multiplier analyses) பயனுள்ளதாக இருக்கிறது. குறிப்பாக ஏற்றுமதியில் ஒரு சதவீதம் மாற்றம் ஏற்படும் போது அதன் காரணமாக வருமானத்தில் ஏற்படுகின்ற சதவீத மாற்றத்தைக் கண்டு பிடிப்பதற்கு இது பயன்படுகிறது. இவ்வாறு செய்யும்போது இறக்குமதிகளுக்காகச் செலவிடப்படும் மண்டல வருமானத்தின் சதவீதம் இறக்குமதிக்கான தேவையின் வருமானத் தேவை நெகிழ்ச்சி (Income elasticity of demand), இறுதிநிலே இறக்குமதி நாட்டம் (Marginal propensity to import), அந்த மண்டலத்தின் ஏற்றுமதியின் வருமானத் தேவை நெகிழ்ச்சி ஆகிய இவற்றை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. மண்டலப் பொருளாதார முன்னேற்றம்

[Regional Economic Development]

ஒரு மண்டலத்தின் மறை வருமானம், வேலை, (Potential income and employment) இவைகளின் மட்டம் உயர வேண்டு மானுல் அந்த மண்டலத்தில் கூடுதலான உள்ளீடுகள் கிடைக்க வேண்டும்; அல்லது உள்ளீடுகளின் உற்பத்திச் சக்தி அதிகரிக்க வேண்டும். ஒரு மண்டலத்தின் ஏற்றுமதிகளுக்கான தேவையில் கூடுதல், அந்த மண்டலத்தின் நீண்டகால வளர்ச்சிக்குத் துணை புரியும். ஏனென்றல், இந்தக் கூடுதலான தேவை, அந்த ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் உழைப்பு, முதல் முதலியவற்றின் விளைவுகளை (Returns) அதிகரிக்கச் செய்யும். இந்தக் கூடுதலான விளைவுகள் அந்த மண்டலத்தின் மற்ற பகுதியி லிருந்தும் (Sector) அல்லது மற்ற மண்டலங்களிலிருந்தும், உழைப்பாளிகளும் மூலதனமும் இடம் பெயர்ந்து வரச் செய்யும். இவ்வாறு இடப்பெயர்ச்சி செய்யும் மூலதனமும் உழைப்பும் அந்த மண்டலத்தின் மறை வருமானம், வேலை ஆகியவற்றின் மட்டத்தை உயரச் செய்யும்.

ஒரு மண்டல உள்ளீடு அங்காடிக்குள்ளோ அல்லது பல மண்டல உள்ளீடு அங்காடிகளுக்கிடையிலோ, கூலிகள், மூலதனத்தின் விளைவு சமப்படுத்தப்பட்டால், மண்டலங்களுக் கிடையேயான வருமான, வேலை வளர்ச்சிகளிலுள்ள வேறுபாடுகள் முக்கியமானவையாக கருதத்தக்கவையல்ல. இந்த விளைவுகள் எவ்வளவு தூரம் சமமாக்கப்படவில்லை என்பதை தனிநபர் வருமான மட்டத்தைப் (Level of per capita income) பயன் அறிவதன் மூலம் அளக்கலாம்.

ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரே பயனில் (use) உள்ளீடுகளின் விளைவுகள் சமப்படுத்தப்பட்டாலும், பல்வேறு மண்டலங்களுக்கிடையே மக்கள் தொகையின் பல அம்சங்களிலுள்ள (Population Characteristics) வேறுபாடுகள் தனிநபர் வருமானங்களின் வேறுபாடுகளைக் குறைக்கும். மண்டலங்களின் தனிநபர் வருமானங்களின் சதவீத வேறுபாடுகள் (Percentage difference) குறைவதற்கான சில போக்குகள் காணப்பட்டாலும், குறைந்த தனிநபர் வருமான மண்டலங்களிலிருந்து அதிகத் தனிநபர் வருமான மண்டலங்களுக்கு மக்கள் குடியேறினாலும், இப்படிப்பட்ட மக்கள் தொகை அம்சங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், மண்டலங்களுக்கிடையான ஊதியங்களில் வேறுபாடுகள் பல காலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன.

பல்வேறு மண்டலங்களுக்கிடையே, வருமானம் பலவாக இருப்பதற்குப் புதிய வாய்ப்புகளைப் பற்றிய விவரங்களின்மை (Lack of Information) போன்ற அங்காடி குறைவுகள்தாம் (Market Imperfections) முக்கிய காரணமென்று சொல்ல முடியாது. கூலிகளும் மூலதனத்தின் விளைவும் சமப்படுத்தப்படும் வரை உழைப்பு, மூலதனம், இவற்றின் இடப்பெயர்ச்சி தொடர்ந்து நீடிக்காது. ஏனென்றால், இப்படிப்பட்ட இடப்பெயர்ச்சிக்கு முதலீடு செய்வது இலாபகரமானதாக இருக்காது. அதாவது வயதாகிவிட்ட உழைப்பாளிகளுக்கும் குடியிருப்பை மாற்ற வேண்டும்படி ஏற்படுகின்றன. வேலை மாறுதல் செய்பவர்களுக்கு, கிடைத்துக் கொண்டிருக்கின்ற நிகர விளைவுகளின் மதிப்பு (Present value of net returns) இடப்பெயர்ச்சிக்கான செலவை ஈடு செய்வதாக இருக்காது.

மண்டலக் கட்டமைப்பின் மீது முன்னேற்றத்தின் ஆதிக்கம்

(The Impact of Development on Regional Structure)

ஒரே சீரான சாதனப் பங்கீடு இருக்கும் ஒரு சமவெளியில், மக்கள் தொகை அதிகரிக்கும் போது நகரங்களின் எண்ணிக்கையும், அளவும் (Size) அதிகரிக்கும். அதே சமயம் அந்த நகரங்களுக்கிடையேயுள்ள தூரம் குறையும். நகர்ப்புறப் பயன்களில் ஈடுபடுத்தப்படும் நிலத்தின் அளவு அதிகரிக்கும்.

தனிநபர் வருமானம் அதிகரிக்கும்போது நகரங்களின் எண்ணிக்கையும், அளவும், அதிகரிக்கும். ஆனால், அவைகளுக்கிடையேயுள்ள தூரம் குறையும். இத்தகைய அதிகரிப்பு விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் அளவு,

நகர்ப்புறப் பயன்களில் ஈடுபடுத்தப்பட்ட நிலங்களின் அளவை விடக் குறைவாக இருக்கும்படியாகச் செய்யும். மேலும் நகர்ப்புறங்களி லிருந்து கிராமங்களுக்கு மக்கள் இடம் பெயரவும் செய்யும்.

தொழில் நுட்ப மாறுதல்கள் (Technological Changes) போக்குவரத்துச் செலவைக் குறைக்கும். அது நகரங்களின் எண்ணிக்கையின் அளவை அதிகரிக்கும். அவைகளுக்கிடையே உள்ள தூரத்தைக் குறைக்கும். விலைத்தேவை நெகிழ்ச்சி (Price elasticity of demand) எந்தப் பொருட்களுக்கெல்லாம் பூஜ்யத்திற்கு மேற்பட்டு இருக்கிறதோ (Greater than zero) அந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நிலத்தின் அளவை அதிகரிக்கும்.

போக்குவரத்துச் செலவுகள் குறையவும், சிக்கனங்கள் பெருகவும், செய்கின்ற தொழில் நுட்ப மாற்றம் இடங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்; அவைகளுக்கிடையே உள்ள தூரத்தை அதிகமாக்கும்; நகரங்களின் அளவைக் குறைக்கும். தொழில் நுட்ப மாறுதல் நிலத்தின் பயனை நிர்ணயிக்கக் கூடிய தாகவும் இருக்கிறது. அதாவது, அந்த நிலம் சில குறிப்பிட்ட பொருட்கள், பணிகள் இவைகளைத்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கிறது. தொழில் நுட்ப மாறுதல் காரணமாக உற்பத்தி வீதம் அதிகரித்தால், அல்லது அந்தப் பொருளின் விலைத்தேவை நெகிழ்ச்சி பூஜ்யத்திற்கு மேல் இருந்தால், அந்த மாறுதல் நிலத்தின் பயனை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

தொழில் நுட்ப மாறுதல் உற்பத்தி வீதத்தை அதிகரித்தால், விலைத்தேவை நெகிழ்ச்சிக் குறைவாயுள்ள பொருளின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் நிலத்தின் அளவு குறைந்துவிடும். உற்பத்தி வீதத்தில் கூடுதலை அதிகரிக்காத தொழில் நுட்ப மாறுதல் ஒரு பொருளின் விலைத்தேவை நெகிழ்ச்சி பூஜ்யத்திற்கு அதிகமாக இருக்கும் வரை அந்தப் பொருளின் உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் நிலத்தின் அளவை அதிகரிக்கும். ஆனபோதிலும் சீரற்றமுறையில் சாதனங்கள் பங்கீடு செய்யப்பட்டிருக்கும் சமவெளியில், போக்குவரத்துச் செலவு குறைந்தால், அது உற்பத்தி இடங்கள் ஒரே இடத்திலேயே செறிந்துவிடச் செய்யுமேயொழியத் தொழில் பரவுதலுக்கு உதவாது.

பொருளாதார முன்னேற்றம் பொருளாதார இட கட்டமைப் பில் (Spatial structure of the Economy) மாறுதல்களை உண்டாக்கினும் அதே கட்டமைப்பு பொருளாதார

முன்னேற்றத்தை மாற்றவும் செய்யும். நகர்ப்புறத் தொழில் மைய இடங்களுக்கருகில் பொருளாதார முன்னேற்றம் துரிதமாக ஏற்படுகிறது என்பதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன. தொழில் நுட்ப மாறுதல் போக்குவரத்தில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது. அந்த மாறுதல்கள் நகரங்களின் அளவு, இடம், எண்ணிக்கை ஆகியவற்றை மாற்றுகின்றன. இந்தக் காரணங்கள் நகரங்களின் படிநிலை அமைப்பில், அவைகளுடைய இடத்தை மாறும்படி தனிப்பட்ட நகரங்களைச் செய்ய முடியும். இத்தகைய மாறுதல்கள் நிகழ்வதற்குக் காலம் தேவைப்படுகின்றது. உண்மையில் அவை அவ்வாறு மாருது போனலும் போகும். ஏனென்ருல், சாதனங்களை இடப்பெயர்ச்சி செய்வதினல் உண்டாக்குகின்ற செலவுகளும் விளைவுகளும் இலாபகரமானதாக இருக்காது.

அரசின் பங்கு

சில குறிப்பிட்ட சூழ்நிலைகளைத் தவிர, பொதுவாக, அங்காடி அமைப்பே சாதனங்களைச் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்யும். தேவையானபோது வருமானத்தை மறு பங்கீடு செய்வதற்கும், வேலை வாய்ப்பை நிலையாகச் செய்வதற்கும், இயற்கை சர்வாதீனம் இருக்கின்ற போதும் அரசாங்கத்தின் தலையீடு தேவையாக உள்ளது. குடியேற்றத்திற்கு உதவிப்பணம் அளித்தல், வருமானத்தை மறு பங்கீடு செய்தல், குடியேற்றத்தைத் தடை செய்வனவற்றை நீக்குதல், இலாபம், செலவு அடிப்படையில் பொது முதலீடு செய்தல் இவற்றின் மூலம் அரசு வளர்ச்சி பாதிக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பங்கு பெறலாம். நகரத்தின் நலிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் அரசிற்குப் பங்கு உண்டு.

இரண்டாம் பகுதி

3. மண்டல முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல்

(Planning for Regional Development)

இன்று மக்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் அநேகம். அவற்றில் முக்கியமானது பல்வேறு நாட்டு மக்களின் வருமான ஏற்றத்தாழ்வும், அதன் காரணமாக வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுமேயாகும். இப்பிரச்சினை சிக்கல் நிறைந்ததாக மாறிக்கொண்டு வருகிறது. பொருளாதாரத் துறையில் ஏற்கெனவே மிகுந்த முன்னேற்றமடைந்த நாடுகளின் வளர்ச்சி வீதத்தைவிட முன்னேறுத நாடுகளின் வளர்ச்சி வீதம் குறைந்து காணப்படுகிறது. நாடுகளின் வருமானத்தை அடிப்படை யாகக் கொண்டு முன்னேறிய நாடுகள் (Developed Countries) முன்னேற்றம் குறைந்த நாடுகள் (under - developed countries) என்று பாகுபாடு செய்யப்படுகிறது.

குறைந்த முன்னேற்றம் என்ற கருத்தானது பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிய நூல்களில் பல விதமாகக் கையாளப் படுகிறது. சில சமயம் பரப்பளவிற்கு இருக்கும் குறைந்த மக்கள் தொகை வீதத்தையும், உயர்ந்த வட்டி வீதத்தினுல் கட்டிக் காட்டப் படும் மூலதனக் குறைவையும், மொத்த உற்பத்தியில் தொழில் உற்பத்தியின் பங்கையும் குறிக்கும். 'ஒரு நாடு தன்னுடைய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கேற்ற அல்லது தனி நபர் வருமானம் உயர்ந்த நிலையிலிருந்தால், அதிக மக்கள் தொகையைப் பெறுவதற்கு வேண்டிய அதிக மூலதனத்தையும், அதிக உழைப்பையும், அதிக இயற்கைச் சாதனங்களையும், தனித் தனியாகவோ அல்லது சேர்த்தோ பயன்படுத்துவதற்கேற்ற

வாய்ப்பு சிறநத முறையில் அமைந்திருக்குமானல் அந்நாடு குறைந்த முன்னேற்ற மடைந்துள்ள நாடு,' என்று ஜேகப்வைனர் கூறுவதைப் பொருத்தமானதாகக் கொள்ளலாம். ("It is a country which has good potential prospects for using more capital and more labour or more available natural resources, or all of these, to support its present population on a higher level of living or if its per capita income level is already fairly high, to support a larger population on a not lower level of living.")

Jacob viner, 'The Economics of development' in the economics of under - development edited by A. Agarwal and S. Singh, Oxford university press, 1963, p. 12.

குறைந்த முன்னேற்றத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் வசதியற்ற இயற்கைச் சூழ்நிலே, பொருத்தமற்ற சீதோஷ்ண நிலே, குறைந்த இயற்கைச் சாதனங்கள், கடந்த கால சமுதாய கலாச்சார முன்னேற்றம், கட்டுப்பாடு செய்யும் மதம், பழக்க வழக்கங்கள் முதலியன அடங்கும். இவைகள் உற்பத்தியை அதிகரிக்க வொட்டாமல் தடைசெய்து அதைக் குறைந்த அளவிலேயே இருக்கும்படி செய்கின்றன. ஜெரால்ட் எம். மேயர் (Gerald M. Meier) கூறுவதுபோல, குறைந்த உற்பத்தியும், உயர்ந்த நுகர்ச்சி நாட்டமும், குறைந்த சேமிப்பும், மூலதனக் குவிப்புமாகிய தீயசுழலில் (vicious circle) ஒரு நாடு அகப்பட்டுக் கொள்ளுகிறது.

பொருளாதார முன்னேற்றப் பிரச்சினையின் மற்றெரு அம்சமாக இருப்பது மண்டல அல்லது இடப் (Space) பிரச்சினையாகும். துரதிர்ஷ்டவசமாக, அண்மைக் காலம்வரை இந்த அம்சத்திற்குக் குறைந்த அளவு கவனமே செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. சாதனங்களின் ஒதுக்கீட்டுப் பிரச்சினையைப் பற்றிய கோட்பாட்டு, நடைமுறை ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவேயொழிய, இடத்தின் அடிப்படையில் செய்யப்படவில்லை. ஆனல், இடத்தைப் பற்றிய அம்சம் முக்கியமானது. ஜனநாயகக் கூட்டரசு (federal) அமைப்பிற்கு உட்பட்டதும், நடவடிக்கை மட்டங்களில் பல வேறுபாடுகளைக் கொண்ட மண்டலங்களைக் கொண்டதும், பெரியது மான இந்தியா போன்ற நாட்டிற்கு இந்த அம்சம் மிகவும் முக்கிய மானது. இந்தியாவைப் போன்றே அந்நிய அரசாங்கங்களின் ஆதிக்கத்திலிருந்த நாடுகள் அனைத்திற்கும் இது பொருந்தும். உதாரணமாக பாகிஸ்தான், இந்தோனிஷியா (ஜாவா எதிராக மற்றத்தீவுகள்), பர்மா, தாய்லாந்து, பிரேஸில் (வடகிழக்கு, மத்தியத் தெற்கு) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுவாக, தலைநகர் அல்லது துறைமுக நகரத்திற்கும், நாட்டின் மற்றப் பகுதிகளுக்குமிடையே பொருளாதார வேறுபாடு காணப்படுகிறது. எந்நாட்டின் பொருளாதார வரலாற்றைப் பார்த்தாலும், ஒரு சில குறிப்பிட்ட முக்கியப் புள்ளிகளிலேயே (focal points) (பெரும்பாலும் துறைமுக நகரங்களில்) தொழில் மயமாதல் தொடங்கியிருக்கிறது. அந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு அது சாதகமாக இருந்தாலும், அவை உத்தமமான அமைவிடங்க ளல்ல. பொருளாதார முன்னேற்றத்தோடுகூட இவ்விடங்கள் கல்வி, ஆரோக்கிய வசதிகள், மேற்கு நாடுகளின் நாகரிகத்தின் நன்மைகள் ஆகியவற்றை முதன்முதலில் பெற்றவைகளாகவும் இருக்கின்றன. இதற்குச் சான்றுகளாக கல்கத்தா, பம்பாய், சென்னை போன்றவற்றைக் கூறலாம். ஆனால், இத்தகைய நிலைமை முன்னேறிய நாடுகளான அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் காணப்படுகிறது. அங்கும் வளமையிலும் வறுமை காணப்படுகிறது.

ஒருநாட்டின் செல்வம் அதிகரிக்கும்போது அத்துடன் இடங் களுக்கிடையே இருக்கும் வருமான வேறுபாடுகள் (Spatial disparities in income) குறையுமென்று சொல்வதற்கு இயலாது. உண்மையில் ஏற்றத் தாழ்வுகள் அதிகரிக்கின்றன. இதை முன்னேற்ற நடவடிக்கைகளின் செறிவு ஒரு சில மைய இடங்களிலேயே அமைகின்ற தன்மையுடைய, மாறிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள (Transitional) இந்தியா போன்ற நாடுகளில் காணலாம். இத்தகைய மைய இடங்கள் தங்களுக்குள் சேரி, பொதுவசதிக் குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு இலக்காகின்ற அளவிற்குத் துரிதமாக முன்னேறுவது மட்டுமல்லாமல், அடுத்திருக்கும் பகுதிகளிலிருந்து சாதனங்கள், திறமை போன்றவைகள் வடிதலுக்கும் (drain) காரணமாகின்றன. இவை இயக்கமற்ற நிலையிலிருக்கும் (Static) மண்டலங்களிலிருந்து இயக்கக் கூறுகளை (Dynamic elements) இழுத்துக் கொள்ளும் உறிஞ்சும் குழாய்களாகச் செயல் படுகின்றன. இவ்வாறு நாட்டின் மற்றப் பகுதிகள் இரண்டாந்தர எல்லைப்புற நிலைக்குத் (Peripheral) தள்ளப்பட்டு, மைய இடங் களுக்குக் குடியேற்றப் பகுதிகளைப் போலச் செயல்படுகின்றன. அவைகளிலிருந்து மக்கள், மூலதனம், சாதனங்கள், மைய இடங் களுக்கு வெளியேறிச் செல்கின்றன. இத்தகைய சாதனங்களின் காரணமாக மைய இடங்களில் துரிதமானதும், நிலையானதுமான (Sustained) பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகிறது.'[1]

இதற்குச் சான்றாக இந்தியாவைக் கூறலாம். 'இருபது ஆண்டு களாகப் பொருளாதார முன்னேற்றம் திட்டமிட்டுச் செயல்படுத்தப்

1. John Friedmann and william Alonso. "Regional Development and planning, A Reader" Cambridge mit press, 1964.

பட்ட பின்னரும் சமுதாய, பொருளாதார முன்னேற்றம் இடத்திற்கு இடம் மாறுபடுவது அதிகரித்து வருகிறது. கல்கத்தா, பம்பாய் போன்ற மைய இடங்கள் அளவுக்கு மீறி வளர்ச்சி யடைந்திருக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட அதிகமாக சமுதாயக் குழப்பங்கள் அங்குத் தோன்றுகின்றன......வடக்கு பீஹாரையும் ஒரிஸ்ஸாவையும் எல்லைப்புறப் பகுதிகளாகக் கொண்டு கல்கத்தா தொழில் மண்டலம் வளர்ந்திருக்கிறது.'[1]

இவ்வாறு பல இடங்களில் காணப்படும் சமுதாய, பொருளாதார, முன்னேற்ற வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராயும்போது, மிர்டாலின் (Myrdal) வளர்கின்ற காரண காரியத் தொடர்பு கோட்பாடு (Theory of cumulative Causation) துணைக்கு வருகிறது. இக் கோட்பாட்டின்படி ஓர் இடம் வறியதாக இருப்பதற்குக் காரணம் அது வறியதாக (an area is poor because it is poor) இருப்பதுதான். நலிவுற்ற ஓர் இடம் மக்களுக்கு உணவையும் அளிக்க முடியாது. அவர்களுக்குத் தகுந்த, போதுமான வேலை வாய்ப்புகளையும் அளிக்க முடியாது. வாய்ப்பின்மை திறமை வாய்ந்தவர்களை அவ்விடத்திலிருந்து துரத்துகிறது. மற்றவர்களின் ஆரோக்கியத்தைப் போதிய உணவின்மை பாதிக்கிறது. திறமை நிறைந்தவர் குறைவாக இருப்பது இந்தத் தலைமுறையினரையும் எதிர்காலத் தலைமுறையினரையும் பாதிக்கிறது. கேடுற்ற ஆரோக்கியம் மக்களின் உற்பத்திச் சக்தியைக் குறைக்கிறது. குறைந்த உற்பத்தி வருமானத்தைக் குறைக்கிறது. இது வறுமையை அதிகரிக்கச் செய்கிறது. இவ்வாறு ஒரு மண்டலம் வறியதாக இருப்பதற்கு அது வறியதாக இருப்பதே காரணமாகிறது.

முன்னேறிய, முன்னேற்றமடையாத இடங்களுக் கிடையே யான இடைவெளி பெரிதாக இருப்பது மட்டுமல்லாமல் அது வளர்ந்தும் வருகிறது. எல்லா மட்டங்களிலும் (பிராந்திய, தேசிய, சர்வதேச) இது பொருந்தும். அரசாங்கக் கொள்கை தனிப்பட்டவர்களுக் கிடையேயான வருமான ஏற்றத் தாழ்வுப் பிரச்சினைகளுக்குத் தாம் முக்கியத்துவம் கொடுத்து வந்தது. அண்மையில் தான் இடங்களுக்கிடையேயான ஏற்றத் தாழ்வுகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. தனிப்பட்டவர்களுக் கிடையேயான சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்தில் காணப்படும் வேறுபாடுகளைப்போல, இடங்களுக் கிடையேயான வேறுபாடுகள் தேசத்திற்குக் கேடு செய்யவல்லவை யாகும். அவை சமுதாயத்திலுள்ள

1. R. P, Misra "on the concept of Region and Regional Planning" in 'Regional planning' Edited by R. P. Misra Prasavanga. The university, of Mysore, 1969.

மக்களில் பெரும்பாலோரை, வறுமையின் பிடியில் வைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இத்தகைய இடவேறுபாடுகளைப் போக்க, முன்னேற்றம் குறைந்த மண்டலங்கள் வளர்ச்சி யடைவதற்கு வேண்டிய நிவாரண நடவடிக்கைகளைத் தேசியமட்டத்தில், எடுக்கப் படாவிட்டால் இத்தகைய இடங்கள் முன்னேறுவதற்கு அதிகம் வாய்ப்பில்லை.

வறிய இடங்களை எவ்வாறு முன்னேற்ற மடையச் செய்ய முடியும் என்பது அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்ருகிவிட்டது. அதுமட்டு மன்று, சிக்கலானதாகவும் ஆகிவிட்டது. திட்டமிட்டுச் செயலாற்றும் இந்தியாவில் கூட, நாடு என்பது இடவேறுபாடுடையது என்பதை விட ஒரு புள்ளியில் இருப்பதாகவே கருதப்படுகிறது. அரசாங்கக் கொள்கை கிடைப் பருமையானச் சாதனங்களை முதலீடு செய்வதில் நாட்டின் எந்தப் பிரிவு (Sector), துணைப்பிரிவு முற்றுரிமைப் பெற வேண்டுமென்று தேர்ந்தெடுப்பதைப் பற்றியதாகவே இருக்கின்றது. திட்டமிடுதலில் இடத்தைப் பற்றிய அம்சங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. கிடைப்பருமையான சாதனங்களை முதலீடு செய்வதில் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போலவே மண்டலங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டு மென்பதும் பொருளாதார முன்னேற்றத்தின் பலனை நியாய முறையில் மண்டலப் பிரிவு, சமுதாய முறைகளில் பங்கீடு செய்யா விடில், நலம் நாடும் அரசின் நோக்கங்கள் நிறைவேருது என்பதும் உணரப்பட வேண்டும்.

இதுவரை திட்டமிடுதலில் இடத்திற்கு அதிக முக்கியத்துவம் தராததற்குக் காரணம் கொள்கைகளுக்கு அடிப்படையாக விளங்கும் கோட்பாடுகள் இல்லாமையே ஆகும். பொருளாதாரம், சமுதாய இயல் (Sociology) போன்ற சமூக இயல்கள் (Social Science) இடத்தைப்பற்றி ஆராய்வதில்லை. சமுதாய இயல் குழுக்களைப் (groups) பற்றிய ஆய்வாக இருக்கின்றதேதவிர மண்டலத்தைப்பற்றி ஆராய்வதில்லை. இடப்பகுத்தாய்வு (Spacial analysis) செய்யும் புவியியல், நில அமைப்பைப்பற்றி (landscape) ஆராய்கிறதேதவிர இடப்பகுத்தாய்வைப் பற்றிய பகுத்தாய்வு முறைகளை உருவாக்கத் தவறிவிட்டது.

அண்மையில்தான் மண்டல அறிவியல் அறிஞர்கள் (Regional Scientists) மண்டல முன்னேற்ற வரை சட்டத்தை உருவாக்கி வளர்ச்சியைப்பற்றிய முறையான பகுத்தாராய்வு செய்ய முற்பட் டிருக்கிருர்கள். இவர்களோடு சேர்ந்து பொருளாதார இயல், புவியியல், சமுதாய இயல் அறிஞர்கள் சிலர் இடத்தைப்பற்றிய

பகுத்தாய்வைச் செய்யத் தூண்டியிருக்கிருர்கள். சர்வதேச, தேசிய, துணை தேசிய மட்டங்களில் மண்டலப் பொருளாதார முன்னேற்றத்தில் காணப்படும் வேறுபாடுகள் சமுதாயக் குழப்பம் அரசியல் நிலையற்ற தன்மைக்குப் பெரிதும் காரணமாகிறது என்பதை உணர்ந்ததே, இத்தகைய அறிஞர்கள் தோன்றியதற்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் மண்டலச் சரிசம நிலையற்ற தன்மையைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடைமுறைத் தீர்வுகளை உள்ளடக்கிய கோட்பாடு வரை சட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கின்றனர். சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்தில் இடங்களுக்கிடையே சமநிலையை உருவாக்க மேற்கொள்ளப்படும் செயல்முறையே மண்டலத் திட்டமிடுதல் ஆகும்.

மண்டலம் என்ற மூலக்கருத்து

இடத்தை அடிப்படையாக வைத்து, ஒரு மண்டலத்தைப் புவியியல் அல்லது நிலப்பகுதியை (arial) மண்டலமென்று சொல்லலாம். நிலப்பகுதி என்பது ஒரு சில கிராமங்களையோ அல்லது ஒரு சில நாடுகளையோ உள்ளடக்கியதாக இருக்கலாம். ஆகவே ஒரு மண்டலம் என்பது நிலப்பகுதி என்றோ, வெவ்வேறு அளவுள்ள இட அமைப்புகள் (Spatial organisation) என்ருே சொல்லலாம்.

மண்டலம் என்பது நிலப்பகுதி என்பதால், இக்கருத்து புவியியல் ஆராய்ச்சியில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. மண்டலம் பல வகையாகக் கருதப்படுகிறது. நிலவடிவம், தட்பவெப்பநிலை, மண், தாவரம் முதலிய இயற்கை அம்சங்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப் பட்டால், அது இயற்கைப் புவியியல் மண்டலம் (physical geographic region) என்று சொல்லப்படும். முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் அடிப்படையில் பொருளாதார மண்டலம் அமைகிறது. மொழி, மதம் போன்ற கலாச்சாரக் காரணிகள் காரணமாக சமுதாய கலாச்சார மண்டலம் அமைகிறது. காரணிகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டால் கிடைப்பது சிக்கல் வாய்ந்த அடி அமைப்பு (compage) மண்டலம். இம் மண்டலங்கள் அனைத்தும் ஓரின நிலப்பகுதி மூலக்கருத்தை (concept of arial homogeneity) அடிப்படையாகக் கொண்டவை.

இதற்கு மாருக, நிலப்பகுதி தொடர்புக் கருத்தின் அடிப்படையில் மண்டலத்தைப் பிரிக்கலாம். ஒன்ருேடு ஒன்றுக் கிருக்கும் தொடர்பு ஒரு மண்டலத்தை உருவாக்குகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் கணு அல்லது முக்கியப் புள்ளியைச் (nodal or focal point) சுற்றி

பல்வேறு வகையான மண்டலங்களின் படிநிலை அமைப்பைக் கீழ்கண்டவாறு அமைக்கலாம்[1]



[1] அதே புத்தகம், பக்கம் 10.

அம் மண்டலத்தின் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அப்படிப் பட்ட மண்டலம் 'நோடல்' அல்லது மாநகர் மண்டலம் என்று சொல்லப்படுகிறது.

இவைகளைத்தவிர நீர்வளம், கனிவளம் போன்றவற்றின் முன்னேற்றத்திற்காகத் தனிப்பட அமைக்கப்படும் மண்டலங்களும் (adhoc regions) உள்ளன.

ஓர் அம்ச மண்டலங்களில், (Single feature) இயற்கைப் புவியியல் அம்சங்களைச் சார்ந்தவையே அதிகமாகக் காணப்படு கின்றன. ஜோயர்க் (Joerg) என்பவர் கூறுவதுபோல, 'இயற்கைச் சூழ்நிலைகள் ஓரினத் தன்மையாக இருக்கும் பூமியின் மேல்பரப்பின் எந்தப் பகுதியும்' ('any portion of the earth's surface where physical conditions are homogenous,') புவியியல் முறையில் மண்டலம் என்று கருதப்பட முடியும். இதுவே புவியியல் அறிஞர் களின் தொன்மையான அணுகும் முறையாகும். இங்கு மண்டல மென்பது இயற்கை மண்டலத்தைப் போன்றதாகும். ஆனல், தொன்மைப் புவியியல் அறிஞர்களில் பலர் மனிதனின் முக்கியத் துவத்தை உணராமலில்லை. உதாரணமாக V. B. ஸ்டான்பெரி (V. B. Stanberry) புவியியல் மண்டலத்தையும் அலுவல் (functional) மண்டலத்தையும் வேறுபடுத்திக் காட்டுகிறர். அவர் கூறுவதாவது 'வரையறுக்கப்பட்ட இயற்கை வடிவமைதியை எல்லை யாகக்கொண்ட பரப்புகளை அல்லது ஒரேமாதிரியான இயற்கை அம்சங்களைக் கொண்ட பரப்புகளைப் புவி-இயற்கை மண்டலமென்று வர்ணிக்கலாம்' (Geo - Physical regions may be described as areas founded by definite physical conformations or area having similar physical chareteristics[1].)

ஜான் ஆர்சர்ட் (John orchard) கூறுவதுபோல 'சமுதாயப் பொருளாதாரத் திட்டமிடுதலுக்கான உத்தமமான மண்டலம் சில குறிப்பிட்ட அம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும்'.

1. ஒன்றுபடுத்தும் உட்பிரிவு (core) இருக்க வேண்டும்.

2. அம்மலண்டம் அந்த உட்பிரிவுக்குத் துணையான எல்லா இடப்பரப்பையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

3. அந்த இடத்திற்குள் தீவிர முரண்பாடுகள் காணப்படாமல் இருக்கவேண்டும்.

1. V. T. Stanberry. "An Approach to Regional planning" (p. p, 3 - 7)

4. திட்டமிடுபவர்களின் திறமையையும் பயிற்சியையும் சோதிக்கும் வகையில் பல திறப்பட்டதாக இருக்கக் கூடாது. ('The optimum region for social and economic planning should possess certain characteristics- (1) There should be some unifying core; (2) Its area should include all the territory tributary to the core; (3) There should be an absence of serious conflicting interests within the areas; (4) The region should not be so diversified that it will place too great a burden upon the ability and training of the planners-'[1]

M. H. கோபால் திட்டமிடும் மண்டலம் என்ற மூலக் கருத்தைப் (The concept of planning region)பற்றிக் கீழ்கண்டவாறு கூறுகிறுர். 'திட்டமிடுதலை, வெறும் செயல் பாங்கு என்றும், வளர்ச்சியைப் பொருளாதார முடிவு என்றும், நலத்தை இறுதி நோக்கமென்றும் கொண்டால், செயல் முறையில் சிறந்த வசதி படைத்ததாகவும், பொருளாதார முறையில் சாதன ஒதுக்கீட்டிற்குச் சிறந்த, இலாப மான இடப்பிரிவு அல்லது கால (temporal) அலகு என்று ஒரு மண்டலத்தை நான் தேர்வு முறையாக வரையறை செய்வேன்.'

('I shall tentatively define a 'region' as operationally the most convenient and economically the most gainful spatial sectoral or and temporal unit for resource allocation taking planning as merely a process growth as the economic result and welfare as the ultimate goal'[2])

இந்த அணுகும் முறை ஒப்புக்கொள்ளப்பட்ட, பொருளாதார முன்னேற்றத்தை அணுகும் முறையை ஒத்திருக்கிறது. இது தேசியப் பொருளாதார வளர்ச்சி தானுக மண்டலப் பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்கும் என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆகவே, 'சரிசம நிலை முன்னேற்றம் என்பது குறுகிய நீண்ட கால நோக்கங்களின்படி பொது தனியார் துறைகளில் செய்யப்படும் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயைச் சரிசமமாக்குவதாகும். அது குறிப்பிட்ட இடங்கள், நடவடிக்கைகள், மாநிலங்கள் இவைகளின் அடிப்படையில்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அதாவது இயற்கை, மனித, நிதி, போன்ற சாதனங்களை ஒரே இடத்தில், ஒரே பிரிவில், ஒரே வேலையில் தேங்கி விடாமல் சிறந்த

1. J. Orchard Regional Faotors In National Planning and Devclopment.

2. M. H. Gopal, concept of planning region.

முறையில் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா என்பதே சிறந்த சோதனை யாகும்.' ('Balanced development means balance of return from over all national investment. Public and Private in relation to short and long term goal and not necessarily with reference to any particular areas, activities, states and so on. That is, the test is the most benifical utilization of resources—physical, human and financial—without being bogged down to areas and factors or occupations'[1])

மேற்கண்ட பல்வேறு மண்டலங்களுக்குள் அலுவல் மண்டலமே மண்டலத் திட்டமிடுதலுக்கு ஏற்றதாக உள்ளது. இந்தியாவில் கணு மண்டலங்கள் குறைவாக உள்ளன. இங்குக் கவனிக்க வேண்டிய தொன்று உண்டு. அலுவல் மண்டலம் எல்லா இடங் களின் திட்டங்களுக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது, பொருளாதார அமைப்பு முன்னேற்ற மடையும்போது, அதன் இட அமைப்பு மாற்றத்திற்குள்ளாகும். பழங்கால (Primitive) பொருளாதார அமைப்பில் மனிதன் இயற்கையோடொத்து இயங்கினன். ஆகவே அவன் நடவடிக்கைகள் இயற்கை நிகழ்ச்சிகளைப் போல் அமைந்தன. இப்படிப்பட்ட பொருளாதார அமைப்பில் அலுவல் மண்டலம் இருப்பதில்லை. இதற்கு மாருக அங்காடி காரணமாக எழுந்த (market oriented) பொருளாதார அமைப்பில் திட்டமிடுதலில் அலுவல் மண்டலத்தைப் போல எந்த மண்டலமும் பயன்படுவதில்லை. இருபான்மைப் (dual)பொருளாதார அமைப்பு இந்த இரண்டு உச்ச அளவுகளுக்கிடையில் செயல் படுகிறது.

இருபான்மைப் பொருளாதார அமைப்பில் இயங்கும் முன்னேற்றச் செயல்பாங்கின் காரணமாகத் தற்போதய மண்டலத் திட்டமிடுதலின் பிரச்சினைகளில் பல எழுந்துள்ளன. இங்கு இருபான்மை என்பது இடத்தைப் பொருத்தது. அந்த அமைப்பில் சில குறிப்பிட்ட மைய இடங்கள் அங்காடிப் பொருளாதார அமைப்பை உடையதாக இருக்கின்றன. நாட்டின் மற்றப் பகுதிகள் இன்றும் பண்டமாற்று அமைப்பிலேயே இருக்கின்றன. இரு பான்மைப் பொருளாதார அமைப்பில் மண்டல முன்னேற்றத்திற் கான முறைகளில் (Strategies) ஒன்று வளர்ச்சித் துருவங்களையும் (pole) வளர்ச்சி மைய இடங்களையும் உருவாக்குதலாகும். முன்னேற்றமடைந்து, அந்த முன்னேற்றத்தின் காரணமாகப் பிற்பட்ட இடங்களும் முன்னேற்ற மடையும். இந்த வளர்ச்சித் துருவங்களையும், மைய இடங்களையும் தேர்ந்தெடுப்பது முன்பே

1. அதே புத்தகம்.

இருக்கும் அலுவல் தொடர்புகளையும், மறை தொடர்புகளையும் பொருத்து அமைய வேண்டும்.

இந்தியாவின் பொருளாதார அமைப்பு, இருபான்மைப் பொருளாதார அமைப்பாக இருப்பதனுல் முன்னேறிய பகுதிகளையும், முன்னேற்றம் குறைந்த பகுதிகளையும் கருத்திற்கொள்ளும் திட்டமிடும் மண்டலத்தை அமைக்க வேண்டும். இங்கே திட்டமிடும் மண்டலம் என்பது கணுப் புள்ளிகளிலிருந்து குறைந்த அல்லது ஒன்றுமேயில்லாத தொடர்புடைய இடங்களையும் உள்ளடக்கியதாகக் கருதப்படவேண்டும். இதன் அடிப்படையில் திட்டமிடும் மண்டலத்தை நான்காகப் பிரிக்கலாம்.

(1) மாநகர் அல்லது நகர் மண்டலங்கள் (Metropolitan or city regions)

(2) ஆற்றுப் பள்ளத்தாக்கு மண்டலங்கள் (River valley regions)

(3) ஊடச்சு முன்னேற்ற மண்டலங்கள் (Axial development regions)

(4) மாறும் நிலையிலுள்ள அல்லது பாதிக்கப்பட்ட மண்டலங்கள் (Transitional or depressed regions)

இதுவரை குறிப்பிட்ட மண்டலங்களெல்லாம் அங்ககங்களாகும் (organic). ஏனென்றுல், அதன் அலகுகள் ஒவ்வொன்றும் மற்றவற்ருேடு அலுவல் தொடர்புகொண்டு அந்த எல்லைக்குள் இருக்கும்வரைதான் அதன் பகுதியாக இருக்கின்றன. உதாரணமாக, ஒரு மாநகர் மண்டலம் ஒரு நகர்ப்புற மைய இடத்தையும் அதன் எல்லைப்புற இடங்களையும் கொண்டதாகும். இந்தப் பரப்பளவிற்குள் சிறிய, குடியேற்ற இடங்கள் இருக்கின்றன. அவைகளில் சில மைய இடத்தைச் சார்ந்து வாழுபவை. ஒரு சில சிறிதாவது தொடர்பு கொண்டவை. மைய இடத்திலிருந்து அகல அகல, மாநகர்த் துருவத்தின் (metropole) ஆதிக்கம் குறைகிறது. ஒரு மைய இடத்தின் ஆதிக்கத்திற்கும் மற்ருெரு மைய இடத்தின் ஆதிக்கத்திற்கும் இடையே மற்ருெரு கோடு வரைந்தால் அந்தந்தப் பகுதியிலுள்ள இடங்கள் அந்த மாநகர் மண்டலத்தைச் சேர்ந்ததாகி விடுகிறது. இம் மண்டலத்தின் ஒவ்வொரு அலகும் ஒன்ருேடொன்று அலுவல் தொடர்புடையவை. அதன் காரணமாக அந்த மண்டலம் அங்ககம்போலத் தோற்றம் தருகிறது.

இயற்கை மண்டலம் என்பது ஆற்றுப் பள்ளத்தாக்கு மண்டலங்களாகும். அமெரிக்காவில் இருக்கும் டென்னிஸிப் பள்ளத்தாக்கு மண்டலம் போன்ற திட்டமிடும் மண்டலங்கள் உள்ளன. இத்தகைய ஆற்றுப் பள்ளத்தாக்கு மண்டலங்கள் அலுவல் தொடர்புடையவை. ஏனென்ருல், ஆற்றுப் பள்ளத்தாக்கு (Basin) பல ஆறுகள் கொண்ட அமைப்பையும் ஆற்று நீர் வடிகால் (Catchment) அமைப்பையும் கொண்டு இயங்குவதாகும். ஒரு துணை ஆற்றில் ஏற்படும் வெள்ளம் அந்த அமைப்பிலிருக்கும் தாய் ஆற்றின் நீர் மட்டத்தை உயர்த்துகிறது. ஆகவே, துணை ஆற்றின் போக்கைக் கட்டுப்படுத்தாமல், தாய் ஆற்றின் போக்கைக் கட்டுப் படுத்த முடியாது. ஆற்றுப் பள்ளத்தாக்கின் அருகில் வாழும் மக்களின் வாழ்க்கை ஆற்றின் போக்கோடு நெருங்கிய சம்பந்தப் பட்டிருப்பதால் மனிதனையும் ஆற்றையும் தனித்தனியே பிரிக்க முடியாது. ஆற்றுப் பள்ளத்தாக்கிற்காகத் திட்டமிடும்போது ஒரு பகுதியை மட்டுமின்றி அப்பகுதி முழுவதையும் நோக்கத்தில் கொள்ள வேண்டும்.

ஊடச்சு (axial) மண்டலங்கள், போக்குவரத்து மார்க்கங்கள், அல்லது பாசனக் கால்வாய்கள் அருகே தோன்றுகின்றன. போக்கு வரத்து மார்க்கங்கள் அல்லது பாசனக் கால்வாய்கள் ஒவ்வொன்றும் தோன்றும்போது, இரு பக்கங்களிலும் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அபிவிருத்தியின் காரணமாக அந்த இடங்களின் பரப்பு அதிகரித்து வேகமாக வளரும் மண்டல மாக அவை தோற்றமெடுக்கின்றன.

மாறும் நிலையிலுள்ள அல்லது பாதிக்கப்பட்ட மண்டலங்கள் வளர்ச்சி மையஇடங்களுக்கு நடுவே அமைந்துள்ளன. இந்த மண்டலங்களிலிருந்து மக்களும் சாதனங்களும் பெயர்ந்து மற்ற இடங்களுக்குச் செல்கின்றன. இவை இந்தியாவில் இருக்கும் விவசாய மண்டலங்களைப் போலவோ அல்லது அமெரிக்காவி லிருக்கும் சுரங்க மண்டலங்களைப் போலவோ இருக்கலாம். இவை பிரச்சினைகள் நிறைந்த மண்டலங்களாகும். இவற்றிலிருக்கும் துணைப்பரப்புகள் மற்றவற்றின் வறுமைக்குக் காரணமாக இருக்கின்றன. வறுமை, அறியாமை நிறைந்த இந்த இடங்கள் முன்னேற வேண்டுமென்ற ஆர்வத்தையும் உடையதாக இருக்கின்றன.

மேற் கூறியவற்றில் அலுவல் மண்டலத்தை மட்டுமே எடுத்துக் கொண்டாலும், மண்டல மயமாதலின் (regionalization) பிரச்சினை தீர்ந்து விடாது. ஒரு மண்டலம் எவ்வளவு பெரிதாக இருக்க

வேண்டுமென்பது மண்டலத் திட்டமிடுதலுக்கு மட்டுமின்றி முன்னேற்றத் திட்டங்கள் அனைத்திற்கும் முக்கியமானது. தீர்க்க வேண்டியப் பிரச்சினையைப் பொருத்து மண்டலத்தின் அளவு நிர்ணயிக்கப்படும் என்பது உண்மையாக இருந்தாலும், ஒரு பிரச்சினையைத் தீர்க்க முற்படும்போது அதன் இட அளவு பொருத்தமானதாக இருக்கும்படியாகவும் பார்த்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மண்டலத்தைச் சான்றுக எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் இப்படிப்பட்ட மண்டலம் பல சிரமங்களை உள்ளடக்கியதாக இருக்கும். கிராமங்களில் சில ஈரப்பதனுடைய (wet) தட்பவெப்ப நிலையுடையவை; சில வறட்சியானவை; சில ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும்; சில சமவெளியிலும், சில மலைப்பாங்கான இடத்திலும் அமைந்து இருக்கும். இந்தக் கிராமங்களில் ஏற்படும் பிரச்சினைகள் வெவ்வேருனவை. இன்னும் விரிவாக ஒரே கிராமத்தைப் பார்த்தோமென்ருல், சில கிராமங்கள் தனித்தனியே பகுதி மண்டலமாக இருக்கும். பாசன ஏரியுள்ள ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் அக் கிராமத்தில் உள்ளவர்களின் வாழ்க்கை அந்த ஏரியைச் சார்ந்து அமையும். ஏரி நிறைந்திருந்தால் மக்கள் மகிழ்ச்சியுடனும் இல்லாவிட்டால் மகிழ்ச்சியற்றும் இருப்பார்கள்.

இதிலிருந்து ஒரு உண்மை புலனுகிறது. மண்டலத் திட்டமிடுதலின் நுட்ப முறையையும், செயல்பாங்கையும் பயன்படுத்தி ஒரு பொருளாதார அமைப்பை முன்னேறச் செய்ய வேண்டுமென்ருல் பல இடங்களில் அதைச் செயல்படுத்த வேண்டும். மண்டலத் திட்டமிடுதலின் வெற்றி, மண்டலக் கொள்கைகள், நோக்கங்களைப் பொருத்தும், துணை மண்டலத் திட்டமிடுதலின் முன் வரைவுகள் இவைகளைப் பொருத்தும் அமையும்.

மண்டலத் திட்டமிடுதல் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டால் ஒரு மண்டலத்தைச் சேர்ந்த மிகச்சிறிய இடத்திலிருக்கும் மறைச்சக்திகளைச் செம்மையாகப் பயன்படுத்தி அந்த இடத்தை முன்னேறச் செய்ய முடியும். இவ்வாறு செய்யாவிட்டால் ஒரு மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார முன்னேற்றம் இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுவது அதிகரிக்கும். இந்த நிலைமை டென்னிஸிப் பள்ளத்தாக்கு மண்டலத்தில் காணப்படுகிறது.[1] ஆகவே, மண்டலத் திட்டமிடுதல் பகுதி, தொகுதி மண்டலங்களை (micro and macro regions) கவனத்தில் கொள்ள

1. J. R. P. *பிரீட்மேன்* (Friedman) *'டென்னிஸிப் பள்ளத்தாக்குப் பொருளாதார முன்னேற்றத்தின் இடகட்டமைப்பு'-சிகாகோ பல்கலைக்கழக அச்சகம்.* *1955.*

வேண்டும். இத்தகைய மண்டலங்கள் படிநிலை அமைப்பைப் பெற்றிருக்கின்றன. தொகுதி மண்டலங்கள் துணைத் தேசிய இடங்களாகும் (Sub-national areas). இந்தியாவில் அவை பல்வேறு மாநிலங்களாக இருக்கின்றன. இத்தகைய மண்டலங்கள் புவியியல் மண்டலங்களை ஒத்திருக்கும். உதாரணமாக, இந்தியாவின் தக்காண மாநிலங்கள் சேர்ந்து ஒரு மண்டலமாகவும், கங்கை நதிப் பள்ளத்தாக்கு மற்றொரு மண்டலமாகவும் இருக்கின்றன. இத்தகைய மண்டலங்கள் முதல்வகை மண்டலங்களெனலாம் (regions of the first order). மாநகர், ஆற்றுப்பள்ளத்தாக்கு, பாதிக்கப்பட்ட மண்டலங்கள் போன்றவற்றை இரண்டாம் வகை மண்டலங்களென்று சொல்லலாம். இம் மண்டலங்கள் முதல்வகை மண்டலங்களைப்போல அரசியல் எல்லைகளுக்கு (Political boundaries) அப்பால் பரவியிருந்தாலும் இடத்தைப் பொருத்த அளவில் அதைவிடச் சிறியதாக இருக்கின்றன. இந்த மண்டலங்களுக்குள் மாவட்டங்களைப் போல நிர்வாக எல்லைகளால் (administrative boundary) பிரிக்கப்பட்ட இடங்களை மூன்றும் வகையான திட்டமிடும் மண்டலங்களாகக் கொள்ளலாம். இறுதியாக, திட்டமிடும் பரப்பாக இருப்பிடத்தைக் (locality) கூறலாம். தனிப்பட்ட கிராமத்தையோ, கிராமங்களின் கூட்டத்தையோ அல்லது சிறிய நகரையோ திட்டமிடுதலுக்குப் பயன்படுத்தலாம். இத்தகைய பகுதிப் பரப்பு நான்காம் வகை மண்டலமாகும். இத்தகைய மண்டலத்திற்காகத் திட்டமிடுதல் உள்ளூர் (local) திட்டமிடுதலாகும்.

தொகுதி மண்டலத் திட்டமிடுதல் எவ்வளவு தூரம் வெற்றியடையு மென்பது மற்ற மூன்று மண்டலத் திட்டமிடுதலின் வெற்றியைப் பொருத்து அமையும். மேல் மட்டங்களில் திட்டமிடும் போது அரசியல் எல்லைகள் புறக்கணிக்கப்படும். ஆனல், பகுதி, கிராமமட்ட திட்டமிடுதல் அரசியல் நிர்வாக எல்லைக்குள் மேற்கொள்ளப்படும். நிர்வாக எல்லைகள் திட்டமிடும் பிற மண்டலங்களுக்குள் இருக்குமாறு செய்வது மிகவும் சிறந்ததாகும். ஆனல், இவ்வாறு செய்வது கடினமாகும். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. நிர்வாக எல்லைகள் நிரந்தரமான தன்மையைப் பெற்று விடுகின்றன. இந்த எல்லைகள் மாற்றப் பட்டால் நிர்வாக அமைப்பு பெரும் மாறுதலுக்கு உள்ளாக நேரிடும். இரண்டாவது திட்டமிடும் மண்டலத்தின் எல்லைகள் நிரந்தர மானவையன்று. மாறுதல் நிகழ்ந்து கொண்டிருக்கும் செயற்கைப் பாங்கைக் கொண்ட திட்டமிடுதல் என்பது நிலையான இட எல்லைகளை உடையதாக இருக்க முடியாது. ஆகவே, உள்ளூர்ப் பகுதி மட்டங்களில் திட்டமிடும் மண்டலம் நிர்வாக எல்லைக்குள் செயல்பட வேண்டியதாயிருக்கின்றது. எல்லைகளை மாற்றி அமைப்பதினல்

ஏற்படும் நன்மைகள், அதனுல் ஏற்படும் இடர்களைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் அவ்வாறு செய்வது நல்லதன்று.

மண்டல உணர்ச்சியும், பிரிவுணர்ச்சியும் (Regionalism and Sectionalism)

மண்டலத்தின் முக்கிய அம்சம், ஒரு நாட்டின் பிரிக்கமுடியாத பகுதியாக அது இருக்க வேண்டுமென்பதேயாகும். மற்ற இடங்கள், எல்லைகளைப்பற்றிய தொடர்பின்றி, தன் நோக்கங்களையே கருதுகின்ற நகர்ப்புறத் திட்டமிடுதல், மண்டலத் திட்டமிடுதலாகாது. இதைப்போலவே தேசியத் தொகுதி மண்டல சமுதாயப் பொருளாதார நோக்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மாநிலத் திட்டமிடுதலையும் மண்டலத் திட்டமிடுதல் என்று கூறக் கூடாது.

தேசிய உணர்ச்சி பன்னுட்டு முன்னேற்றத்திற்குத் தீங்கு செய்தல் போலப் பிரிவுணர்ச்சியும், குறுகிய உணர்ச்சியும், (Parochialism) தேசிய, துணை—தேசிய முன்னேற்றத்திற்குத் தீங்கு செய்கின்றன. பிரிவுணர்ச்சியும், குறுகிய உணர்ச்சியும், சகிப்புத் தன்மையற்ற போக்கு, தன் இடத்தைப்பற்றிய உயர்ந்த மனப் பான்மை, கடந்தகாலப் பெருமையில் திளைத்தல், நாட்டின் மற்ற மண்டலங்களைப்பற்றிய அறியாமை போன்றவற்ருல் ஏற்படு கின்றன.

இதற்கு மாருக, மண்டல உணர்ச்சியானது தேசிய ஒருமைப் பாட்டைக் காக்கின்றது. இங்குத் தேசம் முதலிடம் பெறுகிறது. தேசிய நலமும், கலாச்சாரமும் இறுதி நோக்கங்களாகக் கொள்ளப் படுகின்றன. ஆகவே, இது முக்கியமாக கூட்டுறவு உணர்ச்சியாகும். ஹின்ட்ஸ் (Hintz) கூறுவது போல, 'மண்டல உணர்ச்சி உள்ளூர் மண்டல நலத்தைவிட, பரந்த தேசிய ஒற்றுமை, தேசிய நலம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் தேசிய உணர்ச்சி யிலிருந்து வேறுபடுகிறது. அது மண்டலப் பொருளாதார வகுப்பு நலங்களை முற்றிலும் சார்ந்து இராமல், துணை தேசியத்தன்மை என்று சொல்லப்படுவதற்கு அடிப்படையாக இருக்கும் இனத்துக் குரிய காரணிகளான சமுதாய, பழக்கமான அல்லது மொழித்தனித் தன்மையோடு சம்பந்தப்பட்டிருப்பதில், பிரிவுணர்ச்சியிலிருந்து வேறுபடுகிறது.' ('Regionalism must be distinguished from nationalism in that it recognizes a higher national unity and superior national interests transcending the attachment to the local. It must be distinguished also from mere sectionalism in

that it is not based exclusively on regional, economic or class interests, but involves certain ethnic factors such as cultural, traditional or linguistic peculiarities which provide a basis for what is often termed as sub—nationality.')

திட்டமிட்ட முன்னேற்றம் கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், பிரிவுணர்ச்சி போட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. அது வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனால் தேசிய ஒருமைப்பாடு பாதிக்கப்பட்டாலும் அதைப் பொருட் படுத்துவதில்லை.

மண்டல உணர்ச்சி ஒரு நாட்டின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறுதலைக் குறிக்கிறது. சமுதாயத்தின் பிரிவுகள் அனைத்தும் சரிசமமாக முன்னேற வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இங்குக் கருத்தில் கொள்ள வேண்டியது என்ன வென்றால், சரிசமநிலை சமுதாயத் திட்டமிடுதலின் நோக்கம் மட்டுமின்றி, சமுதாய மறுசீரமைப்பு முழுவதற்கும் அடிப்படைத் தேவையாகவு மிருக்கிறது.

இத்தகைய சரிசமநிலையை அடைவதில் மண்டல உணர்ச்சி, ஒரு தத்துவத்தையும், பிரதிநிதித்துவம், வாய்ப்பு இவைகளை அளிக்கும் முறையையும் குறிக்கிறது. ஜனநாயகம் என்பது, தனிப்பட்டவர்கள் மட்டுமல்லாது இடங்களின் வாய்ப்பு, தேர்வு, பிரதிநிதித்துவத்தைப் பற்றியதுமாகும். மண்டல உணர்ச்சி மற்ற மண்டலங்களிலிருந்து தனக்கு வேண்டியதை அடைவதோடுகூட, மற்ற மண்டலங்கள் உள்படத் தேசமும் முன்னேற்றமடைய உதவு வதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரிவுணர்ச்சிக்கு நேர் எதிரானது மண்டல உணர்ச்சி.

மண்டல உணர்ச்சி சாதனங்களைப் பயன்படுத்துவதில் தன் உதவி, தன் முன்னேற்றம், உள்ளூர் முந்துணர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. செல்வ மறுபங்கீடு, வாய்ப்புச் சமபங்கீடு முதலியவற்றைச் செய்ய வேண்டுமானால், ஒவ்வொரு மண்டலத்தின் செல்வத்தை ஆக்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். மக்களனைவரும் போதுமான அளவு உணவு, உடை, இருப் பிடத்தைப் பெற்று, மற்ற மண்டல மக்களைப்போல நல்வாழ்வு வாழ வேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ள மண்டல உணர்ச்சி, சகிப்புத் தன்மையையும், கூட்டுணர்வையும் பெற்றிருக்கிறது. அது பொருளாதார நடவடிக்கைகள் இடத் தனித்தேர்ச்சி பெற்றவை யாகவும், பரவலானதாகவும் இருக்கும்படி செய்து மண்டலங் களனைத்தும் தங்களுடைய சாதனங்களைப் பயன்படுத்தி முன்னேறச்-

செய்கிறது. அத்தோடு, அவ்வாறு செய்யும்போது மற்ற மண்டலங்களுடனான போட்டியைக் குறைக்கவும் வழி செய்கிறது.

ஒரு மண்டலத் திட்டம், பொருளாதார வளர்ச்சியில் மையக் குவிப்பைக் குறைக்கிறது. அது தொழில் பரவலுக்கு மட்டுமின்றிக் கிராமங்கள், பட்டணங்களின் வெவ்வேறு அளவுகளுக்கேற்ற தொழில்களின் முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மாநிலங்களுக்கிடையேயான கட்டுப்பாடற்ற தனியார் உணர்ச்சிக்கும் (uncontrolled Individualism) கூட்டரசு மட்டத்தில் முழுநிர்வாக மையக் குவிப்பிற்குமிடையே ஓர் இயற்கை திறமையான சாதனமாக (medium) இருந்து அரசியல் அதிகாரத்தில் சரிசம நிலையை ஏற்படுத்துகிறது.

சிறந்ததொரு மண்டல அமைப்பு இரண்டு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒன்று, ஒரு மண்டலத்தில் கிடைக்கிறது என்பதால் எது கிடைத்தாலும் அது குறைவாக இருந்தாலும் அதைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு, அம் மண்டலம் பெற்றிருக்காதவற்றை மற்ற மண்டலங்களில் தேட வேண்டும். சிறந்தவை எங்கிருந்தாலும் அதைத் தன்னிடத்தில் இழுத்துக்கொண்டு தன்மயப்படுத்தவேண்டும்.

மண்டலத் திட்டமிடுதலின் நோக்கங்கள்

மம்போர்ட் (Mumford) கூறுவது போல, மாநகரை இன்னும் எவ்வளவு அதிகம் விரிவடையச் செய்ய முடியும் என்று பார்ப்பது மண்டலத் திட்டமிடுதலாகாது. அது மண்டலம் முழுவதிலும் உருவாக்கும் சக்தியைத் தூண்டும் வகையில் மக்களையும் வசதிகளையும் பங்கீடு செய்வது எப்படி என்பதைப் பற்றியதுதான். மண்டல அறிஞர் ஓரிடத்தின் மனைகள், சாதனங்கள் சிறந்த முறையில் முன்னேறவும் இயற்கையில் கிடைக்கும் நன்மைகளை அழித்துவிடாமல் அவற்றைப் பயன்படுத்தும்வகையில் மக்களைப் பங்கிடவும் முயற்சி செய்கிறார்.

தேசியப்பொருளாதார அமைப்பை வலிமையுடையதாக்கும் சாதனமாகவே மண்டலத் திட்டமிடுதல் கருதப்படவேண்டும். அது துணைத் தேசிய இடங்களின் மறைச்சக்திகளைக் கண்டுப்பிடித்து அவற்றைத் தேசம் முழுவதும் நன்மை பெறும் வகையில் பயன் படுத்தும் நுட்ப முறையாகும். சாதனத்தளத்தையும் (base), வாய்ப்புகளையும், சக்தியையும், பொருளாதார அமைப்பில் சரிசம நிலையையும், சுற்றுப்புற அபிவிருத்தியையும், பொது நலத்தையும் உருவாக்குதலே இதன் அடிப்படை நோக்கங்களாகும்.

திட்டமிடும் செயல்பாங்குகள் அனைத்தையும்போல மனித நலத்திற்குத் தொடர்புடைய பொது நடவடிக்கைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்த கூட்டமாக அறிவாற்றலையும் எதிர் காலத்தைப் பற்றிய அறிவையும் பயன்படுத்தல் மண்டலத் திட்ட மிடுதலாகும். இடங்களுக்கிடையில் சிறந்த நியாயமான வேலைப் பகுப்பை ஏற்படுத்தும் சாதனமாக இது உள்ளது. எல்லாவற்றையும் பரவலாக்க வேண்டுமென்பது குழப்பத்தை உண்டுபண்ணும். அவ்வாறு செய்வது சர்வாதிகாரத்தையும், திறமையின்மையையும் ஏற்படுத்தும். மண்டலத் திட்டமிடுதல் மண்டலத் தன்னிறைவு (Self—sufficiency)க்காக மேற்கொள்ளப் படுவதில்லை.

ஏனென்றால், ஒவ்வொரு மண்டலத்தையும் தன்னிறைவு பெற்ற பொருளாதார அமைப்பாக மாற்ற வேண்டுமென்று மேற்கொள்ளப்படுகின்ற எந்தக் கொள்கையும் சிக்கனமற்றதாகத் தான் இருக்கும். மண்டலத் திட்டமிடுதல், அம் மண்டலத்தின் இயற்கை மனித சக்திகளுக்கேற்ற வகையில் அதன் பொருளாதார நடவடிக்கைகள் தளத்தைப் பரந்தமுறையில் முன்னேறச் செய்கிறது.

மண்டலத் திட்டமிடுதலில் அடங்கியவை

மண்டலத் திட்டமிடுதல் பலவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது. அவை பின்வருமாறு: மண்டல உணர்ச்சி இருப்பதை அறிதல், மண்டலத்தைப் பிரித்தல், அதன் தேவைகளை நிரணயித்துத் திட்டம் தயாரித்தல், மாநிலக் கூட்டரசு ஆதிக்க வரைச் சட்டத்திற்குட்பட்டு அத் திட்டத்தைச் செயல்படுத்துதல், அத் திட்டங்களின் விளைவுகளை மறு ஆய்வு செய்தல் (review).

இவையெல்லாம் நடைபெறுவதற்கு மேலீடான ஆராய்ச்சி, திட்டமிடுதல், முன்வரைவு தயாரித்தல், முன்னேற்ற நுட்பமுறை, அமைப்புப்படம், நிர்வாகம், பயன்படுத்துதல், செய்தி, கல்வி, முன்வரைவை நடைமுறையாக்கல் போன்றவை வேண்டியதாக இருக்கின்றன. தீவிர சமுதாயப் — புவியியல், சமுதாயப் பொருளாதார மேலீடான ஆராய்ச்சிகள், சமுதாய அல்லது மண்டல சமுதாயப் பொருளாதார அடிப்படை ஆய்வுகள் அப்போதைய பொருளாதார அமைப்பின் தன்மையை மட்டுமின்றி, எதிர்காலத் தேவை பற்றியதுமாக இருக்கவேண்டும்.

அடுத்த முக்கியமான நிலை திட்டத்தை உருவாக்குதலாகும். அதில் இயற்கை, நிதி, மனித சாதனங்களைப் போன்றவற்றைப்

பற்றிய மதிப்பீடு செய்தல், அவசரத் தேவைகளை மதிப்பீடு செய்தல், முற்றுரிமைகளை நிர்ணயித்தல் அடங்கும். ஒரு திட்டமானது, அதைப்பற்றிய மக்களின் பிரதிநிதிகளின் மதிப்பீடு, சாதனங்களைப் பற்றிய மதிப்பீடு, குறைவான செலவில் மிகக் குறுகிய காலத்தில் சமுதாயம் உச்சப்பலனைப் பெறச்செய்யக்கூடிய திட்டத்தைத் தேர்ந்தெடுத்தல், ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது.

திட்டமிடுதலின் முக்கிய நிலையாக இருப்பது செயல்படுத்துவது தான். இந்தியா போன்ற நாடுகளுக்கு இது மிகவும் பொருந்துகிறது. இந்தியாவில் நன்கு உருவாக்கப்பட்ட திட்டங்கள் சரிவரச் செயல் படுத்தப்படாமையால் தோல்வி அடைந்திருக்கின்றன. செயல் படுத்துவதற்குத் திறமையான நிர்வாகம், அரசியல் வாதிகளின் தலையீடின்றி நடைபெறும் நிர்வாகத்தொழில், நுட்பப்பணிகள் ஆகியவைகள் வேண்டும்.

மண்டலத் திட்டமிடுதலை மேற்கொள்பவர்

ஒரு மண்டலத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு முன் சிலவற்றைப்பற்றிய அறிவு தேவையாக இருக்கிறது. அவை பின்வருவன: எந்த மண்டலத்திற்குத் திட்டமிட வேண்டும்; தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் யாவை; நோக்கங்கள் யாவை; இக் குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான இயற்கை, மனித, நிதிச்சாதனங்கள்; விருப்பமான கொள்கைகள்; ஒவ்வொரு கொள்கையின் விளைவுகள் யாவை; வேண்டிய முதலீடுகளின் வகைகள் யாவை; முதலீடு செய்யப்பட வேண்டிய நேரமும் இடமும் எவை; அதற்கான செலவு என்ன; முற்றுரிமைகள் யாவை; திட்டங்களின் வடிவம் எப்படி இருக்கவேண்டும்; எந்தத் திட்டமிடும் மாதிரியங்கள் சிறந்தவையாக உள்ளன; அதன் புள்ளி விவரங்களைப் பொறுத்தவரையில் சிறந்தது என்று கணக்கிடுபவர் யார்; பின்னால் பயன்படுத்துவதற்குப் புள்ளி விவரங்களை அடையும் வழிகள் யாவை; கொள்கை முடிவுகளை யார் செயல்படுத்துவார்கள்.

ஒவ்வொன்றைப்பற்றியும் வெவ்வேறு மக்கள் ஆராய்ச்சி யாளர்கள் திட்டமிடும் மண்டலத்தை அமைப்பதற்குப் பொருளார அறிஞர்கள், புவியியல் அறிஞர்கள், அரசியல் அறிஞர்கள், மற்றும் பல தனித்தேர்ச்சி பெற்றவர்கள் வேண்டியிருக்கின்றனர். எந்தப் பிரச்சினைகளின் அடிப்படையில் மண்டலங்கள் அமைக்கப் படவேண்டுமென்பதை அறிய முறையான ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும். இந்த ஆராய்ச்சிகளைச் செய்ய பல துறையைச் சேர்ந்த அறிஞர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஓரிடத்தின் இயற்கைச் சாதனங்களைப் பற்றி அறிந்துகொள்ளப் புவியியல் அறிஞர்களும், மனிதர்களைப்பற்றி அறிந்து கொள்ளக் கல்வி, அரசியல், சமுதாய வல்லுநர்களும், நிதியை அறிந்து கொள்ளப் பொருளாதாரம் மற்றும் நிதித்துறை வல்லுநர்களும் வேண்டும்.

அரசியல்வாதிகள் திட்டத்தின் குறிக்கோள்களை நிர்ணயிக்கிருர்கள். அவர்கள் முடிவு செய்யப் பரந்த வரைச்சட்டத்தின் விவரங்களைத் திட்டமிடுபவர்கள் தயாரிக்கின்றனர். குறிக்கோள்கள் தெளிவற்றவையாக இருந்தால் திட்டம் செயல் திறத்துடன் (realistic) இருக்க முடியாது. குறிக்கோள்கள் அளவு அல்லது தரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். சான்ருக, திட்டக் காலத்தில் தனிநபர் வருமானம் பத்து சதவிகிதம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற முடிவு செய்யப்படலாம். வருமான ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டுமென்றும் வரையறுக்கப்படலாம். இவையெல்லாம் அரசாங்கம் செய்யும் முடிவுகள். ஆகவே, அரசியல்வாதிகள் முக்கிய இடம் பெறுகிருர்கள்.

அரசியல்வாதி சிறந்த முடிவெடுப்பதற்குத் துணைபுரியும் வகையில் கொள்கைகளைப்பற்றி அவர் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். அவருடைய கொள்கை முடிவிஞல் ஏற்படக்கூடிய விளைவுகளை அவர் அறியும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு அரசியல்வாதியும் தம் தொகுதியிலிருந்து தம்மைப் பிரித்துக்கொள்ள முடியாது. தம்மைத் தேர்ந்தெடுப்பவர்களைத் திருப்தி செய்ய வேண்டும். ஆகவே, தம் இடத்தையோ அல்லது தம் மாநிலத்தையோ முன்னேறச் செய்யும் வகையில் அவர் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ஜனநாயக அமைப்பில் இவ்வாறுதான் இருக்க வேண்டும்; இருப்பதில் தவறில்லை. ஆனுல், நன்கு விளங்கும்படியான தகவல்களைப் பெற்ற போதிலும் தவருன கொள்கையைத் தேர்ந்தெடுத்து, அதையே வற்புறுத்திஞல் அது தவருகும்.

உதாரணமாக, ஒரு மண்டலத்தில் ஒரு தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய தொகுதிகளில்தான் அதை ஏற்படுத்த விரும்புவார்கள். அதை ஏற்படுத்தத் தகுந்த இடங்களென்று இரண்டு மூன்று இடங்களை வல்லுநர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அந்த இடங்களில் ஏற்படுத்துவதால் சமுதாய—பொருளாதார விளைவுகளை எடுத்துச் சொல்லுவார்கள். இந்த இடங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது அரசியல்வாதியின் வேலையாகும். வல்லுநர்களின் முடிவுகளைப் புறக்கணித்து, முற்றிலும்

அரசியல் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டால், திட்டத்தைச் செயல்படுத்துவது செவ்வனே நடைபெற இயலாது. பலன் அதிக மின்றிச் சாதனங்கள் வீணுகும்.

அரசியல்வாதிகளால் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முதலீடுகளின் வகைகளை நிர்ணயிப் பதற்குப் பொருளாதார, தொழில் நுட்ப அறிஞர்களின் உதவி தேவையாக இருக்கின்றது. நடவடிக்கைகளின் இடகட்டமைப்புப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கும் புவியியல் அறிஞர்களைக் கொண்டு இந்த நடவடிக்கைகளின் அமைவிடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். எப்பொழுது முதலீடுகள் செய்யப்படுமென்பது சாதனங்கள் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. எவ்வளவு செலவாகும் என்பதைப் பொருளாதார அறிஞர்கள் கணக்கிடுவார்கள். திட்டங் களின் முந்துரிமையைப்பற்றியும் அவற்றின் வடிவத்தைப்பற்றியும் பொருளாதார அறிஞர்கள், பொறியியலாளர்கள், நிர்வாகத்தினர், கட்டிடக் கலைஞர்கள் முதலியவர்களால் முடிவெடுக்கப்படும்.

திட்டத்தை வகுக்கப் பயன்படும் திட்ட மாதிரியங்களை உருவாக்கவும், அதன் சிறப்பைக் கணிக்கவும், பொருளாதார அறிஞர்கள், மண்டல அறிவியல் அறிஞர்கள், புள்ளிவிவர அறிஞர்கள் போன்ருேர் தேவைப்படுகிருர்கள். மற்றத் திட்டங் களைச் செயல்படுத்தும்போது ஏற்படக்கூடிய இடர்களை முன் தெரிந்து சொல்லுவதற்கும், திட்டமிடுபவர்களுக்கு எதிர்காலத்திற்கு ஆலோசனை சொல்லுவதற்கும் திறமைபடைத்த நிர்வாகத்தினர் வேண்டும்.

பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுநர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு நடைபெறும் மண்டலத் திட்டமிடுதல் பல்வேறு இயல்களைச் சார்ந்த வினைநுட்ப முறையாகும் (inter-disiciplinary technique). ஒரு மண்டலம் புவியியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண் டிருந்தாலும், அதைத் திட்டமிடுதலுக்கு அரசியல், புவியியல், கல்வி, பொருளாதார, பொறியியல் அறிஞர்கள் தேவைப்படுகிருர்கள்.

மண்டலத் திட்டமிடுதல்
(Regional Planning)

உள்ளூர், தேசியத் திட்டமிடுதல் போல மண்டலத் திட்டமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். அது இந்தியாவாக இருந்தாலும் அல்லது மற்ற முன்னேறிக் கொண்டிருக்கும் எந்த நாடாக இருந்தாலும் அதன் புவியியல் அம்சங்கள், அரசியல் தத்துவம்

எப்படிப்பட்டவை யாயினும் மண்டலத் திட்டமிடுதல் முக்கியமானது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. உள்ளூர், தேசிய, மண்டல அளவில் திட்டமிடுதல், பல முன்னேற்றச் செயல்முன்வரைவுகளில், இட அளவுகள் உள்ளவை களாக இருக்கின்றன. சிலவற்றில் ஒன்றுக்கொன்று பின்னிய தாகவும், மற்றவற்றில் தனியாகவும் இருக்கின்றன. திட்டமிடுதலின் இந்த மூன்று பரப்பளவு நிலைகளும் சிலசமயம் பின்னியதாக இருக்கின்றன. உதாரணமாக, முக்கியமானதும் அடிப்படையானதுமான தாதுப்பொருள்களின் அபிவிருத்தியில் மண்டலத் திட்டமிடுதல், உள்ளூர்த் திட்டமிடுதலை ஒருங்கிணைத்து அதேசமயம் தேசியத் திட்டமிடுதலோடு ஒருங்கிணைக்கப்படுகிறது. இவ்விதம் இந்த மூன்று பரப்பளவு நிலைகளும் ஒன்றுக்கொன்று உதவுபவையாக இருப்பவையால் இவை மூன்றும் மேற்கொள்ளப்படவேண்டும்.

இச்சமயத்தில் முறையான மண்டலத் திட்டமிடுதலையும் (Systematic regional planning), திட்டமிடுதலின் மண்டல அணுகும் முறையையும் (Regional approach to planning) வேறுபடுத்திக் காட்டுவது முக்கியமானதாகும். பொதுவாக இவை இரண்டும் ஒன்று என்று கொள்ளப்படுகிறது. ஆனால், இது சரி அன்று. உணவிற்கான அல்லது நிலக்கரிக்கான உற்பத்தித் திட்டத்தைத் துல்லியமாக ஆராய்ந்தால் அது மண்டலத் திட்டம் ஆகாது. ஆனால், அது மண்டல அணுகும் முறையுடன் சம்பந்தப் பட்டதாக இருக்கலாம். மண்டல அளவுகளை உடையதாகவும் இருக்கலாம். அதைப்போலவே விவசாயம், தொழில் அல்லது சில குறிப்பிட்ட பணிகள் ஆகியவைகள் பரந்த அளவில் புவியியல் முறையில் முன்னேற வேண்டும் என்பதற்கான திட்டம், மண்டல அணுகும் முறையைச் சார்ந்ததாக இருந்தாலும் அது மண்டலத் திட்டமிடுதல் ஆகாது. இவை இரண்டையும் ஒன்றுக்கொன்று ஒத்ததே என்று குழப்பிக் கொள்ளும் போக்கும் காணப்படுகின்றது. முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரச்சினைக்கு மண்டல அணுகும் முறை, மண்டலத் திட்டமிடுதல் போல முக்கிய மானவையாக இருக்கலாம். மண்டல அணுகும் முறையானது, பல திட்டங்கள் சிறந்த முறையில் அமைவதற்கு உதவி செய்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது, திட்டங்கள் மிகச்சிறந்த முறையில் நடப்பதற்கு உதவி செய்கிறது. இவ்வாறு செய்வது சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கு மட்டுமல்லாமல் சூழல், பணம், நிதியியல் பிரச்சினைகள் போன்றவற்றைத் தீர்ப்பதற்கான திட்டங்களை உருவாக்கவும் உதவும்.

2. சாதனங்களைப் பற்றிய பிரச்சினைகளின் இடத்தின் அளவானது (Spatial Dimension) எப்படிப் பட்டதென்றால் சில முன்னேற்றத்தைப் பற்றிய அம்சங்களும் பிரச்சினைகளும் உள்ளூரைப் பற்றியதாகவோ அல்லது மண்டலத்தைப் பற்றிய தாகவோ இருக்கும். நகர்ப்புற மைய இடத்தின் உள் அமைப்பைத் திட்டமிடுதல் போல உள்ளூரைச் சார்ந்ததாகவும், நீர் மின்சக்தியைப் பங்கீடு செய்தல், வெள்ளத் தடுப்பு போன்றவற்றைத் திட்ட மிடுதலைப்போல மண்டலத்தைச் சார்ந்தவையாகவோ இருக்கும். நகர்ப்புற அல்லது அங்காடி மண்டலத்தின் முன்னேற்றத்தைத் திட்டமிடுதல் ஆகியவை மண்டலத் திட்டமிடுதலாகும்.

மண்டலத் திட்டமிடுதலைக் கோட்பாட்டு முறையில் அணுகுதலின் அடிப்படைத் தத்துவங்கள்

மண்டலத் திட்டமிடுதல் எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஆனபோதிலும் முன் காலத்தில் ஒரு மண்டலத்தின் சாதனங்களின் முன்னேற்றத்தைத் திட்ட மிடுவதற்கு மண்டலத் திட்டமிடுதல் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பட்டது என்று நம்பப்படுகிறது. மண்டலத் திட்டமிடுதலின் நோக்கமும் முறையும் காலத்திற்கேற்ப மாறுதல் அடைந்தாலும் அடிப்படைக் கோட்பாடுகள் அப்படியே யிருக்கின்றன.

மண்டலத் திட்டமிடுதலைப் பற்றிய கருத்துகளும் அனுமானங் களும் பல இருக்கின்றன. பேட்ரிக் கெடஸ் (Patric Geddes) வரையறுத்துக் கூறுகின்ற அடிப்படையான கோட்பாடுகளின் வாயிலாக மண்டலத்திட்டமிடுதலை விளக்க முற்பட்டால் இவற்றைப் பொருத்தம் என்று கொள்வதற்கு முடியாது. ஆனால், மண்டலத் திட்டமிடுதல் தெளிவற்றது என்று சொல்லப்படுகிறது. மண்டலப் பிரச்சினைகள் பலவகைப்பட்டவை. ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்பதை ஒரளவிற்குக் காரணமாகக் கூறலாம். ஆனால், முக்கிய மான காரணம் என்னவென்றால் மண்டலத் திட்டமிடுதலைச் சில சமயம் தெரிந்தோ தெரியாமலோ அடிப்படைக் கோட்பாட்டிற்கு மாறாக மேற்கொள்வதுதான். மண்டலம் என்ற சொல்லைக் கையாளுகின்ற முறையே மண்டலத் திட்டமிடுதலைப் பற்றிய பல்வேறு விளக்கங்கங்களுக்குக் காரணம் என்றால் அது மிகையன்று.

மண்டலத் திட்டமிடுதல் பற்றிய கோட்பாடு என்பது இதுவரை உருவாக்கப்படவில்லை. ஆனால் லெப்ளே (Leplay), பேட்ரிக் கெடஸ் (Patric Geddes) போன்றோரின் கருத்துகளை அடிப்படையாகக்

கொண்டு கோட்பாடுகளை உருவாக்கலாம். மண்டலத் திட்டமிடுதல், நிதி அல்லது பொருளாதாரத் திட்டமிடுதலை ஒத்திருப்பதைவிட நிலத்தோற்றத்தைத் திட்டமிடுதலை (Landscape planning) ஒத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும். 'லெப்ளே' உருவாக்கிய விதி (Formula).

இடம் ⇄ வேலை ⇄ மக்கள்
(Place) (Work) (Folk)
சூழ்நிலை அலுவல் கூட்டிணை அமைப்பு
(Environment) (Function) (Organism)

மண்டல அளவுள்ள வாழ்க்கை செயற்பாங்கை விளக்குகிறது. அதாவது, சூழ்நிலை (Environment) அலுவல் (Function) மூலமாகக் கூட்டிணை அமைப்பைப் (Organism) பாதிப்பது; கூட்டிணை அமைப்பு அலுவல் மூலமாகச் சூழ்நிலையைப் பாதிப்பது போன்ற செயற்பாங்கை விளக்குகிறது. இவ்வாறு இடம், வேலை, மக்கள் இவை ஒரு தனித்த செயற்பாங்கின் (Process) ஒன்றுக் கொன்று சார்ந்த கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது"[1] ஒரு மண்டலத்தில் உதாரணமாக நதியின் முகத்துவாரத்தில் சூழ்நிலையைப் பற்றிய விதிகள் பொருந்த வேண்டுமானால் நிலத்தின் பயனை (Land use) மிகவும் மாற்றிக் கொள்ள வேண்டும். இன்னொரு மண்டலத்தில் உதாரணமாக, மாநகர் அல்லது தொழில் மண்டலத்தில் வேலையோடு மக்களும் தங்களுடைய தேவைக் கேற்பச் சூழ்நிலையை மாற்றி அமைப்பார்கள்.

மண்டலத் திட்டமிடுதலின் முதல் தத்துவம் என்னவென்றால் பிரச்சினைகளைப் பற்றி ஒரு பொதுவான கருத்தை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகும். இது பொது விவர அணுகும் முறை (Synoptic Approach) என்று சொல்லப்படும். இதையே பள்ளத் தாக்குப் பிரிவு (Valley section) மூலம் பேட்ரிக் கெடஸ் விளக்குகின்றார். இந்தப் பள்ளத்தாக்குப் பிரிவு, மண்டலத் திட்டமிடுதலின் புதுமைக்கோர் எடுத்துக்காட்டு.

இரண்டாவது தத்துவம், இடத்தொடர்பு (Spatial relation) பற்றியது. புவியியல் முறையிலோ, பொருளாதார முறையிலோ, சமூக முறையிலோ இணைந்திருக்கும், அடுத்தாற் போலவோ அல்லது தூரத்திலோ இருக்கும் மண்டலங்களோடு ஒருங்கிணைத்து

1. V. L. S. Prakasa Rao, Regional Planning, Staistitcal Publishing Society, Calcutta. 1963

ஒரு மண்டலத்தின் முன்னேற்றம் திட்டமிடப்படவேண்டும். ஒரு மண்டலத்தின் முன்னேற்றம் அதனோடு இணைந்திருக்கும் மற்ற மண்டலங்களில் சங்கிலித் தொடர்போல் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒரு மண்டலத்தின் புவியியல் அமைப்பே நடைமுறையில் இருக்கும் தேசிய, அரசியல், பொருளாதாரக் கொள்கையோடு சேர்ந்து சில சமயம் ஒரு மண்டலத்தின் முன்னேற்றக் கொள்கையை நிர்ணயிக்கிறது. ஒரு மண்டலத்தின் பல்வேறு அங்கங்களின் அகத்தைச் சார்ந்ததும் புறத்தைச் சார்ந்ததுமான இணைப்பு, மண்டலத் திட்டமிடுதலின் கோட்பாட்டின் வரைச் சட்டத்தின் (Frame work) அடிப்படையாகும்.

மண்டலத் திட்டமிடுதலின் மூன்றாவது தத்துவம், மண்டலத் திட்டமிடுதல், தேசியத் திட்டமிடுதலின் கொள்கைகள், பிரச்சினைகள் இவற்றோடு ஒருங்கிணைக்கப் படவேண்டும் என்பதே யாகும். உதாரணமாக, கிரேட் பிரிட்டனில் (The Great Britain) மண்டல அல்லது பரப்பளவு திட்டமிடுதல் என்பது நகர்ப்புற மறு அமைப்பு, மறு முன்னேற்றம், தொழில், வேலை வாய்ப்பை நிலைப்படுத்துதல், தரமுள்ள விவசாய நலத்தை மண்டலங்களாகப் (Zones) பிரித்தல், சமூகப் பணிகளின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். பிரான்சில் தேசிய மண்டலத் திட்டமிடுதலின் கொள்கைகள் முக்கியமாக, தொழில் முன்னேற்றத்தின் வீதம் அதிகமாக இருக்கும் பாரீஸ் மண்டலத்தில் ஜனத்தொகை கூடுவதைத் தவிர்க்கும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் தேசத்தின் முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்றி மண்டல அளவில் திட்டமிடுதலின் அடிப்படையானது மூன்று அம்சங்களை உடையதாக இருக்க வேண்டும். ஒன்று, முக்கியத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இரண்டாவது, முந்துரிமை (Priority) அடிப்படையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சாதனங்களில், ஒரு மண்டலம் எந்தச் சாதனங்களில் உத்தம சூழ்நிலைகளை உடையதாய் இருக்கின்றதோ அந்தச் சாதனங்களை அபிவிருத்தி செய்யவேண்டும். மூன்றாவது, தொழில் முன்னேற்றத்தைப் பரவலாக்குதல் மூலம் மண்டலங்களுக்கிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டும்.

இந்தியாவின் புவியியல் பரப்பை நோக்கியும், அடிப்படைச் சாதனங்களின் மண்டல முறையிலான பங்கீட்டைக் கருத்தில் கொண்டும், மண்டலப் படிநிலை அமைப்பு ஒன்று இருக்க வேண்டும். ரஷ்யாவில் இருப்பதைப் போல் இருக்க வேண்டும். அதாவது, அப்படிப்பட்ட மண்டலங்களில் தொகுதி மண்டலம் (Macro region)

முக்கியமான சாதனங்களில் தன்னிறைவு அடைந்ததாக இருக்கும். ஆனல், அதே சமயத்தில் மற்ற மண்டலத்தில் மண்டலப் பொருளாதாரத் தனித்தேர்வு இருக்கும். இவ்வாறு மண்டல முன்னேற்றக் கொள்கைகள் பொதுவானதும், குறிப்பிட்டதுமான தேசிய அளவில் திட்டமிடுதலின் கொள்கைகளைத் துணை கொள்ள வேண்டும். தேசிய அளவில் திட்டமிடுதலின் கொள்கைகள் நாளுக்கு நாள் மாறுகின்றன. இவ்வாறு மாறுவதினுல் மண்டல முன்னேற்றக் கொள்கைகளில் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

மண்டலத் திட்டமிடுதலைச் செயல்முறையில் அணுகுதல் (Operational Approach)

மண்டலத் திட்டமிடுதலைச் செயல் முறையில் பார்க்கும்போது பொதுவானதொரு வரைச் சட்டத்தைத் தருகின்றது. அடுத்த பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றக் கொள்கையை அது காட்டுகிறது. குறிப்பிட்ட பொது வரைச் சட்டத்திற்குட்பட்டு செயல்முன் வரைவுக்கான உள்ளூர் முன்னேற்றத் திட்டங்கள் வரையப்படுகின்றன. இவ்வாறு பொது மண்டலத் திட்டம் (General Regional Plan) அல்லது பரவலாகச் சொல்லப்படும் முன்னேற்றத் திட்டம் (Development Plan) என்பது ஒரு மண்டலத்திற்கான எதிர்காலத் திட்டமாகும். அது குறிப்பிட்ட திட்டத்திற்கென்று எடுத்துக் கொள்ளப்பட்ட காலஅளவில் இந்த முன்னேற்றத் திட்டம் மண்டலத் தேசியத் திட்டமிடுபவர்களுக்கு ஒரு முக்கிய மேற்கோளாகும். நீண்டகால வழிகாட்டும் திட்ட மாகவும், முன்னேற்றத்தைத் தெளிவான முறையில் காட்டுகின்ற விளக்க வரைப்படமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்டதொரு மண்டலத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. வீண்போட்டிக்கு வழிகாட்டும் போக்கைத் தவிர்க்கவு மட்டுமல்லாமல் எதிர்கால முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், சாதனங்கள் தவருன முறையில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவும், இப்படிப்பட்ட மண்டலத் திட்டம் இருப்பது இன்றியமையாததாகும்.

பல்வேறு மண்டலத் திட்டங்கள் எல்லை, அமைப்பு போன்ற வற்றின் விவரங்களில் மாறுபடுகின்றன. ஆனல், கோட்பாட்டள விலும், பொதுச் செயல்முறை அணுகும் முறையிலும் நிறைய வித்தியாசம் கிடையாது. செயல் முறையை நோக்கும்போது மண்டலத் திட்டமிடுதல் மூன்று நிலைகளை உடையதாக இருக்கிறது. அவை: 1. மண்டலத் திட்டமிடுதலுக்கான மண்டலத்தை எல்லைக் குட்படுத்துவது. 2. மண்டலம் அமைந்திருக்கும் பெரிய பரப்

பளவைப் பற்றிய பரவலான கணக்கீடு (Survey) செய்தல். 3. ஒரு மண்டலத்திற்கும், அதன் துணை மண்டலங்களுக்குமான பொதுவானதும், குறிப்பிட்டதுமான முன்னேற்றத் திட்டங்கள் தயாரித்தல் ஆகும்.

இந்தியாவில் மண்டலத் திட்டமிடுதல்

இந்தியாவில் மண்டலத் திட்டமிடுதல், தேசியத் திட்டமிடுதலைப் போலவே சரிசமமான முன்னேற்றத்தை (Balanced Development) நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் திட்டமிட்ட முன்னேற்றத்தின் முக்கிய நோக்கங்களில் சில, வெவ்வேறு பகுதிகளின் சரிசம முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றத்தின் நன்மையைக் குறைவான முன்னேற்றமடைந்த மண்டலங்களுக்கும் விரிவாக்குதல், தொழிலைப் பரவலாக்குதல் ஆகியவைகளாகும். அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் அல்லது அமுல்செய்யப்படும் ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்த நோக்கங்களைப் பெருமளவில் நிறைவேற்ற முயலுகின்றன. பொருளாதார அமைப்பின் முன்னேற்றம், வேகமான வளர்ச்சி, தேசிய மண்டல முன்னேற்றத்திற்கிடையில் சிறந்த சரிசம நிலையை அடைவதற்கு உதவுகிறது.

இப்படிப்பட்ட சரிசம நிலையை அடைய முற்படும்போது குறிப்பாகப் பொருளாதார முன்னேற்றத்தின் ஆரம்ப நிலையில் சில இன்னல்கள் தீர்க்கப்பட வேண்டும். சாதனங்கள் குறைவாகவே கிடைப்பதனுல் விளைவு அதிகம் இருக்கக்கூடிய இடங்களிலேயே அவற்றைப் பயன்படுத்தினுல் நன்மை ஏற்படும். முன்னேற்றம் ஏற்படும்போது பெரிய பரப்பளவில் முதலீடுகள் செய்யப்படுகின்றன. சாதனங்கள் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படலாம். அதன் காரணமாகப் பல இடங்கள் நன்மை பெறுகின்றன. தேசிய வருமானம் உச்சமானதாக அதிகரிக்குமானுல் இன்னும் அதிகமான முதலீடு செய்வதற்கான சாதனங்கள் கிடைக்கும். அதன் காரணமாக முன்னேற்றம் அதிகரிக்கும்.

இந்தச் செயல்முறை ஒன்றையொன்று சார்ந்ததாக உள்ளது. அதாவது, ஒரு நிலை மற்றவற்றை நிர்ணயிக்கிறது. சில துறைகளில் தொழிலில் இருப்பதுபோலத் தீவிரமானதும் செறிவுமான முன்னேற்றம் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். இத்தோடு, மற்ற இடங்களில் விவசாயம், சிறிய தொழில்கள், மின்சாரம், செய்தித் தொடர்பு, சமூகப் பணிகள் ஆகிய துறைகளில் முன்னேற்றம் பரவலாக இருக்கும்படி செய்வதே நோக்கமாக இருக்கவேண்டும். தொழிலைப் போலவே பொருளாதார சமூகப்

பொதுச் செலவிற்கான முதலீடு, வளர்ச்சிக்கான வாய்ப்பு அளிக்கக் கூடிய மைய இடங்கள் உருவாகுவதற்கு உதவி செய்கின்றது.

பல்வேறு துறைகளில் தேசிய வருமானமும் வளர்ச்சியும் ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவை அடைந்து விட்டால் அந்தப் பொருளாதார அமைப்பின் முன்னேற்றத்தைப் பாதிக்காவண்ணம், குறைந்த முன்னேற்றமடைந்த மண்டலங்களில், பேரளவில் முன்னேற்றம் அடையப் பல்வேறு வகைகளில் முயலுவது சுலபமாக இருக்கிறது. பரந்த அளவில் இயற்கைச் சாதனங்கள் உடையதும் நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் முன்னேற்றத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் கவனத்தில் கொள்ளும் ஒரு பெரிய நாடு, அதிகமானதும் தன்னைத்தானே சார்ந்திருக்கின்றதுமான வளர்ச்சியை அடைவதற்கு வசதிகளைப் பெற்றிருப்பது மட்டுமல்லாமல் வளர்ச்சி குறைந்த மண்டலங்களும், மற்றவைகளைப் போல வளர்ச்சி அடையச் செய்வதற்கும் வசதி பெற்றிருக்கிறது.

இவ்வாறு இந்த இரண்டு நோக்கங்களும் அதாவது தேசிய வருமானத்தின் அதிகரிப்பு, நாட்டின் பல்வேறு பகுதிகள் இன்னும் சமமான முன்னேற்றத்தை அடைதல் ஒன்றுடன் ஒன்று தொடர் புடையன. ஒவ்வொரு மண்டலமும் இயற்கைச் சாதனங்கள், திறமை, மூலதனம் இவைகளை முற்றிலும் பயன்படுத்துவதற்கான சூழ்நிலைகளைப் படிப்படியாக உருவாக்க முடிகிறது. சில சமயம் முன்னேற்றம் பின்னடைந்து இருப்பதாகத் தோன்றலாம். சில குறிப்பிட்ட துறைகளில் அதாவது விவசாயம், நீர்ப்பாசனம், மின் சக்தி, தொழில் அல்லது வேலை இவைகளில் ஒழுங்கற்றதும், குறைவானதுமான முன்னேற்றந்தான் அதற்குக் காரணமே தவிர அந்த மண்டலத்தின் வளர்ச்சி வீதம் குறைவாக இருப்பது அல்ல. ஒவ்வொரு மண்டலத்திலும் சில குறிப்பிட்ட துறைகளில் துரித முன்னேற்றம் அடைவதற்குத் தடையாக உள்ள தன்மைகள் கவனத் துடன் ஆராயப்பட்டு விரைவான முன்னேற்றத்திற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மண்டலத்தின் சாதனங்கள் முற்றிலும் பயன்படுத்தப்படவேண்டும் என்பது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த மண்டலம் தேசிய முன்னேற்றத்திற்குத் தன் பங்கை அளிக்கவும், அதன் காரணமாக ஏற்படுகின்ற நன்மையைப் பெறவும் முடியும்.

ஒரு மண்டலத்தின் மறைச் சாதனங்கள் (Potential Resources) முற்றிலும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், எந்தக் குறிப்பிட்ட முறையில் இந்த நோக்கம் நிறைவேற முடியும் என்பதும் வளர்ச்சி யின் நிலைகளும் ஒன்றுடன் ஒன்று முழுவதும் ஒத்தவை அன்று. சில

மண்டலக் காரணிகள் அதாவது பௌதீக அம்சங்கள், புவியியல், அமைவிடம் இவற்றோடு சம்பந்தப் பட்டவைகளை எளிதாக மாற்ற முடியாது. ஆனால், கல்வி திறமை இவைகளின் திறத்தை உயர்த்துதல், சக்தியை அபிவிருத்தி செய்தல், பேரளவில் அறிவியலையும் தொழில் நுட்ப இயலையும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வேறு சில மண்டலக் காரணிகளை மாற்றலாம். பேரளவு தொழில்கள் முக்கியமாக கனரகத் தொழில்கள், தீவிரமானதும், பரந்த அடிப்படையிலுமான முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கின்றன. ஆனால், தொழிலின் முன்னேற்றத்திற்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை எல்லா மண்டலமும் பெற்றிருக்க முடியாது.

ஓரிடத்திலுள்ள மக்கள் தொகையின் பெரும் பகுதியின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் பெரிய தொழிற்சாலைகளின் அமைவிடத்தின் முக்கியத்துவத்தை மிகையாக மதிப்பீடு செய்யலாம். தொழிலில் குறைந்த அளவு முன்னேற்றமடைந்த நாடுகளோ, மண்டலங்களோ, அவைகளின் இயற்கைச் சாதனங்களையும், மக்களையும் முழுவதும் பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தில் கணிசமான உயர்வை அடைய முடியும் என்பதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. பெரிய திட்டங்கள் செயல் படுத்தப்படும் இடங்களுக்கு அருகில் இருக்கும் பரப்பளவுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் பெரிய அளவில் முன்னேற்றமடைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. அடிப்படையானதும், முதலீட்டுப் பொருள்கள் தயாரிப்பதுமான தொழில்கள், மற்றும் பெரிய தொழில்கள், இவைகளைத் தவிர உழைப்பை அதிகமாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், தற்காலத்திய சிறு தொழில்கள், விவசாயப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்கள், காட்டுத் தொழில்கள், பொழுது போக்குத் தொழில்கள், பாகங்களைப் பொருத்தி ஒன்று சேர்க்கும் தொழில்கள் போன்ற தொழில்களில் முன்னேற்றமடைய நிரம்ப வாய்ப்பு இருக்கிறது.

திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் மண்டல முன்னேற்றம்

திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் மண்டல முன்னேற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. அதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

ஒரு நாடு பரந்து விரிந்திருக்கும்போது, அதன் பொருளாதாரச் சாதனங்கள் ஒரே சீராக நாடு முழுவதும் பங்கிடப்பட்டிருக்காது. கனி, விவசாய, சக்தி வளங்கள் சமமற்ற முறையில் பங்கிடப்பட்

டிருக்கும். சில இடங்கள் சாதனவளம் மிகுந்தவையாகவும் சில இடங்கள் ஒரு சிலவற்றையே பெற்றவையாகவும் இருக்கும்.

இலாபத்தையே நோக்கமாகக்கொண்ட தொழில் துணிவு சுயேச்சைப் பொருளாதார அமைப்பில் (free enterprise economy) இலாபம் எங்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அவ்விடம் முந்துரிமை பெறும். அங்குள்ள சாதனங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு அவ்விடம் முன்னேற்ற மடையும். ஆனால், மற்ற இடங்கள் புறக் கணிக்கப்படும். இதன் காரணமாக ஒழுங்கற்ற முன்னேற்றம் ஏற்படும்.

மேலும், ஒரே மாதிரியான தொழிற்சாலைகள் அந்த இடங்களில் ஏற்படும். போட்டியின் காரணமாகச் சிறந்த தொழிற் சாலைகள் மட்டுமே இயங்கக் கூடிய நிலை ஏற்படும் வரையில் இத்தகைய வீண் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வீண் விரயம் ஏற்படும். மேலும், இத்தகைய சமநிலை ஏற்படுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பது மட்டு மன்று, அது மிகவும் கடினமானதாகவும் இருக்கும். இவ்வாறு நாட்டின் செல்வம் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க மண்டல அணுகும் முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே, மண்டலத் திட்ட மிடுதலின் ஆரம்ப நடவடிக்கை என்னவென்றால், இடங்களை வரையறை செய்வதுதான். இவ்வாறு செய்யும்போது அவை எந்த அரசியல் எல்லைக்குள் இருக்கின்றன, என்பதைக் கருத்திற் கொள்ளாமல், அவற்றில் கிடைக்கும் இயற்கைச் சாதனங்களைக் கொண்டு சிக்கனமான அலகுகளாக அவற்றை வரையறுக்க வேண்டும். இந்த இடங்களில் உள்ள சாதனங்களையும், மறைச் சாதனங்களையும் கணிக்கவேண்டும். இவைகளின் அடிப்படையில் அந்த இடங்களின் அல்லது மண்டலங்களின் பொருளாதாரக் கட்டமைப்பின் முன்வரைவு உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய அணுகும்முறையின் நோக்கம் ஒவ்வொரு மண்ட லத்தின் மறைச் சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தப்பட வேண்டு மென்பதே யாகும். தேசிய அணுகும்முறையில் முன்பே நிர்ண யிக்கப்பட்ட உற்பத்தி அளவுகளை அடையும் நோக்கத்துடன் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த நோக்கத்தின் வெற்றி நாட்டின் வெவ்வேறு மண்டலங்களுக்கிடையே உற்பத்தி நடவடிக்கைகள் சமமாகப் பங்கிடப்படும்படி செய்யும் என்று சொல்லுவதற்கில்லை. இவ்வாறு மண்டலத் திட்டமிடுதல் தேசிய திட்டமிடுதலுக்குத் துணைபுரிகின்ற முறையில் தொடர் புடையதாக இருக்கிறது.

தேசிய செல்வத்தை அதிகரிப்பது, வேலை நிறைவு முதலிய பரந்த நோக்கங்களை அடைவதற்குத் தேசிய திட்டமிடுதல் துணை புரியலாம். ஆனால், இடங்களுக்கிடையிலான பொருளாதார முன்னேற்றத்தில் சரிசமநிலையை ஏற்படுத்த அதனால் முடியாது. மேலும், தொழில்கள் மண்டலமயமாதல் (regionalisation of industries) சரியாக இருந்தால்தான் ஒரு அலகின் உற்பத்திச் செலவு குறைந்த பட்சமாக (minimum) இருக்கும். ஆகவே, பொருளாதாரத் திட்டமிடுதல் மண்டலத் திட்டமிடுதலையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், திட்டமிடுதலின் பங்கீடு அம்சம் செவ்வனே இயங்க முடியாது. மக்களின் வாங்கும் சக்தி நாடு முழுவதிலும் முடிந்த வரையில் ஒரே சீராக உயர்த்தப்பட வேண்டும். ஆகவே, மண்டலங்கள் அனைத்திலும் உற்பத்தி வேலைகள் பரவலாக ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடையாக இருப்பது, சில குறிப்பிட்ட மண்டலங்களின் குறைவான முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கும் பொருளாதாரச் சாதனக் குறைவுதான். இக்காரணத்தைத் தவிர, செல்வத்தை அதிகரிக்கக்கூடிய சாதனங்களைப் பயன்படுத்தாது விட்டுவைத்தலுக்கு வேறு அடிப்படை நியாயம் கிடையாது. இக்கருத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காததனால் மண்டலங்களுக்கிடையேயான தொழில் முன்னேற்றத்தில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் இயற்கைச் சூழ்நிலைகள் அன்று. சில குறிப்பிட்ட இடங்களில் சாதகமான சூழ்நிலைகள் தொழில்களின் அளவுகடந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. முதலாளித்துவ அமைப்பில், இந்நிலை மற்ற இடங்களில் தேவையான பொருள்களை உற்பத்திச் செய்வதற்கு அங்குக் கிடைக்கும் இயற்கைச் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது. பன்னாட்டு வாணிபத்தைப்போல மண்டலங்களுக்கிடையேயான வியாபாரமும் ஒப்பிட்டுச் செலவுத் தத்துவத்தின் (principle of comparative cost) அடிப்படையில்தான் நடைபெற வேண்டும். ஆகவே, மண்டலங்களுக்கிடையேயான வியாபாரம் அங்குக் கிடைக்கும் காரணிகளின் விகிதத்தில்தான் இருக்க வேண்டும்.

பல்வேறு மண்டலங்களுள்ள பொருளாதார அமைப்பில் திட்டமிடுதலின் பிரச்சினைகள்

பல்வேறுபட்ட புவியியல் மண்டலங்களையோ அல்லது பல மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டமைப்பைக் கொண்டிருந்தாலோ

அந்நாட்டிற்கு மண்டலத் திட்டமிடுதல் அல்லது தேசியத் திட்டத்தை மண்டலமயமாக்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகச் செய்கிறது. பரந்ததும் பல்வேறு வகைப்பட்ட மண்டலங்களை உடையதும் பல மாநிலங்களின் கூட்டாகவுமுள்ள இந்திய நாடு இதற்குச் சிறந்ததொரு சான்ருக உள்ளது.

இப்படிப்பட்ட மாநிலங்களைக் கொண்ட நாடுகளில் சில சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந் நாட்டில் பொருளாதாரத் திட்டமிடுதலை மத்திய அரசு மேற்கொண்டிருந்தால் தேசியத் திட்டத்திற்கும், மண்டலங்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்குமுள்ள தொடர்பு எத்தகையது? தேசியத் திட்டமானது, மண்டலத் திட்டங்களனைத்தையும் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதைப்போல் மண்டலத் திட்டங்கள் தேசிய திட்டத்திற்கு முரண்படாதவாறு இருக்கவேண்டும்.

தேசிய, மண்டலத் திட்டங்களை ஒருங்கிணைந்திருக்குமாறு செய்வது நடைமுறை அளவிலும், கருத்தளவிலும் எளிதன்று. தேசிய திட்டமிடுதலே சிக்கலானது; அதைவிடச் சிக்கலானது பல மண்டலங்களைக் கொண்ட நாட்டிற்குத் திட்டமிடுதலேயாகும். குறிப்பாக ஒரு குறிப்பிட்ட மண்டலத்தில் திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்டால் அத் திட்டங்கள் துல்லியமாகத் தீட்டப்பட வேண்டும். இவ்வாறு மண்டலத் திட்டங்களின் நுண்மைத்தன்மை அதிகரிக்க அதிகரிக்க மற்ற மண்டலங்களின் திட்டங்களோடு செங்குத்து (vertical) கிடைப் (horizontal) பொருத்தம் (consistency), அதாவது ஒருங்கிணைப்பு, ஏற்படச் செய்வது கடினமாகிறது.

பல்வேறுபட்ட மண்டலங்களுள்ளப் பொருளாதார அமைப்பில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது, முதலில் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்ருல் அங்குத் தேசிய ஒற்றுமை நோக்கம் இருக்கிறதா அல்லது அத் தேசத்தின் அங்கங்கள் அரசியல் சுதந்திரத்தோடு சில நோக்கங்களுக்காக ஒன்று சேர்ந்துள்ளனவா என்பதாகும்.

தேசிய ஒற்றுமை நோக்கம் எல்லா மண்டலங்களையும் பிணைத்திருந்தால் அந்தப் பொருளாதார அமைப்பில் எல்லா மண்டலங்களிலும் பொதுவானதொரு நலக்கொள்கை கைக்கொள்ளப்படும். அவ்வாறு இல்லாமல் அது நெருக்கமற்ற அரசியலில் உறவைக் கொண்டிருந்தால் மண்டலங்களில் வெவ்வேறு நலக்கொள்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வேறுபட்டாலும், தேசிய நலன் ஒப்புக்கொள்ளப்பட்டால், நலனைப் பற்றிய ஒருமித்த கருத்து, சுயாட்சியுடைய

மண்டலங்கள் உள்ள நாட்டிலும் நிலவக்கூடும். இங்குச் சுயாட்சி என்பது தன்னிச்சைப்படி தேசிய அரசாங்கத்தின் இடையீடின்றி அந்த மண்டலமானது அதற்கு வேண்டிய நிதியை உருவாக்கிக் கொள்ளும் சக்தி உடையதாக இருப்பதைக் குறிக்கும். மண்டல வரி விதிப்பு உரிமை இல்லாவிடில் மண்டல சுயாட்சி இருக்க முடியாது.

இத்தகைய உரிமை இருக்கும்போது தேசிய நோக்கங்களுக்குப் பொருந்தியவாறு சுயாட்சி மாநில அரசாங்கங்களின் பொருளாதார நடத்தை, தேசியப் பொது நோக்கத்திற்கு முரண்படாவகையில் செய்வது எப்படி என்பதைப் பற்றிய பிரச்சினைதான் பரவலாகும் பிரச்சினையாகும் (problem of decentralization). குறிப்பாக, இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவது, திட்டங்களைப் பரவலாக நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் மத்தியப் பொருளாதார திட்டமிடுதலின் வரைச்சட்டத்தை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவதாக, இவ்வாறு பரவலாகச் செயலாற்றுவதற்குத் தேவையான நிலையங்கள், கொள்கைகள் இவைகளை உருவாக்குதலாகும்.

சாதன ஒதுக்கீடு, பொதுத்துறை மண்டல அரசாங்கங்கள், பல்வேறுபட்ட அரசாங்க நிறுவனங்கள், தேசிய அரசாங்கம் இவைகளைப் பொறுத்து அமைகின்ற கலப்புப் பொருளாதாரத்தில் மத்தியத் திட்டமிடுதலின் பங்கு என்ன? ஐயத்திற்கிடமின்றி அதன் முதன்மைப் பணி என்னவென்றால், கொள்கைகளை உருவாக்குவதற்கும் திட்டமிடுதலுக்கும் எனத் தேசிய நலத்தைப் பற்றித் துல்லியமாக வரையறை செய்வதேயாகும். இரண்டாவதாக, தேசிய அரசாங்கத்தின் நேரடியான மேலாண்மையில் வருகின்ற நடவடிக்கைகளையும் திட்டங்களையும் நிர்ணயிப்பதாகும். இறுதியாக, முக்கியமாக, தேசியத் திட்டமிடுதலின் பணி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பொருளாதார சமுதாய முடிவுகள் தேசிய நலத்தோடு ஒருங்கிணைந்திருக்குமாறு செய்வதேயாகும். மத்திய அரசாங்கம், தனியார்துறை, சுயாட்சிப் பொது நிறுவனங்கள் இவற்றை ஓரளவிற்கே கட்டுப்படுத்த முடியும் என்றால் இப்படிப்பட்ட பரவலான அங்கங்களை மத்தியத் திட்டத்திற்கேற்பச் செயல்படுமாறு செய்ய மறைமுகமாவது கட்டுப்படுத்த வேண்டும். தனியார்துறை அல்லது சுயேச்சையான அங்காடியைப் பொறுத்தவரையில் இது நேரடியானது. வியாபாரிகள், முதலீடு செய்பவர்கள், வணிக விவசாயிகள், சுருங்கக் கூறினால் தனிப்பட்ட தொழில் துணிவோர்கள் இலாபத்தை உச்சமானதாக்கும் மனப்பான்மை உடையோராவர். அதனால் விலை அமைப்பை மாற்றியமைப்பதன் மூலம் உச்ச இலாப

நோக்கை உடைய தொழில் துணிவோரைத் தேசிய திட்டத்திற்கேற்ற வகையில் செயலாற்றுவதே தங்களுக்கு நன்மை தரும் என்பதை அறிந்து கொள்ளச் செய்யலாம்.

இவ்வாறு செய்தால், அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது சுயாட்சி அரசாங்கங்களைத் தேசியத் திட்டத்திற்கேற்ப செயலாற்றச் செய்யவேண்டுவதாகும். அவை இலாப நோக்கைக் கொண்டிருப்பவை அன்று. மேலும், அவை சுயாட்சி பெற்றவையாக இருப்பதால் மத்திய அரசிற்குக் கட்டுப்படாமல் இயங்க முடியும். அவற்றைத் தேசிய நலத்திற்கேற்ப செயலாற்றச் செய்யவேண்டுமானால் இரண்டு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். முதலாவதாக, விலை அமைப்பைப் போன்ற காட்டி (signal) அமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும். இரண்டாவதாக, மத்திய நிர்வாகம் காட்டுகின்ற காட்டிக்கேற்ப செயல்படுகின்றதற்குத் தூண்டப்பட வேண்டும்.

பரவலான மண்டலத்திட்டமிடுதலுக்குத் தேவையான புள்ளி விவரங்கள்

எந்த நாடு அல்லது மண்டலத்திற்காகத் திட்டங்கள் மேற் கொள்ளப்படுகின்றனவோ, அவற்றைப் பற்றிய தொழில் நுட்ப, பொருளாதார அல்லது பொதுச் சமுதாய நிலைகளைப் பற்றிய புள்ளி விரங்கள் தேவைப்படுகின்றன. இத்துடன் பன்னாட்டு நடவடிக்கைகளும் திட்டமிடுவதில் சேர்க்கப்பட்டால், அவற்றைப் பற்றிய புள்ளி விவரங்களும் தேவைப்படுகின்றன. தேசியத் திட்டத்தோடு இணைந்து செயல்பட வேண்டிய மண்டலத் திட்ட மிடுதலுக்குத் தேசிய மண்டல அளவில் புள்ளி விவரங்கள் தேவைப் படுகின்றன.

திட்டத்தைச் செயலாற்றுவதில் அரசியல் கட்டுப்பாடு

இந்தியா ஒரு கூட்டரசாகும். ஒவ்வொரு மாநிலத்திலும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் உள்ளன. சட்டங்கள் இயற்றுவதற்கும் வரிகளை விதித்து அவற்றை வசூல் செய்வதற்குமுள்ள உரிமையைப் பொறுத்து மாநிலங்களுக்குச் சுயாட்சி உரிமை அமையும். மத்திய அரசாங்கம் தன் வருமானத்தில் ஒரு பகுதியை மாநிலங்களுக்கு மத்திய உதவியாக அளிக்கும். முக்கியமாக இந்த உதவியைக் கொண்டே, நிதித் துறையில் சுயாட்சியுடைய மாநிலங்களை மத்திய அரசாங்கம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது.

மத்திய அரசாங்கமும் மற்ற மாநில அரசாங்கங்களும் ஒரே கட்சியில் அமைக்கப்பட்டால் மத்தியத் திட்டமிடுதல் சிக்கலின்றி நடைபெறும்.

ஆனல், மாநிலங்களில் வேறு கட்சிகள் ஆட்சியிலிருந்தால் திட்டநோக்கங்கள், முயற்சிகள், சாதன ஒதுக்கீடு முதலியவற்றில் வேறுபாடுகள் ஏற்படக்கூடும். தற்போதைய அரசியல் சட்டத்திற்குட் பட்டு மத்தியத்திட்டமிடுதல் வெற்றிகரமாக நடைபெறவேண்டு மென்ருல் சமுதாயம், அரசியலமைப்பு போன்றவற்றில் மாநிலங்கள், தனியார்துறை ஆகியவைகளின் கருத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

4. பிரஞ்சுநாட்டில் மண்டலத் திட்டமிடுதல்

(French Regional Planning)

மண்டலத்திட்டமிடுதல், சாலைப்போக்குவரத்துப் புரட்சியினுல் விரிவடைந்திருக்கிற உள்ளூர் அங்காடிகளின் காரணமாக ஏற்பட்டதாகும். நாடு முழுவதையும் ஒருமித்த பொருளாதார அமைப்பிலும், கூட்டுப் பொருளாதார முதலிலும் பங்கேற்கச் செய்யும் நேரான ஆனுல் கடுமையான வழியாகும்.

மண்டலத்திட்டமிடுதல் பிரஞ்சுநாட்டில் இரண்டு விதமாகச் சொல்லப்படுகிறது. ஒன்று, பாரிசும், மற்ற பிரஞ்சுப்பகுதிகளும் என்றும் மற்றென்று, பிரதேசத்தின் சீரமைப்பு என்றும் சொல்லப் படுகிறது. இவை இரண்டு முரண்பட்ட தத்துவங்களையும் பிரஞ்சு நாட்டில் மண்டலங்களைப்பற்றி அடுத்தடுத்துத் தோன்றி வளர்ந்து வருகின்ற இரண்டு கருத்துகளையும் குறிக்கின்றன.

பிரஞ்சுநாட்டின் இரண்டாவது, மூன்ருவது, நான்காவது திட்டக்காலங்களில் மண்டலத்திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனுலும், ஐந்தாண்டுத் திட்டகாலத்தில்தான் (ஜனவரி 1966 - டிசம்பர் 1970) மண்டலத்திட்டமிடுதல் இரண்டு வெவ்வேறு மட்டங்களில் முற்றிலும் செம்மைப்பட்டது. மண்டலத் திட்டமிடுதல் புவியியல் நுணுக்கங்களை தேசியத்திட்டத்திற்கு ஊட்டி, அதை மண்டல மயமாக்குகிறது. இதுவே அதன் நடுத்தரக்கால (நான்கு ஆண்டுகள்) அம்சமாகும். நீண்ட காலத்தில் (இருபது ஆண்டுகள்), அது தேசியப் பிரதேசங்களைச் சீரமைப்புச் செய்கிறது. இதுவே அதன் நீண்டகால அம்சமாகும். மண்டலத்திட்டமிடுதல் தேசியத் திட்டமிடுதலுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. இவ்வாறு நடுத்தர காலத்தில் துணையாகவும், நீண்ட காலத்தில் வழிகாட்டியாகவும்.

இருப்பதால் இத் திட்டங்களில் இன்னல்களும், முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

நடுத்தரக் கால மண்டலமயமாக்குதல்
(Medium Term Regionalization)

நிர்வாகக் கண்ணோட்டத்துடன் பார்த்தோமென்றால் பிரஞ்சு நாட்டில், மண்டலமயமாதல் 1955ஆம் ஆண்டுச் சட்டத்துடன் தொடங்கியது. புதுமைமயமாக்குதலையும், மூலதனத்தை மீண்டும் ஏற்படுத்துவதையும் அதிகரித்து மண்டலத் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவை இரண்டாவது திட்டத்தின் (1954 - 1957) இரண்டாவது ஆண்டில் நடைபெற்றன. 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம், தற்போதைய இருபத்தைந்து மண்டல நடவடிக்கை இடங்கள் வரையறுக்கப்பட்டன. ஆனால், தன்னிச்சையான நடவடிக்கைகள் மெதுவாகவே நடைபெற்றன.

1961-ல்தான் ஆலோசனைக் குழுவாகிய மண்டலப் பெருக்க செயல் குழு (Regional Expansion Committee) அங்கீகாரம் பெற்றது. ஆனபோதிலும், செயல்முறையான மண்டல வரைச்சட்டம் மெதுவாகவே வரையப்பட்டது. அவ்வரைச் சட்டம் ஓரினத் தன்மையையும் நிர்வாக உரிமையையும் இழந்திருந்தது.

தற்போது இருபத்தொன்று மண்டல நடவடிக்கைக் குழுக்கள் ஒரு மண்டல பர்ஃபேயின் (Regional perfect) தலைமையில் இயங்குகின்றன. அவர் தனிப்பட்ட மண்டல சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றுவார். சில முடிவுகளை எடுப்பதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது. சில குறிப்பிட்ட விஷயங்களில் சுயேச்சையாக முடிவெடுக்கவும் முடியும். மண்டல பர்ஃபேக்குச் சில தனிப்பட்ட அதிகாரிகளும் உதவிசெய்வார்கள்.

மண்டல பர்ஃபேக்கு இரண்டு ஆலோசனைக் குழுக்கள் உதவி செய்யும்: 1. மண்டல நிர்வாக கட்டங்களில் அதிகாரிகள், தலைவர்கள், மண்டலப் பொருளாளர், வெவ்வேறு அமைச்சரகத்தின் பிரதிநிதிகள் போன்றவர்கள் பங்கெடுப்பார்கள். 2. முதலில் ஏற்படுத்தப்பட்ட மண்டலப் பெருக்கச்செயல் குழுவுக்குப் பதிலாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான மண்டலக் குழு ஏற்படுத்தப்பட்டது. இந்தப் புதிய மண்டலக் குழுக்கள், இருபது முதல் ஐம்பது அங்கத்தினர்களை உடையதாக இருக்கும். இதில் நான்கில் ஒரு பகுதி உள்ளூர் நகரசபை அங்கத்தினர்கள். மற்றவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் பிரதம அமைச்சரால் நியமனம் செய்யப்படுகிறார்கள். மீதி

முதலாளிகளின் சங்கங்கள், வணிகச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் இவற்றால் நிரப்பப்படும். இது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அமைக்கப்படும். ஒரு மண்டலத்தின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கான அல்லது மறுசீரமைப்பிற்கான ஆலோசனை களை அது சொல்லும். இவ்வாறு 1964ஆம் ஆண்டு நிர்வாகச் சீர்த்திருத்தம், பொருளாதாரத் திட்டமிடுதலில் நாட்டின் ஈடுபாட்டைக் காட்டியது.

பிரஞ்சு நாட்டில் திட்டத்தை மண்டலமயமாக்குதல், இரண்டு விதமான பொருளாதாரக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டிருக் கிறது. அவை:

(1) நாடு முழுவதிலுமுள்ள தனியார் மண்டல தொழிற்செறி வுக்கு ஊக்கமூட்டுகின்ற நிதிஉதவி அளித்தல்.

(2) ஒவ்வொரு முன்வரைவு மண்டலத்திலும் முதலீட்டை ஒருங்கிணைத்தல்.

எதிர்காலத்திற்கான மறுசீரமைப்பு
(Prospective Remodelling)

எதிர்காலத்திற்கான மறுசீரமைப்பு என்பதே நீண்டகால முன்னேற்றக் கொள்கையாகும். அது பொருளாதாரக் கட்டமைப்புப் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளச் செய்கிறது. அது தொழில், வீடுகளின் அமைவிடத்தைப் பாதிப்பதன்மூலம் அவற்றின் முன்னேற்றத்தைப் பாதிக்கிறது. மக்கள் வாழும் விதத்தை அது உருவாக்குகிறது.

தொழில் மயமாதல், நகரமயமாதல், இவைகளுக்கிடையேயான தொடர்பு, பல்கலைக் கழக, அறிவியல் ஆராய்ச்சியின் மண்டலப் பொருளாதார வளர்ச்சி இவைகளுக்கிடையேயான தொடர்பு இவைகளால் மறுசீரமைப்பு நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்கால வாய்ப்பு என்பது நீண்டகால நோக்கங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை வரையறுத்தலும், அவற்றை அடையக் கூடிய முறைகளை நிர்ணயித்தலுமாகும். அதற்குத் தகுந்த நிலையங்கள் வேண்டும். நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான முன்வரைவு மண்டலங் களில் வரையறை தேவை. நீண்டகாலக் கொள்கையைப் பற்றிய விவரங்கள் வேண்டும்.

பிரெஞ்சு நாட்டில் நீண்டகால மண்டலக்கொள்கை பாரிசுக்கும் மிகப்பெரிய பிரஞ்சு நகரங்களுக்கும் இடையேயுள்ள பெரும்

வித்தியாசத்தைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படுகிறது. மேலும், இது இந்த நகரங்களுக்கும் மற்ற நாட்டிலுள்ள மிகப் பெரிய நகரங்களுக்கும் உள்ள வேறுபாடும் இக்கொள்கையை உருவாக்குகிறது. இதன் முதல் நோக்கம் என்னவென்றால், மேல்மட்ட அளவில் மண்டல நகரப் படிநிலை அமைப்பை ஏற்படுத்தி நிலைப்பெறச் செய்வதுதான். இத்தகைய படிநிலை அமைப்பு நகரங்களின் அலுவல்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன.

'பாரிஸ் மண்டலத்தின் துரித வளர்ச்சி, மண்டல மாநில மைய இடங்களை ஏற்படுத்தவேண்டிய கட்டாயத்தை உண்டாக்கியிருக்கிறது. பாரிஸில் வடக்கு கிழக்குப்பகுதிகள் தொழில்மயமானதாக உள்ளன. பாரிஸ்நகரத்தின் முன்னேற்றத்தின் காரணமாகவே ஐரோப்பிய அங்காடியில் பிரஞ்சு நாடு போட்டியிட முடிகிறது. இதன் காரணமாகப் பாரிஸின் முன்னேற்றத்தைத் தடைசெய்யக் கூடாது ஆனாலும் சமநிலையை ஏற்படுத்தும் மண்டலத் துருவங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.' [1](J. R. Boudeville, 'The rapid growth of the Paris region makes it imperative to promote prompt action infavour of regional metropolitan certres. Ofcourse, Paris (with the indusrrialized north, and east) is the key to French Competition in the European market, and must not be discouraged; yet the regional poles of equilibrium must be favoured.')

இந்த நகரப்பொருளாதார முன்னேற்றத்துறையை நிர்ணயிக்கும் காரணி அரசாங்கத்தின் தலையீடாகும். நிர்வாகப் பணிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் அமைவிடத்தை நிர்ணயிப்பது அரசாங்கமேயாகும். நிதி உதவி அளிப்பதன்மூலம் வீடுகள், தொழிற்சாலைகள் இவைகளின் அமைவிடத்தையும் அரசாங்கமே நிர்ணயிக்கமுடியும். இதனை உணர்ந்து பிரஞ்சுப் பாராளுமன்றம் ஐந்து பொருளாதார திட்டத்தின் நோக்கங்களை அமைத்திருக்கிறது.

1. J. R. Boudeville, Problems of Regional Economic Planning, Edinburgh, At the University Press, 1966.

மூன்றும் பகுதி

5. இந்தியாவில் மண்டல முன்னேற்றத்திற்கான கொள்கைகள்

(Policies For Regional Development In India)

ஒவ்வொரு மண்டலத்திலும் அந்த மண்டலத்திற்கேற்ற சூழ் நிலைகளில் சிறப்பாக முன்னேறக்கூடிய தொழில்கள் இருக்கும். அவற்றைத் தனிப்படுத்தி அவற்றிற்கு வசதியும் ஊக்கமும் அளித்து அவை முன்னேறுவதற்குத் திட்டங்கள் வகுப்பதற்கு ஒவ்வொரு மண்டலமும் முயற்சிசெய்யவேண்டும்.

இப்படிப்பட்ட நோக்கங்களை அணுகும்முறையில் இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பலவகையான கொள்கைகள் செயல் முன்வரைவு போன்றவைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை சில கீழே தரப்பட்டுள்ளன.

(1) குறைவான காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதியிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய விவசாயம், கிராம சமுதாயத் திட்டங்கள், நீர்ப்பாசனம், குறிப்பாக சிறிய நீர்ப்பாசனவசதிகள், உள்ளூர் முன்னேற்றத் திட்டங்கள் போன்ற துறைகளின் செயல் முன்வரைவுகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்;

(2) தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கியிருக்கும் இடங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. இப்படிப்பட்ட இடங்களில் மின்சக்தி, நீர்வழி, போக்குவரவு, பயிற்சி நிலையங்கள், செய்தித் தொடர்பு போன்றவற்றில் வசதி செய்து தருதல்;

(3) கிராமச் சிறு தொழில்கள் போன்றவற்றின் அபிவிருத்திக் கான செயல் முன்வரைவுகள்;

(4) புதிய தொழில் முயற்சிகளின் அமைவிடத்தை ஏற்படுத்தும் போது பொதுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமநிலேயான முன்னேற்றத்தின் அவசியத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக, ஒரு தொழிலின் அமைவிடம் எங்கெல்லாம் கச்சாப்பொருள் கிடைப் பதைப் பொறுத்து அமைக்கப்படாமல், மற்றக்காரணங்களால் நிர்ணயிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த அம்சத்தைக் கவனத் தில் கொள்ளவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளோடுகூடிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் உழைப்பின் இடப்பெயர்ச்சியை அதிகரிப்பதற்கான முயற்சிக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிசெய்யப் பட்டுள்ளது. அதோடு மக்கள் அடர்த்தி உள்ள இடங்களிலிருந்து குறைவான மக்கள் அடர்த்தி உள்ள இடங்களுக்கு மக்களேக் குடியேறச் செல்வதற்கும் வாழுமிடத்தை அமைத்துக் கொடுப் பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன. மேலும், மண்டல ஏற்றத் தாழ்வுகளேப் பற்றிய பிரச்சினைகளேத் தொடர்ந்து ஆராயவேண்டும் என்றும், மண்டல முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டும் தகுந்த காரணிகளே வெளிப்படுத்தவேண்டும் என்பதையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும்போதும் அமுல் செய்யும்போதும் மண்டல முன்னேற்றத்தின் அம்சங்கள் மூன்று வழிகளில் ஆராயப்பட்டன. முதலாவதாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழுகின்ற மக்களின் நலத்தைக் காட்டுகின்ற செயல் முன்வரைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாநிலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது. இரண்டாவதாக, அடிப்படையான பற்ருக்குறைவிஞல் முன்னேற்றம் பின்னடைந்து இருக்கின்ற அல்லது தற்காலிகமாக முன்னேற்றம் குறைந்திருக் கின்ற இடங்களில், சிறப்பான சில செயல் முன்வரைவுகள் மேற் கொள்ளப்பட்டன. மூன்ருவதாக, தன்ஞேடு தொடர்புகொண்ட பலதுறைகளும் முன்னேறுவதற்கான சூழ்நிலேயை உருவாக்கு கின்ற பரவலான தொழில்முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

விவசாயம், சமுதாயமுன்னேற்றம், கிராமச் சிறுதொழில்கள், மின்சக்தி, சமுதாயப்பணிகள், செய்தித்தொடர்பு ஆகியவற்றின் செயல் முன்வரைவுகள் எல்லாமண்டலங்களில் வாழும் மக்களுக்கு அடிப்படையான வசதிகளேயும் பணிகளேயும் அளிக்கவேண்டும் என்ற முக்கிய நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மேலும்,

அவை பரந்த விளைவுகளை உடையதாக இருக்கின்றன. இப்படிப்பட்ட செயல் முன்வரைவுகள் மாநிலத்திட்டங்களில் அமைக்கப்பட்டிருப்பதனுல் மாநிலத்திட்டங்களை உருவாக்குவதன் மூலமாகவும் திட்டகாலத்தில் அவற்றில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலமாகவும் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முன்னேற்றத்தின் நன்மையை அடையுமாறு செய்யப்படுகிறது.

பல்வேறு மாநிலத்திட்டங்களின் முக்கியப் பகுதியாக இருந்தவை ஆற்றுப்பள்ளதாக்குத் திட்டங்களாகும் (River Valley Projects). ஹீராகுட், கோசி, சம்பல், பக்ராநங்கல், நாகார்ஜுன சாகர் போன்ற பல நோக்கங்களை உடைய திட்டங்களுக்கு (Multi-purpose Projects) பெரும் முதலிடுகள் செய்யப்பட்டன. இவைகளும் மற்றத் திட்டங்களும் அருமைப்பாடு, வேலையின்மை அல்லது மற்றவற்றின் காரணமாகக் குறைந்த அளவிலேயே முன்னேறிய நாட்டின் பெரிய மண்டலங்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும் விவசாய உற்பத்தி, சமுதாயமுன்னேற்றம் இவைகளைப்பற்றிய செயல் முன்வரைவுகளை அமுல்படுத்துதல் கல்வி சுகாதாரம்பற்றிய திட்டங்களை அமுல்படுத்துதல் ஆகியவை முன்னேற்றத்தின் நன்மைகளைத் தூரத்தில் இருக்கும் இடங்களும் பெறுவதற்கு உதவியாக இருந்தன.

முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கூறிய முன்னேற்றத்தின் பொதுவான முன்வரைவுகளோடு கடினமான பிரச்சினைகளைச் சமாளிக்கும் நிலையில் இருக்கும் குறிப்பிட்ட இடங்களுக்கான தனியான திட்டங்களும் வகுக்கப்பட்டன. இவ்வாறு 1953, 54-ல் பல்வேறு மாநிலங்களில், பற்றுக்குறை இடங்களில் ரூபாய் நாற்பது கோடி செலவில் நிரந்தர முன்னேற்றத்திற்கான செயல் முன்வரைவுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் செயல் முன்வரைவு மத்திய சிறுநீர்ப்பாசனத் திட்டங்கள், வெள்ளத் தடுப்பிற்கான கரைகள் அமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. மீண்டும் 1957-ல் சில மாநிலங்களில் பற்றுக்குறை நிலை ஏற்பட்டபோது இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டுக் கூடுதலான முன்னேற்றத்திற்குச் செயல் முன்வரைவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு மாநிலங்களில் குறைவான முன்னேற்றமடைந்த இடங்களுக்காக உதாரணமாக விதர்பா, மராத்வாடா, உத்திரப் பிரதேசத்தில் உள்ள கிழக்கு மாவட்டங்கள், மற்றும் பின்தங்கிய இடங்கள், பஞ்சாப், உத்திரப்பிரதேசம் இவைகளிலுள்ள மலைப் பிரதேசங்கள் போன்றவற்றிற்கு அந்தந்த மாநிலங்கள் அவ்வப்போது தங்கள் திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்தன. மேலும், அந்த

இடங்களுக்கான திட்டங்களை உருவாக்கும்போது அந்த இடங்களின் பிரதிநிதிகள் பங்கு பெறவும் ஏற்பாடுகளைச் செய்தன. மத்தியப் பிரதேசம், ஒரிசா, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் பின்தங்கிய வகுப்பினர் வசிக்கும் இடங்களுக்குக் கூடுதலான செயல் முன்வரைவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை சாலைகள், செய்தித் தொடர்புகள், பலநோக்கு முன்னேற்றவேலைகள், காட்டுக்கூட்டுறவுச் சங்கங்கள், வழக்கத்தில் இருக்கும் சாகுபடிமாற்றும் அமைப்புகளை (Systems of shifting cultivation) அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளைக் கொண்டதாக இருந்தது. மேலும், பல்வேறு மாநிலங்களில் உள்ள, எளிதில் அடைய முடியாத (Inaccessible) இடங்களைப்பற்றிய ஆராய்ச்சியானது உணவு விவசாய அமைச்சரகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொழில் நடவடிக்கையைப் பரவலாக அமைக்கும்போது பெரிய தொழில்களைப் பொறுத்தவரையில் பொருளாதார, தொழில் நுட்பக் கருத்துகள் எப்போதும் முக்கியமானவை. நடைமுறையில் அவற்றை ஓரளவிற்குத்தான் விட்டுக்கொடுக்க முடியும். பெரிய திட்டங்களுக்கான அமைவிடத்தைக் குறிப்பிட்ட இடத்தில் ஏற்படுத்தும்போது, நேரிடுகின்ற இன்னல்கள் எப்போதும் முக்கியமாகவும் மாற்ற முடியாததுமாக இருப்பதில்லை. சிலசமயம் அவை அடிப்படையான வசதிகளும் பணிகளும் இல்லாமல் இருப்பதையே குறிக்கும்.

பொதுத்துறையில் மேற்கொள்ளுகின்ற திட்டங்களின் அமைவிடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, பின்தங்கிய இடங்களும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. முக்கியமான தொழில்நுட்ப பொருளாதார அடிப்படைகளை விட்டுவிடாமல் எங்கெல்லாம் ஏற்படுத்த முடியுமோ அங்கெல்லாம் இத்திட்டங்கள் அமைக்கப் படுகின்றன. முக்கியமான பல திட்டங்கள் உதாரணமாக, எஃகுத் தொழிற்சாலைகள் சிறந்த பொருளாதார ஆய்விற்குப் பின்னரே நிர்ணயிக்கப்பட்டன. ஆனால், அவை இதுவரையில் தொழில் துறையில் பின்தங்கிய இடங்களிலேயே அமைக்கப்பட்டு இருப்பதனால் அவை நன்மைபெறும். இதைப்போலவே சில இயற்கைச் சாதனங்களை பயன்படுத்துவதற்கான திட்டங்கள் உதாரணமாக, தென்ஆர்க்காட்டில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள், ஒரிசாவில் இரும்புத்தாது, சேலத்தில் பாக்ஸைட் படிவங்கள், ராஜஸ்தானில் துத்தநாக, ஈயப்படிவங்கள்; போன்றவை குறைவான முன்னேற்றமடைந்த இடங்களுக்கு நன்மை பயக்கும்.

அடிப்படையான மூலதனப் பொருள்கள், உற்பத்தியாளர் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களுக்கான

மனையிடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கச்சாப் பொருள்களுக்கு அருகிருத்தல், மற்றப் பொருளாதாரக் கருத்துகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், நுகர்வுப் பொருள்கள் பதப்படுத்தும் (processing) தொழில்கள் இவற்றை அமைக்கும் முறையில், மண்டல முறையில், முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். இவை பருத்தி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சைக்கிள்கள் போன்றவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்கள், தையல் இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள், வானொலிப்பெட்டிகள் செய்தல் போன்றவையாகும்.

மேற்கூறியவற்றிற்கு உதாரணங்களாக பஞ்சாப், ராஜஸ்தான், ஒரிசா, அஸ்ஸாம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பருத்தி ஆலைகள்: ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் உள்ள சர்க்கரை தயாரிக்கும் ஆலைகள்; சர்க்கரை சுத்திகரிக்கும் ஆலைகள்; கேரளாவிலுள்ள வண்டிச் சக்கரம், ரப்பர்க் குழாய், மின்சார விளக்குகள் முதலியன செய்யும் தொழிற்சாலைகள் போன்றவற்றைச் சொல்லலாம். இலேசான பொறியியல் தொழில்களைப் பொறுத்தவரையில், எல்லாப் புகை வண்டிகளுக்கான எஃகை ஒரே விலையில் விற்பது என்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு, அவற்றைப் பரவலாக்கும் முயற்சியில் முக்கியமானதொன்றாகும். சர்க்கரைத் தொழிலில் புதிய ஆலைகளுக்கு அனுமதி வழங்குதலைப் பற்றிப் பின்பற்றப்பட்ட கொள்கை அந்தந்த இடங்களின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்தது. இதைப் போலவே, பருத்தி ஆலைகள் முன்னேற்றமடையாத இடங்களில் ஏற்படுத்தப்படுவதற்கு ஊக்கம் தரப்பட்டது.

புதிய பதப்படுத்தும் முறைகள், கச்சாப் பொருள்களைப் புதிய முறையில் பயன்படுத்துதல் போன்றவை ஓரளவிற்குத் தொழில் விரிவடைவதற்கு உதவியிருக்கின்றன. இவ்வாறு சர்க்கரை உற்பத்திக் கழிவுப்பொருள்களை, காகிதக் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து, கரும்பு உற்பத்திச் செய்யும் இடங்களுக்கு அருகில் சர்க்கரை உற்பத்திக் கழிவுப்பொருள்களை பயன்படுத்திக் காகிதம் செய்யும் ஆலைகள் அமைக்கப்பட்டன.

முக்கியமாக, பெட்ரோலோடு கலப்பதற்கென்றே பயன்படுத்தப் பட்ட சாராயம், செயற்கை ரப்பர் செய்வதற்கென்று உத்திரப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆலையில் பயன்படுத்தப்பட்டது. உலோக, நிலக்கரியிலிருந்து செய்யப்பட்ட சுட்ட நிலக்கரியோடு, தேவைப்பட்டால் உள்ளூரில் கிடைக்கும் உலோகமற்ற நிலக்கரியைப் பயன்படுத்தும் இடங்களில் 100,000 டன் கொள்ளளவுள்ள தேனிரும்பு

தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டது. தேனிரும்பு உற்பத்தியை அதிகப்படுத்துவதோடு, இத் தொழிலைப் பரவலாக்குவதற்கும் வழி செய்தது. இப்படிப்பட்ட முன்னேற்றங்களை ஊக்குவிக்கும்போது, மண்டலப் பங்கீடும், சிக்கன நோக்கமும், ஒருங்கே கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும்.

கிராமச் சிறு தொழில்கள் நாடெங்கிலும் பரந்து இருக்கின்றன. மத்திய, மாநில அரசாங்கங்கள் பல்வேறு உதவிகளை இந்த இடங்களுக்குச் செய்து வருகின்றன. எல்லா மாநிலங்களிலும் தொழிற் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு, சிறிய நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் அவை அதிகமாக ஏற்படுத்தப்படுகின்றன.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்டல முன்னேற்றம்

கடந்த காலத்தைவிடப் பேரளவிலும், பரந்த முறையிலும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகள் முன்னேற்றமடைவதற்கு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் மிகுந்த அளவில் வாய்ப்புகளை அளித்தது. அந்தத் திட்டத்தில் மிக முக்கியமான சில செயல் முன் வரைவுகள், சில மாநில அரசாங்கங்களின் திட்டங்களில் அடங்கியவையாக இருந்தன. இந்தத் திட்டங்களை வரையும்போது முக்கிய நோக்கங்களாக இருந்தவை, விவசாய உற்பத்திக்கு முக்கியப் பங்கை அளிக்க வசதியாக, மாநிலங்களுக்கு உதவி செய்வது; தேவையான அளவு வேலை, வருமானம் இவற்றில் கூடுதலைப் பெறச் செய்வது; குறிப்பாகக் கிராமப் பகுதியில் தொடக்கக் கல்வி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதிகள் ஆகியவற்றைச் செய்வது; குறைந்த வளர்ச்சியுடைய இடங்களில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது ஆகியவையாகும்.

இவ்வாறு அதிக உற்பத்தி, வேலை, ஏழை மக்களின் நலம் இவற்றை அதிகரிப்பதற்காக, மாநிலங்களில் அரசாங்கத்தின் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. பல்வேறு மாநிலங்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும், கடந்தகால வளர்ச்சியையும், பின்தங்கிய நிலையையும், முக்கியமாகச் சமூகப் பணிகளில் செய்தித் தொடர்பு, மின்சக்தி, தேசியக் குறியீடுகளை அடைவதற்கு அளிக்கக் கூடிய பங்கு, வளர்ச்சிக்கான மறை சாதனங்கள், அவைகளுடைய திட்டங்களுக்கான நிதியை அவர்களே தங்கள் சாதனங்களை வைத்துக்கொண்டு திரட்டுகின்ற சக்தி, இவைகளைக் கருத்திற் கொண்டு அந்த மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்ய முயற்சி எடுக்கப்படுகிறது.

மாநிலங்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும் மதிப்பீடு செய்வதற்கு மக்கள் தொகை, சாகுபடியில் ஈடுபடுத்தப்பட்ட நிலம், இரண்டாவது திட்டகாலத்தில் முடிக்காமல் இருக்கின்ற திட்டங்கள், தொழில்நுட்ப நிர்வாகப் பணிகள் கிடைக்கின்ற தன்மை ஆகியவை கருத்திற் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு முடிந்தவரையில் தேசிய, மாநில முந்துரிமைகளைக் (Priorities) கருத்திற் கொள்வதற்கு முயற்சி செய்யப்பட்டன. பொதுவாகச் சொல்லப்போனால், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில அரசாங்கங்களின் ஒதுக்கீட்டின் முன்வரைவுகளும், அளவுகளும் பல மாநிலங்களுக்கிடையே உள்ள முன்னேற்ற ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்குமாறு கணக்கிடப் பட்டுள்ளன. இது நடைபெறுவதற்கு நீண்ட காலமானாலும் இவ்வாறு செய்யப்படுகிறது.

மாநில அரசாங்கங்களின் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடுகூட, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் இதுவரை பின்தங்கிய நிலையில் இருந்த இடங்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் பல அம்சங்களைக் கொண்டிருக் கிறது. உதாரணமாக, தீவிர விவசாய முன்னேற்றம், நீர்ப் பாசனத்தை விரிவுபடுத்துதல், கிராமச் சிறு தொழில்களை விரிவு படுத்துதல், மின்சக்தியை அதிகரித்தல், ஆலைகளையும், சாலைப் போக்குவரத்தையும் முன்னேற்றமடையச் செய்தல், 6-லிருந்து 11-வது வகுப்புவரை கல்வியளிப்பிற்கான ஏற்பாடு; நடுத்தரத் தொழில் நுட்ப, தொழில்முறைக் கல்வி; வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், தண்ணீர் வசதி இவற்றை அதிகரித்தல், பட்டியல் (scheduled) வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் (backward classes) ஆகியவர்களின் முன்னேற்றத்திற்கான செயல் முன்வரைவு போன்றவை ஒரு நாட்டின் துரிதப் பொருளாதார முன்னேற்றத் திற்குப் பெரிதும் துணைபுரியும்.

மக்கள் தொகை எங்கு அதிகமாக இருக்கிறதோ, எங்கு இயற்கைச் சாதனங்கள் குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டிருக் கின்றனவோ, அங்கெல்லாம் வறுமையும், வேலைக்குறைவும் மிகத் தீவிரமாக இருக்கும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கையாளப்பட்ட கிராமப்புற வேலைகள், கிராமங்களில் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தும். நாட்டின் சில பகுதிகளில் டீ, காபி, ரப்பர் போன்ற தோட்டத் தொழில்கள் (Plantation Industries) கணிசமான முன்னேற்றத்தை உடையனவாய் இருக்கின்றன. பெரிய தொழில் திட்டங்கள், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் ஆகியவை எதிர்கால வளர்ச்சிக்கு முக்கிய மைய இடங்களாக இருக்கும்.

தொழிலின் அமைவிடமும், முன்னேற்ற இடங்களும்

முன்பு கூறியபடி, அடிப்படைத் தொழில்களின் அமைவிடத்தைத் தொழில்நுட்பப் பொருளாதாரக் கருத்துகளின் அடிப்படையில் ஏற்படுத்த வேண்டும். மேலும், உற்பத்தியின் பெரும்பகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில்களை விரிவுபடுத்தும்போது, அதன் அமைவிடம் சிக்கனங்களைத் தரக்கூடியதாகவும், அயல்நாட்டுச் சந்தைகளில் போட்டியிடக்கூடிய சக்தியை அதிகரிப்பதுமாக இருக்கவேண்டும். இதைத் தவிர, மற்றச் சூழ்நிலைகளில் பொதுத்துறை, தனியார் துறைகளில் ஏற்படுத்தப்படும் தொழில் திட்டங்களின் மனையிடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, தொழில் முன்னேற்றத்திற்காக அவசியமான மறை சாதனங்கள் பெற்றிருக்கும் இடங்களின் தேவையைக் கருத்திற்கொள்ள வேண்டும். பொதுவான நோக்கம் என்னவென்றால், முன்பே குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ள இடங்களிலேயே மேலும் மேலும் தொழில் நடவடிக்கைக் குவிப்பைத் தவிர்த்தலேயாகும். ஆனால், அதே சமயம் அந்த இடத்தில் இருக்கும் தொழில்களை விரிவுபடுத்துவது, உற்பத்தியில் சிக்கனங்கள் அதிகம் ஏற்படுமானால் அங்கே அத்தகைய குவிப்பைத் தவிர்க்கமுடியாது. அதைப்போலவே கூடியவரையில் பெரியதும், நெருக்கமுமான நகரங்களுக்கு வெகு தூரத்திலேயே புதிய தொழில்கள் அமைக்கப்படவேண்டும்.

பொதுத்துறையில் ஏற்படுத்தப்படும் திட்டங்களின் அமைவிடத்தைப்பற்றிய முடிவு மேற்கூறியவாறு இருக்கவேண்டும் என்று நிர்ணயித்த பின்னர்த் தொழில்கள் பரவலாக ஏற்படுத்தப்படும் என்பதும், பல்வேறு மண்டலங்கள் தொழில் முன்னேற்றத்தில் முக்கியமான பங்கு ஏற்கமுடியும் என்பதும் தெரியவருகிறது. அதற்கு உதாரணங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். ஒரிசாவில் ரூர்கேலா எஃகு ஆலை, உரத்தொழிற்சாலை ஆகியவற்றின் பெருக்கம்; அஸ்ஸாமில் எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை, உரத் தொழிற்சாலை, இயற்கை வாயுவின் பயனும், பங்கீடும்; கேரளாவில் உரத்தொழிற்சாலை, கப்பல் கட்டும் தளம் அமைத்தல்; ஆந்திராவில் கலப்பு மருந்துத் தொழிற்சாலைகள், ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தை விரிவுபடுத்துதல், ஆந்திரா-காகித ஆலைகள்; மத்தியப் பிரதேசத்தில் பத்திரிகை காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை, நேபா ஆலைகளை விரிவுபடுத்துதல், பிலாய் எஃகு ஆலை, கனரக மின்சாரத் திட்டம்; உத்திரப்பிரதேசத்தில் கிருமி நாசினிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, நுண்கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துதல்; ராஜஸ்தானில்

செப்புப் படிவங்களை அபிவிருத்தி செய்தல்; பஞ்சாபில் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை; தமிழ்நாட்டில் ரணசிகிச்சைக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை, கச்சா பிலிம் தொழிற்சாலை, இரும்பு எஃகுத் தொழிற்சாலை, பழுப்பு நிலக்கரி ஆலை, டெலிபிரின்டர் தொழிற்சாலை, எஃகு சுற்றும் ஆலை; குஜராத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை; ஜம்மு-காஷ்மீரில் சிமென்டுத் தொழிற்சாலை.

பொதுத்துறையில் மட்டுமன்றி, தனியார் துறையிலும் தொழிற் சாலைத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும்போது முன்னேற்றம் குறைந்த மண்டலங்களின் தேவை கவனத்தில் கொள்ளப்படுகிறது. தொழிற்சாலை தொடங்க இருக்கும் அதிபர்களுக்கு, அப்படிப்பட்ட இடங்களில் தொடங்கும்படியும் ஆலோசனை சொல்லப்படுகிறது. புதிய தொழிற்சாலைகள் மண்டல அடிப்படையில் தனியார் துறையில் எங்கு அமைக்கப்படலாம் என்று அறிய அநேக தொழிற்சாலை களின் முன்னேற்றம், செயல் முன்வரைவுகள், உற்பத்தி இலக்கு (Target) ஆகியவை அவ்வப்போது ஆராயப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. உதாரணமாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கெல்லாம் பருத்தி ஆலைகளின் கொள்ளளவு குறைவாக இருந்ததோ அங்கெல்லாம் புதிய ஆலைகள் அமைக்கப்படுவதற்கு இடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைவான முன்னேற்ற மடைந்த மண்டலத்தில் தனியார் துறையில் ஏற்படுத்தப் போகின்ற முக்கியமான திட்டங்களின் உதாரணங்களாக உத்தரப்பிர தேசத்தில் அலுமினியம் செய்யும் தொழிற்சாலை; ராஜஸ்தானில் உரத் தொழிற்சாலை, நைலான் தொழிற்சாலை, காஸ்டிக் சோடா தொழிற்சாலை; அஸ்ஸாமில் செயற்கை ரப்பர், பாலிதீன், கார்பன், காகிதக்கூழ் செய்யும் தொழிற்சாலைகள்; கேரளாவில் வாகனங் களின் ரப்பர் சக்கரம் (Tyre) செய்யும் தொழிற்சாலை, இயங்கிவரும் ஆலைகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றைக் கூறலாம்.

சில இடங்கள் தொழில் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அங்கெல்லாம் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில் தகுந்த தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய மின்சக்தி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றை அளிக்க வேண்டும் என்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் கொள்கைத் தீர்மானம் உருவாக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு வழி செய்யும் வகையில் பின்தங்கிய மண்டலங்களில் தொழில்

முன்னேற்ற இடங்கள் (Industrial Development areas) அமைப்பதற்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தேசிக்கப் பட்டது.

இப்படிப்பட்ட மண்டலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான மின்சக்தி, தண்ணீர், செய்தித் தொடர்பு, ஆகியவை அளிக்கப்பட்டுத் தொழிற்சாலை கட்டும் மனை இடங்கள் தயார் செய்யப்பட்டு விலைக்கோ அல்லது நீண்டகாலக் குத்தகைக்கோ, எதிர்காலத் தொழில் முயல்வோர்க்குக் கொடுக்கப் பட்டன. முதலில் இந்தத் திட்டம் நடுத்தரத் தொழில்களின் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனல், இத்தோடு சிறு தொழில்களை, உதாரணமாகத் துணைத் தொழில்களை, அமைப்பதற்கு நிறைய இடம் இருந்தது என்று நம்பப்பட்டது. உத்தேசிக்கப் பட்டுள்ள தொழில் முன்னேற்ற இடங்களிலோ அல்லது அதற்கு அருகிலோ தொழிற்பேட்டைகள் (Industrial Estates) அமைக்கப் பட்டன.

மண்டல முன்னேற்றத்தின் கருவான பெரிய திட்டங்கள்

ஒன்றுக்கொன்று தொடர்புடைய அல்லது ஒன்றுக்கொன்று உதவி செய்கின்ற திட்டங்களை மேற்கொள்ளும்போது பெரிய திட்டங்களினுல் ஏற்படும் நன்மைகளை, அந்தத் திட்டங்கள் எந்த மண்டலங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அங்கு வாழும் மக்களே, அதிக அளவில் பெறுவார்கள். ஒரு மண்டலத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்குக் கருவாக ஒவ்வொரு பெரிய திட்டமும் கருதப்படவேண்டும். அதுவே திட்டமிடுதலின் முக்கிய அம்சமாகும். உதாரணமாக, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் சுற்றி விவசாயம், தோட்டக்கலை, அங்காடி மைய இடம், பக்குவப் படுத்தலோடு (Processing) மற்றுமுள்ள தொழில்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் போன்றவை மேற்கொள்ளப்படவேண்டும். இதைப் போலவே எஃகு ஆலைகள், மற்றும் பெரிய தொழிற்சாலைத் திட்டங்கள், சிறு நடுத்தரத் தொழில்களின் முன்னேற்றம், கல்விப் பயிற்சி, மற்ற நடவடிக்கைகள் போன்றவற்றின் செயல் முன் வரைவுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. இப்படிப்பட்ட முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் எல்லாப் பெரிய மண்டலங்களிலும் உள்ளன. அப்படிப்பட்ட மண்டலங்களில் உள்ள புதிய சாதனங்கள் மூன்ருவது திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும். உதாரணமாக தண்டகாரண்யம், ராஜஸ்தான் கால்வாய், துங்கபத்ரா, நாகார்ஜுன சாகர், சம்பல் மற்றும் பல திட்டங்கள் வளப்படுத்தும் மண்டலங்களைக் கூறலாம். இதைவிடச் சற்று வேறுபாடான பிரச்சினைகள்,

மாநகரங்கள், பெரியதும் வளர்ந்து வருகிறதுமாகிய நகரங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியினுல் ஏற்படுகின்றன.

டெல்லி, பம்பாய் போன்ற மாநகர் மண்டலங்களில் சரிசம மண்டல முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான பல்வேறு செயல் முன் வரைவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்தச் செயல் முன்வரைவுகள் பொருத்தமான நிலக்குடியிருப்பு வசதிக் கொள்கைகள், புதிய நகரங்களின் அமைப்பு, தொழில்களின் அமைவிடத்தைப் பற்றிய முடிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு பல்வேறு வகையான மண்டலங்களில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் மண்டல அல்லது பரப்பளவு முன்னேற்றத் திட்டங்கள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த முறையில் புதியதும், முக்கியமானதுமான நடவடிக்கைகளின் மைய இடங்கள் அல்லது செல்வத்தின் புதிய மூலத்தை உருவாக்குதல் ஆகியவற்றினுல் ஏற்படுகின்ற நன்மைகளை அதிகரிக்கச்செய்து பரந்த அளவில் அவை பங்கிடப்படும்படி செய்யலாம்.

தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தின் பங்கு

தொழில்நுட்பவியல், அறிவியல் ஆகியவற்றின் வளர்ச்சியினுல் ஏற்படுகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் பல்வேறு மண்டலங்களின் முன்னேற்றத்திற்கான மறைச் சாதனங்களைப் பற்றி ஆராயவேண்டும். உதாரணமாக, அஸ்ஸாம், குஜராத், ராஜஸ்தான் ஆகிய மண்டலங்கள் குறைவான நிலக்கரிப் படிவுகள் காரணமாக முன்னேற்றம் அடையாமல் இருக்கின்றன. ஆனுல், இந்தத் தடை நீர்மின் சக்தி, எண்ணெய்ச் சக்தி, அணுசக்தி போன்றவற்றைக் கிடைக்கும்படி செய்தால் நீங்கி விடும். நீண்ட காலத்தில் மண்டல முன்னேற்றத்திற்கு இந்தக் காரணி மிகவும் முக்கியமானது. இதைப் போலவே, போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றம் மண்டலங்களுக்கு இடையில் இருக்கும் தூரத்தைக் குறைத்து விடுகிறது. உதாரணமாக, அஸ்ஸாம், ஜம்மு-காஷ்மீர், ஒரிசாவில் சில பகுதிகள், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற இடங்களைக் கூறலாம். கூடுதலான மின்சக்தி, கிராமங்களுக்கும், மின்சக்தியை விரிவு செய்தல் ஆகியவை மண்டல முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு உதவக்கூடிய முக்கிய காரணிகளாகும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பல்வேறு வழிகளில் குறைவான

முன்னேற்றம் அடைந்திருக்கும் பல இடங்கள் கணிசமான முன்னேற்றத்தை அடைந்தன.

கல்வியும் கல்விப் பயிற்சியும்

முன்னேற்றம் குறைவான இடங்களின் பிற்பட்ட கல்வி நிலைமை, அந்த மண்டலங்கள் துரித பொருளாதார முன்னேற்றம் அடைவதற்குத் தடையாக உள்ளது. கட்டாய இலவச ஆரம்பக் கல்வி செயல் முன்வரைவுகள், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சிக்கு வசதிகள் அளித்தல் போன்றவற்றின் மூலமாகக் கல்வி அறிவைப் பெருக்குதல், இவற்றின் வாயிலாக குறைவான முன்னேற்றமடைந்த மண்டலங்களின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யலாம். மாநில அரசாங்கங்களின் திட்டங்களில் இவைகளுக்கு வேண்டிய நிதி வசதிகள் அடங்கியிருக்கின்றன. ஆனால், குறைந்த முன்னேற்ற மடைந்த இடங்களின் ஆரம்பக் கல்விக்காகவும், பெண்கள் கல்விக் காகவும் ஒதுக்கப்பட்ட சாதனங்கள் சிறந்த முறையில் பயன் படுத்தப்பட வேண்டும். முன்பே பொறியியல் அறிஞர்கள், மருத்துவ வல்லுநர்கள், விவசாயத் தொழில் வல்லுநர் போன்றவர்களின் பயிற்சிக்கான வசதிகள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில்நுட்ப, தொழில்முறை (Vocational), நடுத்தரக் கல்விக்கான செயல் முன் வரைவுகள் அமுல்படுத்தப்படும்போது, புதிய தொழில் திட்டங்கள் அமைக்கப்படும் குறைவான முன்னேற்றமடைந்த இடங்களில் வாழும் மக்களின் தேவைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

உழைப்பின் இடப்பெயர்ச்சி

நாட்டின் சில பகுதிகளில் உழைப்பின் இடப்பெயர்ச்சி கணிச மாக இருந்துவருகிறது. உதாரணமாக, பீஹாரின் உழைப்பாளிகள், அஸ்ஸாமில் உள்ள டீத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். ராஜஸ்தான் உழைப்பாளிகள், பஞ்சாப் மற்றும் பல இடங்களில் போடப்படும் சாலைகளுக்காகவும், நீர்ப்பாசனத் திட்டங்களிலும் வேலை செய்கின்றனர். மத்திய, மாநில அரசாங்கங்களில் நிறுவப் பட்ட தொழிற்சாலையில் விளைவுப்பெருக்கம் நாடிய புறவாய்ப்பு நலச்சீர்த்திருத்த வள அமைப்பு (Redeployment Machinery) பல்வேறு இடங்களில் இருக்கும் திறமைபெற்ற உழைப்பாளிகள் புதிய திட்டங்களில் பங்குபெறச் செய்வதற்கு உதவுகிறது. குடியேற்றம், உழைப்பின் இடப்பெயர்ச்சி ஆகியவற்றைச் சுலப மாகச் செய்வதற்கு முடியாது. தற்போது மக்கள்தொகை அடர்ந்த பகுதிகளில் இருந்து மக்கள்தொகை குறைந்த பகுதிகளுக்குப் பயிற்சி

பெருத உழைப்பாளிகளை அதிக எண்ணிக்கையில் குடியேறச் செய்வது குறைந்த அளவிலேயே முடியும். எங்கெல்லாம் முன்னேற்றம் துரிதமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறதோ அங்கு ஓரளவு பயிற்சி பெற்ற உழைப்பாளிகள் வந்து அடைகிருர்கள். அவர்களுக்கு எளிதில் வேலை கிடைத்துவிடுகிறது. ஆகவே, மக்கள் தொகை அடர்த்தி அதிதமாக உள்ள இடங்களில் கூடியவரை தீவிர முன்னேற்றத்தை ஏற்படுத்துவதோடு தொழில் நுட்பப் பயிற்சித் திட்டங்களும் பெருமளவில் மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு செய்தால் மற்ற இடங்களுக்கு வேலை செய்யப் பயிற்சி பெற்ற உழைப்பாளிகள் கிடைப்பார்கள்.

முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய அலுவலகப் பணியாளர் (Personnel)

திறமையான நிர்வாகத்தினர், தொழில்நுட்ப அலுவலகப் பணியாளர் ஆகியோர் கிடைப்பதைப் பொறுத்தும் முன்னேற்றத்தின் அளவு அமையும். இன்றும் புதிய துறைகளில் ஈடுபட்டு இடர்களைத் தாங்குவதற்குத் தயாராக உள்ள சிறிய நடுத்தரத் தொழில் துணிவோரின் எண்ணிக்கையின் வளர்ச்சியைப் பொறுத்தும் உள்ளூரிலிருக்கும் முனைப்பும் (Initiative) தலைமை தாங்கும் திறமையும் உடையோரின் வளர்ச்சியைப் பொறுத்தும் முன்னேற்றத்தின் அளவு அமையும். முன்னேற்றத்தின் இப்படிப்பட்ட அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஏனென்ருல், வளர்ச்சி குறைவான மண்டலங்களுக்குச் சாதனங்களை அளிப்பதனுல் மட்டுமே எல்லாத் தடைகளையும் நீக்கமுடியாது என்பதை அவை காட்டுகின்றன.

மண்டல முன்னேற்றத்தைப்பற்றிய ஆய்வுகள்

நாட்டின் பல்வேறு மண்டலங்களின் பொருளாதாரப் போக்குகளின் (Trends) வளர்ச்சி வீதம், இவைகளைப்பற்றிய ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்வது, சரிசம மண்டல முன்னேற்றத்தை அதிகப்படுத்துவதற்கான செயல் முன்வரைவுகளை உருவாக்குவதற்குப் பயனுள்ளதாக இருக்கும். தனிப்பட்ட கவனத்தைப் பெறத் தக்கதாகவுள்ள குறைந்த முன்னேற்றமடைந்த இடங்களைக் கண்டுபிடித்து அவற்றின் சாதனங்களைப்பற்றிய மேலீடான ஆராய்ச்சியையும், அதன் முன்னேற்றத்தை நிர்ணயிக்கின்ற காரணிகளை ஆராயவும் செய்யவேண்டும். மண்டலம் என்ற கருத்தினைத் தெளிவாக வரையறை செய்யவேண்டும். மாநிலங்களுக்குள்ளோ அல்லது அப்பாற்பட்டோ மண்டலங்கள் இருக்கின்றன. அவை

கொண்டுள்ள நோக்கத்தைச் சார்ந்து பல்வேறு கருத்துகளின் அடிப்படையில் அவற்றைப் பிரிக்கலாம். ஒவ்வொரு மாநிலத்திலும், மற்றவற்றைவிடக் குறைவான முன்னேற்றமடைந்த இடங்கள் இருக்கின்றன.

முன்பே விளக்கியபடி மண்டல முன்னேற்றத்தின் பிரச்சினைகள் பலவகையானதாகும். அவை உதாரணமாக, பெரிய திட்டங்களைச் சுற்றியுள்ள இடங்களிலும் புதிய சாதனைகள் அபிவிருத்தி செய்கின்ற இடங்களிலும் மாநகர் மண்டலங்களிலும் இந்தப் பிரச்சினைகள் ஏற்படலாம். பல்வேறு மண்டலங்களின் முன்னேற்றத்தின் அளவை மதிப்பீடு செய்யும்போது, முன்னேற்றத்தைக் காட்டுகின்ற விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி முதலீடு, வேலையின்மை, மின்சக்தி நுகர்வு, பாசன வசதியுள்ள பரப்பளவு, பொருள்களை உற்பத்தி செய்யும் பகுதிகளின் உற்பத்தியின் மதிப்பு, நுகர்வுச் செலவின் மட்டம், சாலைகளின் நீளம், ஆரம்ப, நடுத்தரக்கல்வி, வேலை அடிப்படையிலான மக்கள் தொகை பங்கீடு ஆகியவை பயனுள்ளவையாக இருக்கின்றன. ஆனால், அவை துல்லியமான புள்ளியியல் அடிப்படையில் தொடங்கப்பட்டுப் பல்வேறு மாநிலங்கள் அல்லது மண்டலங்கள் ஆகியவற்றிற்கிடையில் ஒத்திட்டுப் பார்க்கக்கூடியதாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட பிரச்சினைகளில் சிலவற்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமாளிப்ப தற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து இதைப் போலச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டு மையப்புள்ளியியல் அமைப்பு (Central Statistical Organization), மாநிலப் புள்ளி விவரம் சேகரிக்கும் கழகங்கள் (States Statistical Bureaus), இந்தியப் புள்ளி விவர நிலையம் (Indian Statistical Institute) ஆகியவற்றின் உதவி யோடு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு மாநிலங்கள், மண்டலங்கள், ஆகியவற்றின் முன்னேற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சியில், பொருளாதார முன்னேற் றத்தைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுபவை என்ற அளவில் மாநில அரசாங்கங்களில் வருமானத்தின் மதிப்பீடுகள் (Estimates) முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன. ‘மாநில’, ‘மண்டல’ வருமானத்தின் மதிப்பீடுபற்றிய மூலக்கருத்துகள், வரையறைகள், தொழில்நுட்ப முறைகள்பற்றிய பிரச்சினைகள் சிக்கலானவை. அவை பல்வேறு மதிப்பீடுகளின் நடைமுறை மதிப்பை நிர்ண யிப்பதில் பங்கு வகிக்கின்றன.

மாநில அரசாங்கத்தின் வருமானம் என்பது அந்த மாநிலத்தின் எல்லைக்குள் உற்பத்தியாகின்ற வருமானம் என்றோ அல்லது அந்த

மாநிலத்தில் வாழ்கின்றவர் பெறும் வருமானம் என்றே சொல்லலாம். முதலில் கூறியது நாட்டின் முழுமைக்குமான உள்நாட்டு உற்பத்திப் பொருளேயும்; இரண்டாவது தேசிய வருமானத்தையும் குறிக்கிறது. மாநிலங்கள் அல்லது மண்டலங்கள் இவைகளுக்கிடையேயான தொழில், பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றின் அளவுபற்றிய ஆய்விற்கு 'மாநில' அல்லது 'மண்டல' எல்லேக்குட்பட்ட வருமானத்தைப்பற்றிய மதிப்பீடு போதுமானது. மாநில மக்களின் வருமானத்தைப்பற்றிய மதிப்பீடு அந்த மாநிலத்தில் வசிப்பவர்களுடைய பொருளாதார நலத்தை அளப்ப தற்கு அளவையாக இருக்கிறது. எதிர்காலத் திட்டங்களில் மாநில வருமானத்தின் மதிப்பீடுகளின் முக்கியத்துவத்தைக் கருதி மத்தியப் புள்ளி விவர ஸ்தாபனம், மாநிலப் புள்ளி விவரம் சேகரிக்கும் கழகங் களின் ஒத்துழைப்போடு ஒத்திட்டுப் பார்க்கக் கூடியதும், ஆண்டு கால அடிப்படையிலுமான மாநில வருமான மதிப்பீடுகளேத் தயார் செய்யவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பீடுகள் பொருள்கள், உற்பத்தி, வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. முதன்முதலில் விவசாயம், தொழில் ஆகிய பிரிவுகளே ஒத்திட்டுப் பார்க்கக்கூடிய முறையில் இந்த வருமான மதிப்பீடுகள் கணக்கிடப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட அடையாளங்களேப் (Indicators) பற்றிய புள்ளி விவரங்களின் தொகுப்பு, மாநில மண்டல வருமானத்தின் மதிப்பீடு ஆகியவை பயனுள்ளதாக இருந்தாலும், பல்வேறு மண்டலங்களின் பிரச்சினேகள் கண்டு பிடிப்பதற்கும் அவற்றின் தேவைகளேயும், மறைந்திருக்கும் சக்திகளேயும்பற்றிய முறையான, மேலீடான ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும். பல்வேறு துறைகளில் அறிவியல், தொழில் நுட்பவியல், மேலீடான ஆராய்ச்சிகள் (Survey), இந்தியாவைப் பற்றிய பூமி அமைப்பியல் மேலீடான ஆராய்ச்சி (Geological Survey of India), சுரங்கங்களேப்பற்றித் தகவல் சேகரிக்கும் கழகம் (The Bureau of Mines); எண்ணெய், இயற்கை வாயுக்குழு (The Oil and Natural Gas Commission), மத்திய நீர், சக்திக்குழு (The Central Water and Power Commission); இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில் (The Indian Council of Agricultural Research); அறிவியல் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் (The Council of Scientific and Industrial Research) போன்ற பதிலாள் (agency) அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு மாநிலங்கள் இந்திய யூனியன் பகுதிகள் ஆகியவற்றைப்பற்றிய தொழில் நுட்பப் பொருளாதார மேலீடான ஆராய்ச்சிகள் (Techno-Economic Surveys), விளேவியல் பொருளாதார ஆராய்ச்சியின் தேசியக்

கவுன்சிலினால் (National Council of Applied Economic Research) எடுக்கப்படுகின்றன. தாமோதர் பள்ளத்தாக்கு மண்டலத்தைப் பற்றிய கணக்கீடு கரக்பூரில் உள்ள தொழில் நுட்ப நிலையத்தாலும், பாட்னா, கல்கத்தா, சர்வகலாசாலைகளாலும் எடுக்கப்பட்டது. மண்டலத் திட்டமிடுதலின் பிரச்சினைகளைப்பற்றிய ஆய்வின் ஒரு பகுதியாக மைசூரிலும், கேரளாவிலும் மண்டல மேலீடான ஆராய்ச்சி இந்தியப் புள்ளிவிவர நிலையத்தால் மேற்கொள்ளப் பட்டது.

செயல் முன்வரைவு மதிப்பீட்டு அமைப்பு (Programme Evaluation Organisation), விவசாய - பொருளாதார ஆராய்ச்சி நிலையம் (Agro-Economic Research Centres) மேற்கொண்ட ஆராய்ச்சிகள் முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள கிராமப் பகுதிகளின் பிரச்சினைகளைப்பற்றிய விவரங்களைத் தருகின்றன. ஆராய்ச்சி செயல் முன்வரைவின் ஆதரவினால் எடுக்கப்பட்ட நகரக் கணக்கீடும் மற்ற ஆய்வுகளும் நகர்ப்புற மண்டல முன்னேற்றத்தைப்பற்றிய முக்கியமான புள்ளி விவரங் களைத் தருகின்றன. டெல்லி, பம்பாய் ஆகிய மாநகர் மண்டலத் தைப்பற்றிய கணக்கீடுகள் திட்டமிடுதலுக்கு மிகவும் முக்கிய மானவை. இவ்வாறு சமீபகாலத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக மண்டல முன்னேற்றத்தைப்பற்றிய பிரச்சினைகளையும் வாய்ப்புகளையும்பற்றிய தொழில் நுட்ப, பொருளாதார, சமூக விவரங்கள் கிடைக்கின்றன. இவை எதிர் காலத்தில் திட்டமிடுதலுக்கு உதவி செய்யும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்டல, நகர்ப்புற முன்னேற்றம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவடையாமல் இருக்கும் மண்டலத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு 157 - நகரங்கள், 49 - யாத்ரீகர்கள் தங்கும் இடங்கள் ஆகியவற்றுக் காகத் திட்டங்களைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சில பகுதிகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. அங்கெல்லாம் ஒழுங்கற்ற வளர்ச்சி சில முக்கியப் பிரச்சினைகளை உண்டாக்கு கின்றன. இப்படிப்பட்ட மண்டலங்களுக்கு விரிவான திட்டங்கள் கடைப்பிடிக்கப்படும். மத்திய, மாநிலங்களில் நகர்ப்புற ஆராய்ச்சிக் குழுக்கள் (Urban Research cells) அமைக்கப்படுகின்றன. நகர முன்னேற்றத் திட்டங்களின் சில அம்சங்களை அமுல்படுத்தும் ஏற்பாடு சிலவற்றை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிலத்தின் பயனையும் மதிப்பையும்

கட்டுப்பாடு செய்வதற்குச் சீராக்கப்பட்ட நகர், நிலக் கொள்கையை உருவாக்குவது இன்றியமையாததாகும். இதற்கான நடவடிக்கைகள் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் எடுக்கப்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மண்டல, நகர முன்னேற்றத் திற்காக 28 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மண்டலங்களின் முன்னேற்றமும் தேசத்தின் முன்னேற்றமும் ஒரு பெரும் வளர்ச்சியின் பிரிவுகளாகக் கருதப்படவேண்டும். ஒரு தேசத்தின் வளர்ச்சி அந்தத் தேசத்தில் உள்ள பல்வேறு மண்டலங்களின் வளர்ச்சி வீதத்தில் பிரதிபலிக்கும். அதைப் போலவே மண்டலங்களில் உள்ள சாதனங்களின் அதிகப்படியான முன்னேற்றம் தேசத்தின் முன்னேற்றத்தின் வீதம் அதிகரிப்பதற்கு உதவுகிறது. குறிப்பிட்ட மண்டலங்களின் பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல், தேசத்தின் தேவைக்குத் தொடர் பில்லாமல் அந்த மண்டலங்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது போன்றவைகள் தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்றால், இறுதியில் தேசத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதிகளாகவே ஒவ்வொரு மண்டலமும் தங்கள் மறைச் சாதனங்களைப் பயன்படுத்தி வளர்ச்சி அடைய முடியும்.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நீண்டகால முன்னேற்றத் திட்டங்கள்தாம் சரிசம மண்டல வளர்ச்சிக்கு அடிகோலும். குறுகிய காலத்தில் இத்தகைய நோக்கத்தில் வெற்றிபெறுவது அற்பமானதும் முடிவற்றதுமாகத்தான் இருக்கும். இது தனிப்பட்ட மண்டலங்களுக்கும் தேசத்திற்கும் பொருந்தும். இப்போது இருக்கும் குறைகள் எதுவாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாட்டிலுள்ள எல்லா மண்டலங்களும் அவைகளிட மிருக்கும் மறைச் சாதனங்களைப் பொருளாதார முன்னேற்றத்திற் காகப் பயன்படுத்தி, தேசம் அடைந்திருக்கும் வாழ்க்கைத் தரத்திற்கு மிகவும் குறைந்துவிடாத வாழ்க்கைத்தரத்தைப் பெறவேண்டும் என்பதே குறிக்கோளாக இருக்கவேண்டும். ஆகவே, பல்வேறு மண்டலங்களின் முன்னேற்றத்தைக் கவனித்து, பின்தங்கிய நிலையிலேயே இருக்கும் குறிப்பிட்ட இடங்களின் முன்னேற்றத்தை அதிகரிக்கக் கூடுதலான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்தியாவில் நீண்டகால முன்னேற்றம் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கும்போது, தேசத்தின் பொருளாதார அமைப்பு முன்னேறிக்கொண்டிருக்கும்போது, மண்டல தேசிய முன்னேற்றம் ஒரு பொதுவான நோக்கத்தின் இரண்டு வெவ்வேறான பகுதிகள் என்றுதான் கருதப்படவேண்டும்.

விவசாயத்தில் மண்டலத் திட்டமிடுதல்

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு கிராமப் பகுதிகளின் முன்னேற்றத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது. கிராம மக்களே தங்களை உயர்த்திக்கொள்ளும் சமுதாய, பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கருதப்பட்டது. அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப, நிதி, சமுதாய வசதிகள் அளிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துச் சபைகள், கிராம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும் என்றும் நம்பப் பட்டது.

பரந்த அடிப்படையில், புவியியல் முறையில், பரவலான கிராம முன்னேற்றக் கொள்கையின் அடிப்படையில் சமுதாய முன்னேற்றத் திட்டம் (Community Development Programme) 1952-ல் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், எதிர்பார்த்த அளவிற்கு இத் திட்டம் வெற்றி பெற வில்லை. அதற்கான காரணங்களை உணர்ந்த அரசாங்கம் பரந்த முறையில் அல்லாது சில குறிப்பிட்ட இடங்களில் அதாவது வெற்றி வாய்ப்பு அதிகமுள்ள இடங்களில் நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்தது. இவ்வாறு செய்தால், ஏற்படுகிற வெற்றியைக் கண்டு மற்ற வாய்ப்புக் குறைந்த மண்டலங்களும் முன்னேறும் என்று நம்பியது. அதன்படி 1960-ல் தீவிர விவசாய மாவட்டத் திட்டம் (Intensive Agricultural District Programme (I. A. D. P.) மேற்கொள்ளப்பட்டது. முதன் முதலில் நிர்வாக மாவட்டங் களில் சிறந்த விவசாய வேலைகளுக்குத் தேவையான பௌதிக உள்ளீடுகள் (Physical inputs) தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன. நிதி, தொழில்நுட்ப உதவி ஆகியவை அளிக்கப்பட்டன. நாளடைவில் இந்த நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு நாட்டின் 40 சதவீத மாவட்டங்களில் தீவிர விவசாயப் பரப்பளவுத் திட்டம் (Intensive Agricultural Areas Programme) மேற்கொள்ளப் பட்டது.

இத்திட்டங்களின் நன்மைகளை ஆராய்வதற்கு இது இடமன்று. இங்கு நாம் உணரவேண்டியது 'தீவிர விவசாய மாவட்டத் திட்டம்', இப்பொழுது உயர் விளைச்சல் ரகங்கள் திட்டம் போன்றவை பொருளாதார கணுசார்ந்த தன்மையை (Polarization) தீவிரப்படுத்தியிருக்கின்றன என்பதுதான். இவ்வாறு ஒரு சில இடங்களில் விவசாய முன்னேற்றம் செறிந்து காணப் படுகிறது. அங்குள்ளவர்களின் வருமானம் அதிகமாகவும் மற்றப்

பின்தங்கிய மண்டலங்களில் வாழ்பவர்களின் வருமானம் மிகக் குறைவாகவும் உள்ளது.

இவ்வாறு தேர்ந்தெடுக்கின்ற தன்மையைப் பொறுத்து விவசாய முன்னேற்றக் கொள்கை நபர், மண்டல வேறுபாடுகளை (personal and regional disparities) ஏற்படுத்தும். தீவிர விவசாய முன்னேற்றத் திட்டம் உடனடியாக மண்டலங்களுக்கிடையேயான வருமான மட்டங்களில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும். ஏனென்றால், இத் திட்டம் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் மேற்கொள்ளப்படு கிறது. அப்படியே பரவலாக மேற்கொள்ளப்பட்டாலும் எல்லா மண்டலங்களிலும் வருமான அதிகரிப்பு ஒரே மாதிரியாக இருக்காது. இதற்குக் காரணம் அரசாங்கக் கொள்கை மட்டுமன்று. முதலில் நிலவும் பௌதிக, சமுதாய, பொருளாதாரச் சூழ்நிலைகள் மண்டலத்திற்கு மண்டலம் வேறுபடுகின்றன. ஆகவே, அதிக அளவு மண்டல, நபர் வேறுபாடுகள் தோன்றுதபடி காத்துக் கொள்ளவேண்டும்.

திறமைமிக்க விவசாயிகள் அதிக உற்பத்திச் சக்தியுள்ள நிலங்களை உடையவர்களாக இருந்தும் புதிய முறைகளைப் பயன்படுத் தவும் முதலீடு செய்யவும் முடியாமல் இருந்தால் உயர்ந்து வருகின்ற நிலத்தின் விலை காரணமாக அவற்றை இலாபகரமாக விவசாயம் செய்யும் பிறருக்கு விற்கும்படிச் செய்தால் நிலமற்ற உழைப்பாளி களின் எண்ணிக்கை அதிகமாகும். இவ்வாறு நேர்ந்தால் முன்பே வளமாக இருக்கின்ற மண்டலங்களில் உற்பத்திச் சக்தி அதிகரித்து அங்காடி உபரியில் (Market Surplus) அவற்றின் பங்கு அதிகமாக இருக்கும். வளமற்ற நிலமுடைய, திறமை குறைந்த தொழில் துணிவோர் உள்ள மண்டலங்கள் இயக்கமற்ற நிலையில் இருக்க நேரிடும். இறுதியில் 20 சதவீத விவசாயிகள் இந்தியாவில் கிடைக்கின்ற 90 சதவீத அங்காடி உபரியை உற்பத்திச் செய்கிற விரும்பத்தகாத நிலை ஏற்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்நிலை இருந்தாலும் அங்கு விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் 5 சதவீத மக்களே. அவ்வாறு இருந்த போதிலும் சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. பெரும்பான்மை யான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற இந்தியாவில் இத்தகைய முன்னேற்றம் பல்வேறு பிரச்சினைகளை உண்டாக்கும்.

கிராமப்புறங்களில் வரி விதிப்பு எளிதின்றி இருப்பதால், வளமான நிலங்களில் ஏற்படுகின்ற இலாபத்தைக் கொண்டு மற்ற நிலங்களில் முதலீடு செய்ய முடியாததால், இந்நிலை தொடர்ந்து நீடிக்கும்.

இந்தியாவில் முதலில் புத்தமைப்புகள் (Innovation) மேற்கொண்ட காலத்தில் விலைமட்டம் உயர்ந்திருந்தது. ஆனால், விலைமட்டம் குறைந்த பிறகு நபர், மண்டல வேறுபாடுகளைக் குறைக்கும் பிரச்சினைகள் கடினமாகிவிட்டன.

பணவசதி படைத்த விவசாயிகள், மண்டலங்கள் விலைமட்டம் குறைந்திருந்தாலும் திறமைமிக்க புதிய தொழில் நுட்ப முறைகளால் முன்னேற முடியும். ஆனால், முன்னேற முயற்சிக்கும் தனிப்பட்ட விவசாயிகள், மண்டலங்கள் விலைமட்டம் அதிகமாக இருக்கும் போதைவிட, விலைமட்டம் குறைந்திருக்கும்போது தேவையான தூண்டுகோலை இழப்பதால், முன்னேற இயலாமல் இன்னலுற நேரிடும். ஆகவே, திருந்திய புதிய முறைச் சாகுபடிக்குத் தேவையான குழாய், கிணறுகள், மற்ற நீர்ப்பாசன வசதிகளைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மண்டலங்களில், விவசாயிகளின் இலாப நோக்கமல்லாத வேறு அடிப்படையில் ஏற்படுத்த வேண்டும்.

முதலீட்டுக் கொள்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும், குறைந்த உற்பத்திச் சக்தியுள்ள இடங்களிலிருந்து வேகமாக முன்னேறிவரும் விவசாய நிலங்களுக்கு உழைப்பு பெயரும்படி செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் பின்தங்கிய மண்டலங்களில் உழைப்பின் இடைக்கால நிவாரணம் ஏற்படும். எப்படியாயினும், குடியேற்றம் மட்டும் மண்டலங்களின் வருமானங்களிலுள்ள வேறுபாடுகளை போக்க முடியாது. இடைவெளி இன்னும் அதிகமாகக்கூடும். ஏனென்றால், உற்பத்திச் சக்தி அதிகரித்து வருகின்ற மண்டலங்களில் வந்து சேரும் புதிய உழைப்பின் காரணமாக உற்பத்தி அதிகரிக்கக்கூடும்.

இத்தகைய கிராமப் பகுதிகளுக்கு இடம்பெயருவதற்குப் பதிலாக நகர்ப்புறங்களுக்கு உழைப்பு இடம்பெயரலாம். ஆனால், உழைப்பு செறிந்துள்ள இந்தியா போன்ற இடங்களில் தொழில், வணிகத் துறைகளில் வேலையற்ற உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட நாடுகளில் செய்ய வேண்டுவதென்னவென்றால், பின்தங்கிய மண்டலங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு உபரி உழைப்புப் பெயர்ந்து வேலையின்மையை இன்னும் அதிகரிக்கும் நிலையினைத் தடுத்தல் வேண்டும். கிராமப்புறங்களிலேயே மாற்று வேலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது தற்போது மேற்கொள்ளப்படும் நகர்மயமாதலைப் பரவலாக்கும் முறைக்கு ஏற்ப உள்ளது. இம்முறையில் மாநகர் (Metropolitan) மைய இடங்களுக்குத் தூரத்தே இருக்கும் இடங்களில் சிறு, நடுத்தரத் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். வேலையின்மை நிலவு

கின்றபோது உழைப்புத்திறத்தின் அளவு குறைந்திருப்பதால் கிராமப்புறங்களிலேயே உழைப்புச் செறிந்த வேலைகள் ஏற்படுத்துவதன் மூலம் வேலையின் அளவை அதிகரித்தல் வேண்டும்.

புதிய விவசாய முறை (Strategy) வருமானப் பங்கீட்டைப் பாதித்தால், குறிப்பாக் குறைந்த வருமானமுள்ளவர்களின் வருமானம் குறைந்தால் அவர்களின் முக்கியப் பொருள்களுக்கான (Staples) தேவை மிகவும் குறைந்து போய்விடக்கூடும்.

விவசாய முன்னேற்றத்தில் ஏற்படுகின்ற வேறுபாடுகள் அதிகரித்தால், விவசாயமல்லாத மற்றத் துறைகளைச் சார்ந்த வேலையின்மை அதிகரிக்கும். இத் துறைகளில் அரசாங்கத் தலையீடின்றி வேலை வாய்ப்பும் பெருக இடமில்லை. ஆகவே, கிராமப்புற வேலைகளின் அளவைக் கணிசமாக அதிகரித்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் மண்டலங்களின் குறைந்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இதுவே சிறந்ததாகும். இவ்வாறு செய்தால் முக்கியப் பொருள்களுக்கான (Staples) தேவை உயரும். நகர்ப்புறத் தொழில் இடங்களிலுள்ள மக்கள் நெருக்கடியும் தீரும்.

தொழிற்பேட்டைத் திட்டமும் மண்டல முன்னேற்றமும்

மண்டல முன்னேற்றம் ஏற்படும்போது பெரிய நகரங்கள் இன்னும் வளர்ச்சி அடைகின்றன. நகர்ப்புற நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. அங்காடிச் சூழ்நிலைகள் சமுதாயத்திற்கு நன்மை செய்யாதபோது, அவைகளைச் சரிசெய்வதற்குச் சில கொள்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்று தொழிற்பேட்டைத் திட்டமாகும் (Industrial Estates Programme).

முதன்முதலில் இத் திட்டம் இங்கிலாந்தில் கையாளப்பட்டு மிகுந்த வெற்றி அடைந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு, மண்டல முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகப் பல நாடுகள் இத் திட்டத்தை மேற்கொண்டன. இந்தியாவில் சிறு தொழில் முன்னேற்றத்திற்காகவும் பொருளாதார நடவடிக்கைகள் பரவலாக ஏற்படுவதற்காகவும் இத் திட்டம் கையாளப்பட்டது. முதல் தொழிற்பேட்டை குஜராத் மாநிலத்தில் 1956-ல் ஏற்படுத்தப்பட்டது. 1967-க்குள் நாடெங்கிலும் 266 தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டையில் தகுந்த இடத்தில் தொழிற்சாலைகளுக்கான கூடங்கள் அமைக்கப்பட்டு, அடிப்படைத் தேவைகளான தண்ணீர்,

போக்குவரத்து, மின்சக்தி, நிதிவசதிகள், பாங்குகள், தபால் நிலையம், சிற்றுண்டி நிலையம், முதலுதவி நிலையங்கள், பாதுகாப்பு வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டன. தொழில் துணிவோருக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் கூறப்பட்டன. இத்தகைய வசதிகளைத் தனிப்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்திக்கொண்டு புறச்சிக்களங்களை அதிகரித்து உற்பத்திச் சக்தியை அதிகரிக்கும் என்று நம்பப்பட்டது.

இவ்வாறு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பே தொடங்கப்பட்டாலும் தொழிற்பேட்டைத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் மிகுந்த வேகத்துடன் செயல்படுத்தப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 5·7 மில்லியன் ரூபாய்களும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 110 மில்லியன் ரூபாய்களும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 302 மில்லியன் ரூபாய்களும் ஒதுக்கப்பட்டன.

முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஒரு தொழிற்பேட்டை முற்றுப்பெற்றது. மற்றும் 5 தொழிற்பேட்டைகளுக்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 60 தொழிற்பேட்டைகளும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 266 தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டன. மொத்தத்தில் 7,000 தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொழிற்பேட்டைகளுக்கான மனையிடத்தைத் தேர்ந்தெடுப்பதில் அரசாங்கக் கொள்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தொடக்கக் காலத்தில் சிறு தொழில்கள் முன்னேற்றமே முக்கிய நோக்கமாக இருந்தது. முதன் முதலில் தொழிற்பேட்டைகள் ஓரளவிற்குத் தொழில் முன்னேற்ற மடைந்துள்ள நகர்ப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டன. அவை வெற்றிகரமாக செயல்பட்டன. இதைக் கண்ட அரசாங்கம் இத்திட்டத்தின் நோக்கங்களை விரிவுபடுத்தியது. மாநில அரசாங்கங்களைக் கலந்து ஆலோசித்துத் தொழில் அமைச்சரவை கிராம, நடுத்தர நகர்ப்புறப் பகுதிகள் தொழில் மயமாகும்படி செய்ய இத்திட்டத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது. நகர்ப்புறப் பகுதிகளில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுவது குறையலாயிற்று. முன்னேற்றம் அடையாத இடங்களில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட்டன.

தொழிற்பேட்டைத் திட்டத்தின் வெற்றியைப் பயன்படுத்திய தொழிற்கூடங்கள், வசதிகள் இவைகளைப் பொறுத்து நிர்ணயித்தால் அது உற்சாகமூட்டுவதாக இல்லை. ஏனென்றால், 1967 ஆம் ஆண்டு

முடிவில் முற்றுப் பெற்ற 7,000 தொழிற் கூடங்களில் 6,000 மட்டுமே தொழில் துணிவோர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதிலும் 5,000 தொழிற் கூடங்களில் மட்டுமே தொழில் நடந்தது. இது தொழில் துணிவோருக்கு இத்திட்டத்திலிருந்த ஈடுபாட்டுக் குறைவைக் காட்டுகின்றது.

இத்திட்டத்தின்படி தொழில் துணிவோர்கள் உழைப்புச் செறிந்த முறைகளைக் கையாண்டு வேலை வாய்ப்பை அதிகரிப்பார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால், உண்மையில் மூலதனச் செறிவுள்ள முறைகளைக் கையாண்டதால் வேலை வாய்ப்பு எதிர்பார்த்த அளவிற்கு அதிகரிக்கவில்லை.

நகர்ப்புறங்களிலோ அல்லது அவற்றின் அருகிலோ அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகள் அங்காடி மாறுதலுக்கேற்பச் செயலாற்றித் திறமையுடன் இயங்க முடிந்தது. அதற்கான தொழில் நுட்ப நிதி உதவிகள் கிடைத்தன. மேலும், திறமை மிக்கவர்கள் இப்படிப்பட்ட தொழிற்பேட்டைகளிலேதாம் செயலாற்ற முன் வந்தனர். பிற்பட்ட மண்டலங்களில் ஏற்படுத்தப்பட்ட தொழிற் பேட்டைகளில் இத்தகைய நன்மைகள் ஏற்படும்படியான சூழ்நிலைகளில்லை.

மேலும், இத்திட்டம் கிராமப்புறங்களில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு வழிகோலும் என்று கருதப்பட்டது. அவ்வாறில்லாமல் தொழில் துணிவோர்கள் நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்யாமல், மற்றத் தொழில்களுக்கு வேண்டிய பொருட்களையே உற்பத்தி செய்தனர். ஏனென்றால், இந்தியாவில் நுகர்வோர் அங்காடி போட்டி நிறைந்தது, நிலையானதல்ல. மேலும், அவர்கள் முன் ஒப்பந்தம் செய்துகொண்டு அதன் அடிப்படையில் உற்பத்தி செய்தனர்.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பேட்டைத் திட்டம் இவற்றைத் தெளிவுபடுத்துகிறது. அ ங் கா டி ப் பொருளாதார அமைப்பில், தொழில் முயற்சியின் வெற்றியும் தோல்வியும் அங்காடி சூழ்நிலைகளைப் பொறுத்து அமைகின்றன. உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட அங்காடி சூழ்நிலைகள் பெரிய நிறுவனங்களை விடச் சிறிய நிறுவனங்களையே பெரிதும் பாதிக்கின்றன. சிறிய நிறுவனங்களின் இடர் தாங்கும் சக்தி குறைவானதால் அவை எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளன.

சோதிக்கப்பட்ட, வெற்றிகரமான உற்பத்தி முறைகள், தேவையான உள்ளீடுகளின் கிடைக்கும் தன்மை, பொருட்களுக்கான

நிச்சயமான அங்காடி போன்றவைகள் இருந்தால்தான் சிறிய நிறுவனங்கள் செயலாற்ற முன்வருகின்றன. அவைகளை முன்னேற்றமடையாத கிராமப் புறங்களில் பெயரச் செய்வதற்கும், நிலையற்ற உள்ளூர் அங்காடிகளுக்கானப் பொருட்களை உற்பத்தி செய்யுமாறு தூண்டவும் வலிமையான தூண்டுகோல்கள் (incentive) ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்பட்டால் மண்டல முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான கருவிகளில் ஒன்றாகத் தொழிற்பேட்டைத் திட்டம் அமையும்.

நான்காம் பகுதி

6. இந்தியாவின் வெவ்வேறு மண்டலங்களில் பொருளாதார முன்னேற்றம்

(Economic Development in Different Regions in India)

பொதுவான அணுகும் முறை

(General Approach)

இந்தியாவின் வெவ்வேறு மண்டலங்கள் 1950-51 முதல் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றி இனி ஆராய்வோம். இந்தியாவின் மாநிலங்களை ஐந்து மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டு ஆராயலாம். 1956-ன் மாநில மறு அமைப்புச் சட்டம் (States Reorganisation Act) இந்தியாவைப் பல மண்டலங்களாக (zones) பிரித்திருக்கிறது. அதன் அடிப்படையில் இந்தியாவை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

வடக்கு மண்டலம் (Northern Region) ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தானைக் கொண்டது. நடு மண்டலம் (Central Region) மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசத்தைக் கொண்டது. கிழக்கு மண்டலம் அஸ்ஸாம், பீஹார், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் இவை அடங்கியது. மேற்கு மண்டலம் மஹாராஷ்டிரம், குஜராத் இவை அடங்கியது. தெற்கு மண்டலம் ஆந்திரப்பிரதேசம், தமிழ் நாடு, கேரளா, மைசூர் இவற்றைக் கொண்டது.

1961-ல் இந்த ஐந்து மண்டலங்களின் பரப்பளவு, மொத்த மக்கள் தொகை, சதுரமைலுக்கு மக்கள் தொகை அடர்த்தி கீழே தரப்பட்டுள்ளன.

மக்கள் தொகை, பரப்பளவு, அடர்த்தி

(மண்டலவாரியாக)



பரப்பளவு, மக்கள்தொகை, அடர்த்தி

மண்டலம்	பரப்பளவு (இலட்சம்) சதுர மைல்கள்	மக்கள் தொகை (மில்லியனில்)	அடர்த்தி (சதுர) மைலுக்கு
வடக்கு மண்டலம்			
1. ஜம்மு & காஷ்மீர்	0·86	3·6	40
2. பஞ்சாப்	0·47	20·3	431
3. ராஜஸ்தான்	1·32	20·1	152
மொத்த வடக்கு மண்டலம்	2·65	44·0	166
நடு மண்டலம்			
1. மத்தியப் பிரதேசம்	1·71	32·4	189
2. உத்திரப் பிரதேசம்	1·13	73·7	650
மொத்த நடு மண்டலம்	2·84	106·1	373
கிழக்கு மண்டலம்			
1. அஸ்ஸாம்	0·47	11·9	252
2. பீஹார்	0·67	46·5	691
3. ஒரிஸ்ஸா	0·60	17·6	292
4. மேற்கு வங்காளம்	0·34	35·0	1031
மொத்த கிழக்கு மண்டலம்	2·08	111·0	534
மேற்கு மண்டலம்			
1. மகாராஷ்டிரம்	1·19	39·5	332
2. குஜராத்	0·72	20·6	286
மொத்த மேற்கு மண்டலம்	1·91	60·1	313
தெற்கு மண்டலம்			
1. ஆந்திரப் பிரதேசம்	1·06	36·0	339
2. தமிழ்நாடு	0·50	33·6	671
3. கேரளா	0·15	16·9	1125
4. மைசூர்	0·74	23·5	318
மொத்த தெற்கு மண்டலம்	2·45	110·0	450
எல்லா மண்டலமும் (யூனியன் பகுதிகள் நீங்கலாக)	11·93	431·2	362

கிடைக்கின்ற புள்ளி விவரங்களைக் கொண்டு இந்தியாவின் வெவ்வேறு பகுதிகள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவை நிர்ணயிப்பது கடினம். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிடுவது போல, மாநிலங்களின் பொருளாதார முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் அடையாளமாக (Indicators) இருக்கும் மாநில வருமானங்களின் மதிப்பீடுகள் (Estimates of State incomes) ஒரே மாதிரியான அடிப்படையில் கணக்கிடப்பட்டு, ஒத்திட்டுப் பார்க்கக் கூடிய வகையில் எல்லா மாநிலங்களிலும் கிடைப்பதில்லை. மத்திய புள்ளி விவர அமைப்பு, மாநிலப் புள்ளிவிவரக் கழகத்தின் ஒத்துழைப்போடு ஒவ்வொரு ஆண்டிற்கானதும், ஒப்பிடக் கூடியதுமான மாநில வருமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான மூலக் கருத்துகளையும், முறைகளையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். வெவ்வேறு மண்டலங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைப்பற்றி, சில பரந்த அடையாளங்களின் மூலம் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

புள்ளி விவரங்கள் குறைவாகக் கிடைப்பதை உணர்ந்து கொண்டு, திட்டக்குழு (Planning Commission) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவற்றின் முக்கியத்துவத்தை வற்புறுத்தியது.

1. வெவ்வேறு மண்டலங்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கு முறையான கணக்கீடுகளை மேற்கொள்ளுதல்.

2. வெவ்வேறு மண்டலங்களின் வளர்ச்சியைக் கவனமாகப் பார்த்து, பின்தங்கிய நிலையிலிருக்கும் சில குறிப்பிட்ட இடங்களின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்குக் கூடுதலான நடவடிக்கைகளை எடுத்தல்.

3. ஒரு மண்டலத்தின் தனிப்பட்ட தேவைகள், சூழ்நிலைகள், வாய்ப்புகள் முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு அதன் வளர்ச்சிக்கான மறை சக்திகளை முற்றிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

4. தேசிய முன்னேற்றத்திற்கும் மண்டல முன்னேற்றத்திற்கும் இடையே சரிசம நிலையின் (Balance) அவசியம், ஒன்றுக்கொன்று இருக்கும் நெருங்கிய தொடர்பு.

ஐந்தாண்டுத் திட்டங்களில் செய்யப்படும் முதலீடு, முன்னேற்றத்தை உண்டாக்குகின்ற முக்கியமான காரணியாகும். ஆனால், எண்ணற்ற மற்றக் காரணிகளும் முக்கியத்துவத்தில் குறைந்தவையன்று. சான்றாக, திட்டங்களுக்கு முன்பு அடைந்திருக்கும் முன்

னேற்றத்தின் மட்டம், பொருளாதார, சமூக, பொது வசதிகள் (overheads), ஒவ்வொரு மண்டலத்தின் இயற்கைச் சாதனங்களும், மறைச் சாதனங்களும், சுகாதார நிலை, கல்வி மட்டம், சக்தியின் அளவு, மக்களின் மனப்போக்கு, முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் நிதியைத் திரட்டும் திறன் போன்றவையும் முன்னேற்றத்திற்குத் துணை புரிகின்றன.

திட்டமிடுதலில் ஆரம்பத்தில் இருந்த முன்னேற்றத்தின் வெவ்வேறு அளவுகள்

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தில் இந்தியாவின் பல்வேறு மண்டலங்கள் பல்வேறு அளவாக முன்னேற்றத்தை அடைந்திருந்தன. வரலாற்றுக் காரணிகள், மக்கள் தொகை, இயற்கைச் சாதனங்கள், மண், கால நிலை போன்ற காரணிகள் மூலம் இதற்கு விளக்கம் தரலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் இந்த நிலையை முழுவதும் மாற்ற இயலவில்லை. இருக்கின்ற நிலைமையில் நாட்டில் வெவ்வேறு பகுதிகள் எல்லாம் ஒரே முன்னேற்ற அளவை அடையுமாறு செய்ய, பல ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் (1955 - 56) இறுதியில் இருந்த நிலையைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகிறது.

	மண்டலம்				
	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு
a. மொத்தச் சாகுபடி (Cultivated) நிலத்தில் நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்தின் சதவீதம்	24	16	19	6	23
b. மின்சக்தியை உண்டாக்கும் மொத்த உற்பத்திச் சக்தி (M. W.)	236	465	1,147	808	636
c. மின்சார வசதியுள்ள நகரங்களும் கிராமங்களும் (1956-57)	1,418	3,468	1,211	711	6,390

மண்டலம் (தொடர்ச்சி)

	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு
d தளமிட்ட (Surface) சாலைகளின் நீளம் மொத்தம்	10,754	22,657	16,494	18,417	44,076
100 சதுர மைலுக்கு	3·94	7·97	6·70	9·64	18·02
e. 6 முதல் 11 வயது வரையுள்ள பள்ளி மாணவர்களின் சத வீதம்	38·6	35·6	49·3	66·4	67·4
f. (மில்லியன் மக்க ளுக்கு) மருத்துவர் கள்	86	84	260	238	162

மாநிலங்களின் திட்டச் செலவும் (outlays), மாநிலச் சாதனங்களும், மத்திய உதவியும் (Assistance)

ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலங்களின் திட்டச் செலவு இரண்டு பகுதிகளை உடையதாக இருக்கின்றது. அவை மாநிலங்கள் திரட்டும் சாதனங்கள், மத்திய அரசாங்கம் அளிக்கும் கடனுதவியும் (loans), மானியமுமாகும் (Grants).

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறையில் செலவிடப் பட்ட பணத்தில் 73 சதவீதமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 44 சதவீதமும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 46 சதவீதமும் மாநிலங்கள் செலவு செய்ததாகும். முதல், இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலங்களின் திட்டச் செலவு 3,496 கோடி ரூபாயாக இருந்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது 3,847 கோடியாக இருந்தது.

முதல், இரண்டாவது திட்டங்களில் மத்திய உதவி 1,937 கோடி யாக, அதாவது மொத்தச் செலவில் 55 சதவீதமாக இருந்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,847 கோடி ரூபாயில், 2,431 கோடி ரூபாய்கள் மத்திய அரசாங்கம் அளித்த உதவியாகும். இது மொத்தத்தில் 63 சதவீதமாகும். எந்த அளவிற்கு மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு உதவி அளிக்கிறது என்பது பல்வேறு

காரணங்களினுல் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தக் காரணங்கள்: (1) மாநிலம் செயல்படுத்தும் செயல் முன்வரைவுகளின் அளவு, திட்டங்களின் தன்மை; (2) அந்த மாநிலம் அதற்கு வேண்டிய சாதனங்களே அதே திரட்டிக் கொள்ளும் சக்தி என்பவையாகும்.

சில மாநிலங்கள், மற்றவற்றைவிட நிறையச் சாதனங்களேத் திரட்டுவதற்குச் சக்தி உடையவையாக இருக்கின்றன. ஆனுல், ஒவ்வொரு மாநிலமும், அதன் முன்னேற்ற நிலேக்கும், தேவைக்கும் ஏற்ப அதன் சாதனங்களேத் திரட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட திட்ட காலத்தில், ஒரு மாநிலம் பெரிய திட்டங்களேச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. உதாரணமாக, ஆற்றுப்பள்ளத் தாக்கு முன்னேற்றத் திட்டங்களே எடுத்துக் கொள்ளுவோம். இந்தத் திட்டங்களுக்கான மொத்தச் செலவு அதிகமாக இருக்கும். அதன் காரணமாக மற்றப் பகுதிகளின் முன்னேற்றத்திற்கான செலவு குறையலாம். எல்லாத் துறைகளிலும் ஒரே அளவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது கடினமாகும். பெரிய திட்டங்கள், அவை நீர்ப்பாசனம், சக்தி அல்லது தொழில் போன்ற எந்தத் துறையில் இருந்தாலும், மற்றப் பகுதிகளின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தச் சாதனங்கள் இல்லாமல், தாமே எடுத்துக் கொள்ளுகின்றன. வெவ்வேறு மண்டலங்களின் முன்னேற்றத்தை அளக்கும் போது இந்த அம்சத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலங்களின் திட்டச் செலவுகள், மாநிலச் சாதனங்கள், மத்திய உதவி ஆகியவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணே காட்டுகிறது.

மண்டலம்

	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு	யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்
மாநில திட்டச் செலவு						
மொத்தம் (ரு. கோடிகள்)	1,061	1,432	1,696	1,222	1,932	7,343
தனி நபர் (per capita) (ரு.)	259	142	165	219	184	181

மண்டலம் (தொடர்ச்சி)

	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு	யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்
மாநிலச் சாதனங்கள்						
மொத்தம் (ரூ. கோடிகள்)	332	509	579	735	820	2,875
தனி நபர் (ரூ.)	79	51	56	132	79	73
மத்திய உதவி						
மொத்தம் (ரூ. கோடிகள்)	729	923	1,117	477	1,112	4,368
தனி நபர் (ரூ.)	180	91	109	87	105	108

முதல், இரண்டாவது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டங்களில் மண்டலங்களின் தனிநபர் (Percapita) மாநிலத் திட்டச் செலவு, மாநிலச் சாதனங்கள், மத்திய உதவி ஆகியவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மண்டலம் (ரூபாயில்)

	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு	யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்
மாநிலத் திட்டச் செலவு						
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	67	29	42	47	35	40
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	69	38	46	68	57	52

மண்டலம் (தொடர்ச்சி)

	வடக்கு	நடு	கிழக்கு	மேற்கு	தெற்கு	யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்
மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்	123	75	78	104	92	89
மாநிலச் சாதனங்கள்						
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	9	12	12	30	17	15
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	27	16	21	45	28	25
மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்	43	23	24	57	34	33
மத்திய உதவி						
முதல் ஐந்தாண்டுத் திட்டம்	58	17	30	17	18	25
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	42	22	25	23	29	27
மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்	80	52	54	47	58	56

திட்டக்காலத்திற்கு முன்பே செயல்படுத்தப்பட்ட மூன்று ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் காரணமாகச் சில மண்டலங்கள் பெற்ற மத்திய உதவியின் அளவு அதிகமாக இருந்தது. மற்ற மண்டலங்களிலும் பல ஆற்றுத் திட்டங்கள் ஏற்பட முதல் திட்டம் உதவி செய்தது.

7. மண்டல முன்னேற்றத்தைக் காட்டும் சில அடையாளங்கள்

(Indicators)

விவசாயம்

இந்தியாவின் வெவ்வேறு பகுதிகள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையான அம்சம் விவசாய உற்பத்தியில் கண்டுள்ள முன்னேற்றமாகும். இதற்கு அரசாங்கம் செய்த செலவும், நிறுவிய பல்வேறு அமைப்புகளும் (organisations) ஓரளவு காரணமாக இருக்கலாம். மற்றக் காரணிகளும் உதவி இருக்கலாம்.

வெவ்வேறு பகுதிகளில் உணவுத்தானியங்களின் (Food grains) உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பைக் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.

உணவுத் தானியங்கள்

மண்டலம்	1949—50	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அறிவிப்பு
	(மில்லியன்	டன்கள்)		
வடக்கு	8·5	9·5	11·3	51
நடு	16·9	19·5	23·8	41
கிழக்கு	14·3	14·4	18·8	31
மேற்கு	6·7	7·3	9·0	34
தெற்கு	10·7	14·7	15·9	49
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	57·1	65·4	78·8	41

வெவ்வேறு மண்டலங்களில் பருத்தி, எண்ணெய்வித்துக்கள், கரும்பு, சணல் ஆகியவற்றின் உற்பத்தியால் ஏற்பட்ட அதிகரிப்பைப் பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

பருத்தி

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு
	(இலட்சம் பேல்கள்)			
வடக்கு	4·4	7·9	9·4	114
நடு	3·2	4·3	5·0	56
கிழக்கு	0·1	0·1	0·1	—
மேற்கு	14·4	19·2	30·1*	109
தெற்கு	6·9	8·4	9·3	35
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	29·0	39·9	53·9	84

எண்ணெய் வித்துக்கள்

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு
	(இலட்சம் டன்கள்)			
வடக்கு	2·3	4·2	3·9	70
நடு	10·9	12·1	18·3	68
கிழக்கு	2·4	2·3	2·3	—4
மேற்கு	9·8	12·0	20·1	105
தெற்கு	25·4	26·4	26·8	6
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	50·8	57·0	71·4	41

* *1960—61* இந்த மண்டலத்திற்கு நல்ல வருடம்

கரும்பு (வெல்லம்)

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு
	(இலட்சம் டன்கள்)			
வடக்கு	4·6	6·0	11·0	139
நடு	29·9	30·5	40·1	34
கிழக்கு	5·7	5·8	10·5	84
மேற்கு	5·6	5·5	10·2	82
தெற்கு	10·3	11·8	14·9	45
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	56·1	59·6	86·7	54

சணல்

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அறிகரிப்பு
	(இலட்சம் பேல்கள்)			
வடக்கு	—	—	—	—
நடு	0·5	0·9	0·9	80
கிழக்கு	31·9	40·6	39·0	22
மேற்கு	—	—	—	—
தெற்கு	—	—	—	—
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	32·4	41·5	39·9	23

மேற்கண்ட அட்டவணைகள், விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பை மட்டுமல்லாது வெவ்வேறு மண்டலங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் தொடர்பு (Relative) வீதத்தையும் காட்டுகின்றன. மாநில வருமானத்தில் பெரும் பகுதியாக விவசாய உற்பத்தி இருப்பதால், அதில் ஏற்படும் முன்னேற்றத்தை வைத்து மக்களின் வருமானம் உயர்ந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசனமும் (Irrigation) சக்தியும் (Power)

ஐந்தாண்டுத் திட்டங்களில் நீர்ப்பாசனம், சக்தி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. நீர்ப்பாசன சக்தித் திட்டங்களை மாநில அரசாங்கங்கள் மேற்கொள்கின்றன. சக்தித் திட்டங்கள் தொழில் முன்னேற்றத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டன. எந்த மண்டலத்திலும் அவற்றின் முன்னேற்றம் அந்த தேசத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப் படுகிறது. ராஜஸ்தான் கால்வாய் போன்ற சில நீர்ப்பாசனத் திட்டங்கள் தேசிய நோக்கில் எழுந்தவையே. பொதுவாக, பெரியதும் நடுத்தரமானதுமான நீர்ப்பாசனத் திட்டங்கள் பெரிய மண்டலங்களின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிகின்றன. தொழிலுக்கும், விவசாயம், சிறுதொழில்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் அடிப்படையான சக்தி எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்தின் பரப்பளவு அதிகரித்தது. அந்த அதிகரிப்பு 42 சதவீதமாக இருந்தது. மண்டலங்களுக்கிடையிலான இந்த அதிகரிப்பை கீழ்க்கண்ட அட்டவணைக் காட்டுகிறது.

மொத்த நீர்ப்பாசன வசதி பெற்ற நிலம்

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு
	(மில்லியன் ஏக்கர்)			
வடக்கு	11·3	13·6	15·7	39
நடு	15·1	15·4	19·8	31
கிழக்கு	11·9	11·7	17·9	50
மேற்கு	3·1	4·0	5·0	61
தெற்கு	14·0	18·1	20·4	46
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	55·4	62·8	78·8	42

வெவ்வேறு மண்டலங்களில் சக்தி, பட்டினங்கள், கிராமங்களில் மின் வசதி அளித்தல் ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கீழ்க்கண்ட அட்டவணைக் காட்டுகிறது.

சக்தி—மொத்த உற்பத்திச் சக்தி

மண்டலம்	1950—51	1955—56	1960—61	பத்தாண்டுகளில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு
	(மி. வாட்)			
வடக்கு	98	236	457	366
நடு	226	465	765	238
கிழக்கு	575	1,147	1,864	224
மேற்கு	438	808	1,200	174
தெற்கு	330	636	1,174	256
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	1,667	3,292	5,460	142

பட்டினங்கள், கிராமங்களுக்கு மின்வசதி அளித்தல்

மண்டலம்	பட்டினங்கள் கிராமங்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை	பட்டினங்களும் கிராமங்களும் மின் வசதி பெற்ற காலம் (இறுதியில்) 1956-57	1960-61	பத்தி 2-ன் சதவீதமாக பத்தி 3.
வடக்கு	59,980	1,418	2,271	3·8
நடு	1,82,444	3,468	4,934	2·7
கிழக்கு	1,79,461	1,211	2,476	1·3
மேற்கு	54,904	711	1,721	3·1
தெற்கு	76,241	6,390	11,244	14·7
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	5,53,030	13,198	22,656	4·1

சாலைகள், இரயில்வேக்கள், துறைமுகங்கள்

மாநிலத் திட்டங்களில் சாலை முன்னேற்றம் முக்கியமான தொன்றாக உள்ளது. அது வளர்ச்சியைக் காட்டும் அடையாளமாகவும் உள்ளது. 1956, 1959 ஆண்டுகளுக்கு மட்டும் புள்ளி

விவரங்கள் இருக்கின்றன. வெவ்வேறு மண்டலங்களில் இந்த இரண்டு ஆண்டுகளில் நூறு சதுர மைலுக்கும், ஆயிரம் மக்களுக்கும் தளமிட்ட சாலை நீளமும் கீழ்க்கண்டவாறு உள்ளது.

சாலை நீளளவு (Road Mileage)

மண்டலம்	மார்ச் 1956			மார்ச் 1959		
	சாலை நீளம் (தளமிட்டது)	நூறு சதுர மைலுக்கு	ஆயிரம் மக்களுக்கு	சாலை நீளம் (தளமிட்டது)	நூறு சதுர மைலுக்கு	ஆயிரம் மக்களுக்கு
வடக்கு	10,754	3·94	0·27	13,844	5·22	0·35
நடு	22,657	7·97	0·23	23,531	8·28	0·24
கிழக்கு	16,494	6·70	0·16	18,826	9·48	0·19
மேற்கு	18,417	9·64	0·33	20,464	10·71	0·37
தெற்கு	44,076	18·02	0·43	53,034	21.81	0·52
யூனியன் பகுதிகள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும்	1,12,398	9·06	0·28	1,29,699	10·87	0·33

ரயில்வே வலை (network), நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அதன் பங்கீடு ஆகியவற்றைப்பற்றி கவனம் செலுத்தப்படுகிறது. பெருகிவரும் தேசியப் பொருளாதாரத்தின் தேவையை ரயில்வேக்கள் நிறைவேற்ற வேண்டியதாக உள்ளன. போரினுல் பழுதடைந் திருக்கும் ரயில்வே அமைப்பை சீரமைக்கவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் முற்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எஃகு, நிலக்கரி, மற்ற கனரகத் தொழில்களின் முன்னேற்றத்தினுல் பெருகிய தேவையைச் சமாளிக்கும் வகையில், ரயில்வே பெருக்கம் ஏற்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலும், இறுதியிலும் ரயில்வே செல்வழி (Route) நீளளவை கீழ்க்கண்ட அட்டவணைக் காட்டுகிறது.

இரயில்வே செல்வழி நீளளவு (மைல்கள்)

மண்டலம்	இரண்டாவது திட்ட ஆரம்பத்தில்	இரண்டாவது திட்ட இறுதியில்
வடக்கு	5,557	5,604
நடு	8,301	8,521
கிழக்கு	6,755	6,956
மேற்கு	6,319	6,524
தெற்கு	7,155	7,253
யூனியன் பகுதிகள் நீங்கலாக எல்லா மண்டலங்களும்	34,087	34,858

போக்குவரத்தைப் பற்றி ஆராயும்போது, போக்குவரத்தின் பல்வேறு வழிகள் ((உ-ம்) சாலைகள், ரயில்வேக்கள், துறைமுகங்கள் முதலியன) தேசிய, மண்டலத் தேவைகளை நிறைவேற்றுவதைப் பற்றி ஆராயவேண்டும். அதன் முறையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துறைமுகங்களில் 45 கோடி ரூபாய்களும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 கோடி ரூபாய்களும் முதலீடு செய்யப்பட்டது. இந்த முதலீடுகள் கிழக்கு, மேற்கு, தெற்கு மண்டலங்களில் ஏறக்குறைய சமமாகப் பங்கீடு செய்யப்பட்டன.

மக்களின் முன்னேற்றம்

மக்களின் முன்னேற்றமே, பொருளாதார முன்னேற்றத்தின் முக்கியமான அம்சமாகும். இத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை துல்லியமாக அளக்க முடியாது. ஏனென்றால், எண்ணிக்கையைப்போல தரமும் முக்கியமானது. இதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில இனங்களில் (Items) வெவ்வேறு மண்டலங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு விளக்கலாம்.

(1) 6 முதல் 11 வயதுள்ளவர்க்கு கல்வி வசதிகள்

PUBLIC LIBRA

மண்டலம்	1955—56 %	1960—61 %	1965—66 %
	38·6	51·3	70·7
	35·6	45·9	62·4

6 முதல் 11 வயதுள்ளவர்க்கு கல்வி வசதிகள் (தொடர்ச்சி)

மண்டலம்	1955—56 %	1960—61 %	1965—66 %
கிழக்கு	49·3	57·3	72·2
மேற்கு	66·4	72·9	88·3
தெற்கு	67·4	74·7	93·5
யூனியன் பகுதிகள் நீங்கலாக எல்லா மண்டலங்கள்	51·8	60·7	77·4

(ii) படுக்கை வசதிகள்

மண்டலம்	1960—61		1965—66	
	மொத்த எண்	மில்லியன் மக்கள் தொகை	மொத்த எண்	மில்லியன் மக்கள் தொகை
வடக்கு	24,030	605	29,280	667
நடு	29,920	282	39,758	343
கிழக்கு	44,160	439	55,590	501
மேற்கு	16,000	266	19,866	296
தெற்கு	62,475	568	80,751	675
யூனியன் பகுதிகள் நீங்கலாக எல்லா மாநிலமும்	1,76,585	445	2,25,245	522

நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவு முன்னேற்றமடையுமாறு, மூன்றுவது ஐந்தாண்டுத்திட்டம் கல்வி, சுகாதாரம் மற்ற சமூகப் பணிகள் எல்லாப் பகுதிகளிலும் முன்னேற வழி செய்கிறது. 6 முதல் 11 வயது வரை உள்ளவர்களுக்குக் கல்வி வசதிகள், கிராமங்களில் குடிநீர் வசதிகள் எல்லா முன்னேற்ற வட்டாரங்களிலும் (Blocks) முதன்மைச் சுகாதார நிலையங்கள் அமைத்தல், கிராமங்களுக்கு விவசாய விஸ்தரிப்பு செய்தல், கிராம சிறு தொழில்கள், தொழில் பேட்டை முன்னேற்றம் ஆகியவை மாநிலத் திட்டங்களில் காணப்பட்டாலும் அவை தேசியத் தன்மை உடையவையாகும்.

தொழில் முன்னேற்றம்

நாட்டின் வெவ்வேறு பகுதிகள் அடைந்திருக்கும் தொழில் முன்னேற்றத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறிப்பிடப்படுகின்றன. இந்தப் பிரச்சினையை அணுகும் முறை 1956 ஆம் ஆண்டு ஏப்ரல்-தொழில் கொள்கைத் தீர்மானத்தில் (The Industrial Policy Resolution of April, 1956) சொல்லப்பட்டிருக்கிறது.

'தொழில் மயமாக்குதல் (Industrialisation) ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்றால் வெவ்வேறு மண்டலங்களின் முன்னேற்றத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் விரைவாக குறைக்கப்பட வேண்டும். நாட்டின் சில பகுதிகளில் தொழில்கள் ஏற்படாமைக்குக் காரணம் அங்கே அதற்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் அல்லது மற்ற சாதனங்கள் கிடைக்காமையே யாகும். சில பகுதிகளில் தொழிற் செறிவு ஏற்படுவதற்குக் காரணம் சக்தி, தண்ணீர் வசதி, போக்குவரவு வசதி முதலியவை சுலபமாக கிடைப்பதுதான். தற்போது தொழில் துறையில் பின்தங்கிய இடங்களில் அல்லது அமைவிடம் தகுந்ததாக இருந்து வேலை வாய்ப்புகளை உண்டாக்குகின்ற தேவை இருக்கின்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்பது தேசிய திட்டமிடுதலின் நோக்கங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு மண்டலத்திலும் தொழில், விவசாயம் இவற்றில் சரிசமமான முன்னேற்றத்தை ஏற்படுத்தினால்தான், இந்த நாடு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய முடியும்.

தொழில் நடவடிக்கைப் பரவலாக அமையும்படி செய்யும்போது, பெரிய, சிறிய தொழில்கள் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்கின்றன. அவை இரண்டுமே சமமான முக்கியத்துவம் உடையனவாக இருக்கின்றன. ஒவ்வொரு இடத்தின் வாய்ப்புகளுக்குத் தக்கவாறு கிராமச் சிறுதொழில் முன்னேற்றத்திற்கு மாநிலத் திட்டங்கள் உதவுகின்றன. தொழிற் பேட்டைகள் அமைத்தல், கிராம, சிறு நகரங்களுக்கு மின்வசதி அளித்தலை விஸ்தரித்தல், பயிற்சி வசதிகளைப் பெருக்குதல், ஆகியவற்றை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இதே போன்று முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகத்தான் சில வகையான சிறு தொழில்கள் நாட்டின் மற்ற இடங்களைவிட சில இடங்களில் சிறந்த முறையில் வளர்ச்சியடையும். பஞ்சாப், தமிழ் நாட்டில் சிறுதொழில், இலேசானத் தொழில்களில், தெற்கே கைத் தறித் தொழிலில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு, ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நிதி, தொழில் நுட்ப உதவி போன்றவை கூட அளிப்பது போலவே

மனித (human), அமைப்புக் (Organisational) காரணிகளுக்கும் முக்கியமானவை என்று விளக்குகிறது.

பெரும் தொழில்களைப் பொருத்த வரையில், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிடுவதுபோல, தொழில் நடவடிக்கையைப் பரவலாக அமைக்கும்போது பெரியத் தொழில்களைப் பொறுத்தவரையில் பொருளாதார, தொழில் நுட்பக் கருத்துகள் எப்போதும் முக்கியமானவை. நடைமுறையில் அவைகளை ஓரளவிற்குத்தான் விட்டுக் கொடுக்க முடியும். பெரிய திட்டங்களுக்கான அமைவிடத்தைக் குறிப்பிட்ட இடத்தில் ஏற்படுத்தும்போதும் நேரிடுகின்ற இன்னல்கள் எப்போதும் முக்கியமானவையாகவும், மாற்ற முடியாதனவாகவுமாக இருப்பதில்லை. சில சமயம் அவை அடிப்படையான வசதிகளும் பணிகளும் இல்லாமல் இருப்பதையே குறிக்கும். பொதுத் துறையில் மேற்கொள்ளுகின்ற திட்டங்களின் அமைவிடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது பின்தங்கிய இடங்களும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. முக்கியமானத் தொழில் நுட்ப, பொருளாதார அடிப்படைகளை விட்டு விடாமல் எங்கெல்லாம் ஏற்படுத்த முடியுமோ அங்கெல்லாம் இத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.'

அடிப்படையான மூலதனப் பொருள்கள், உற்பத்தியாளர் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களுக்கான மனையிடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கச்சாப் பொருள்களுக்கு அருகிருத்தல், மற்றப் பொருளாதாரக் கருத்துகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், நுகர்வுப் பொருட்கள், பக்குவப்படுத்தும் தொழில்கள் இவைகளை அமைக்கும் முறைகளில் மண்டல முறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். இவை பருத்தி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சைக்கிள்கள் போன்றவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்கள், தையல் இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள், வானொலிப் பெட்டிகள் செய்தல் போன்றவையாகும்.

மேற்கண்ட பரந்த முடிவுகளுக்கு எதிராக, தொழில் நுட்ப வாய்ப்புகளுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பொதுத் துறையில், திட்டங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதே போக்குத் தொடர்ந்து பின்பற்றப் பட்டது. எஃகு தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட மூலதனத்தின் அளவைக் கருதி மத்திய அரசாங்கம் வெவ்வேறு மண்டலங்களில் தொழிலில் ஈடுபடுத்திய மூலதனத்தை ஒப்பிட்டுப்பார்க்க இயலாது. பொதுத்துறையில் திட்டங்களின் அமைவிடத்தை ஏற்படுத்தும்போது, இன்றியமையாத பொருளாதார, தொழில் நுட்பக் கருத்துகளுக்குட்

பட்டு அவை ஓரளவிற்குப் பரவலாக இருக்கின்றன. தனியார் துறையில் தொழில் திட்டங்களின் அமைவிடத்தை நிர்ணயிக்கும் போது, பல்வேறுபட்ட காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். தனியார் துறையில் தொழில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும் போது, மூன்றுவது திட்டம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

'முன்னேற்றம் குறைந்த மண்டலங்களின் தேவை கவனத்தில் கொள்ளப்படுகிறது. தொழிற்சாலை தொடங்க இருக்கும் அதிபர்களுக்கு, அப்படிப்பட்ட இடங்களில் தொடங்கும்படியும் ஆலோசனை சொல்லப்படுகிறது. புதிய தொழிற்சாலைகள் மண்டல அடிப்படையில் தனியார் துறையில் எங்கு அமைக்கப்படலாம் என்று அறிய அநேக தொழிற்சாலைகளில் முன்னேற்றம், செயல் முன்வரைவுகள், உற்பத்தி இலக்கு ஆகியவை அவ்வப்போது ஆராயப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.'

ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றி சக்தி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றை தற்போது தொழில் துறையில் பின்தங்கி இருக்கும் இடங்களிலும் அல்லது எங்கெல்லாம் வேலைவாய்ப்பு உண்டாக்க வேண்டியதன் அவசியம் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக தகுந்த தொழில்கள் தொடங்கப்படலாம். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம், பின்தங்கிய மண்டலங்களில், தொழில் முன்னேற்றப் பகுதிகளை (Industrial Development areas) உருவாக்க உத்தேசித்துள்ளது. அந்த முன்னேற்ற இடங்களில் அடிப்படையான வசதிகள் ஏற்படுத்தப் படும். தொழிற்சாலை மனையிடங்கள் உருவாக்கப்பட்டு விலைக்கோ, அல்லது நீண்டகால குத்தகைக்கோ சிறிய, நடுத்தர தொழில் துணிவோர்க்குக் கொடுக்கப் படுகின்றன. ஒவ்வொரு பெரிய திட்டமும் தொழில், நீர்ப்பாசனம், சக்தி போன்றவற்றில் இருந்தாலும் அது ஆழ்ந்த நெருங்கிப் பிணைந்த மண்டல முன்னேற்றத்தின் கரு (Nucleus) என்று கருதப்படவேண்டும், என்று மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் வலியுறுத்தியது.

கடந்த ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் காரணமாக கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் போக்குவரவு வசதி, சக்தி வசதிகள், பயிற்சி பரந்த அடிப்படையில் பெருகியிருக்கின்றன. பல்வேறு மண்டலங்களில் பல்வேறு தொழில்கள் வளர்ச்சியடைவதற்கான அடிப்படைச் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த வசதிகளைப் பயன்படுத்திக்

கொள்ள சிறு மத்திய தொழில் துணிவோர் குழுக்கள் முன்வருகின்றன.

தனியார்த் துறையில் பல்வேறு தொழில்கள் கடந்த சில ஆண்டுகளாக முன்னேறிவருகின்றன. பல புதிய தொழில்கள் புதிய இடங்களில் தொடங்கப்பட்டுவருகின்றன. இந்தப் போக்கு இன்று நீடிக்கிறது.

இதுவரையில் பொதுத்துறையிலும் தனியார்த்துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இந்தியாவும் அதன் மண்டலங்களும் இன்றும் அதிக முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில் இருக்கின்றன. மேலும், நகரங்களிலும் பட்டினங்களிலும் புதிய தொழில் மைய இடங்களிலும்தான் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை-சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் புதிய தொழில்கள், புதிய தொழில் நுட்ப முறைகள் பரவுகின்ற நிலை-ஏற்படவேண்டும்.

பிற்சேர்க்கை 1

விளக்க வரைபடங்கள்
பல்வேறு முன்னேற்ற மட்டங்கள்

(மண்டல வாரியாக)

மூலம் இந்தியாவின் வெவ்வேறு மண்டலங்களில்
பொருளாதார முன்னேற்றம்

திட்டக்குழு, 1962

இந்திய அரசாங்கம்.


உணவுத் தானிய உற்பத்தி
(மண்டலவாரியாக)
மில்லியன் டன்கள்
30
20
10
0
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு
1949-50
1960-61
1965-66


சாகுபடி நிலம்
நீர்ப்பாசனம் பெற்றது
(மண்டலவாரியாக) (மொத்தம்)
சதவீதம்
25
20
15
10
5
0
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு


நிறுவப்பட்ட உற்பத்தி சக்தி
(மண்டலவாரியாக)
மெ.வா
1200
1000
800
600
400
200
0
வடக்கு
நகர
கிழக்கு
மேற்கு
தெற்கு


மின்சாரவசதிபெற்ற
பட்டினங்களும் கிராமங்களும்
(மண்டலவாரியாக)
70
60
50
40
30
20
10
0
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு


சாலை நீளளவு
(தளமிட்டது)
நூறு சதுரமைலுக்கு
(மண்டலவாரியாக)
20
15
10
5
0
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு


சாலை நீளளவு
தளமிட்டது
(மண்டலவாரியாக)
50
40
30
20
10
0
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு

6-11 வயதுள்ள பள்ளிச் சிறுவர்களின் சதவீதம்

(மண்டலவாரியாக)




மருத்துவர்கள்
(மண்டலவாரியாக)
மில்லியன்
மக்களுக்கு
300
200
100
வடக்கு
நடு
கிழக்கு
மேற்கு
தெற்கு

பிற்சேர்க்கை 2

அட்டவணை I

விவசாய உற்பத்தி—மண்டலங்களில், மாநிலங்களில்.

மண்டலம்	உணவு தானியங்கள் (டன்கள்)			பருத்தி (இலட்சம் பேல்கள்)			எண்ணெய் வித்துக்கள் (இலட்சம் டன்கள்)			கரும்பு, வெல்லம் (இலட்சம் டன்கள்)			சணல் (இலட்சம் பேல்கள்)		
	1949—50	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)
ஜம்மு காஷ்மீர்	0·3	0·6	0·6	—	—	—	—	0·2	0·1	—	—	—	—	—	—
பஞ்சாப்	—	6·2	7·9	3·1	7·9	12·0	1·1	2·0	3·0	4·4	10·0	9·0	—	—	—
இராஜஸ்தான்	8·2	4·5	6·6	1·3	1·5	3·5	1·2	1·7	3·9	0·2	1·0	1·8	—	—	—
மொத்த வடக்கு மண்டலம்	8·5	11·3	15·1	4·4	9·4	15·5	2·3	3·9	7·9	4·6	11·0	10·8	—	—	—

அட்டவணை I (தொடர்ச்சி)

மண்டலம்	உணவுத் தானியங்கள் (டன்கள்)			பருத்தி (இலட்சம் டன்கள்)			எண்ணெய் வித்துக்கள் (இலட்சம் டன்கள்)			கரும்பு, வெல்லம் (இலட்சம் டன்கள்)			சணல் (இலட்சம் பேல்கள்)		
	1949—50	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)
மத்தியப் பிரதேசம்	5·7	9·6	10·7	2·7	4·5	7·5	3·4	5·4	6·8	0·9	1·1	2·6	—	—	—
உத்திரப் பிரதேசம்	11·2	14·2	18·3	0·5	0·5	1·5	7·5	12·9	16·7	29·0	39·0	42·0	0·5	0·9	1·2
மொத்த நடு மண்டலம்	16·9	23·8	29·0	3·2	5·0	9·0	10·9	18·3	23·5	29·9	40·1	44·6	0·5	0·9	1·2
அஸ்ஸாம்	1·8	1·7	2·2	0·1	0·1	0·1	0·6	0·5	0·8	0·7	0·9	1·2	7·9	8·1	12·1
பீகார்	5·9	7·3	8·3	—	—	0·1	0·6	0·7	1·3	3·1	6·9	7·3	6·2	8·4	12·8
ஒரிஸ்ஸா	2·2	4·0	5·6	—	—	1·0	0·6	0·6	2·0	1·0	0·7	2·3	2·4	2·6	6·6
மேற்கு வங்காளம்	4·4	5·8	6·7	—	—	—	0·6	0·5	0·6	0·9	2·0	1·8	15·4	19·9	28·3
மொத்த கிழக்கு மண்டலம்	14·3	18·8	22·8	0·1	0·1	1·2	2·4	2·3	4·7	5·7	10·5	12·6	31·9	39·0	59·8

மகாராஷ்டிரம்	6·7	9·0	8·0	4·4	16·1	15·3	9·8	8·5	10·4	5·6	9·3	11·8	—	—	—
குஜராத்	—	—	2·9	—	14·0	14·0	—	11·6	13·5	—	0·9	1·3	—	—	—
மொத்த மேற்கு மண்டலம்	6·7	9·0	10·9	4·4	30·1	29·3	9·8	20·1	23·9	5·6	10·2	13·1	—	—	—
ஆந்திரப் பிரதேசம்	4·4	6·0	8·8	1·7	1·2	1·8	11·6	11·7	16·4	4·8	6·5	7·5	—	—	—
தமிழ்நாடு	3·1	5·3	6.8	2·1	4·2	5·2	7·9	10·3	13·4	3·2	4·2	5·0	—	—	—
கேரளம்	0·7	1·1	1·4	0.1	0·1	1·1	0·2	0.2	0·5	—	0·4	0·7	—	—	—
மைசூர்	2·5	3·5	4·9	3·0	3·8	7·5	5·7	4·6	8·8	2·3	3·8	5·1	—	—	—
மொத்த தெற்கு மண்டலம்	10·7	15·9	21·9	6·9	9·3	15·6	25·4	26·8	39·1	10·3	14·9	18·3	—	—	—
எல்லா மண்டலங்களும் (யூனியன் பகுதி நீங்கலாக)	157·1	78·8	99·7	29·0	53·0	70·6	50·8	71·4	98·2	56·1	86·7	99·4	32·4	39·9	61·0

அட்டவணை II

நீர்ப்பாசன வசதியுள்ள நிலம், மொத்த உற்பத்தி சக்தி, நகரங்கள், கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தல் மண்டலம், மாநில வாரியாக.

மண்டலம்	நீர்ப்பாசன வசதியுள்ள நிலம் (மொத்தம்) மில்லியன் ஏக்கர்கள்			மொத்த உற்பத்திச் சக்தி			நகரங்கள் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை	மின் வசதிபெற்ற நகரங்கள், கிராமங்களின் எண்ணிக்கை	
	1950—51	1960—61 மதிப்பீடு	1965—66 எதிர்பார்க்கப்பட்டது	1950—51	1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது		1960—61	1965—66 எதிர்பார்க்கப்பட்டது
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(19)
ஜம்மு காஷ்மீர்	0·7	0·7	0·8	6	13	61	7,000	101	301
பஞ்சாப்	7·4	10·4	12·7	68	271	649	21,049	2,030	4,030
இராஜஸ்தான்	3·2	4·6	6·2	24	173	394	31,931	140	440
மொத்த வடக்கு மண்டலம்	11·3	15·7	19·7	98	457	1,104	59,980	2,271	4,771

மத்தியப் பிரதேசம்	2·2	2·6	4·2	42	305	754	70,236	434	1,434
உத்திரப் பிரதேசம்	12·9	17·2	21·2	184	460	1.090	1,12,208	4,500	6,500
மொத்த நடு மண்டலம்	15·1	19·8	25·4	226	765	1,844	1,82,444	4,934	7,934
அஸ்ஸாம்	1·3	2·6	3·1	3	23	149	25,355	59	259
பீகார்	5·1	7·6	10·7	45	591	939	67,078	1,850	3,850
ஒரிஸ்ஸா	2·5	3·5	4·7	5	264	558	48,437	140	340
மேற்கு வங்காளம்	3·0	4·2	6·0	522	986	1,608	38,591	467	767
மொத்த கிழக்கு மண்டலம்	11·9	17·9	24·5	575	1,864	3,254	1,79,461	2.516	5.216
மகாராஷ்டிரம்	3·1	5·0	9·0	438	827	1,545	54,904	924	2,024
குஜராத்	—	—	—	—	373	669	—	797	1,597
மொத்த மேற்கு மண்டலம்	3·1	5·0	9·0	438	1,200	2,214	54,904	1,721	3,621
ஆந்திரப் பிரதேசம்	6·2	8·8	11·8	21	270	587	26,743	2.125	4,125
தமிழ்நாடு	5·5	8·0	8·8	168	541	918	18,646	5,961	11,461
கேரளம்	0·8	1·4	1·9	34	139	551	4,685	1,508	2,508
மைசூர்	1·1	2·2	3·3	107	224	800	26,167	1,650	2,650
மொத்த தெற்கு மண்டலம்	13·6	20·4	25·8	330	1,174	2,856	76,241	11,244	20,744
யூனியன் பகுதிகள் நீங்கலாக எல்லா மண்டலங்களும்	55·4	78·8	104·4	2,257	5,460	12,718	5,53,030	22,686	42,286

அட்டவணை III

சாலை நீளளவு, மண்டல, மாநில வாரியாக.

மண்டலம்	சாலை நீளளவு (தளமிட்டது)					
	மார்ச் 1956			மார்ச் 1959		
	சாலை நீளளவு	நூறு சதுர மைலுக்கு	ஆயிரம் மைலுக்கு	சாலை நீளளவு	நூறு சதுர மைலுக்கு	ஆயிரம் மைலுக்கு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
ஜம்மு காஷ்மீர்	874	0·94	0·25	874	0·94	0·25
பஞ்சாப்	4,337	9·16	0·23	5,462	11·51	0·29
இராஜஸ்தான்	5,543	4·20	0·30	7,508	5·66	0·41
மொத்த வடக்கு மண்டலம்	10,754	3·14	0·27	13,844	5,22	0·35
மத்தியப் பிரதேசம்	11,495	6·73	0·39	11,495	6·73	0·39
உத்திரப் பிரதேசம்	11,162	9·91	0·16	12,036	10·61	0·17
மொத்த நடு மண்டலம்	22,657	7·97	0·23	23,531	8·28	0·24
அஸ்ஸாம்	1,440	1·69	0·13	1,668	1·96	0·15
பீகார்	5,363	8·09	0·12	7,031	10·62	0·16
ஒரிஸ்ஸா	3,797	6·32	0·23	3,797	6·32	0·23
மேற்கு வங்காளம்	5,894	16·87	0·19	6,330	18·11	0·20
மொத்த கிழக்கு மண்டலம்	16,494	6·70	0·16	18,826	9·48	0·19
மகாராஷ்டிரம்	18,417	9·64	0·33	20·464	10·71	0·37
குஜராத்	—	—	—	—	—	—
மொத்த மேற்கு மண்டலம்	18,417	9·64	0·33	20,464	10·71	0·37
ஆந்திரப் பிரதேசம்	14,463	13·58	0·42	15,465	14·63	0·45
தமிழ்நாடு	15,116	30·06	0·47	16,744	33·37	0·52
கேரளம்	3,004	20·57	0·19	5,050	34·58	0·32
மைசூர்	11,493	15·52	0·53	15,775	21·29	0·72
மொத்த தெற்கு மண்டலம்	44,076	18·02	0·43	53,034	21·87	0·52
(யூனியன் பகுதிகள் நீங்கலாக) எல்லா மண்டலங்களும்	1,12,398	9·06	0·28	1,29,699	10·87	0·33

அட்டவணை IV

மண்டலம்	கல்வி: 6 முதல் 11 வயதுள்ள பள்ளிச் சிறுவர்களின் சதவீதம் 1955—56	1960—61	1965—66 எதிர்பார்க்கப் பட்டது	படுக்கைகள்: 1960—61 எண்ணிக்கை	ஆயிரம் மக்களுக்கு	1965—66 எதிர்பார்க்கப் பட்டது எண்ணிக்கை	மில்லியன் மக்களுக்கு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
ஜம்முகாஷ்மீர்	24·7	45·7	62·3	2,830	791	3,795	1,012
பஞ்சாப்	56·2	61·8	74·6	14,700	724	16,785	737
இராஜஸ்தான்	24·2	42·0	68·2	6,500	323	8,700	385
மொத்த வடக்கு மண்டலம்	38·6	51·3	70·7	24,030	605	29,280	667
மத்தியப் பிரதேசம்	40·9	47·0	64·0	12,220	377	16,558	459
உத்திரப் பிரதேசம்	33·5	45·4	61·7	17,700	240	23,200	291
மொத்த நடு மண்டலம்	35·6	45·9	62·4	29,920	282	39,758	343
அஸ்ஸாம்	59·4	61·7	77·4	4,000	337	6,540	480
பீகார்	35·7	53·5	72·6	10,160	219	13,070	257
ஒரிஸ்ஸா	34·9	47·8	64·6	4,000	228	5,215	271
மேற்கு வங்காளம்	73·6	65·6	73·4	26,000	743	30,765	779
மொத்த கிழக்கு மண்டலம்	49·3	57·3	72·2	44,160	439	55,590	501
மகாராஷ்டிரம்	66·4	73·3	90·5	10,000	253	12,500	285
குஜராத்	66·4	72·0	84·2	6,000	291	7,366	317
மொத்த மேற்கு மண்டலம்	66·4	72·9	88·3	16,000	266	19,866	296
ஆந்திரப் பிரதேசம்	56·7	60·3	84·5	17,500	486	22,500	582
தமிழ்நாடு	66·4	78·9	100·0	22,455	667	29,485	816
கேரளம்	107·1	108·8	108·7	11,420	677	14,170	753
மைசூர்	57·8	67·4	88·2	11,100	471	14,596	593
மொத்த தெற்கு மண்டலம்	67·4	74·7	93·5	62,475	568	80,751	675
யூனியன் பகுதி நீங்கலாக எல்லா மண்டலங்களும்	51·8	60·8	77·4	1,76,585	445	2,25,245	522

அட்டவணை V

பல்வேறு மாநிலங்களில் மொத்த பொறி வழி (Manufacturing) வேலை, நிகர உற்பத்தியில் கட்டமைந்த தொழிலின் (Organised industry) பங்கு.

மாநிலங்கள்	கட்டமைந்த தொழிலின் பங்கு (சதவீதம்)	
	மொத்த பொறிவழி உற்பத்தி (நிகர)	மொத்த பொறிவழி வேலை
ஆந்திரப் பிரதேசம்	44·3	12·0
அஸ்ஸாம்	70·5	23·0
பீகார்	58·7	14·7
டெல்லி	53·7	38·5
குஜராத்	69·2	42·0
கேரளம்	38·2	18·5
மத்தியப் பிரதேசம்	49·2	14·5
தமிழ்நாடு	51·9	16·3
மகாராஷ்டிரம்	71·8	38·9
மைசூர்	49·1	18·3
ஒரிஸ்ஸா	40·8	6·2
பஞ்சாப்	29·3	17·3
இராஜஸ்தான்	44·7	11·8
உத்திரப் பிரதேசம்	48·1	14·9
மேற்கு வங்காளம்	65·0	42·0
இந்தியா முழுமைக்கும்	57·3	21·9

மூலம்: National Council of Applied Economic Research: A study of Regional Differences in Industrial Pattern (1960).

8. தமிழ்நாட்டில் பொருளாதார முன்னேற்றம்

(Economic Development in Tamilnadu)

தமிழ்நாட்டின் மண்டலங்கள்

தமிழ்நாட்டை நான்கு இயற்கைப் புவியியல் மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

(1) கரையோரச் சமவெளிகள் (The Coastal plain)

(2) கிழக்கு மலைத்தொடர் (The Eastern ghats)

(3) மத்திய பீடபூமி (The Central plateau)

(4) மேற்கு மலைத்தொடர் (The Western ghats)

பழவேற்காடு ஏரி முதல் கன்னியாகுமரிவரை 620 மைல் (992 கி. மீ.) அளவிற்குப் பரந்து விரிந்துள்ள கரையோரச் சமவெளிகளை மூன்று துணை மண்டலங்களாகப் பிரிக்கலாம். அவை வடசம வெளி, காவிரி கழிமுகப் பகுதி (Delta), தென்சமவெளி ஆகியவை யாகும்.

செங்கற்பட்டு மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதி, வடஆர்க்காடு மாவட்டத்தின் கிழக்குப்பகுதி, திருச்சிராப் பள்ளி மாவட்டத்தின் வடபகுதி ஆகியவை அடங்கியது வடசமவெளி யாகும். 50 முதல் 60 மைல் வரை பரந்துள்ள இச்சமவெளி கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 250 அடி உயரத்தில் அமைந்து உள்ளது. காவிரி கழிமுகப் பகுதியில் தாஞ்சாவூர் மாவட்டமும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு பகுதியும் அடங்கியுள்ளன.

தென் கடற்கரைச் சமவெளியில் இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கியுள்ளன. இங்கு வண்டல் மண், கடல் சார்ந்த பொருள்கள், காற்றினுல் அடித்து வரப்பட்ட மணற்பாறைகள் (**alluvial marine aeolian deposits**) படிந்துள்ளன.

பாலாற்றுக்கும், காவிரியாற்றுக்கு மிடையில் கடற்கரைச் சம வெளியில் மலைத்தொடர்கள் விட்டு விட்டு ஆங்காங்கு அமைந் துள்ளன. இவை ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்விராயன் மலை, பச்சை மலை, கொல்லி மலை. இவற்றின் இடையேயுள்ள தொலைவும் அதிகம். கடப்பை கடைமுனைப் பகுதி (**Tail of Cuddapah**) யில் உள்ள வருஷநாடு—ஆண்டிப்பட்டி மலையும் (**Varushanad - Andipatti range**), அதன் பின்னர் ஏலமலையும் உள்ளன. விட்டு விட்டுப் பரவி நிற்கின்ற இந்த மலைத்தொடர்கள் கிழக்குமலைத் தொடராகும். ஜவ்வாதுமலை பீடபூமியின் மட்டத்தி லிருந்து **3,600** முதல் **3,800** அடி வரையும் சேர்வராயன் மலை **5,000** முதல் **5,400** அடி வரையும் உயர்ந்து நிற்கின்றன.

மத்திய பீடபூமி கிழக்கு, மேற்கு, மலைத் தொடர்களுக்கிடையே அமைந்துள்ளது. இப் பகுதி ஆங்காங்கே **500** அடி முதல் **2,000** அடி வரை உயர முடையதாகவும் மேடு பள்ளங்கள் நிறைந்தும் காணப் படுகிறது. இப் பகுதிக்கு மேற்கே நீலகிரிக்கும் ஆனைமலைக்கு மிடையே பாலக்காட்டுக் கணவாய் அமைந்துள்ளது. ஆற்றின் நெடுக இப்பீடபூமி **400** அடி முதல் **600** அடி வரையும், மேற்கே **1,200** அடி முதல் **1,500** அடி வரையும் உயர்ந்ததாக உள்ளது. இடை யிடையே கருங்கற்களாகிய பாறைகளும் பழங்காலப் பாறைகளும் காணப்படுகின்றன.

பவானி, நொய்யல், அமராவதி ஆறுகள் நீலகிரியிலிருந்தும் ஆனைமலையிலிருந்தும் உற்பத்தியாகிப் பள்ளத்தாக்குகளினூடே பாய்ந்து ஓடுகின்றன. இப்பீடபூமியின் அகலம் வடக்கே பாலக் காட்டின் அருகே **72** மைல்களாகும். இந்த அகலம் போகப் போகக் குறைந்து தெற்கே செங்கோட்டையின் அருகே **14** மைல் அகலமே உள்ளது.

பீடபூமிக்கு மேற்கே யுள்ள உயர்ந்த மலைத் தொகுதியே மேற்கு மலைத் தொடராகும். பாலக்காட்டுக் கணவாயின் இருமருங்கிலும் இத் தீபகற்பத்தின் மிக உயரமான மலைகள் உள்ளன. இவைதாம் வடக்கே நீலகிரி, தெற்கே ஆனைமலை, பழனிமலை, ஏலமலையாகும்.

நீலகிரிமலை **1,000** சதுர மைல் வரை நெருக்கமாக அமைந் துள்ளது. பக்கங்களனைத்திலும் செங்குத்தாக உயரமாக அமைந்

துள்ள இம் மலை 6,000 முதல் 8,000 அடி வரையில் உயர்ந்துள்ளது. மற்றொரு மலைத்தொடர் ஆனைமலை யாகும். இம் மலைத்தொடர் இத் தீபகற்பத்திலுள்ள மிக உயரமான மலைத் தொடராகும். பழனிமலை, ஏலமலை, வருஷநாடுமலை ஆகியவை மேற்குமலைத் தொடரின் தொடர்ச்சியே யாகும்.

தமிழ் நாட்டின் ஆறுகள் விரிந்தும், குறுகியும் பாய்ந்தோடு கின்றன. ஆனால், இவை கிழக்கு மலைத்தொடர்களினூடே ஓடும் போது மட்டும் அவற்றின் அகலம் சிறிது குறுகலாகிறது. இந்த ஆறுகள் மழையையே நம்பியுள்ளன. ஓராண்டில் ஐந்து அல்லது ஆறு திங்கள்களில் பெய்யும் மழையினால்தான் இந்த ஆறுகள் நீர் பெறுகின்றன. இந்த ஆறுகள் மென்மையான மண்வளப் பகுதியின் மீது ஓடுகின்றதால் கோடைக்காலத்தில் இவை ஏறத்தாழ வறண்டு கிடக்கின்றன. இந்த ஆறுகளைப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமாயின் நீர்த்தேக்கங்களையும் அணைக்கட்டுகளையும் கட்ட வேண்டியுள்ளது. இதற்குச் செலவு ஏராளமாகும்.

தமிழ்நாட்டின் முக்கியமான ஆறுகள், பாலாறு, பெண்ணை யாறு, காவிரி, வைகை, தாமிரவருணி ஆகும். இவற்றில் காவிரியாறு தலையாய முக்கியத்துவம் உடையதாகும். இந்தியாவின் மற்ற ஆறு களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆறு பெரிய ஆறு என்று சொல்ல முடியாததாயினும், இந்த ஆற்றின் கழிமுகப் பகுதி, சில சிறப்பான அம்சங்களைக் கொண்டதாக உள்ளது. இதன் பாசன வசதிகள் குறிப்பிடத் தக்கவை யாகும். மேலும், இந்த ஆற்றிலிருந்து குறிப் பிடத் தக்க அளவில் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

பொழிகின்ற மழையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு மூன்று சிறப்பான பருவங்களை உடையதாகும்.

(1) முன் மழைக்காலம் (தென் மேற்குப் பருவமழை) ஜூன் முதல் செப்டம்பர் வரை.

(2) பின்மழைக் காலம் (வட கிழக்குப் பருவமழை) அக்டோபர் முதல் ஜனவரி வரை.

(3) இடையேயுள்ள வறண்ட பருவம். பிப்ரவரி முதல் மே வரை.

தென் மேற்குப் பருவக் காற்று மேற்குமலைத் தொடரை நோக்கி வீசுகிறது. இடையேயுள்ள மலைத் தொடர்களினால் தடுக்கப்பட்டா லன்றி அதிக மழை இருப்பதில்லை. நீலகிரி மாவட்டத்தில் உயர்ந்த

மலைகளில்தான் இப்பருவத்தில் அதிகமழை பெய்கிறது. ஏனெனில், தென்மேற்குப் பருவக்காற்று இம் மலைகளை நேரடியாகத் தாக்கு கின்றது. கோயமுத்தூர் மாவட்டத்தின் வடக்குப்பகுதி, சேலம் மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய வற்றில் பின்மழைக் காலத்தைவிட முன்மழைக் காலத்திலேயே அதிகமழை பெய்கிறது.

வங்காள விரிகுடாவில் காற்றமுத்த மண்டலத்தைப் பெரிதும் பொறுத்துப் பின் மழைப் பருவக்காலத்தில் மழை பெய்கிறது. பருவக்காற்றுக் காலத்தின் பிற்பகுதியில் பருவக்காற்று கிழக்குக் கடற்கரையை நோக்கி வீசுகிறது. பருவக்காற்று கிழக்காக அல்லது வடகிழக்காக வீசுவதால் கிழக்குக் கடற்கரை நெடுக கடுமையான மழை பெய்கிறது. உள்நாட்டில் மலைத்தொடரை நோக்கிச் செல்லச்செல்ல மழை சிறிது சிறிதாகக் குறைந்து விடுகிறது. கோடையில் தட்பவெப்பநிலை சாதாரணமாக வறண் டுள்ளது. இடையிடையே இடியுடனும் மின்னலுடனும் மழை பெய்கிறது. வெப்பம் அதிகரிக்கையில் இவை அடிக்கடி நிகழ் கின்றன.

பொதுப்படையாகச் சொன்னால், நீலகிரி மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி வட்டத்திலும் அதிக அளவு மழை பெய்கிறது. மழையைப் பொறுத்தமட்டில் தென் மேற்கிலுள்ள கன்னியாகுமரி மூன்றாவது இடமே பெறுகிறது. உள்நாட்டுப் பீடபூமி முழுவதிலும் மிகக் குறைந்த அளவே மழை பெய்கிறது. கோயமுத்தூர் மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் மிகக் குறைந்த அளவே மழை பெய்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கையில் மழை அளவைக் கருத்தில் கொள்வது முக்கியமாகும். மாநிலத்தின் பெரும்பகுதியில் மழை குறைவு. ஆகவே, விவசா யத்தில் நவீன முறைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஏரிகள், கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் (deep bore wells) மூலம் பாசன வசதி செய்யவேண்டுவது இன்றியமையாத ஏற்பாடாகும்.

தமிழ்நாட்டில் தனிநபர் சாகுபடி நிலம் (per capita arable land) 0·226 ஹெக்டரே ஆகும். இது பிற மாநிலங்களில் உள்ள சாகுபடி நிலத்தின் பரப்பளவைவிட மிகக் குறைவாகும். பிற மாநிலங்களில் உள்ள சாகுபடி நிலங்கள் குறித்த விவரம் பின் வருமாறு :—

ராஜஸ்தானம்	—	1·3	ஹெக்டேர்
மத்தியப்பிரதேசம்	—	0·77	,,
குஜராத்	—	0·68	,,
மைசூர்	—	0·61	,,

பயன்படுத்தாது உள்ள நிலத்தின் (unutilised land potential) பரப்பளவும் தமிழ்நாட்டில் மிகக் குறைவாகும். அஸ்ஸாமிலும் இராஜஸ்தானிலும் இத்தகைய நிலங்களின் சதவீதம் முறையே 51·8, 39·1 ஆகும்.

பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அல்லது தேசிய சராசரியுடனும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த மாநிலத்தி லுள்ள காடுகளின் பரப்பளவு மிகவும் குறைவு. இந்நாடு முழுவது முள்ள பரப்பளவில் 22% காடுகளாகும். ஆனால், தமிழ்நாட்டில் 17 சதவீதமே காடுகள் உள்ளன. காடுகளை விரிவான அளவில் வளர்ப்பதற்கான வாய்ப்புகள் இங்கு மிகவும் குறைவு.

தமிழ்நாடு நீண்ட கடற்கரையைக் கொண்டதாகும். எனவே, மீன் வளர்ச்சிக்கு இங்குக் கணிசமான வாய்ப்புகள் உள்ளன. இப்பொழுது மீன் உற்பத்தியில் மகாராஷ்டிரம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு முன்னிலையில் நிற்கிறது. இம்மாநிலத்தில் கடலில் பிடிக்கப்படும் மீன் அளவில் 88 சதவீதம் தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியா குமரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. உள்நாட்டு மீன் பிடிப் பிலும் இந்த மாவட்டங்களிலிருந்துதான் அதிக அளவு மீன் கிடைக்கிறது.

இம்மாநிலத்தின் நிகர உற்பத்தியில் கனிப்பொருள்கள் 0·6 சதவீதமேயாகும். இது மிகவும் குறைவு. இம்மாநிலத்தில் பெரும்பாலும் சுண்ணாம்புக் கற்களும், மாக்னசைட், இல்மனைட், பழுப்பு நிலக்கரி, களிக்கல் ஆகியவையே கிடைக்கின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் 100 சதுர மைல்கள் பரப்பளவில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாகக் கணக்கிடப்பட் டுள்ளது. ஏற்கனவே வெட்டப்பட்ட சுரங்கங்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 63 இலட்சம் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது. ஏற்கனவே உள்ள மின்சக்தி உற்பத்திக்கு இது மிகச் சரியான அளவில் போதுமானதாகும்.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில்தான் இரும்பு கிடைக்கிறது. உப்பு மற்றொரு கனிப்பொருள் ஆகும். இது தூத்துக்குடியில் அதிக அளவில் கிடைக்கிறது. காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள வடிநிலங்களில் எண்ணெய் எடுப்பதற்காக ஆய்வு வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பற்றிய தொழில்நுட்பப் பொருளாதாரக் கணக்கீடு

தமிழ்நாட்டைப் பற்றிய தொழில்நுட்பப் பொருளாதாரக் கணக்கீடு (Techno-Economic Survey)[1] விஞ்ஞானவியல் பொருளாதார ஆராய்ச்சி தேசிய கழகத்தால் (National Council of Applied Economic Research) 1958ஆம் வருடம் அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கீட்டிலிருந்து தெரியவரும் சில முடிவுகள் மிகவும் முக்கியமானவை. அவற்றை ஆராய்வோம்.

தமிழ்நாடு பழங்காலத்திலிருந்து வாழ்க்கைத்தரம் குறைந்ததாகவே இருந்து வந்திருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து வேறு நாட்டிற்குக் குடியேற்றம் இருந்தாக வேண்டும் என்ற அளவிற்கு மக்கள் தொகை அதிகமாகவும், சாதனங்கள் குறைவாகவும் இருந்தன. இப்படி வெளியேறிய உழைப்பாளிகள் சிலோன், பர்மா, மலேயா, ஜாவா, மர்ரிஷியஸ், மேற்கு இந்தியத் தீவுகள், கிழக்கு, தெற்கு, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் முன்னேறுவதற்குக் காரணமாக இருந்தனர். உள்நாட்டில் விவசாயத்தின் தேவைக்கு மேற்பட்ட இந்த உழைப்பாளிகளில் பெரும்பாலோர் தேர்ச்சி பெறாதவர்களாகவே இருந்தனர்.

இப்படி நாட்டைவிட்டு வெளியேறுவது சமீபகாலத்தில் நின்றுவிட்டது. முன்பு வெளியேறிய உழைப்பாளிகள் முழுவதும் தமிழ்நாட்டிலேயே வேலை தேடிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதில் ஒரு சிறு பகுதியினருக்குத்தான் இந்தியாவின் மற்றப் பகுதிகளில் வேலை கிடைத்தது. நிறையில்லா வேலை, வேலையின்மை பரவலாகக் காணப்பட்டன. வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்ததாகவே இருந்தது.

விஞ்ஞானவியல் பொருளாதார ஆராய்ச்சித் தேசிய கழகம் மேற்கொண்ட மேலீடான ஆராய்ச்சியின்படி 1956-ல் தமிழ்நாட்டின்

1. Techno-Economic Survey of Madras, Report of the National Council of Applied Economic Research, Department of Industries, Labour and Co-operation, October, 1960.

தனிநபர் வருமானம் ரூ. 277 ரூபாயாக இருந்தது. இது இந்தியாவின் தனிநபர் வருமானத்திற்கு ரூ. 34 குறைவானது. ஆனபோதிலும், நிகர உற்பத்தியை அடிப்படையாக வைத்துக் கணக்கிட்டால் வங்காளம், பம்பாய்க்கு அடுத்தபடியாகத் தொழில் துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடாகக் கருதப்பட்டு வந்தது.

இத்தகைய முரண்பட்ட நிலைமைக்குக் காரணம் அது அடைந்திருந்த தொழில் முன்னேற்றத்தின் தன்மையும் வேகமும்தான். பழங்கால முறையிலான தொழில்மயமாதலின் முதல் இரண்டு நிலைகளைக் கடந்திருந்தாலும், முடிவை அடையவில்லை. மூன்றுவது, நிலையான பொறியியல், இரசாயனத் தொழில்களில் முன்னேற்ற மடையவில்லை. தமிழ்நாடு தொழில்மயமாக வேண்டுமானுல் முக்கியமாக இவை முன்னேற்றமடைய வேண்டும். ஆகவே, இத்தகைய வளர்ச்சியை நிர்ணயிக்கும் தொழில்களின் முன்னேற்றத்தைத் துரிதமாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இதைக் கருத்திற்கொண்டு அந்தக் கணக்கீடு இரசாயன, பொறியியல், தொழில்களாகிய நெய்வேலித் திட்டத்தையும்; இரும்பு, எஃகு, அலுமினியம் சம்பந்தப்பட்ட சேலம் திட்டத்தையும்; கடல் இரசாயனத்தை (marine chemicals) அடிப்படையாகக் கொண்ட தூத்துக்குடி திட்டத்தையும் கொண்டதொரு தொழில் முன்னேற்ற முன் வரைவை உருவாக்கியது. இத்திட்டங்கள் தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கியுள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இவை தமிழ்நாட்டின் பரவலான தொழில் முன்னேற்றத்திற்கு முக்கியமானவையாக இருக்கும் என்றும் கருத்து தெரிவித்தது. அதன் மற்ற கருத்துகள் பின்வருமாறு :—

(1) தமிழ்நாட்டில் சக்திக்கான தேவை அதிகமாகி வருகின்றது. அதைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன. அவைகளின் ஒன்று மண்டலங்களுடைய கூட்டுறவு. இரண்டாவது அணுசக்தி.

(2) முக்கியமான இயற்கைச் சாதனங்களில் சில குறைவாக இருக்கும் நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தை அதிகரிப்பது ஒன்றுதான் முன்னேற்றத்தை அதிகரிக்கக்கூடும். ஏற்றுமதிக்கான பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; தூத்துக்குடியில் துறைமுகத்தை ஏற்படுத்தி வசதிகளைப் பெருக்க வேண்டும்.

(3) தேர்ச்சிபெற்ற அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் தமிழ்நாடு முதன்மையாக இருந்து வந்திருக்கிறது. மனித

மூலதனத்தின் (personal capital) ஏற்றுமதி என்று சொல்லப்படும் இந்த நன்மையைத் தொடர்ந்து செய்து வருவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சிகளுக்கு உற்சாகம் அளிக்கப்பட்டால், கொடுப்பதினுல் தமிழ்நாடு பயனடையும். பெறுவதனுல் மற்ற மாநிலங்கள் பயனடையும்.

(4) விவசாய உற்பத்திச்சக்தி அதிகரிப்பு தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். இத்துறையில் தமிழ்நாடு அடைந்து உள்ள முன்னேற்றம் கணிசமானது. இந்தியா முழுவதிலும் பயிர் விளைச்சலில் (crop yields) தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இன்னும் அதிகப்படுத்துவதற்கு இடமிருக்கிறது என்ற நிலையில் விவசாயக் கொள்கைகள், திட்டங்கள் இவற்றில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

அதிக விளைச்சல் தரும் பயிர்களான கரும்பு, நீண்ட இழைப் பருத்தி, நிலக்கடலை, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துமாறு பயிர் முறையை மாற்றி அமைப்பதும் முக்கியமானதாகும். விவசாயத் தொழில்நுட்ப முறைகளைத் தீவிரமாகப் பயன்படுத்தினுல், தானியங்களின் மொத்த உற்பத்தி குறைந்துவிடாவண்ணம் இத்தகைய மாற்றுப்பயிர் முறையைக் கையாள முடியும். கிராமப்புறங்கள் இன்றும் அதிகமான வளர்ச்சியடைய இத்தகைய மாற்றம் முக்கியமானது.

தமிழ்நாட்டின் முன்னேற்றம்

இந்தியாவில் கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தின் பிரச்சினைகளையும் எதிர்கால வாய்ப்புகளையும் அறிந்துகொள்ள வேண்டுமானுல், தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றித் தெரிந்து கொண்டாலே போதுமானதாகும். விவசாயத் துறையில் வளர்ச்சி, பரவலான பசுமைப் புரட்சி, தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் பெருக்கம் ஆகியவை இம்மாநிலத்தின் சாதனைகளாகும். இவைகளை 'நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திட்டங்களுக்கும், திட்டமல்லாத மற்றவைகளுக்கும் மிகக் குறைந்த தனிநபர் மத்திய அரசின் உதவியைப் பெற்றது. ஆகவே, பல்வேறு துறைகளை வளர்ச்சி அடையச் செய்ய இம் மாநிலம் தன் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.' (Obtaining the lowest percapita devolution of Central Government assistance, both Plan and non-Plan, in the entire country for the Fourth Plan period, the

State has had to marshall all its resources in order to achieve the Progress in the various sectors.)[1]

சில பொருளாதார அடையாளங்களை ஆராய்வதன் மூலம், இம் மாநிலத்தின் சாதனையை மதிப்பிடலாம். **1966—67**-ல் இம் மாநிலத்தின் உண்மை வருவாய் (real income) **1,351·78** கோடி ரூபாய்களாக இருந்தது. அது **1969—70**-ல் **1,572·52** கோடி ரூபாய் களாக அதிகரித்தது. சராசரி ஆண்டு அதிகரிப்பு **5·44** சதவீத மாகும்.

இந்தக் கால அளவில் இம்மாநிலத்தின் மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் **2** சதவீதம் என்று கொண்டால், **1966—67**-ல் **357** ரூபாயாக இருந்த தனிநபர் வருமானம் **1969—70**-ல் **390** ரூபா யாக உயர்ந்தது. தனிநபர் வருமானத்தின் சராசரி ஆண்டு அதிகரிப்பு **3·08** சதவீதமாகும். இச் சதவீதம் **1961—62**முதல் **1966—67** வரை **0·76** ஆக இருந்தது. இக்காலத்தில் மாநில வருமான அதிகரிப்பு **2·82** சதவீதமாக இருந்தது.

விவசாயத்துறையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் நம்பிக்கை யூட்டுவதாக உள்ளது. **1968—69**-ல் இதற்கு முன் கண்டிராத வறட்சி நிலைக்கு உள்ளாகி யிருந்த இத்துறை அதிலிருந்து மீட்சி யடைந்திருக்கிறது. இரசாயன உரங்கள், நீர்ப்பாசனம், இயந்திர மயமாக்குதல் இவைகளுக்கான முதலீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதன் காரணமாக விவசாய உற்பத்திச் சக்தி பெரிதும் அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பு **1966—67, 1969—70**-ல் **14·9** சதவீதமாக இருந்தது.

இதைப் போலவே தொழில்மயமாதல் பரவலாகவும், விரைவாக வும் இருந்தது. நிதி, தொழில் அமைப்பைப் பற்றிய வல்லுநர்களின் ஆலோசனை உடனுக்குடன் கிடைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இம் மாநிலம் பல நிதி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றோடுகூட, நலம்சார்ந்த தொழிலாளர் கொள்கையைக் கைக் கொண்டுள்ளது. இதன் பலனாகத் தொழில் அமைதி நிலைநாட்டப் பெற்று, அதன் காரணமாக உற்பத்திச் சக்தி அதிகரித்துள்ளது.

1961—62 முதல் **1969—70** வரை விவசாயத்துறையில் வேலையின் அளவு **1·7** சதவீதம் குறைந்தது. இதே கால அளவில், மாநில வருமானத்தில் விவசாயத் துறையின் பங்கு **4·5** சதவீதம் குறைந்தது.

1. Tamil Nadu—An Economic Appraisal—1971-72; Finance Department, Govt. of Tamil Nadu.

இது பொருளாதார அமைப்பு புதுமை மயமாதலை அல்லது தற்கால மயமாதலைக் (Modernisation) குறிக்கிறது. மாநில வருமானத்தில் இரண்டாம்படி (Secondary) வேலைகளின் (தொழில், சுரங்கம் போன்றவை) பங்கு 4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பொருளாதார விடுபடு கட்டத்தை ('Take off stage') அடைவதற்குச் சமுதாயப்-பொருளாதாரப் பொது வசதிகளில் கணிசமான முதலீடு செய்வது முற்படு தேவையாக (Pre-requisite) இருக்கிறது. இச் செலவுகளிலிருந்து கிடைக்கும் நேரடி விளைவுகள் தனியார் துறை தொழில் துணிவோரைக் கவருவதாக இருக்காது. ஆனால், இவற்றில் ஏற்படும் புறச் சிக்கனங்களின் (external economies) காரணமாக மாநில அரசாங்கமே இச் செலவுகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநில அரசாங்கம் பொது, தொழில் நுட்பக் கல்வி, போக்குவரத்து, செய்தித் தொடர்புகள், மூலதனச் செறிவு (Capital intensive) அதிகமுள்ள நீர்-மின்சாரத் திட்டங்கள் இவற்றிற்காகக் கணிசமான அளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறது. தற்போது கிராமப் புறங்களுக்கும் மின்சார வசதி விரிவுபடுத்தப் படுகிறது. அதன் பலனாக அங்கெல்லாம் மின்சக்தி மலிவான, எளிதில் கிடைக்கக் கூடிய உள்ளீடாக இருக்கிறது. அங்குத் தற்போது ஏற்பட்டுள்ள பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

பொருளாதர அமைப்பின் முக்கியத் துறைகளில் கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் நிலைப்பேற்றோடு கூடிய வளர்ச்சியை (growth with stability) அடைவதற்கு வேலையின்மைப் பிரச்சினையும் அதிகரித்து வரும் பண வீக்கமும் இடையூறுகளாக உள்ளன. இன்னும் முக்கியமான பிரச்சினை, கற்றோர் வேலையின்மையாகும் (educated unemployment).

ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் அடிப்படைத் தேவைகள் அளிக்கப்படா விட்டால், அந்நாடு அடைந்துள்ள பொருளாதார வளர்ச்சி சமூக நியாயத்திற்குப் புறம்பானதாகத்தான் இருக்கும். இதைத் தடுப்பதற்காகவும் திறமையுள்ள ஆனால் பயன் படுத்தப்படாது வீணேயிருக்கும் மனித சக்தியைப் பயனுள்ள மூலதனமாக மாற்றவும் மாநில அரசாங்கம் பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது.

இந்த நோக்கத்திற்காக மாநில அரசாங்கம் மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளில் பல கைத்தொழில் பயிற்சி நிலையங்களை அமைத்தல், சிறு தொழில்களுக்குச் சுலபத் தவணைகளில்

கடனளித்தல் ஆகியவை முக்கியமானவைகளாகும். எப்பொழுதும் வறட்சியால் பாதிக்கப்படும் இடங்களில் காணப்படும் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பல, உழைப்புச் செறிவுள்ள (labour intensive) மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தும் வேலைகள் ஆராயப்பட்டு, மேற்கொள்ளப் படுகின்றன.

விலை உயர்வுப் பிரச்சினையைப் பற்றி மாநில அரசாங்கம் அறிந்துள்ளது. 1969—70, 1970—71 ஆண்டுகளில் அதிகமான விளைச்சலின் காரணமாக மாநில அரசு தனது துரிதக் கொள்முதல் கொள்கையை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆனாலும், எங்கெல்லாம் விலை உயர ஆரம்பிக்கிறதோ அங்கெல்லாம் அதைக் கட்டுப்படுத்த, உணவுப் பற்றுக் குறையைச் சமாளிக்க, சேமிப்புக் காப்பிருப்பு நடவடிக்கைகள் (buffer stock operations) மேற்கொள்ளப் படுகின்றன.

இத்தகைய பல் நோக்க முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு, நிதி பெருமளவில் வேண்டியிருக்கிறது. பல்வேறு பொருளாதாரத் துறைகளில் கணிசமான அளவு முன்னேற்ற மடைவதற்கு இம்மாநிலம் தன் கருவூலப்பெட்டி முழுவதையும் திறந்துவிட வேண்டியிருக்கிறது. பெரும் திட்டங்கள் பல துரிதமாகச் செயல் படுத்தப்படுகின்றன. பல இன்னல்களுக்கிடையே தோற்றுவிக்கப் பட்ட முன்னேற்றத்தின் வேகம் தொடர்ந்து இருக்கவேண்டுமானால், மத்திய அரசாங்கமும் நிதி நிலையங்களும் பெருமளவில் முன்வந்து உதவி செய்யவேண்டும். அப்போதுதான் இன்றைய கனவுகள் நாளைய நனவுகளாகும்.

எதிர்கால முன்னேற்றத்திற்கு முக்கியமான பெரும் நோக்கங்களைக் கொண்ட மாநகர் முன்னேற்றத் திட்டம், காவேரி கழிமுகத் திட்டம் முதலியவற்றைப் பரந்த கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டும். முன்பே ஏற்பட்டிருக்கும் திட்ட வளர்ச்சியின் காரணமாக மாநில அரசாங்கம் பெரிய அளவில் முன்னேற்றத்திற்காக ஒதுக்கீடு செய்யவேண்டியிருக்கிறது. இதை உணர்ந்து, இம் மாநிலத்தின் பிரச்சினைகள், உயர்ந்த நோக்கங்கள் இவற்றையும் உணர்ந்துகொண்டு மத்திய அரசாங்கம் அதற்குத் தக்கவாறு உதவி செய்யவேண்டும்.

பிற்சேர்க்கை 1

விளக்க வரைபடங்கள்
தமிழ்நாட்டின் முன்னேற்றம்

இந்திய மாநிலங்களின் மக்கள் தொகை—1971



மூலம் தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு-1971

தமிழ்நாட்டின் மக்கள் தொகை

1901 - 1981





மூலம் - தமிழ்நாடு-ஒரு பொருளாதார ஆய்வு-1971

தமிழ்நாட்டில்
நிலத்தைப் பயன்படுத்துதல்
(சதவீதம்)



மூலம் - தமிழ்நாடு - ஒரு பொருளாதார - ஆய்வு - 1971

தமிழ்நாட்டில் மழை


மழை மில்லிமீட்டரில்
1220
1140
1060
980
900
820
740
660
1958-59
59-60
60-61
61-62
62-63
63-64
64-65
65-66
66-67
67-68
68-69
69-70
இயல்பானது
உண்மையானது


தமிழ்நாட்டில் மொத்த விதைக்கப்பட்ட, நீர்ப்பாசனம் பெற்ற பரப்பளவு
நீர்ப்பாசனம் பெற்ற மொத்தப் பரப்பளவின் சதவிகிதம்
1950-51
55-56
60-61
65-66
70-71
ஹெக்டேர்கள் இலட்சத்தில்
மொத்த விதைக்கப்பட்ட பரப்பளவு
மொத்த நீர்ப்பாசனம் பெற்றவை



மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு-1971

தமிழ்நாட்டில்
உற்பத்தியாக்கப்பட்ட-வாங்கப்பட்ட-மின்சக்தி



மூலம் - தமிழ்நாடு-ஒரு பொருளாதார ஆய்வு – 1971

தமிழ்நாட்டில்

கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல்-மின்சக்தி பெற்ற பட்டிணங்களும் கிராமங்களும் (மார்ச் 31)



மூலம்- தமிழ்நாடு- ஒரு பொருளாதார ஆய்வு-1971


தமிழ்நாட்டில்
பயன்படுத்தப்பட்ட பம்புசெட்டுகள்
மார்ச் இறுதியில்
எண்ணிக்கை ஆயிரத்தில்
600
560
480
400
320
240
160
80
0
1961
1962
1963
1964
1965
1966
1967
1968
1969
1970
1971


தமிழ்நாட்டின் அன்னிய இறக்குமதி ஏற்றுமதி மதிப்பு
ரூபாய்கள் கோடியில்
340
320
280
240
200
160
120
80
40
இறக்குமதி
ஏற்றுமதி
1958-59
1959-60
1960-61
1961-62
1962-63
1963-64
1964-65
1965-66
1966-67
1967-68
1968-69
1969-70

தமிழ்நாட்டில் சாலைகளின் நீளம்

கிலோ மீட்டர் ஆயிரத்தில்





மூலம்-தமிழ்நாடு-ஒரு பொருளாதார ஆய்வு—1971

பிற்சேர்க்கை 2

அட்டவணை VI

தமிழ்நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சி

வருடம்	மக்கள் தொகை மில்லியனில்
1901	19·3
1911	20·9
1921	21·6
1931	23·5
1941	26.3
1951	30·1
1961	33·7
1962	34·3
1963	34·9
1964	35·4
1965	36·0
1966	36·6
1967	37'3
1968	38·0
1969	38 6
1970	39·3
1971	41 1
*1976	43·6
*1981	46 5

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

*எதிர்பார்க்கப்படுவது.

அட்டவணை VII

தமிழ்நாட்டின் மாநில தனிநபர் வருமானங்கள்

1960—61 முதல் 1969—70 வரை

(நடப்பு விலைகளில்)
(ரூபாய்கள் கோடியில்)

	1960—61	62—63	64—65	66—67	68—69	'70
நிகரமாநில வருமானம்	1,129·56	1,256·95	1,497·31	1,915·78	2,176·53	2,443·53
தனி நபர் வருமானம்	335	359	410	505	551	606
(1960—61 விலைகளில்)						
நிகர மாநில வருமானம்	1,129·56	1,212·77	1,275·57	1,351·78	1,423·70	1,572·52
தனி நபர் வருமானம்	335	347	349	357	360	390

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை VIII

தமிழ்நாட்டில் நிலத்தைப் பயன்படுத்துதல்—சதவீதம்

	நிலத்தின் பிரிவுகள்	1951—52	1959—60	1970—71
1.	காடுகள்	15·4	14·4	14·7
2.	சாகுபடிக்குப் பயனற்ற நிலம்	7·4	7·2	6·7
3.	விவசாயத்திற்குப் பயன் படுத்தாத நிலம்	9·2	9·9	9·8
4.	சாகுபடிச் செய்யக்கூடிய நிலம்	7·6	5·6	5·0
5.	நிரந்தர புல்வெளிகளும் மற்ற மேய்ச்சல் நிலமும்	2·7	2·8	2·6
6.	தோட்ட, மரப்பயிர் நிலங்கள் (நிகர விதைக்கப்பட்ட பரப் பளவில் சேர்க்கப்படாதது)	3·2	1 9	2·1
7.	நடப்பு தரிசு நிலங்கள்	8·7	7·9	7·0
8.	மற்ற தரிசு நிலங்கள்	5·3	4·9	3·8
9.	நிகர விதைக்கப்பட்ட பரப்பளவு	40·5	45·4	48·3
10.	ஒரு முறைக்கு மேல் விதைக்கப் படும் நிலங்கள்	7·1	8 8	9·6
11.	உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நிலம்	69·5	75·7	26·2
12.	உணவுப் பயிர்களல்லாதவை (non food crops) பயிரிடப் படும் நிலம்	30·5	24·3	23·8

மூலம்: தமிழ்நாடு – ஒரு பொருளாதார ஆய்வு, 1971,

அட்டவணை IX

தமிழ்நாட்டில் மழை

(மில்லிமீட்டரில்)

வருடம்	மொத்தம்	
	இயல்பானது	உண்மையானது
1958—59	945·7	748·9
1959—60	945·7	821·9
1960—61	945·7	978·3
1961—62	945·7	867.0
1962—63	945·7	931·4
1963—64	945·7	907·6
1964—65	945·7	859·1
1965—66	945·7	870·9
1966—67	945·7	1,152·8
1967—68	945·7	958·8
1968—69	945·7	682·5
1969—70	945·7	1,036·7

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை X

தமிழ்நாட்டில் நீர்ப்பாசனம் பெற்ற மொத்த பரப்பளவின் சதவீதம்

	1951—52	1955—56	1960—61	1965—66	1970—71
நீர்ப்பாசனம் பெற்ற மொத்த பரப்பளவின் சதவீதம்	38·9	43·1	44·2	45·0	43·5
			(000' ஹெக்டேரில்)		
மொத்த விதைக்கப்பட்ட பரப்பளவு	6,357	6,867	7,321	7,066	7,531

மூலம்: தமிழ்நாடு – ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை XI

தமிழ்நாட்டில் உணவுத்தானிய உற்பத்தியின் போக்கு

(000' டன்களில்)

இனங்கள்	1951—52	1955—56	1960—61	1965—66	1970—71
அரிசி	2,129	3,002	3,559	3,524	5,303
சோளம்	461	486	631	513	547
கம்பு	265	235	301	235	321
வரகு	305	335	360	292	345
மொத்த உணவுத் தானியங்கள்	3,520	4,493	5,286	4,930	6,906

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை XII

தமிழ்நாட்டில் மின்சக்தி—நிறுவப்பட்ட உற்பத்திச் சக்தி

அலகு	1950—51	1969—70
நிறுவப்பட்ட மொத்த உற்பத்திச் சக்தி	632 மில்லியன் அலகுகள்	3,134 மில்லியன் அலகுகள்
வாங்கப்பட்ட மின் சக்தி	......	2,463 மில்லியன் அலகுகள்

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை XIII

தமிழ்நாட்டில் கிராமப் புறங்களுக்கு மின்சக்தி அளித்தல்

மின்சக்தி பெற்ற பட்டினங்களும் கிராமங்களும் (மார்ச் 31) சதவீதத்தில்

	1960—61	1961—62	1962—63	1963—64	1964—65	1965—66	1966—67	1967—68	1968—69	1969—70	1970—71 தற்போதைக்கானது
மின்சக்தி பெற்ற பட்டினங்கள்	27·7	31·1	36·1	39·2	42·7	45·9	58·1	63·1	65·8	71·9	78.6
மின்சக்தி பெற்ற சிறிய கிராமங்கள்	15·0	18·5	22·6	26·6	31·7	37·6	38·3	44·4	51·2	60·0	71·5

மூலம்: தமிழ்நாடு – ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை XIV

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட நீரேற்றுக் குழாய்கள்

(மார்ச் இறுதியில்)

	1961	1962	1963	1964	1965	1966	1967	1968	1969	1970	1971
பயன்படுத்தப் பட்ட நீரேற்றுக் குழாய்கள்	1,17,695	1,40,601	1,65,561	1,92,424	2,25,192	2,56,594	2,89,903	3,44,483	4,10,119	4,70,776	5,30,044 தற்காலிக மானது

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

அட்டவணை XV

தமிழ்நாட்டில் சாலைகளின் நீளம்

(கிலோ மீட்டரில்)

இனங்கள்	1961	1962	1963	1964	1965	1966	1967	1968	1969	1970
தளமிட்ட சாலைகளின் நீளம்	33,061	34,677	37,559	41,284	43,974	44,125	45,895	47,318	48,829	49,984
தளமிடாத சாலைகளின் நீளம்	44,019	55,612	57,806	61,118	64,790	65,567	67,640	69,251	71,853	72,822

மூலம்: தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு, 1971.

பிற்சேர்க்கை 3

தமிழ்நாடு திட்டக்குழுவின் அமைப்பு முறையும் செயல் வகையும்

இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ் நாட்டில்தான் **1971**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாநிலத் திட்டக்குழு அமைக்கப் பட்டது. இந்த வகையில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டியாக அமைந்தது தமிழகம்.

இம்மாநிலத் திட்டக்குழு மத்தியிலிருக்கிற திட்டக் குழுவிற்குப் போட்டியாக ஏற்பட்டதன்று. அமைப்பைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு திட்டக்குழு மத்திய திட்டக்குழுவை ஒத்திருக்கிறது. இதன் தலைவர் தமிழக முதலமைச்சர். துணைத்தலைவர் நீண்டகாலம் பதவியிலிருக்கும் அரசாங்க அதிகாரி. இவர்களோடு ஐந்து அங்கத் தினர்களும் கொண்ட ஒரு அமைப்பே மாநிலத் திட்டக் குழுவாகும்.

1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு திட்டக்குழுவின் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி.

துணைத்தலைவர் திரு. ஈ. பி. இராசாராம், ஐ.ஏ.எஸ்.

ஐந்து உறுப்பினர்கள் :

டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா.

டாக்டர் ப. நடராஜன்.

டாக்டர் வே. சண்முகசுந்தரம்.

டாக்டர் டி. பிரைட் சிங்.

திரு. என். மகாலிங்கம்.

'இந்த திட்டக்குழு பத்தாண்டு காலத்தில் தமிழகத்தில் மக்கள் தொகை எந்த அளவிற்குப் பெருகும்? அவர்களுக்கான வாய்ப்புகள், வசதிகள் எந்த வகையில் அரசு செய்யவேண்டும்? அவர்களுக்கான கல்வியைத் தர வாய்ப்புகள் என்னென்ன? மருத்துவ வசதி எந்த வகையில் தேவைப்படும்? விவசாயத்தில் முன்னேற்றம் எந்த நேரத்தில் எப்படி இருக்க வேண்டும்? தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்படுமானால் அதற்கெல்லாம் எப்படி வழிவகை செய்யவேண்டும்? இப்படி பல்வேறு அம்சங்களை அந்த மாநிலத் திட்டக்குழு ஆராய்ந்து தங்களுடைய அறிக்கையில் அவைகளைச் சமர்ப்பிக்கும்.'[1]

பத்தாண்டு காலத்திற்கு எப்படித் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று வரையறுக்க மாநில திட்டக்குழு உதவும். மத்திய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் இத் திட்டக் குழுவைப் பாராட்டி மற்ற மாநிலங்களும் இதைப்போன்று அமைக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

மாநிலத் திட்டக்குழு மாவட்ட அளவிலும் நடைபெற வேண்டு மென்ற நோக்கத்தில் 1972ஆம் ஆண்டு மாவட்டத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சியும் தரப்பட்டது. மாவட்ட திட்டக்குழு பயிற்சியின் தொடக்க நாளில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி உரையாற்றும்போது கூறியதாவது, 'சில திட்டங்கள் தேவை என்பதனை மக்கள் விரும்புகிறார்கள். உதார ணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அணைக்கட்டுத் தேவை என்று கூறும் ஒரு பகுதியில் 500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். அல்லது ஏற்கெனவே ஒரு 500 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் நிலை பெறும். ஆகவே, இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்தில் அதிகாரிகள் கலந்து அங்கு அத் திட்டத்தை நிறைவேற்ற மதிப்பீடு என்ன என்பதைப் பார்த்து அதற்குப் பிறகு அதனால் பயன்பெறும் நிலங்களின் அளவையும் எடுத்துப் பார்த்து இந்தப் பகுதியில் செலவுக்கேற்ற வருமானம் வராது என்று கைவிடப்பட்ட திட்டங்கள் ஏராளம்.

செலவுக்கேற்ற வருமானத்தை அளிக்காத காரணத்தால் ஒரு 500 ஏக்கர் பாசன வசதியைத் தருவதற்கு அரசு மறுத்துவிடுவதன் மூலம் பாசன வசதி அளிப்பதைமட்டும் நாம் கைவிடவில்லை. அந்த 500 ஏக்கரை நம்பி வாழும் மக்களையும் கைவிட்டுவிடுகிறோம்.

அப்படியொரு நிலை வரும்போது அந்த வருவாயை மற்ற வழி களிலே சரிக்கட்ட முடியுமா என்பதையும் நாம் ஆராயவேண்டும்.

1. தமிழக முதல்வர் மு. கருணாநிதி, நமது நிலை, தமிழ்நாடு அரசினர் அச்சகம், சென்னை, பக்கம், 57-58.

இந்த மாவட்டத் திட்டக் குழுக்களின் பணி மகத்தானதாக இருக்க வேண்டும். அந்தந்த மாவட்ட முன்னேற்றத்திற்குத் தகுந்த பல திட்டங்களைத் தீட்டவும், அவை செயல்படுத்தப்படவும் வேண்டும்.'[1]

ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருளாதார வளம், கிராமங்களின் முன்னேற்றம் அல்லது பிற்பட்ட நிலைமை இவைகளையெல்லாம் அறிந்துகொள்வது அவசியமாகும் அந்தந்த மாவட்ட முன்னேற்றத்திற்குத் தகுந்த பல திட்டங்களைத் தீட்டவும் அவற்றைச் செயல்படுத்தவும் வேண்டும். அதற்கு இத்தகைய மாவட்ட திட்டக் குழுக்கள் உதவும்.

மாவட்டத் திட்டங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய ஒரு மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்படுகிறது. அக்குழு மாவட்டத் திட்ட அதிகாரி, புள்ளி விவர அதிகாரி, மற்றும் விவசாயம், பொறியல், கல்வி, கூட்டுறவு, தொழில், சுகாதாரம் போன்ற மற்றத்துறை அதிகாரிகள் முதலியோரைக் கொண்டதாக இருக்கும்.[2]

மாவட்டத் திட்டம் உருவாக்கப்படும்போது முதல் கட்டத்தில் மாவட்டம் மூன்று அல்லது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்படுகிறது. இந்தத் துணை-மண்டலங்கள் ஏறக்குறைய வட்டாரங்களை ஒத்திருக்கும்.

இயற்கை வளம், மண், தட்ப வெப்ப நிலை, நீர்வளம், பயிர்களும்; பெரிய அளவு, நடுத்தர, சிறிய அளவு, குடிசை உற்பத்தி; சாலைகள், ரயில்வேக்கள், நீர்ப்பாசனம், மின்சக்திப் பங்கீடு, அங்காடிகள், கிராமப்புற, நகர்ப்புற கிடங்குகள்; கலாச்சாரம், முதன்மைச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள், பள்ளிகள், கல்லூரிகள், நிர்வாக இடங்கள் போன்றவற்றின் அடிப்படையில் துணைமண்டலங்கள் பிரிக்கப்படுகின்றன. வருவாய், விவசாயம், காட்டிலாக்கா துறையினரின் வரைப்படங்களைப் பயன்படுத்தி மேற்கூறியவற்றிற்கான வரைப்படங்கள் உருவாக்கப்படும். இவற்றின் அடிப்படையில் மாவட்டம், ஒரே தன்மையுள்ள மூன்று அல்லது நான்கு துணை-மண்டலங்களாகப் பிரிக்கப்படும்.

1. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, தமிழரசு, மே 1, 1972, தமிழ்நாடு அரசினர் அச்சகம், சென்னை.

2. A Training programme in District Planning, April, 1972, State Planning Commission, Ezhilagam, Madras, Page 1.

இரண்டாவது கட்டத்தில், துணை-மண்டலங்களைப் பற்றிய விவரமான, திறனாய்வு செயல்பட வேண்டும். அவ்வாறு செய்யப் படும்போது அத் துணை-மண்டலங்களின் தற்போதைய சமுதாய, பொருளாதார நிலைமையைப் பற்றிய மதிப்பீடு செய்யப்பட வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ஒவ்வொரு துணை-மண்டலத்திலும் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப் பற்றி ஆராயப்படவேண்டும்.

இத்தகைய ஆராய்ச்சிக்குப் பின்னர், அந்தத் துணை-மண்டலத்தில் மறை சக்திகளைப் பற்றியும் முன்னேற்றத்தில் விடுபட்டுள்ளவை பற்றியும், முக்கியமாக பின்தங்கிய இடங்கள், பிரிவுகள் பற்றியும், அம்மண்டலத்தை முன்னேறச் செய்வதற்குத் தடையாக இருக்கும் மனித, நிதிச் சாதனங்கள் பற்றியும் ஆராயப்பட வேண்டும். தோல்வியடைந்த அல்லது அந்த முன்னேற்றத்திற்குத் துணைபுரியாத திட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

மூன்றாவது கட்டம், ஒவ்வொரு துணை-மண்டலத்தின் வருங்கால திட்டகாலத்தில் (1972-1974) மேற்கொள்ளப்படும் நோக்கங்களை நிர்ணயிப்பதாகும். இவ்வாறு நிர்ணயிக்கப்படும்போது, முக்கிய நோக்கங்களான வேலை நிறைவு, கிடைக்கும் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்துதல், அதிகரிக்கப்பட்ட உற்பத்திச் சக்தி, பின் தங்கிய இடங்களைக் கண்டுபிடித்தல், அடிப்படைத் தேவைகளான உணவு, கல்வி, கலாச்சார நடவடிக்கைகள், சுகாதாரம், வீடு கட்டுதல், குடிதண்ணீர்வசதி போன்றவற்றைத் துணை-மண்டலங்களிலுள்ள வறிய மக்களும் அடையுமாறு செய்தல் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

நான்காவது கட்டத்தில் ஒவ்வொரு துணை-மண்டலங்களுக்கும் விவரமான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இவை ஐந்தாவது, ஆறாவது திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

இறுதிக் கட்டத்தில், மாவட்ட முழுமைக்கும் இரண்டு திட்ட காலத்திற்கான மொத்தச் செலவையும் உள்ளூர் அரசாங்கம், தனியார்துறை, மாநில அரசாங்கம் போன்றவை திரட்டும் சாதனங்களையும் நிர்ணயிக்க வேண்டும்.

பொருளாதாரத் துறையில் தமிழகம் முன்னேறும் வகையில் உதவும் மாநில, மாவட்ட திட்டக் குழுக்களின் பணி மகத்தானது.

ஐந்தாம் பகுதி

9. தற்காலத்திய மண்டல முன்னேற்றப் பகுத்தாய்வு

(Modern Analysis of Regional Development)

ஒவ்வொரு பாடப்பிரிவிலும் தனித் தேர்ச்சிக்கான புதிய பகுதி தோன்றுவது சுவையானது. பொருளாதாரத்தில் மண்டலப் பொருளாதாரம் என்ற தனித் தேர்ச்சி பெற்ற பகுதி ஒன்று தோன்றியிருப்பதும் சுவையானது.

அதன் தோற்றத்தை வெளிப்படுத்துவன பலவாகும். கடந்த 10 ஆண்டுகளில் ஒரு புதிய தொழிற்சங்கமும், மண்டல அபிவிருத்தி பிரச்சினைகளைப் பற்றிய பத்திரிகையும் தோன்றியுள்ளன.

இந்தப் புதிய பத்திரிகை மண்டல அறிவியல் சங்கத்தினுல் (Regional science Association) வெளியிடப்படுகிறது. கோட்பாடளவிலான (Academic) வெற்றிக்குரிய அம்சங்கள் அனைத்தையும் இது பெற்றிருக்கிறது. இது அளவிலும், எல்லையிலும், கட்டுரை எழுதுபவர்களின் எண்ணிக்கையிலும், அச்சிடும் முறையிலும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்குள் முழுவசதி நிறைந்து, வெற்றிகரமாக நடைபெறும், எதிர்காலத்திற்கான சாதனங்கள் (Resources for the future) என்ற ஆராய்ச்சி நிலையமானது நிறுவப்பெற்றது.

இந்தப் புதிய பகுதியின் எல்லைக்குட்பட்ட பிரச்சினைகளை அந்த ஆராய்ச்சி நிலையம் பெரிதும் ஆராய்கிறது. இந்த நிலையம், 140 அமெரிக்க சர்வகலாசாலைகள், மண்டல ஆய்வுபற்றிய ஆராய்ச்சி அல்லதுகல்வி நிகழ்ச்சிகளை மேற்கொள்கின்றன என்று 1957-ல் தெரிவித்தது. அதற்குப் பின்னர் நடவடிக்கைகள் குறைந்துவிடாமல்

பெருகியே வருகின்றன என்பதற்கு ஆதார பூர்வமான காரணங்கள் இருக்கின்றன. அதைப் போலவே மண்டல அறிவியல் ஆய்வுகளைப்பற்றி சர்ச்சை செய்யவும், திறனாய்வு செய்யவும், அதிகப்படுத்தவும் எண்ணிறந்த ஆராய்ச்சிக் கூட்டங்கள் அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் நடத்தப் பெற்று வருகின்றன.

இந்தப் புதிய துறை (Field) பலராலும் வேண்டப்பட்டு வருகிறது என்பதைக் காட்டும் அடையாளங்களில் மிகச் சிறந்தது என்னவென்றால், இது அரசாங்கத்திலிருந்தும் அதோடு சேர்ந்த தனியார் துறைகளிலிருந்தும் ஆதரவு பெற்றிருக்கிறது என்பதுதான். அப்படிப்பட்ட அரசாங்கங்கள் இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், கிரீஸ், அர்ஜென்டைனா, துருக்கி, வெனிசுலா, இந்தியா, கொலம்பியா, பாகிஸ்தான் ஆகும்.

பொருளாதார அறிஞர்கள் தங்களுடைய பாடத்தில் சுவாரசியமான பெரிய பெரிய பகுதிகளை ஆராய்ந்துகொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் பொருளாதார இயல், விளைவியல், அறிவியல் (Applied science) என்று கொண்டு, குறிப்பிட்ட கொள்கையைப் பற்றிய விவரத்தின் காரணமாகவே பல பொருளாதாரக் கோட்பாடுகளும், விளக்கங்களும் எழுந்தன என்று ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள்ளாக விவாதித்தால், இப்படிப்பட்ட அதிகமானதாகத் தோன்றும் உற்சாகத்தோடு சில ஆராய்ச்சி முறைகளைத் தற்காலிகமாகவாவது மேற்கொள்ளும் போக்கைத் துரதிருஷ்டவசமானது என்று சொல்வதற்கில்லை.

மேலும், ஒரு துறையின் வளர்ச்சி, நடைமுறைப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதையும் பொறுத்திருக்கும்போது, இப்படிப்பட்ட போக்கே அந்தத் துறையில் சிந்தனையின் வளர்ச்சிக்கான முக்கிய தேவையாக இருக்கும். அதைப் போலவே, இப்படிப்பட்ட ஆராய்ச்சியும் அதன் காரணமாக ஏற்படுகின்றது.

சொற்களின் முடிவைப் புரிந்துகொள்ளுவதற்கு இப்படிப்பட்ட ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்த கொள்கைப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். இருந்தபோதிலும், இவ்வாறு தூண்டுகோலாக அமைந்த ஒன்றைப் புரிந்துகொண்டுவிட்டால் மண்டலப் பொருளாதாரம் தோன்றியதற்கும், அதன் தற்போதைய பிரபலத்திற்குமான காரணங்கள் முழுவதையும் விளங்கிக்கொள்ள முடியும் என்பதும் தவறானதாகும். இவைகளுக்கு இந்தத் துறையில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கான அடிப்படையை விளக்குவதற்கு இயலாது.

மண்டலப் பொருளாதாரம் மிகவும் தெளிவானதும் முக்கியமானதுமான சிந்தனை முன்னோடிகளைக் கொண்டுள்ளது. மேலும், பொதுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சில கோட்பாடளவிலான முன்னேற்றம், குறிப்பாக ஒன்றுக்கொன்றுசார்ந்த பொது அமைப்புகளில் (General Interdependant Systems) ஏற்பட்டுள்ள முன்னேற்றம், மண்டலப் பொருளாதாரத்திற்கு அடிப்படையான கருத்துகளை அளித்தது என்று சொல்வதே பொருத்தமானதாகும். இவை இல்லாவிட்டால் மண்டலப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்திருக்க முடியாது.

மேயர் கூறுவதுபோல மண்டலப் பொருளாதார எழுச்சிக்கு நேரடியான விளக்கம் என்னவென்றால், மண்டல நகர்ப்புற (Urban) வளர்ச்சியோடு தொடர்புகொண்ட சிக்கலான பிரச்சினைகளைப் பகுத்தாய்ந்து தகுந்த விளக்கங்களைத் தரவேண்டும் என்ற கொள்கைவாதிகளின் விருப்பமும், சமீபத்தில் உருவாக்கப்பட்ட சில கருத்துவிளக்கங்களைப் (Conceptual tools) பயன்படுத்த வேண்டும் என்று பல பொருளாதார அறிஞர்கள் விரும்பியதும், ஒன்று சேர்ந்ததால் உருவாகியதே மண்டலப் பொருளாதாரம் ஆகும். (One very straightforward explanation of the surge in regional economics, in fact, is to say that if resulted from a fortuitous blending of many economists' desires to apply certain recently shaped conceptual tools and policy makers' desires to seek more adequate and analytical answers to complex problems related to regional and urban growth)[1]

மண்டலப் பொருளாதாரத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தவைகளையோ அல்லது முன்னோடிக் கருத்துகளையோ சர்ச்சை செய்ய வேண்டுமென்றால், இந்தப் புதிய துறை எதைப் பற்றியது என்பதைச் சரியாக வரையறை செய்யவேண்டும். புதிய துறைக்கே உரித்தான சொற்பொருள்சார்ந்த பிரச்சினைகள் (Semantic) தீர்க்கப்பட வேண்டியனவாக இருக்கும். அவைகளில் மண்டலம் என்பது வரையறுக்கவேண்டிய தொன்றாகும்.

(1) வரையறைப் பிரச்சினைகள் (Definitional Problems)

மண்டலப் பொருளாதாரத்தை வரையறுக்க முற்படும்போது அது ஒரு குறிப்பிட்ட புவியியல் முறையிலான (Geographic) நிலப்

1. J. R. Meyer 'Regional Economics: a Survey', Survey of Economic Theory. Volume II-Growth, Development, American Economic Association, Royal Economic Society, 1969.

பரப்பளவில் பொருளாதார நடவடிக்கையைத் தகுந்த முறையில் அளக்க அல்லது முன் ஆய்வு அல்லது முன் மதிப்பீடு செய்யும் பொருளாதாரம் என்று வரையறை செய்துவிடத் தோன்றும். இவ்வாறு வரையறை செய்வதிலும் உண்மை நிரம்ப இருக்கிறது. ஏனென்றால், மண்டலப் பொருளாதாரம் தன்னுடையது என்று கொண்டிருக்கும் நோக்கங்கள் சக்திக்கு மீறியதாக உள்ளன.

மேலும், இவ்வாறு வரையறை செய்வது எதைக் குறிக்கிறது என்றால் அது உருவானதன் காரணத்தைக் கொண்டு மண்டலப் பொருளாதாரம் என்பதை, குறிப்பிட்ட ஆய்வு, கொள்கை-நோக்கங்கள் இவற்றின் அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்ய வேண்டும் என்ற எழுச்சியைத்தான். மண்டலப் பொருளாதாரத்திற்கென்று ஒரு தனியான அம்சத்தை வழக்கமான பொருளாதாரப் பிரிவுகளின்படி கொடுப்பதில் இருக்கும் இன்னல், மண்டலப் பொருளாதார ஆய்வைப் பரந்த, ஒன்றோடொன்று தொடர்புடைய, அடிப்படையில் அமைக்க வேண்டுமென்ற போக்கின் ஒரு பகுதியையாவது விளக்குகிறது.

முதலிலிருந்தே மண்டலப் பொருளாதாரம் என்று சொல்வதைவிட மண்டலப் பகுத்தாய்வு அல்லது மண்டல அறிவியல் என்று சொல்வதுதான் பழக்கத்தில் இருந்துவந்தது. சமுதாய இயல் (Sociology), மக்கள் தொகை இயல் (Demography), புவிஇயல் (Geography), வரலாறு (History) போன்ற பல்வேறுபட்ட இயல்கள் இதில் அடங்கும். சில சமயம் மண்டலப் பகுத்தாய்வின் முக்கிய வேறுபடுத்திக் காட்டுகின்ற அம்சமாக இருந்தது என்னவென்றால், அதன் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட அம்சமேயாகும். இத்தகைய வேறுபட்ட தன்மையையும், வரையறுத்தலில் உள்ள நிச்சயமற்ற தன்மையையும் ஹார்வி பர்லோப் (Harvey Perloff) என்பவர் 'எதிர்காலத்திற்கான சாதனங்கள்-கணக்கீட்டில்'(Survey), நன்றாக எடுத்துரைக்கின்றார்.

மண்டல ஆய்வைத் திருப்திகரமாகத் தரம்பிரிக்க (Classify) எந்த முறையும் இல்லை. இது எதிர்பார்க்கக் கூடியதே. மண்டல ஆய்வானது பல்வேறு அம்சங்களைப் பற்றியது. மேலும், அது பல்வேறுபட்ட கருத்துகளை எடுத்தாளுவதாக உள்ளது. ஆகவே, பொதுவான முறையில் தரம்பிரித்தால், அந்தப் பிரிவுகள் ஒரு சிலவற்றைப்பற்றியே ஆராய்வதாக இருக்கும். அவ்வாறு பிரித்தால் (1) இயற்கைச் சாதனங்கள், (2) மக்கள் தொகை, (3) மண்டலப் பொருளாதார முன்னேற்றம், (4) மாநகர்ப்புற ஆய்வு, நகர்ப்புறத் திட்டமிடுதல், (5) மண்டல வரலாறு-இலக்கியம், சமூக கலாச்சார அம்சங்கள் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். மேலும்,

இரண்டு பிரிவுகள் அவசியமாகின்றன. அவை மண்டலப் பகுத்தாய்வு முறைகளும், பரந்த (Comprehensive) மண்டல ஆய்வுகளும் ஆகும்'. ('No fully satisfactory way of classifying regional studies was found-not unexpectedly. Regional studies tend to deal with many features and often involve the use of several academic disciplines. Thus, no general system of classification can be expected to provide self-contained categories; there is inevitable spill-over. The subject classification employed in this report sets up categories whose cores, if not boundaries, are identifiable and whose titles are widely used, with popular and technical meanings that are not too far apart. The topical categories employed are; (1) Physical elements and natural resources; (2) Population and human ecology; (3) Regional economic development; (4) Metropolitan studies and metropolitan planning, and (5) Regional history, literature, and socio-cultural elements. Two other categories were found necessary: (6) Methods and techniques of regional analysis and (7) Comprehensive regional studies.')

வால்டர் இசார்ட் (Walter Isard) என்பவர் மண்டலப் பகுத்தாய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அதனை வரையறுத்திருக்கின்ருர். ஒரு 'மண்டலத்தைப்பற்றி பகுத்தாராய முற்படுபவர், அவரை நோக்கியிருக்கும் பிரச்சினைகளைப் பார்த்துத் திகைக்கின்ருர். ஒரு மண்டலத்தில் தனியாகவும், கூட்டத்திலும், திறமையிலும் இலாபத்துடன் இயங்கக்கூடிய தொழில்கள் எவை என்று தெரிந்துகொள்வது ஒரு பிரச்சினை. இதோடு தொடர்புகொண்ட மற்ருெரு பிரச்சினை அந்த மண்டல மக்களின் நலத்தைப் பற்றியது. அதாவது, தனிநபர் வருமானத்தை உயர்த்துவதும் ஏற்றத்தாழ்வுகள் குறைவான, வருமானப் பங்கீடு மாகும். இத்தோடு தொடர்புகொண்ட பிரச்சினை வருமானத்தை அளப்பதும் ஒரு சமுதாயத்தை அமைப்பதும் ஆகும். தேசிய, உலக வியாபாரத்திற்கேற்ப மாறிக்கொண்டிருக்கும், பழமை அடைந்துவிட்ட, மெதுவாக வளரும் அல்லது நலிந்துகொண்டிருக்கும், தொழில்களின் கூட்டை (Industrial mix) தவிர்ப்பதும் ஒரு பிரச்சினை ஆகும். இது தொழிலைப் பரவலாக்கும் பிரச்சினையாகும் (Diversification). மற்ருெரு பிரச்சினை என்னவென்ருல், ஒன்றுக்கொன்று பொருந்துகின்ற அளவில் மண்டல அமைப்பில் ஒரு மண்டலத்தின் தொழில் முன்னேற்றத்தைத் திட்டமிடுவதுமாகும். மற்ருெரு நெருக்கடியை உண்டாக்கும் பிரச்சினை, அருமைப்பாடுடைய சாதனங்களை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்

துவது என்பதாகும்'. ('An analyst is perplexed with many problems when he looks at a region. One problem may be to identify specific industries whih can individually or in groups operate efficiently and with profit in the region. Another related problem may be to improve the welfare of the people of the region, that is, to raise per capita incomes and perhaps achieve a more equitable distribution of income; the auxiliary problem of measurement of income and of the performance of a society is also present. Still another problem may be to avoid an industrial mix which is too sensitive to the ups and downs of national and world business, and which is composed too heavily of old-slow growing or declining industries; this is the problem of diversification. Finally, a fourth problem which can be mentioned is to plan industrial development for a region, as part of a system of regions, in an internally consistent manner and which for many regions is the most critical, is the problem of how to put to best use a limited, if not a niggardly, endowment of resources.')[1]

இசார்ட் என்பவரின் இந்த வரையறை மிகவும் பரந்ததாக உள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால், தனிப்பட்ட பொதுக் கருத்துகள் கொண்டுள்ள மண்டலப் பகுத்தாய்வின் பிரச்சினைகள் பொருளாதாரக் கோட்பாட்டிற்கும் மண்டலப் பொருளாதாரத் திற்கும் பொதுவானவை என்று இரண்டுவிதமாகப் பிரித்து வரை யறை செய்யலாம்.

மூலக் கருத்துகளைப் பற்றிய பிரச்சினையானது நடைமுறை பிரச்சினை பற்றியதாகும். அதன் மையம் மண்டலம் என்பதை வரையறை செய்வதில் இருக்கிறது. வழக்கமான மூன்று வெவ்வேறு முறைகளில் மண்டலத்தை வரையறை செய்வார்கள். முதலாவது, ஓரினத்தன்மை (**Homogeneity**). அதாவது பௌதீக, பொருளாதார, சமூக அல்லது மற்ற அம்சங்களில் ஒத்திருத்தல். இரண்டாவது, தலைவிளைவு (**Polarization**) அல்லது கணுத்தன்மை (**Nodality**) என்று சொல்லப்படுவது. அதாவது, முக்கிய நகர்ப்புறத்தைச் சுற்றி ஏற்படும் தலைவிளைவு. மூன்றுவது, செயல் திட்டமிடுதல் (**Programming**) அல்லது கொள்கைச் சார்பானது (**Policy oriented**). அது முக்கியமாக ஆராயப்படுகின்ற பரப்பளவுக் கொள்கைகளின் முடிவு களைச் செயல்படுத்தும் அரசியல் அமைப்பு இவைகளுக்கிடையே

1. W. Isard, Methods of Regional Analysis, Newyork, 1960.

உள்ள நிர்வாகக் கூட்டிசைவு அல்லது முழுவதும் ஒத்திருக்கும் தன்மையைப்பற்றியது. நடைமுறையில் மண்டலத்தைப்பற்றிய வரையறை இப்படிப்பட்ட வரையறைகளின் கலப்பாகத்தான் (Compromise) இருக்கும். குறிப்பாகப் புள்ளிவிவரங்களின் (Data) வரம்பும் அவை கிடைக்கும் தன்மையும், இப்படிப்பட்ட கருத்துச் சார்பான (Ideal) வரையறையிலிருந்து சற்று மாறும்படி செய்கின்றன.

மேலும், துல்லியமாக அணுகினுல் மண்டலத்தைப்பற்றிய, வழக்கம் தொட்டு வருகின்ற இந்த மூன்றுவரையறைகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டவை அன்று; எல்லாம் ஓரினத்தன்மையின் வேறுபட்ட வரையறைகள் தாம். உண்மையில், முக்கியமானது என்னவென்ருல், எத்தகைய ஓரினத்தன்மை என்பதுதான். உதாரணமாக, செயல் திட்டம் அல்லது கொள்கையின் அடிப்படையில் மண்டலம் என்பது ஒன்று அல்லது ஒரு சில அரசாங்கம் அல்லது நிர்வாகப் பதிலாண்மைகளின் (Agencies) ஆட்சிக்குட்பட்டதில் ஒத்த தன்மையானது.

மண்டலம் என்பது சில வியாபாரத்தைச் சார்ந்திருக்கின்ற பரப்பளவுகளின் அடிப்படையில் ஒத்த தன்மையானது. ஒத்த தன்மையான மண்டலங்கள் என்று சொல்லப்படுபவை புற அம்சங்களில் உதாரணமாக புவியமைப்பு அல்லது இயற்கைச் சாதனங்களில் ஒத்திருப்பவை என்பதுபோல மற்றவை பொருளாதார, சமூக, அம்சங்களில் ஒத்திருக்கின்றன. முன்பே குறிப்பிட்டபடி நடைமுறையில் புள்ளிவிவரங்களின் ஒத்ததன்மையே மண்டலங்களின் எல்லையை உண்மையில் நிர்ணயிக்கின்றது.

கருத்து அல்லது கோட்பாடுகளின் முறையில் மண்டலப் பொருதாரத்தில் சில முக்கியமான ஆய்வு எதைப்பற்றியது என்ருல், ஒத்த தன்மையை அளப்பதற்கான கருவிகளின் (Index) வரையறைப் பற்றியதே. M. J. ஹகுட் (M. J. Hagood) என்பவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விவசாயம், மக்கள், இவைகளைப் பொறுத்து ஒத்த தன்மையுள்ள மண்டலப் பிரிவுகளை வரையறை செய்வதில் புள்ளிவிவரக்காரணி அல்லது ஆக்கக்கூறு பகுத்தாய்வைப் (Componant analysis) பயன்படுத்துவது பற்றியப் பல முக்கியச் சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்ருர். அவ்வாறு செய்கையில் காரணிகளின் பகுத்தாய்வை தெளிவுபடுத்தலுக்கும் (Clarification of factor analysis) புள்ளி விவர மாதிரிகளைத் தரம்பிரிக்கும் முறைகளில் முன்னேற்றத்திற்கும் சில சுவையான விளக்கத்தைச் செய்திருக்கிருர்.

இந்த விளக்கத்தைத் தொடர்ந்து V. V. அல்மெண்டிங்கர் (V. V. Almendinger) என்பவரும், நியூயார்க் மாநகர் மண்டலம் பென்ஜெர்ஸி (Penn Jersey) போக்குவரவு ஆய்வுக்காக அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒத்ததன்மையுள்ள சமூகங்களை வரையறை செய்வதோடு சம்பந்தப்பட்ட விளக்கத்தைச் செய்திருக்கிறார்.

இப்படிப்பட்ட புள்ளிவிவர முறைகள் நடைமுறை புள்ளியியல் வல்லுநர், கணிதப் பொருளாதார வல்லுநர் (Econometrician) உற்றறிபண்பாற்றல் வல்லுநர் (Psychometrician) முதலியோருக்குச் சுவையானதாக இருந்தாலும் நிலப்பரப்பை வரையறை செய்கின்ற பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய மண்டலப் பகுத்தாய்வாளருக்கு உள்ள பயன் சந்தேகத்திற்கு இடமானதே. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட மண்டலப் பொருளாதாரம் பற்றி நினைக்கையில் ஜோசப்பிஷர், 'தமது எதிர்காலத்திற்கான சாதனங்கள்' என்பதில் குறையாகவே மதிப்பிட்டு இருக்கிறார்.

பெரும்பாலும் மிகவும் பயனுள்ள மண்டலம் என்று நாம் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் 'பொருளாதார முன்னேற்ற மண்டலம்' என்பதுதான். அங்கே ஒரு மண்டலத்தின் தற்போதைய பொருளாதார நிலையில் இருந்து முன்பே நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள, கொள்கைகள், செயல் திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மண்டலத்தின் வரையறை, பிரச்சினைகளைப்பற்றி மிகவும் விரிவான முறையில் எழுதியிருக்கும் 'ஜெக்ஸ்பூத்வில்' (Jecques R. Boudevill) என்பவரும் சில சமயம் கொள்கை காரியங்களுக்காக கணு (Nodal) மண்டலமே பயனுள்ளது என்று வாதம்புரிந்தாலும் இதே கருத்தைக் கொண்டிருப்பவர் தாம். மண்டலத்தை வரையறை செய்யும் பிரச்சினையைக் கொள்கை முறையில் அணுகலாம். ஆனால், புள்ளி விவரங்கள் கிடைப்பதற்கு ஏற்ப மாறுதல்கள் செய்யப்படவேண்டும் என்பது இக் கொள்கைக்கு வரம்புகளாக உள்ளன.

மண்டலத்தின் வருமானம், உற்பத்திப் பொருள்பற்றிய கணக்கு, இவற்றைப்பற்றிய மதிப்பீடுகளைப் பெற முயற்சிக்கும்போது மண்டல வரையறைப் பிரச்சினை முக்கியமானதாகிவிடுகிறது. ஒரு மண்டலத்திற்குக் குறிப்பிட்ட தனிநபர் வருமானம், உற்பத்தி அளவை அடையவேண்டுமென்ற கொள்கை நோக்கம் ஆகிய இத்தகைய மதிப்பீடுகள் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. மண்டல அளவில் வருமான மதிப்பீடு பிரச்சினை, துரதிருஷ்டவசமாக, தேசிய

வருமானத்தின் உற்பத்திப் பொருள் கணக்கை அளவிடுவதற்கு மேற்பட்டது என்று உண்மையில் அநேக மண்டலப் பகுத்தாய்வாளர் வாதம்புரியக்கூடும். எப்படியென்ருல், மண்டல வருமான இனங்களைச் (Categories) சரியாக மதிப்பீடு செய்வதற்கான ஒரே வழி, முற்றிலும், புதிய முறையான, புதிய மண்டல அல்லது உள்ளூர்த் தகவல் மூலத்தை (Sources of information) அடிப்படையாகக் கொண்டது. தேசிய அளவில் திட்டக் கொள்கையின் நோக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டவையாக மண்டலக் கொள்கை திட்டமிடுதலின் நோக்கங்கள் இருப்பதால் மண்டல வருமானத்தையும் உற்பத்திப் பொருளையும் அளப்பதற்கு வேறுபட்ட மூலக் கருத்துகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன, என்ற காரணத்திஞல் புதிய முறை ஒன்று வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. மேலும், சில மண்டலப் பொருளாதார வல்லுநர்கள், மண்டலக் கணக்குகளின் (Accounts) அடிப்படையிலேயே தேசிய வருமானக் கணக்குகள் உருவாக்கப்படுகின்றனவே தவிர தலைகீழாக இல்லை என்று கூறுவார்கள்.

கொள்கை அல்லது ஆராய்ச்சிக்காக, எத்தகைய அளவிலும், புள்ளி விவரங்களை உருவாக்குவதற்கு வேண்டிய போதுமான அளவிற்கு, விவரமானதும், அல்லது முடிவாக்கப்படாமல் தனித் தனியான (unaggregated) உள்ளூர்ப் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய விவர ஏடுகளை (records) வைத்திருக்க வேண்டும் என்பது குறைந்தபட்ச தேவையாகும். உண்மையில், ஆராய்ச்சிக்குரிய சாதனங்கள் கிடைப்பதன் அருமை காரணமாகவும் இதைப்போன்ற மற்றத் தடைகளிஞலும், நடைமுறையில் மண்டல வருமான மதிப்பீடுகள் சுலபத்தில் கிடைக்கக்கூடிய தேசிய வருமான அளவுகளிலிருந்து கணக்கிடப்படுகின்றன.

மண்டலப் பொருளாதாரம் வெளிநாட்டு வியாபாரத்தையும், ஸ்தாபனங்களையும், தேசியப் பொருளாதாரத்தைவிடச் சார்ந்திருப்பதால், மண்டல வருமான மதிப்பீடுகள் பற்றிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மண்டல வருமானத்தைக் கணக்கீடு செய்வதற்கு ஏற்படுகின்ற பிரச்சினையை ஓர் உதாரணத்தால் செவ்வனே விளக்கலாம். ஒரு பெரிய மாநகராட்சி வெவ்வேறு இடங்களில் இணைப்புகளை (Installations) வைத்திருப்பதுமட்டுமன்று ; அதன் உரிமையும் பலவகையாகப் பல்வேறு மண்டலங்களில் பரவி இருக்கும். அரசாங்க நடவடிக்கைகள் குறிப்பாக, கூட்டரசு (Federal) அளவில் மண்டலங்களின் அடிப்படையில் பங்கிடுவதும் கடினம். தேவையான புள்ளிவிவரம் பெரும்பாலும் தேசிய அடிப்படையிலே உருவாக்கப்படுவதால், மண்டல வருமானக் கணக்கீடு (Accounting) சிக்க

லானது. மேலும், குடியிருப்பவரை வரையறை செய்யும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளும் சிக்கல்களை அதிகரிக்கின்றன. பெரிய மாநகராட்சி இப்படிப்பட்ட சிக்கல்களுக்கு ஓர் உதாரணமாகும். மண்டல அரசாங்க அல்லது மற்ற உள்ளூர் மண்டலக் கணக்குகள் (பல காரியங்களுக்குப் பயன்படுபவை) தயாரிக்கப்பட்டுவிட்டன அல்லது தயாரிக்கப்படுகின்றன. ஆகையால், இப்படிப்பட்ட இன்னல்கள் தீர்க்கமுடியாதன அன்று.

மண்டலத்தைப்பற்றிய வரையறைப் பிரச்சினை, பழக்கமான பொருளாதாரப் பகுத்தாய்வில் (Conventional Economic Analysis) இவ்வாறு பல அம்சங்களைக் கொண்டிருந்தாலும், மண்டலப் பொருளாதாரம் தனியாகப் பிரித்து வைப்பதற்குப் போதுமான வலு உள்ளதன்று. அப்படித் தனியாகப் பிரிப்பதற்கான காரணத்தைத் தேடினால், அப்படித் தேடும்போது, கடந்த பத்தாண்டுகளில் மண்டலப் பொருளாதாரம் குறிப்பாக அமைவிடக் கோட்பாட்டிற்கும், பன்னாட்டு வியாபாரக் கோட்பாட்டிற்கும், பழக்கமான பொருளாதாரம் கொடுப்பதைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. அமைவிடக் கோட்பாடும் பன்னாட்டு வியாபாரக் கோட்பாடும் புவியியல் நிலப்பரப்பிற்கு இடையில் பொருளாதாரத் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் இது வியப்புக்குரியது அன்று.

மேலும், இன்றைய மண்டலப் பொருளாதாரத்தின் தந்தையாகிய 'வால்டர் இசார்ட்' (Walter Isard) என்பவர், மண்டலப் பொருளாதாரப் பகுத்தாய்வில் சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் அக்கறை தோன்றிய புதிதில் 1940-ன் பிற்பகுதியையும், 1950-ன் முற்பகுதியையும், அமைவிடக் கோட்பாட்டையும், பன்னாட்டு வியாபாரக் கோட்பாட்டையும் ஒருமைப்படுத்தச் செலவிட்டது குறிப்பிடத்தக்கது. வழக்கமான பன்னாட்டு வியாபாரக் கோட்பாட்டின் அடிப்படைமுறை என்று அவர் கருதுவது, அதாவது இடப்பிரிவைக் கடக்க ஆகும் செலவைப்பற்றிக் கவனிக்கத் தவறியது, என்பதைத் திருத்துவதற்குத்தான்.

மண்டலப் பொருளாதாரத்தை மற்றொரு சாதாரண முறையில் வரையறை செய்வது எப்படி என்றால், ஆர். ஜான் மேயர்ஸை பின்பற்றி அதை இடப்பிரிவு பற்றிய பொருளாதாரம் (Economics of spatial seperation)என்று சொல்வதேயாகும். இத்தகைய வரைமுறை முக்கியத்துவம் கொடுக்கும் அமைவிடப் பிரச்சினைகளைவிட மண்டலப் பொருளாதாரக் கொள்கைப் பிரச்சினைகள், எல்லையில் பரந்ததாக இருப்பதால் இவ்வாறு வரையறை செய்வது, அளவுக்கு மீறிய வகையில் அதைக் குறுக்கிவிடுகிறது. சாதனங்கள்-குறிப்பாக உழைப்பு மண்டலங்களுக்கு இடையில் முழுப்பெயர்ச்சி உடையதாக

இராததால், மண்டலப் பகுத்தாய்வில் இடப்பிரிவு என்பது கொள்கை முக்கியத்துவமாக இருப்பதில்லை. ஆகவே, மேயர்ஸ் கூறுவதுபோல சாதனங்களின் பெயர்ச்சியற்ற தன்மையின் பொருளாதாரம் (Economics of resources immobility) என்று சொல்வது சற்று சுருக்கமாக இருந்த போதிலும் மண்டலப் பொருளாதாரத்தின் சரியான வருணனை என்று சொல்லலாம்.

மண்டலப் பகுத்தாய்வு என்ற சொற்றொடர் பழக்கத்தில் வருவதற்கு முன், அதாவது 1950-க்கு முன், மண்டலப் பொருளாதாரம் என்று கருதப்பட்டது, வணிகச் சுழல் கோட்பாடு, அதன் பகுத்தாய்வு இவற்றைப் பற்றியதாகத்தான் இருந்தது. உண்மையில், 1940-ல் ஆர். வைனிங் (R. Vining), பி. நெப் (P. Neff) என்பவர்கள் செய்த மண்டலங்களுக்கு இடையில் வணிகச் சுழல்களின் பரவுதலும், இடமாற்றமும் பற்றிய ஆய்வுகள், மண்டலப் பொருளாதாரத்தில் முக்கியமானவையாக இருந்தன. இதைப்பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது சமீபத்தில் கைவிடப்பட்டது. நன்மைக்கோ அல்லது தீமைக்கோ மாருத சூழ்நிலையில் உச்ச நிலையை அடையவேண்டும் என்பதற்குத்தான் சமீபத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இந்த மாற்றம் பெருமளவில் பன்னாட்டு வியாபாரக் கோட்பாடு, அமைவிடக் கோட்பாட்டுக் கருத்துகள் மண்டலப் பொருளாதாரத்தில் நுழைக்கப்பட்டபோது உண்டாகிவிட்டது.

மண்டலப் பொருளாதாரக் கொள்கையின் பிரச்சினைகள் (Problems of Regional Economic Policy)

தற்காலத்திய மண்டலப் பகுத்தாய்வு (modern Regional analysis) மாறுகின்ற தன்மை உடைய வணிகச் சுழல்களைப்பற்றியது என்பதை விடுத்து, மாருத நிலையில் உச்ச நிலையை அடைவது பற்றிய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக உடனடியாகச் சில அவசியமான கொள்கைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. மற்றக் காரணங்களைவிட 1930, 1940-லும் டென்னிஸிப் பள்ளத்தாக்குத் திட்டம் (Tennessee Valley Authority) அடைந்த சாதனை ஊக்கமூட்டுவதாக இருந்தது. இதன் காரணமாக அரசாங்க நடவடிக்கைகள்மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய அல்லது வசதியற்ற நிலையில் இருக்கின்ற இடங்களை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மண்டலப் பொருளாதாரத்தின் வினைவியல் பகுதி இப்படிப்பட்டவற்றை ஆராய்கிறது. இந்தக் கருத்துகளின் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பழைய தெற்கு (Old South), நியு இங்கிலாந்து (New England) ஆகிய இடங்

களில் மண்டலப் பொருளாதாரத்திற்கு தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நாட்டின் மற்ற மண்டலங்கள் அடைந்திருக்கும் பொருளாதார முன்னேற்றம் இந்த மண்டலத்திலும் ஏற்படுவதற்கு நடவடிக்கைச் செயல் முன்வரைவுகள் (Action Programme) உருவாக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாகவே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மண்டலப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்குக் காரணமாக இருப்பது மண்டல முறையிலான அமைப்பைக் கொண்ட ஐக்கிய ரிசர்வ் பாங்கு அமைப்பாகும் (Federal Reserve System). மண்டலப் பொருளாதாரத்தில் நடைமுறை ஆராய்வுகள் ஐக்கிய ரிசர்வ் பாங்குகளின் உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

வேறு பல நாடுகளும் மண்டலப் பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்டு வருகின்றன. அங்கெல்லாம் சரிசம முன்னேற்றப் பிரச்சினைக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. துரிதப் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்ற பல நாடுகளில், புதியதாகத் தொழில் மயமாகிக் கொண்டு இருக்கின்ற நகரங்கள், நாட்டின் மற்றப் பகுதிகள் இவைகளுக்கிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவது சாதாரணமானதே. இத்தகைய இருபான்மைப் பொருளாதார அமைப்பு (Economic dualism) அரசியலில் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது. இவற்றைத் தவிர்ப்பதற்கு மண்டல முன்னேற்றச் செயல் முன்வரைவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட புதிய குடியேற்றப் பகுதிகளை உருவாக்குதல் அல்லது அதிகப் பொருளாதார வாய்ப்புகளைப் பின்தங்கிய நிலையில் இருக்கும் மக்களுக்கு அளித்தல் மூலமாக இந்த அரசியல் பிரச்சினைகள் தீர்க்க முயற்சி செய்யப்படுகின்றது. இத்தாலியில் மெஸ்ஸோஜியர்னோ (mezzogioorno), வெனிசுலாவில் கியோயானு (Guayana), பிரேஸிலில் வடக்கு அமேசோனியா (Amazonia), அர்ஜன்டைனாவில் படகோனியா (Patagonia), சிலியில் ஐசியன் பிராவின்ஸ் (Aisen Province) இவையெல்லாம் அதற்கு உதாரணங்களாகும்.

இந்தச் சரிசமநிலை முன்னேற்றத்தைப் பற்றிய பிரச்சினை, பின்தங்கிய இடங்களுக்கு வருமானத்தை மாற்றும் முயற்சி ஆகியவை உலகத்தின் தொழில்மயமான நாடுகளுக்குப் புதிதன்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மேற்கு வெர்ஜினியாவைப்பற்றி, பிரான்ஸ் பிரிட்டனியைப்பற்றி, இங்கிலாந்து கிளாஸ்கோவைப்பற்றி முறையே கவலைப்படுகின்றன. உண்மையில் போருக்குப் பின், முதலாவதாகப் புவியியல் முறையில் பொருளாதார வாய்ப்புகளை மறு பங்கீடு செய்ய வேண்டுமென்ற முயற்சி இங்கிலாந்தில்தான் எடுக்கப்பட்டது.

அதுவே 'புதிய பட்டணங்கள் திட்டம்' (New Towns Plan). அதைப் பற்றிய மதிப்பீடு மண்டலப் பொருளாதாரத்தில், கொள்கை உருவாக்கம்பற்றிய பிரச்சினைகளைப்பற்றி நன்கு எடுத்துச் சொல்லுகிறது.

உண்மையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மண்டலப் பகுத்தாய்வின் நடைமுறை ஆராய்ச்சியில் நகர்ப்புறப் பிரச்சினைகள், பகுத்தாய்வுகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றன. இதற்கு நெடுஞ்சாலை (Highways) அமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு மாநிலங்களுக்குண்டான நெடுஞ்சாலைத் திட்டம் நிறைய நிதி உதவி செய்தது ஓரளவு காரணமாக இருக்கலாம். இந்த ஆதரவின் காரணமாக மண்டல ஆராய்ச்சி முயற்சிகளின் போக்கில் சில சுவையான திருப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நகர்ப்புற பிரச்சினைகளில் பொருளாதார வல்லுநர்களுக்கும், மண்டலப் பகுத்தாய்வாளருக்கும் சுவையானது போக்குவரத்தைத் திட்டமிடுதல் மட்டுமன்று, நகர்ப்புறப் போக்குவரத்துகளுக்குள் ஒன்றோடு ஒன்று சார்ந்திருக்கும்தன்மை, நிலத்தின்பயன், மக்கள் தொகை வரைச்சட்டம், தொழில் முன்னேற்றம் போன்றவை மிக நெருங்கியவையாகக் கருதப்படுகின்றன. அதன் காரணமாக நகர்ப்புறப் போக்குகள், வரைச்சட்டங்கள்பற்றிய பொருளாதார ஆய்வுகள் அதிகரித்திருக்கின்றன.

பொதுவாகப் பொருளாதார திட்டமிடுதலுக்குத் தகுந்தக் கருவிகளை உருவாக்குவதன் மூலம் மண்டலப் பகுத்தாய்வு ஒரு காலியிடத்தை நிரப்பியிருக்கிறது. மண்டலப் பகுத்தாய்வின் நிறைவு என்னவென்றால் அதன் செயல்முறை பயன் நாடும் (Pragmatic) அம்சம்தான்.

கோட்பாட்டு அடிப்படை

(Theoretical Foundations)

தற்காலத்திய மண்டலப் பகுத்தாய்வின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்தே கோட்பாடு, அனுபவ அறிவு இவை இரண்டின் இணைப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைத் தெரிந்து கொள்ளலாம்.

1940-ல் பொருளாதார இயலில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவான இவற்றை, நான்கு தலைப்புகளின்கீழ் பிரித்து ஆராயலாம். 1940-ல் வெளியிடப்பட்ட லாக் (Losch) ஆராய்ச்சியில் கண்டுள்ளபடி அமைவிடக் கோட்பாட்டை மீண்டும் வலியுறுத்தல் (revitalization)

(2) மெட்ஸெலெர் (Metzler), குட்வின் (Goodwin), கிப்மேன் (Chipman) போன்றோர் விளக்கிய சர்வதேச மண்டலங்களுக் கிடையேயான பெருக்கிக் கோட்பாடு (3) லியான்டிப் (Leontief) உள்ளீடு வெளிப்பாடு பகுத்தாய்வு (4) கணக்கு முறையிலான செயல் முன் வரைவுகள் (Methematical Programming).

(1) அமைவிடக் கோட்பாடு :

லோக்கியன் (Loschian) அமைவிடக் கோட்பாட்டைத் தவிர, மற்றக் கோட்பாடுகள், அனுபவ முறையில் சோதித்துப் பார்க்கக் கூடியவை; நடைமுறையிலுள்ளவற்றை விளக்கக் கூடியவை. இதற்கு மாறாக, லோக்கின் அமைவிடக் கோட்பாடு மிகவும் கருத்துச் செறிந்தது (idealized) மட்டுமன்று, அனுபவ முறையில் சோதித்துப் பார்க்கும் வாய்ப்பைக் குறைவாகக் கொண்டுள்ளது. ஆகவே, நடை முறையில் இதன் பயன் குறைவாக உள்ளது. இருந்த போதிலும் மண்டலப் பகுத்தாய்வில் இக் கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இந்தப் புதிய துறைக்கென்று ஒரு தேவையை இது நிறைவேற்றுகிறது என்பது ஓரளவிற்குக் காரணமாக இருக்கலாம். பொதுவாகப் பொரு ளாதார ஆய்வில் அமைவிடக் கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் தரப் படவில்லை. மண்டலப் பகுத்தாய்வு இக் கோட்பாட்டிற்குச் சிறப்பான தொரு இடம் கொடுத்ததன்மூலம் பொருளாதார இயல் தனக்கென்று தனியானதொரு சிறப்பைப் பெற்றிருக்கிறது. மேலும், எம். பெக் மேன் (M. Beckman) முன்மொழிந்தது போல இக் கோட்பாடு அனுபவமுறையில் வாய்ப்புகளைப் பெறக்கூடும். எப்படியாயினும், தற் போது பொதுவானதும், மறு பரிசீலனை செய்யப்பட்டு இசார்ட்டினல் அபிவிருத்தி செய்யப்பட்டதுமான, வெபிரியன் (Weberian) அமை விடக்கோட்பாடு அதிகமான நடைமுறைப் பயனை உடையதாக இருக்கின்றது.

2. பெருக்கிக் கோட்பாடு :

மண்டலங்களுக்கிடையேயான பெருக்கிப் பகுத்தாய்வு அனுபவ முறையிலான ஒரு கருவி (device) என்ற முறையில், மண்டலப் பொருளாதாரத்தில், பொருளாதார அடிப்படை என்ற கருத்தோடு இணைந்துள்ளது. மேலும், பெருக்கி மூலக் கருத்துகளைப் பயன் படுத்துவதில் முன்னோடிகளாக இருக்கும் காரணத்தால் மண்டலப் பொருளாதார அறிஞர்கள் சிறப்பினைக் பெறுகிறார்கள். 1937 ஆம் ஆண்டிலேயே நகர்ப்புறப் பொருளாதார ஆய்வின் முன்னோடியான ஹோமர் ஹாய்ட் (Homer Hoyt) பெருக்கி மூலக் கருத்தை உள்ள டக்கிய பொருளாதார அடிப்படை மூலக் கருத்தைப் பயன்படுத் தினர். பொதுவான வணிகச் சுழல் கோட்பாட்டில் பெருக்கி மூலக்

கருத்துகளில் ஏற்பட்ட முன்னேற்றம் அடிப்படை மூலக் கருத்தை அபிவிருத்தி செய்தது.

மண்டல ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதார அடிப்படைப் பெருக்கி மூலக் கருத்தின் முக்கியத்துவம் பொருளாதார இயலில் மற்ற மூலக் கருத்துகளின் முக்கியத்துவத்தைப் போன்றதே. நிறைந்த அர்த்தத்தைத் தரவேண்டிய முறையில் அக் கருத்து மாற்றம் செய்யப்பட்டாலும் அது தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்காது.

பகுத்தாய்வு செய்யப்படுகின்ற பொருளாதார அமைப்பிற்கு அப்பாற்பட்டது என்று சில நடவடிக்கைகளை வரையறை செய்து கொள்வது முதல்படியாகும். பழக்கமான பன்னாட்டு வியாபாரக் கோட்பாட்டை மண்டலங்களுக்கும் பொருந்துகின்ற முறையில் பயன்படுத்தினால் ஆய்வு செய்யப்படும் மண்டலத்திலிருந்து மற்ற மண்டலங்களுக்கு ஏற்றுமதி செய்வதையே முக்கியமானதாகக் கொண்டிருக்கும் தொழில்களின் கூட்டத்தையே (Group of Industries) அந்த மண்டலப் பொருளாதார அடிப்படை (Economic Base) என்று சொல்ல வேண்டும். இத்தகைய ஏற்றுமதி நடவடிக்கை, அந்த மண்டலத்தின் மொத்த பொருளாதார நடவடிக்கை இவைகளுக்கிடையேயான வரலாற்றுத் தொடர்பை உற்று நோக்குவதன் மூலம் அனுபவப் பெருக்கி (empirical multiplier) நிர்ணயிக்கப்படுகிறது. இந்த அனுபவப் பெருக்கி மொத்தப் பொருளாதார நடவடிக்கையை முன்மொழியும் (forecast) பொருளாதார அடிப்படையில் மதிப்பீடுகளை உருவாக்குகிறது.

இந்த நடைமுறையின் முக்கியமான அம்சம் என்னவென்றால் பொருளாதார அடிப்படையின் அளவை மதிப்பீடு செய்வதேயாகும். குறிப்பிட்ட மண்டலத்தின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யும்போது பொருளாதார முறையில் தழைத்தோங்கக்கூடிய புதிய ஏற்றுமதித் தொழில்களின் அளவை மதிப்பீடு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை வரையறை செய்யும் வழக்கமான முறை என்னவென்றால், மண்டலங்களுக்கிடையே உற்பத்திச் செலவு ஒப்பீடுகளைத் தயாரித்தலாகும். மண்டலப் பகுத்தாய்வில் சாதாரணமாக இதைச் செய்யும் முறையானது ஒப்பீட்டுச் செலவு பகுத்தாய்வு (Comparative Cost analysis) செய்தலாகும்.

பன்னாட்டு வியாபாரக் கோட்பாட்டைப் போலவே சில கருத்துகளில் ஒத்திருந்தாலும், மண்டலப் பொருளாதாரத்தில் பயன்படுத்து

கின்ற ஒப்பீட்டுச் செலவு பகுத்தாய்வு வேறுபட்டிருக்கிறது. செலவை ஒப்பிடுதல் சாதாரணமாக நேரடியாகச் செய்யப்படு கின்றது. அப்போது அக ஒப்பீடு நன்மைகள் (internal Comparative advantage) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. குறிப்பாகக் காரணிகளின் விலைகளில், மண்டலங்களுக்கிடையான அங்காடிச் சமநிலை நிலவுகிறது, என்ற அனுமானத்தின்படி மண்டலங்கள் ஒப்பிடப்படுகின்றன. ஒரே அங்காடியில் சில குறிப்பிட்ட உற்பத்திப் பொருள்களை வழங்கும் மண்டலங்களுக்கிடையே செலவுகள் ஒப்பிடப்படுகின்றன. இந்தப் பகுத்தாய்வில் செய்யவேண்டியது என்னவென்றால் முக்கியமானதும் எப்போதும் வேறாக இருக்கும் காரணிகள் அல்லது உள்ளீடுகளின் செலவைக் கவனிப்பதே ஆகும். போக்குவரத்துச் செலவுகள், உழைப்புச் செலவு, குறிப்பிட்ட வகையில் முக்கியமான உள்ளீட்டின் (உதாரணமாக அலுமினியத் திற்குச் சக்தி) செலவு ஆகியவை ஆராயப்படுகின்றன.

ஒப்பீட்டுச் செலவு பகுத்தாய்வின் மிகப் பெரிய சிறப்பு என்ன வென்றால் அதன் அனுபவ எளிமை. சில குறைகள் இதில் காணப் படுகின்றன. முக்கியமாக, முதன் முதலில் தேவைப்படுகின்ற எளிமையான விவரங்களை, சிக்கலான, ஒன்றுக்கொன்று சார்ந் திருக்கும், சூழ்நிலைகளில் தெளிவாகவும் சுலபமாகவும் பிரித்துரைக்க முடியாது. குறிப்பாக, சிக்கனங்கள், நெகிழ்ச்சியற்ற அளிப்பு ராசிகளால் உண்டாக்கப்பட்ட காரணிகளின் விலை மாற்றங்கள், நகரமயமாதல் அல்லது அதைப் போன்றவற்றால் ஏற்படுகின்ற புறச் சிக்கனங்கள் ஆகியவை விடுபட்டுவிடலாம்.

ஒப்பீட்டுச் செலவு பகுத்தாய்விலுள்ள இத்தகைய குறைபாடுகளை இசார்ட், E. H. ஸ்கூலர் (E. H. Schooler), T. விக்டோரியேஸ் (Victoriez) போன்றோர் தொழிற்சிக்கல் பகுத்தாய்வு (Industrial Complex analysis) மூலம் திருத்த முயற்சிகள் செய்தனர். இப்படிப் பட்ட பகுத்தாய்வின் அடிப்படையான புத்தமைப்பு (innovation) என்னவென்றால் உள்ளீடு-வெளிப்பாடு அணிகளைப் (matrices) பயன்படுத்தி, செலவு ஒப்பீட்டிற்காக உதவுகின்ற தொழில் கூட் டங்களை வரையறை செய்தலாகும். சிக்கனங்கள் பற்றிய சோதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து, செலவு ஒப்பீடுகளைப் பாதிக்கின்ற காரி யங்களை விளக்குதலைப் பற்றியதாகும்.

மண்டலப் பொருளாதாரத்தில் பொருளாதார அடிப்படை, பெருக்கி பகுத்தாய்வுகள் ஆகியவற்றுக்கான முக்கிய எதிர்ப்பு, அடிப்படை மதிப்பீடு செய்யப் பயன்படும் செலவு ஒப்பீடுகளின் ஒழுங்கான அல்லது ஒழுங்கற்றதன்மை என்பதைப் பொருத்தது.

அன்று. அடிப்படைப் பகுத்தாய்விற்குத் தீவிரமான எதிர்ப்பு 'அப்பாற்பட்டது' என்பதற்குப் பொருத்தமானதொரு வரையறையைக் கண்டு பிடிப்பதுதான். ஏற்றுமதி நடவடிக்கைகள் மட்டத்திற்கேற்ப தொழில்களை வகைப்படுத்தினுல் ஓர் இடைவெளி அல்லது தொடர்ச்சியற்றதன்மை இருப்பது தெரியவரும் என்று அடிப்படைப் பகுத்தாய்வு குறிப்பிடுகிறது. ஆனபோதிலும், இப்படிப்பட்ட பகுத்தாய்வு செய்யப்பட்டபோது அந்த வரிசை தொடர்ந்து இருப்பது தெரிய வருகிறது.

மேலும், ஏற்றுமதித் தொழில்களின் கூட்டத்தைத் தனிப்படுத்துவது சுலபமாக இருந்தாலும் பெருக்கிக் கெழுக்கள் (Coefficients) நீண்டகாலத்தில் நிலையானதாக இருக்காது என்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன. உண்மையில் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளின் தொடர்பை மாற்றுவது என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றியது மண்டல ஆய்வுகள் என்பதே அடிப்படைப் பகுத்தாய்விற்குக் கூறப்பட்ட எதிர்ப்பாகும். மேலும், ஏற்றுமதிகள் இல்லாமல் ஒரு பொருளாதார அமைப்பு இயங்க முடியும் என்பதும் அவற்றின் ஏற்றுமதிகள் அதிகரிக்காமல் அது வளர்ச்சி அடைய முடியும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இன்னும் வரலாற்றுப் புள்ளி விவரங்களிலிருந்து பெருக்கிக் கெழுக்களை மதிப்பிடுவதன் பொருத்தம்பற்றி வாதிக்கப்படுகின்றன.

இவ்வாறு பொருளாதார அடிப்படை மூலக்கருத்துகள், பல எதிர்ப்புகளுக்குள்ளானுலும் அவைகளின் முக்கியத்துவம் குறையவில்லை. உண்மையில், குறிப்பாகவாவது சில பொருளாதார அடிப்படைக் கருத்துகள் மண்டல எதிர்காலத்தைப் பற்றிய ஆய்வுகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றன. இதில் முக்கியமானது என்னவென்றுல் 'அடிப்படை' அல்லது 'புறம்பானது' என்ற மூலக் கருத்தைப் பயன்படுத்தாதது என்பதன்று. அதில் எவ்வளவு அளவு ஒன்றுக்கொன்று சார்ந்ததன்மை இருக்கவேண்டு மென்பதுதான் அடிப்படை மூலக்கருத்தில் பயன்படுத்தப்படும். 'புறம்பானது' என்ற கருத்தானது அனுபவமுறையில் செயல்படுத்தக்கூடிய மற்ருெரு கருத்து கிடைக்கும் வரையில், தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

3. உள்ளீடு - வெளிப்பாடு - பகுத்தாய்வு :

இதே உண்மை மண்டலப் பொருளாதாரத்தில் விளைவியல் நுட்ப முறையாகப் பயன்படுத்தப்படும் உள்ளீடு-வெளிப்பாடு பகுத்தாய்விற்கும், அதோடு நெருங்கிய தொடர்புகொண்ட எளிமை

யற்ற அணிப்பெருக்கி மூலக் கருத்துகளுக்கும் பொருந்தும். ஒன்றுக் கொன்று சார்ந்திருக்கும் மாதிரியங்களில்கூட 'இறுதித் தேவை' (Final Demand) புறம்பான சில பொருள்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது. பரந்த முறையில், மண்டலங்களுக்கிடையே, தொழில்களுக்கிடையேயான உள்ளீடு-வெளிப்பாடு பகுத்தாய்வின் நோக்கம் தொழில்மட்டுமல்லாது, புவியியல் நிலப்பரப்பு அல்லது மண்டலங்கள் முதலியவற்றால் தனிப்படுத்தப்படும் உள்ளீடு-வெளிப்பாடு கெழுக்களின் அணி ஆகும். இவ்வாறு 50 தொழில் களும், 5 மண்டலங்களும் இருந்தால் அதன் அணி 2,500 (50 × 50) பதிவுக் குறிப்புகளின் 25 துணை அணிகளாகப் பிரிக்கக்கூடிய, 62,500 கெழுக்களைக் கொண்டதாக இருந்தால் சிறப்பாக இருக்கும். ஒவ்வொரு மண்டலத்திற்கும் 5 அணிகள் இருக்கும். அதில் ஒன்று அதனுடைய தொழில்களுக்கிடையேயான தொடர்பைப் பற்றிய தாகும். மற்ற நான்கும் மற்ற மண்டலங்களோடான வியாபாரத் தொடர்பைப் பற்றியதாகும். போதுமான புள்ளி விவரங்கள் இல்லா ததன் காரணமாக, இத்தகைய சிறந்த அட்டவணையை வரைவது இயலாததாகும். இதன் காரணமாக மண்டல உள்ளீடு வெளிப்பாடு பகுத்தாய்வின் முக்கியப் பகுதி, இந்தப் புள்ளி விவரங்கள் சம்பந்த மான இன்னலைத் தீர்க்கின்ற முறையில் சிலவற்றை மாற்றி அமைப் பதுதான். இவ்வாறு அமைக்கும்போது சிறந்ததொரு அட்ட வணையை உருவாக்குவதற்குத் தேவையான அனுபவ அறிவியல் சிலவற்றை நீக்கிவிட வேண்டியதாக இருக்கிறது.

முக்கியமானதும் வாதத்திற்குரியதுமான எடுகோள்களைச் சார்ந்திருப்பதால், உள்ளீடு-வெளிப்பாடு நுட்பமுறை, பல்வேறு விமரிசனங்களுக்கு உள்ளாகி இருக்கிறது. தேசிய மாதிரியங்களைப் போன்று மண்டல உள்ளீடு-வெளிப்பாடு மாதிரியங்களும் பல பிரச்சினைகளை உடையதாக இருக்கின்றன. குறிப்பாக, தொழில் களுக்கிடையேயான கெழுக்களைவிட, மண்டலங்களுக்கிடையேயான வியாபாரக் கெழுக்கள் நீண்டகாலத்தில் பெரிதும் நிலையற்றதாக இருக்கும் என்பதற்குக் குறைந்த அளவிலாவது சான்றுகள் இருக் கின்றன. இத்தகைய நிலையற்றதன்மை, சரிசம மண்டல முன் னேற்ற மாதிரியத்தில் பயன்படுத்தப்படும், மண்டல பங்கேற்றலின் (Participation) கெழுக்களுக்கும் இருக்கின்றது.

உள்ளீடு-வெளிப்பாடு நுட்பமுறை இத்தகைய பிரச்சினைகளையும் இன்னல்களையும் உடையதாக இருந்தாலும், அனுபவமுறையில் சாத்தியமாகக்கூடிய மாதிரியம் என்ற சிறப்பை அது பெற்றிருக் கிறது. மற்ற நுட்ப முறைகளால் பெற முடியாத அமைப்பு வரைச் சட்டம், பொருந்துகின்ற முறையில் இருக்கின்றதா என்று சரி பார்க்கும் அமைப்புகள் (a set of Consistency Checks) ஆகியவற்றைப்

பெற இந்த மாதிரியம் உதவி செய்கிறது. துல்லியமான தொழிலுக்கு இடையேயானதும், மண்டலங்களுக்கிடையே யானதுமான வியா பாரக் கெழுக்களைப்பற்றிய அறிவைவிட அடிப்படையாக வரலாற்றுப் போக்குகள், சக்திகள் போன்றவற்றைப்பற்றிய அறிவு இன்றியமை யாதது என்று வாதிக்கப்படுகிறது. இதை இந்த மாதிரியத்தின் குறைபாடு என்று கருதக்கூடாது. மாருக, இது மண்டலப் பகுத் தாத்தாய்வில் முறையான ஆராய்ச்சிச் சாதனங்களின் ஒதுக்கீட்டை உருவாக்குவது எது என்பதைப் பற்றியதாகும்.

இறுதியாக, குறைபாடுகளை உடையதாக இருந்தாலும், உள்ளீடு-வெளிப்பாடு, பொருளாதார அடிப்படைப் பகுத்தாய்வுகள், மண்டலப் பொருளாதாரத்தில் அனுபவமுறையில் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையிருக்கும் இக்காலத்தில் தகுந்த கருவிகளாக இருந்து உதவுகின்றன.

4. கணக்கு முறையிலான செயல் முன் வரைவு :

தற்காலத்திய மண்டலப் பகுத்தாய்வில் சாதாரணமாகப் பயன் படுத்துகிற இந்தக் கோட்பாட்டுக் கருவி, கருத்தளவில் ஆராய்வ தற்குச் சிறந்ததாகும். ஆனுலும், இதைப் பயன்படுத்துவதற்கு இரண்டு தடைகள் உள்ளன. முதலாவது, புள்ளி விவரங்கள் கிடைப்பது. சிறந்த நெடும்போக்கு செயல்முன் வரைவுக்கு (Linear Programming) நிறையப் புள்ளிவிவரங்கள் தேவைப்படுகின்றன. இரண்டாவது, பொருளாதாரப் பகுத்தாராய்ச்சிப் பண்பை (Economic rationality) தற்போதைய நடிவடிக்கைச் செயல் முன் வரைவு (Operational programming) மாதிரியங்களில் இணைப்பது சிக்கலானது.

தொகுத்துக் கூறினுல், கடினமான கொள்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பகுத்தாய்வு முறைகளில் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்வதாலேயே மண்டல முன்னேற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இத்தகைய முயற்சிகளை எடுப் பதற்கும், அதை மதிப்பீடு செய்வதற்காகவும் தேவையான வரைச் சட்டங்களையும் அளவைகளையும் அளிப்பதுமே அவற்றின் முக்கியப் பணியாகும். மேலும், இத்தகைய முயற்சிகளைச் செயல்படுத்து வதற்கு, மண்டல முன்னேற்றச் செயல் பாங்கு, அதோடு தொடர்பு கொண்ட நடத்தை முன்வரைவு இவை பற்றிய அறிவு, இப்போது இருப்பதைவிட அதிகமாக இருக்கவேண்டும்.

இதைச் செய்வதற்கு மண்டல முன்னேற்றத்தைப்பற்றிய ஆராய்ச்சிகள், நிதி அமைப்புகள், அங்காடி கட்டமைப்புகள்,

தொழில் துணிவு, தனியார் பொது முதலீட்டு முடிவுகள், வரிகள், நிதிக் கொள்கைகள், மற்றும் பொருளாதார இயலில் ஆராயப்படு கின்ற ஆனுல் மண்டல முன்னேற்ற ஆராய்ச்சிகளில் அரிதாகக் காணப்படும் மற்றப் பாடங்கள் ஆகியவற்றின் பங்கும், நடத்தையும் பற்றிய கருதுகோள்களைப் (Hypotheses) பற்றி அதிகமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேற்கோள் நூற்பட்டியல்

1. Balakrishna. R., —Regional Planning in India, Bangalore, Printing and Publishing Co., Ltd., 1948.
2. Ballassa Bela. —The Theory of Economic Integration.
3. Benjamin, Higgins. —Economic Development.
4. Boudeville J. R. —Problems of Regional Economic Planning, Edinburgh, 1966.
5. Government of India, Planning Commission. —First Five Year Plan.
6. Government of India, planning Commission. —Second Five Year Plan.
7. Government of India, Planning Commission. —Third Five Year Plan.
8. Government of India Palnning Commission. —Fourth Five Year Plan—A Draft outline.
9. Government of India, Planning Commission. —Economic Development in Different Regions in India.
10. Government of Tamil Nadu, Finance Department. —Tamil Nadu—An Economic Appraisal—1971. Government of Tamil Nadu, Fort St. George, Madras.
11. Government of Tamil Nadu. —Fourth Five Year Plan (1969—74) of Tamil Nadu, A Draft outline (1969).

12. Government of Tamil Nadu. —Annual Budgets.

13. Hassis S. E. —International and Inter-Regional Economics.

14. Isard Walter. —Location and, Space Economy Cambridge M.I.T., 1956.

15. Kindleberger K. G. —Economic Development (Second Edition)

16. Government of Tamil Nadu, Department of Statistics. —Statistical Hand Book of Tamil Nadu, 1969.

17. Misra R. P. (Editor) —Regional Planning, Prasavanga, Mysore University, 1969.

18. National Council of Applied Economic Research (NCAER). —NCAER Research for Development, New Delhi, December, 1966.

19. National Council of Applied Economic Reseach (NCAER). —A Study on Regional Differences in Industrial Pattern, 1969.

20. Needleman L. (Editor) —Regional Analysis, Benguin Book, (1968).

21. Nourse Hugh O. —Regional Economics, Mc Graw Hill, New York, (1968).

22. Parakasa Rao. V.L.S. —Regional Planning Statistical, Publishing Society, Calcutta, (1963).

23. Robinson. E.A.C. (Editor)—Problms in Economic Development.

24. Corr, Sarah and Willing-Worth J. B. (Editors) —Regional and Urban Studies.

25. Jinbeger J. —Essays in Regional and World Planing N.C.A E.R., New Delhi, 1966.

26. Wilson, Thomas. —Planning and Growth.

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம் - தமிழ்)

A

Accounts —கணக்கு
Adjustment Process —சீரமைவு செயற்பாங்கு
Agency —பதிலாள்
Agglomeration Economics —கூட்டின் சிக்கனங்கள்
Agriculture —விவசாயம்
Agro-Economic Research centre—விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி நிலையம்
Allocation —ஒதுக்கீடு
Alternative —மாற்று
Analysis —பகுத்தாய்வு
Applied Science —விளைவியல் அறிவியல்
Appendix —பிற்சேர்க்கை
Arable land —சாகுபடி நிலம்
Assumption —எடுகோள்

B

Balanced Development —சரிசமமான முன்னேற்றம்
Base —தளம், அடிப்படை
Block —வட்டாரம்
Brain drain —அறிவு வடிகால்
Buffer Stock —உணவுப் பற்றுக் குறையைச் சமாளிக்க சேமிப்பு காப்பிருப்பு
Bumper Crop —மிகை மகசூல்
Bureau of Mines —சுரங்கங்களைப் பற்றி தகவல் சேகரிக்கும் கழகம்
Business Cycle —வணிகச் சுழல்

C

Capital intensive —மூலதனச் செறிவுள்ள
Catchment —நீர்வடிகால்
Category —இனம்
Centre —மைய இடம்
Centeral Statistical Organization—மத்தியப் புள்ளி விவர அமைப்பு
Central Water and Power Commission —மத்திய நீர், சக்திக் குழு
Channelise —ஆற்றுப்படுத்தல்
City —நகரம்
Coefficient —கெழு
Comparative Cost analysis —ஒப்பிட்டுச் செலவு பகுத்தாய்வு
Component analysis —ஆக்கக்கூறு பகுத்தாய்வு
Concepts —மூலக் கருத்துகள்
Conveniance goods —வசதிப் பொருள்கள்
Conventional —பழக்கமான
Core —உட்பிரிவு
Council of Scientific and Industrial Research — அறிவியல், தொழில், ஆராய்ச்சிக் கவுன்சில்
Corporate Head Quarters —மாநகராட்சி தலைமை அலுவலகங்கள்
Cumulative Causation —காரணக் கரரியத் தொடர்பு

D

Data —விவரம்
Development —முன்னேற்றம்
Deep bore wells —ஆழ்த்துளைக் கிணறுகள்
Demography —மக்கள் தொகை இயல்
Depressed —பாதிக்கப்பட்ட
Developed coustries —முன்னேறிய நாடுகள்
Differential growth —வேறுபாட்டு வளர்ச்சி
Dispersion of Industry —தொழில் பரவல்
Distribute —பாங்கீடுச் செய்தல்
Diagram —விளக்க வரைப்படம்
Drain —வடிதல்
Dual economy —இருபான்மைப் பொருளாதார அமைப்பு
Dynamic elements —இயக்கக் கூறுகள்

E

Economy	—பொருளாதார அமைப்பு
Economics	—பொருளாதார இயல், பொருளியல்
Economics practial	—நடைமுறைப் பொருளாதாரம்
Economics applied	—விளைவியல் பொருளாதாரம்
Economic [Base study]	—பொருளாதார அடிப்படை ஆய்வு
Economic dualism	—பொருளாதார இரட்டை நிலை
Economic growth	—பொருளாதார வளர்ச்சி
Economic Theory	—பொருளாதாரக் கோட்பாடு
Economic Principles	—பொருளாதாரத் தத்துவங்கள்
Economic System	—பொருளாதார அமைப்பு
Economic Structure	—பொருளாதாரக் கட்டமைப்பு
Economics of Regional development	—மண்டல முன்னேற்றப் பொருளாதாரம்
Econometrician	—கணிதப் பொருளாதார வல்லுநர்
Empirical	—அனுபவ
Employment	—வேலை
Entrepreneurship	—தொழில் துணிவு
Environoment	—சூழ்நிலை
Equilibrium level of income	—சமநிலை வருமானம்
Estimated Change	—மதிப்பீடுச் செயயப்பட்ட மாறுதல்
Expenditure	—செலவு

F

Federal	—கூட்டரசு
Financial Organizations	—நிதி அமைப்புகள்
Focal points	—முக்கியப் புள்ளிகள்
Folk	—மக்கள்
Eormula	—விதி
Forecast	—முன் மொழிதல்
Frame work	—வரைச் சட்டம்
Free Enterprise Economy	—தொழில்துணிவு சுயேச்சைப் பொருளாதார அமைப்பு
Function	—அலுவல், ராசி

G

Geological Survey	—பூமி அமைப்பின் மேலீடான ஆராய்ச்சி
Geographic	—புவியியல் முறையிலான

General Regional Plan	—பொது மண்டலத் திட்டம்
Growth	—வளர்ச்சி
Growth with Stability	—நிலைப்பேற்றோடு கூடிய வளர்ச்சி

H

Hierarchy	—படிநிலை அமைப்பு
Hierarchical System of cities	—படிநிலை அமைப்புள்ள நகரங்கள்
Highways	—நெடும்சாலைகள்
Homogeneity	—ஓரினத்தன்மை
Plain	—சமவெளி
Hypothesis	—கருதுகோள்

I

Ideal	—கருத்துச்சார்பான
Inaccessible	—எளிதில் அடையமுடியாத
Income-elasticity of demand	—வருமானத் தேவை நெகிழ்ச்சி
Income, real	—உண்மை வருமானம்
Indicators	—அடையாளங்கள்
Individual	—தனிநபர்
Individualism	—தனியார் வளர்ச்சி
Indian Council of Agricultural Research	—இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில்
Indian Statistical Institute	—இந்திய புள்ளிவிவர நிலையம்
Industrialisation	—தொழில்மயமாதல்
Industrialisation complex analysis	—தொழில் சிக்கல் பகுத்தாய்வு
Industrial estates	—தொழிற்பேட்டை
Industrial location pattern	—தொழில் அமைவிடங்களின் எடுத்துக் காட்டமைப்பு
Industrial mix	—தொழில்களின் கூட்டு
Immobility	—இடப்பெயர்ச்சியற்ற தன்மை
Innovation	—புத்தமைப்பு
Input	—உள்ளீடு
Input constraints	—உள்ளீட்டுத் தடைகள்
Input market	—உள்ளீடு அங்காடி
Input price	—உள்ளீடு விலை
Installations	—இணைப்புகள்
Institution	—நிலையம்
Inter-disciplinary	—பல்வேறு இயல்களைச் சார்ந்த

Internal Economics —அகச்சின்னங்கள்
Item —இனம்
Investment —முதலீடு

K

Key Industry —ஆதாரத் தொழில்

L

Labour-Intensive —உழைப்புச் செறிவுள்ள
Land use —நிலப்பயன்
Lag —பின்னடைவு
Land-Scape Planning —நிலத் தோற்றத்தைத் திட்டமிடுதல்
Least Cost Combination —குறைந்த செலவுக் கலவை
Location —அமைவிடம்

M

Macro Region —தொகுதி மண்டலம்
Marginal Propensity to import —இறுதிநிலை, இறக்குமதி நாட்டம்
Market —அங்காடி
Mathematical programming —கணக்கு முறையிலான செயல் முன்வரைவு
Matrix —அணி
Market-oriented —அங்காடிக் காரணமாக ஏற்பட்டவை
Medium —சாதனம்
Method —முறை
Metropolis —மாநகர் துருவம்
Metropolitan —மாநகர்
Mobility —இடப்பெயர்ச்சி
Modern —தற்காலத்திய
Modernisation —புதுமை மயமாக்குதல் அல்லது தற்காலமயமாக்குதல்
Milage —நீளளவு
Minimum —குறைந்தபட்சம்
Multiplier —பெருக்கி
Multipurpose Projects —பல நோக்கங்களை உடையத் திட்டங்கள்

N

National Council of applied Economic Research —விஞ்ஞானவியல் பொருளாதார ஆராய்ச்சித் தேசியக் கவுன்சில்
Net work —வலை
Nodal point —கணுப்புள்ளி
Nodality —கணுத் தன்மை
Nucleus —கரு

O

Oil and Natural gas Commission—எண்ணெய், இயற்கைவாயுக் குழு
Operational programming —நடவடிக்கை, முன் வரைவு
Optimum location —உத்தம அமைவிடம்
Organism —கூட்டிணை அமைப்பு
Organic —அங்கக
Over-heads —பொது வசதிகள்

P

Pattern —முன்வரைவு
Per capita income —தனிநபர் வருமானம்
Percentage difference —சதவீத வேறுபாடுகள்
Peripheral —எல்லைப்புற நிலைக்கு
Planning —திட்டமிடுதல்
Plantation Industries —தோட்டத் தொழில்கள்
Policy —கொள்கை
Population characteristics —மக்கள் தொகையின் அம்சங்கள்
Potential Income —மறை வருமானம்
Potential resources —மறைச் சாதனங்கள்
Pragmatic —செயல்முறை பயன் நாடும்
Predict —முன்மதிப்பீட்டுரை செய்வது
Polarization —தல விளைவு
Pole —துருவம்
Present Value of Net returns —நிகர விளைவுகளின் மதிப்பு
Price elasticity of demand —விலைத்தேவை நெகிழ்ச்சி
Primitive —பழங்கால
Priority —முந்துரிமை
Problem —பிரச்சினை
Process —செயற்பாங்கு

Processing —பக்குவப்படுத்தல்
Production function —உற்பத்தி ராசி
Programme —செயல் முன்வரைவு
Programme Evaluation Organization —செயல் முன்வரைவு மதிப்பீடு அமைப்பு
Psychometrician —உற்றறிப் பண்பாற்றல் வல்லுநர்

R

Railways —இரயில்வேக்கள்
Rate of return —விளைவு வீதம்
Rationality —பகுத்தாராய்ச்சிப் பண்பு
Readjustment —மறுசீரமைவு
Redeployment machinery —தொழிற்சாலையில் விளைவுப் பெருக்கம் நாடிய புற வாய்ப்பு நலச் சீர்திருத்த அமைப்பு.
Record —விவர ஏடு
Region —மண்டலம்
Region, axial develpment —முன்னேற்ற மண்டலம்
Region, adhoc —தனிப்பட அமைக்கப்பட்ட மண்டலம்
Region, depressed —பாதிக்கப்பட்ட மண்டலம்
Region, first order —முதல்வகை மண்டலம்
Region, functional —அலுவல் மண்டலம்
Region, Metropolitan —மாநகர் மண்டலம்
Region, macro —தொகுதி மண்டலம்
Region, micro —பகுதி மண்டலம்
Region, natural —இயற்கை மண்டலம்
Region, physical geographic —இயற்கைப் புவியியல் மண்டலம்
Region, planning —திட்டமிடும் மண்டலம்
Region, transitional —மாறும் நிலையிலுள்ள மண்டலம்
Regional approach —மண்டல அணுகு முறை
Regional economics —மண்டலப் பொருளாதாரம்
Regional planning —மண்டலத் திட்டமிடுதல்
Regional scientists —மண்டல அறிவியல் அறிஞர்கள்
Regional structure —மண்டலக் கட்டமைப்பு
Regional accounting frame work —மண்டலக் கணக்கீட்டு வரைச்சட்டம்
Regionalism —மண்டலமயமாதல்

Resources —சாதனங்கள்
Returns —விளைவுகள்
Review —மறு ஆய்வு
River valley projects —ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள்
River basin —ஆற்றுப் பள்ளத்தாக்கு
Road transport —சாலைப் போக்குவரத்து
Route —செல்வழி

S

Scarce —கிடைப்பதற்கருமையான
Schedule —பட்டியல்
Scope —எல்லை
Secondary —இரண்டாம்படி
Sector —பகுதி
Shift —பிறழ்ச்சி
Social Organization —சமூக அமைப்பு
Solution —தீர்வு
Spatial dimensions —இடத்தின் அளவு
Spatial order —இட அமைப்பு
Spatial pattern —இட முன்வரைவு
Spatial structure of the economy —பொருளாதார இட கட்டமைப்பு
Stabilization —நிலைப்படுத்துதல்
State —மாநிலம்
Static —இயக்கமற்ற நிலை
Statistical Bureaus —புள்ளி விவரக் கழகங்கள்
Strategy —முறை
Survey —கணக்கீடு
Sustained —நிலை நிறுத்துகின்ற
Synoptic approach —பொது விவர ஆராய்ச்சி அணுகும் முறை
System of cities —நகரங்களின் அமைப்பு
Systematic Regional planning —முறையான மண்டலத் திட்டமிடுதல்

T

Table —அட்டவணை
Take off Stage —பொருளாதார விடுபடு கட்டம்
Target —இலக்கு

Technique	—நுட்ப வினைமுறை
Technological change	—தொழில் நுட்ப மாறுதல்கள்
Techno-economic survey	—தொழில் நுட்ப பொருளாதார மேலீடான ஆராய்ச்சி
Temporal	—கால
Tennessee valley authority	—டென்னஸி பள்ளத்தாக்குத் திட்டம்
Territory	—பிரதேசம்
Theory	—கோட்பாடு
Topography	—இட விளக்க இயல்
Town	—பட்டினம்
Trade cycle	—வியாபாரச் சுழல்
Traditional economic analysis	—வழக்கமான பொருளாதாரப் பகுத்தாய்வு
Transport	—போக்குவரத்து
Trends	—போக்குகள்

U

Under-development	—முன்னேற்றம் குறைந்த
Urban Research cells	—நகர்ப்புற ஆராய்ச்சிக் குழுக்கள்
Urban blight	—நகரத்தின் நலிவு
Unemployment, educated	—கற்றோர் வேலையின்மை
Uniform	—ஒரேச் சீரான
Use	—பயன்

V

Valley Section	—பள்ளத்தாக்குப் பிரிவு
Variables	—மாறிகள்
Vicious Circle	—தீயச் சுழல்
Vocational Education	—தொழில்முறைக் கல்வி

W

Wet	—ஈரப்பதனுடைய

Z

Zones	—மண்டலங்கள்